# ஐந்தாம் வகுப்புச் சரித்திரம்

## உலகமும் இலங்கையும்

முதற்பாகம்.

பூர்வகாலம் தொடக்கம் கி. பி. 1500 வரையும்
உள்ள சரித்திரம்

# World and Ceylon History

— FOR —

STANDARD—V

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியரும்
பல நூலாசிரியருமாகிய
**ஆ. வி. சோமசுந்தரம் அவர்களால்**
இயற்றப்பட்டது.

வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், நாவலர் அச்சுக்கூடம்.

**1950.**

All Rights Reserved.

Price Re. 1—50

2/900

# விஷய அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| **1 நூன்முகம்** | | |
| சரித்திரம் History | ... — | 1 |
| பூமி Earth | — ... | 2 |
| சரித்திர ஆராய்ச்சி Research | ... | 2 |
| பூர்வீக மனிதன் Prehistoric Man | — | 3 |
| பனிக்கட்டிக்காலம் Ice Age | — | 3 |
| கற்காலம் Stone Age | — | 4 |
| உலோக காலம் Metal Age | — | 4 |
| நாகரீக அபிவிருத்தி Civilisation | — | 4 |
| **2 உலகசரித்திரம்—பண்டைக்காலம்** | | |
| சீனு China | ... | 5 |
| கொன்பியூசியஸ் Confucius | — | 6 |
| மெசொபற்றேமியா Mesopatamia | — | 7 |
| எகிப்து Egypt | ... | 9 |
| பூர்வீக எகிப்தியர்கள் Ancient Egyptians... | | 10 |
| எகிப்தியர்கள் எழுதியவிதம் Mode of Writing | | 10 |
| எகிப்தின் அரும்பொருள்கள் Wonders of Egypt | | 11 |
| பினீசியா Phoenicia | — | 12 |
| ஆரியர் Aryans | — | 13 |
| இந்தியா India | — | 14 |
| திராவிடர் Dravidians | — | 15 |
| நாகர் Nagas | — | 15 |
| இந்திய ஆரியர் Indian Aryans | — | 15 |
| வேதம் Vedas | — | 16 |
| **3 இலங்கையின் பூர்வசரித்திரம்** | | |
| இராமாயணம் Ramayana | — | 19 |
| புத்தர் Buddha | — | 21 |
| சிங்கவாகு Singabahu | — | 25 |
| விஜயன் Wijaya | — | 25 |
| சிங்களம் Sinhalese | — | 27 |
| **4 மேல்நாட்டுப் பூர்வசரித்திரம்** | | |
| அசீரியர் Asyrians | ... | 27 |
| பார்சிகர்கள் Persians | — | 28 |

சைரஸ் Cyrus — 28

பார்சிக சக்கராதிபத்தியம் Persian Empire 29

கிரீஸ் Greece ... 30

சோக்கிறற்றிஸ் Socrates — 31

மசிடோனியா Macedonia ... 34

பிலிப்பு Philip — 35

மகா அலெக்சாந்தர் Alexander the Great 35

உரோம் Rome — 39

ரோமுலயஸ் றீமஸ் Romulus and Remus 40

உரோம ராச்சியம் The Romans — 40

கார்தேஜ் Carthage — 41

பியூனிக் யுத்தம் Punic War ... 42

கனிபல் Hannibal — 42

யூலியஸ்சீசர் Julius Caesar — 45

யேசுக்கிறிஸ்து Jesus Christ — 49

5 இந்தியாவின் பூர்வ சரித்திரம்

பாரதயுத்தம் Bharata War — 53

ஸ்ரீ கிருஷ்ணர் Sri Krishna — 55

மகததேசம் Maghada — 56

சந்திரகுப்தர் Chandra Gupta — 56

அசோகர் Asoka — 58

தென்னிந்தியா South India — 59

சேரதேசம் Sera Country — 60

சோழதேசம் Chola Country — 60

பாண்டிநாடு Pandiya Country — 60

6 இலங்கைச் சரித்திரம்—விஜயவம்மிசம்

பந்துவாசன் Pandu Vasa — 61

அபயன் Abhaya — 62

பந்துகபாயன் Pandukabhaya — 62

முத்துசிவராசன் Mutasiva — 63

தேவநம்பியதீசன் Devanampiya Tissa — 63

உத்தியன் Uttiya — 65

மகாசிவன்முதல்-அசேலன்வரையும் Mahasiva-Asela 65

7 இலங்கைச்சரித்திரம்·தமிழரின்முதலாம்படையெழுச்சி

எலேலன் Elala — 66

துஷ்டகைமுனு Duttha Gamunu — 66

மேல்நாட்டாரும் இலங்கையும் Ceylon and the West 71





8 மேல்நாட்டுச் சரித்திரம்—மத்தியகாலம் 72

உரோமராச்சியம் Roman Empire — 72

ஜேர்மனியர் Germans ... 73

கன்ஸ் Huns ... 73

ஜஸ்தீனியன் Justinian ... 74

முகம்மதுநபி Mohmed ... 76

அரேபியா Arabia ... 78

பிராங்ஸ் சாதியார் Franks ... 79

சார்ளிமேன் Charlemagne ... 79

9 இலங்கைச் சரித்திரம்—மத்தியகாலம்

சயத்தீசன் Saddha Tissa ... 81

துல்லதானகன்-கலுனன்வரையும் Thulathana-Kalunna 82

வாலகம்பாகு Walagambahu ... 82

மகாசூரன் முதல் மகாலந்தீசன் வரையும்
Mahachura - Mahalantissa 83

1-ம் பாத்தியந்தீசன் முதல் சந்தமுகுணன் வரையும்
Battyatissa - Chandamuhuna 84

யதலாகதீசன் Yatalakatissa ... 84

வாகாப்பு Vasabha ... 85

வங்கநாசிகதீசன் Vankanasikatissa ... 85

கஜபாகுமுதல்சங்காதீசன்வரையும் GajaBahu-Sangatissa 86

ஸ்ரீ சங்கபோ Sri Sangabo ... 86

கோதாபயனும் ஜெத்ததீசனும் Gothabhaya Jetthatissa 87

மகாசேனன் Mahsena ... 87

ஸ்ரீ மேகவர்ணன் Sri Meghavarna ... 88

ஜெத்துதீசனும் புத்ததாசனும் Jethatissa II Buddhadasa 88

உபத்தீசனும் மகாநாகனும் Upatissa II Mahanaga 89

சத்திசேனன் முதல் தத்துசேனன் வரையும்
Setthisena—Dhatu Sena ... 89

க-ம் காசியப்பனும் முகலானனும் Kasyapa I and Mugallan 90

குமாரதாசன் முதல் 6-ம் அக்கிரபோதி வரையும்
Kumaradasa - Agra Bodhi VI 90

பொல்லநறுவை அரசர்கள்
7-ம் அக்கிரபோதி Agrabodhi VII .. 91

2-ம் மகிந்தனும் தபுலும் Mahinda II and Dappula II 91

3-ம் மகிந்தன் முதல் முதலாம்சேனன் வரையும்
Mahinda III—Sena — 91

2-ம் சேனன் முதல் 4-ம் மகிந்தன் வரையும்
Sena II—Mahinda iv — 92
5-ம் மகிந்தன் Mahinda V — 93
1-ம் விஜயபாகு Vijaya Bahu — 93

10 இலங்கைச் சரித்திரம்—மத்தியகாலம்
அரசியற்குறைவு Causee of the declins — 94
அரசர்கள் Kings ... 95
சபைகள் Councils — 95
உத்தியோகஸ்தர் Offcials ... 95
போக்குவரவு Communication — 96
பாகியன் Fa Hien ... 97
அரேபியர் Arabs — 88
சோனகர் Moors — 98

11 இந்தியாவும் சீனுவும்—மத்தியகாலம்
இந்தியா India — 98
சாகர் குர்கஷ் Sakhas Gurkhas — 99
குப்த இராச்சியம் Gupta Empire — 99
கன்ஸ் The Huns ... 100
கர்ஷவர் Harsha — 100
இராசபுத்திரர் Rajputs — 101
முகம்மது Mahmud of Ghazni — 101
கோரிமுகம்மது Mahmud of Ghori — 103
அடிமை அரசர் Slave Kings ... 103
கில்ஜிவம்சம் Khilji Dynasty ... 104
துக்ளக் அரசர்கள் Tughlak Dhnasty ... 104
விஜயநகர இராச்சியம் Vijayanagar ... 104
பகமனி ராச்சியம் Bahmani Kingdom ... 105
விஜயநகர இராச்சியத்தின் முன்னேற்றம்
Advancement of Vijayanagar 106
மொங்கோலியர் Mongols ... 106
சிங்கீஸ்கான் Chingis Khan 106
மொங்கோலிய சக்கராதிபத்தியம் The Mongolian Empire107
மார்க்கோபோலோ Marco Polo — 108
தயமூர் Timur — 109
துலுக்கர் The Turks — 109





12 மேலைத்தேசங்கள் The West
ஸ்காந்திநேவியா Scandinavia — 110
தேனியர் The Danes ... 110
பிரித்தானியா Britannia .. 111
சிலுவைவீரர் The Crusaders — 114
இங்கிலாந்து England — 117
செயின்ட்யோன்ஒவ் ஆக் St. Joan of Arc — 117
ஐரோப்பிய தேசத்தின் கல்வி விருத்தி
The Revival of Learning in Europe ... 120
புதியதேசங்களை அறிதல் The Age of Discovery 121
கிறிஸ்தோபர் கொலம்பஸ் Christopher Colombus 122
போர்த்துக்கலின் முன்னேற்றம் The Rise of Portugal 126
ஒல்லாந்து Holland — 127

13 சிங்கள அரசர்களின் முன்னேற்றம்
The Sinhalese Revival — 129
மகா பராக்கிரமபாகு Parakrama Bahu the Great 129
2-ம் விஜயபாகுவும் 6-ம் மகிந்தனும்
Vijaya Bahu II and Mahinda VI — 130
கீர்த்தி நிசங்க மல்லன் Kirthi Nissanka Malla 131
லீலாவதி Leelavathi ... 131

14 தமிழர் படையும் சிங்கள அரசர்களும்
The Sinhalese Kings and the Tamils 132
மாகன் 3 ம் விஜயபாகு Magha and Vijaya Bahu III 132
2-ம் பராக்கிரமபாகு Parakrama Bahu II 132
4-ம் விஜயபாகுவும் 1-ம் புவனேகபாகுவும்
Vijaya Bahu IV and Bhuvaneha Bahu I 133
3-ம் பராக்கிரமபாகு Parakrama Bahu III 133
2-ம் புவனேகபாகு முதல் 5-ம் பராக்கிரமபாகுவரையும்
Bhuvaneha Bahu II — Parakrama Bahu V 133
3-ம் விக்கிரமபாகுவும் 5-ம் புவனேகபாகுவும்
Vikram, III and Bhuvaneha Bahu v 134
2-ம் வீரபாகுவும் 6-ம் பராக்கிரமபாகுவும்
ViraBahu II and Parakrama Bahu vI 135
3-ம் ஜயபாகுவும் 6-ம் புவனேகபாகுவும்
Jaya Bahu III and Bhuvaneka Bahu VI 136

7-ம் பராக்கிரமபாகு 8-ம் பராக்கிரமபாகு
Parakrama Bahu VII aud VIII ... 133
9-ம் பராக்கிரமபாகு Parakrama Bahu Ix 136

15 யாழ்ப்பாணம் Jaffna
விஜய ஆரிய சக்கரவர்த்தி செகராஜ சேகரன்
Segarajasegaran I — 138
குலசேகரசிங்கையாரியன் Gulasegara Singa Aryan 139
குலோத்துங்கசிங்கையாரியன் Gulatunga Singaaryan 139
விக்கிரமசிங்கையாரியன் Vikrama Singan 139
வரோதையசிங்கையாரியன் Varothya Singa Aryan 140
மார்த்தாண்டசிங்கையாரியன் Mattanda Singa aryan 140
குணபூஷணசிங்கையாரியன் Gunapooshana singa aryan 140
வீரோதயசிங்கையாரியன் Virothaya Singa Aryan 140
செயவீர சிங்கையாரியன் செகராசசேகரன்
Jaya Veera Singa Aryan — 141
குணவீர சிங்கையாரியன் Guna Veera Singa Aryan 141
கனகசூரிய சிங்கையாரியன்
Kanaga Sooriya Singa Aryan 141
செண்பகப் பெருமாள் Senpaha Perumal 142
கனகசூரிய சிங்கையாரியன்
Kanagasooriya Singa Aryan 142
பரராசசேகரன் Pararajasegaran 142

# உலக சரித்திரமும் இலங்கைச் சரித்திரமும்.

## 1. நூன்முகம்.

### சரித்திரம் History.

சரித்திரமென்பது, ஒரு தேசத்தின் வரலாறு; அத்தேசத்திலுள்ள சனங்களின் உற்பத்தி, நிலைமை, நாகரிகம், இராசாங்கமுறை முதலியவையும், அத்தேசத்தின் இயற்கை யமைப்பு, தாதுவர்க்கங்கள், புல் பூண்டு, செடி, கொடி, மரம்முதலிய பிராணி வர்க்கங்கள் ஆகிய இவைகளின் விருத்தாந்தங்க ளென்றே பொருட்சொல்ல வேண்டும். நமது தேசத்துச் சரித்திரத்தை யறிந்தால் போதாது. 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?'' என்று கருதாமல் நமது தேசத்துச் சரித்திரத்துடன் உலக சரித்திரத்தையும் கற்க வேண்டும்.

இவ்வுலகத்தில் அனேக இராச்சியங்கள் இருந்து அழிந்து போயின; இப்பொழுது அனேக இராச்சியங்கள் இருக்கின்றன. எத்தனையோ இராச்சியங்கள் கடலின் அலைகளைப் போலத் தோன்றி உயரக்கிளம்பி இடையிற் கிடைத்தவைகளைத் தம்முள்ளாக்கி, ஈற்றில் மோதியடியுண்டு சிதறிப்போய்விட்டன.

உலகத்திலுள்ள எல்லாச் சாதி சமயங்களிலும் மனிதனை விடப் பெரிய அதிசயம் ஒன்றுமில்லை; எல்லாச் சரித்திரங்களிலும் மனிதனுடைய சரித்திரமே மனதை அதிகமாக வசீகரிக்கக்கூடியது. எழுதி வைக்கப்பட்ட சாசனங்களுக்கும், வேதங்களுக்கும், பூர்வீக நாகரிகத்துக்கும் முன் தொடங்கி மானிடசரித்திரம் தொடர்ச்சியாய் வருகின்றது. மனிதன் இரண்டு லட்சம் வருஷங்களுக்குக் குறையாமல் இந்தப் பூமியில் வாசஞ் செய்து கொண்டிருக்கலாம். மிகவும் பழைய சரித்திர சாசனங்கள் ஏழாயிரம் வருஷங்களுக்குட்பட்டவை. எழுதி வைக்கப்பட்ட மிகவும் பழைய குறிப்புகள் ஐயாயிரம் வருஷங்களுக்குட்பட்டவை. இப்பொழுது பூமியின் உற்பத்தியைப் பற்றி ஆராய்வாம்.

## பூமி Earth.

சூரியனிடமிருந்து சிதறுண்ட கிரகங்களிலொன்றாகிய தீக்கோளம் ககோள மார்க்கத்தை யடைந்து சூரியனை அங்கப் பிரதட்சணம் செய்து வருகையில் காலகதியால் உஷ்ணந் தணியத் தணிய இக்கோளம் நீர்ப்பாகம் நிலப்பாகம் என இருபிரிவுள்ள உருண்டை வடிவான பூமியாயிற்று. பின்பு பஞ்ச பூதங்களின் கூட்டுறவாலும் சீதோஷ்ண ஸ்திதியின் கோளினாலும், நிலத்தில் தாவரவர்க்கமும், நீரில் சலசெந்துக்களும் தோன்றின. நீண்ட காலத்துக்குப் பின்னர் அச்சல செந்துக்கள் நீரிலும் நிலத்திலும் சஞ்சரிக்கத் தொடங்கின; அதற்குமேல் பல்லாண்டுகள் செல்ல விலங்கினங்கள் உற்பத்தியாய்ச் சஞ்சரித்தன; வெகுகாலத்துக்குப் பின் பால் கொடுத்துக் குட்டிகளை வளர்க்கும்பிராணிகளும்,மானிட வர்க்கமும் தோன்றின. பூமியையும் மலைகளையும் வெட்டிப் பரிசோதித்து பலவிதமண்கள், உலோகம் முதலியவை யடங்கிய அடுக்கான வரைகளினாலும், அவ்வடுக்குகளுக்கிடையிலிருக்கும் இலை செடி கொடி மரங்களின் அமைப்பினாலும், பிராணி வர்க்கங்களின் அஸ்திகளினாலும் பூமியின் வளர்ச்சியையும் காலத்தையும் ஊகிப்பதுமன்றிப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் மனிதன் உலகில் தோன்றியிருக்க வேண்டுமென்றும் புவன சாஸ்திர நிபுணர்கள் (Geologists) கூறுவார்கள்.

## சரித்திரஆராய்ச்சி Research.

மானிடர்களின் வாழ்க்கை நாகரிகம் முதலியவை, இயற்கையமைப்பு,இயற்கைத் தோற்றம் முதலியவைகளுடன் சம்பந்தப்பட்டவை யென்றே மானிட சாஸ்திரிகள் (Anthropologists) கூறுவார்கள். மேலும் மனிதர்கள் சரீர அமைப்பைக்கொண்டு காக்கேசியர், மங்கோலியர்,காப்பிரிகள்எனக்குலசாஸ்திரிகள்(Ethnologists) வர்ணப் பாகுபாடு செய்திருக்கிறார்கள்.

மானிடர்களின் பூர்வ விருத்தாந்தத்தைப் பரிசோதிக்கிற மூதையோர் (Archaeologists) பூமியில் மறைந்திருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இதுவரை பூமியை வெட்டிப் பார்த்துக் கிடைத்திருக்கும், எலும்புகள், மண்டையோடுகள், ஆயுதங்கள், பாத்திரங்கள், கற்களிலும் அஸ்திகளிலும் பதிந்திருக்



கும் சித்திரப்படங்கள், நாணயங்கள், சாசனங்கள் முதலியவற்றிலிருந்துபண்டைக்காலசரித்திரத்தைஅறிஞர்கள் ஊகிக்கின்றார்கள்.

உலகம் தோற்றியகாலம் இஃதென்றும், மானிட சீவராசிகள் தோற்றிய காலம் இஃதென்றும், அவை ஓரிடத்தே தோன்றி எவ்விதம் உலகமெல்லாம் பரவின என்றும் கூறுவது முடியாது. உலக சரித்திரத்தை யுற்று நோக்குங்கால், ஒரு காலம் அந்தகார யுகமா யிருக்கின்றது. இதுவே முற்காலம் அல்லது அபோதகாலம் என்றும் பின்பு சரித்திரந் தெரிந்துகொள்ளக் கூடிய காலத்தைப் பண்டைக் கால சரித்திர மென்றும் பின்னர் மத்தியகால சரித்திரமென்றும், அதற்குப் பின்பு தற்காலசரித்திரம் என்றும் பாகுபாடு செய்வது சரித்திராசிரியர்களின் வழக்கம். பண்டைக்காலம் என்பது கிறிஸ்து பிறந்து ஐந்தாம் நூற்றாண்டு வரையும் மத்தியகாலம் என்றும், அதற்குமேல் தற்காலம் என்றும் நிர்ணயிப்பது வழக்கம்.

கிறிஸ்தாப்தத்திலிருந்தே காலத்தைக் குறிப்பது நன்று. கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தை கி. மு. என்றும் கிறிஸ்துவுக்குப் பிந்திய காலத்தை கி. பி. என்றும் குறிக்கப்படும்.

## பூர்வீக மனிதன் Prehistoric Man.

சரித்திர காலத்துக்கு முற்பட்டனவாகச் சொல்லப்படும் அநேக மிருகங்களில் பூர்வீக மனிதன் ஒன்று. காட்டில் வாழும் விலங்குகளைப்போல் மனிதர் உணவு உறக்கம் முதலிய சாமானியமான தொழிலைப் புரிந்து வாழ்நாட்களைச் செலுத்தினார்கள். அவர்கள் மலையின் குகைகளிலும், மரங்களிலும் வாசஞ்செய்துகொண்டு காய்கனிகளையும் பச்சைப்புலாலையும் புசித்துக்கொண்டு வசித்தனர்.

## பனிக்கட்டிக்காலம் Ice Age.

மனிதர் உயர்தர விலங்குகளாக இருந்தகாலத்துக்குப் பனிக்கட்டிக்காலம்என்றுபெயர். மண்டையோடுகளாவது எலும்புகளாவது அகப்படாமையாலும், கைகளாற் செய்யப்பட்ட ஆயுதங்களை அவர்கள் அக்காலத்தில் உபயோகப்படுத்தாமையாலும் இக்காலத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அநேக ஆயிரவருஷ

காலம் வரையில் நீடித்திருந்த இக்காலத்தைப்பற்றி நம்து அநுமானத்தாலும் பூகோளசாஸ்திர உணர்ச்சியாலும் அறியக் கூடுமே தவிர மனுஷனுடைய சரித்திரத்தைக் கொண்டு ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது.

## கற்காலம் Stone Age.

அடுத்த காலத்திற்குக் கற்காலம் என்றுபெயர். இக்காலத்திலேதான் மனிதர் கூர்மையான கற்களை உபயோகப்படுத்தினார்கள். கற்காலத்தை பழைய கல்லாயுத காலம் என்றும் புதிய கல்லாயுத காலம் என்றும் இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். பழைய கல்லாயுத காலத்தில், கல்லினாற் செய்த முரட்டு ஆயுதங்களை உபயோகித்தார்கள். அவர்களுக்குச் சமையல் செய்யும் சக்தியுமுண்டு. புதிய கல்லாயுத காலத்தில் அவர்கள் ஈட்டி முனைகளையும், கத்திகளையும், கோடரிகளையும், தண்டாயுதங்களையும், சம்மட்டிகளையும், சமையற்பாத்திரங்களையும் கல்லினாற் செய்து கொண்டார்கள். அவர்கள் தீத்தட்டிக் கல்லையும் உபயோகப் படுத்தினார்கள்.

## உலோக காலம் Metal Age.

பின்பு, அவர்கள் உலோக வகையினாற் செய்த ஆயுதங்களை உபயோகப் படுத்தினார்கள். முதலில் கண்டெடுக்கப்பட்ட உலோகங்கள் செம்பும் துத்தநாகமுமே. இந்த இரண்டு மெதுவான உலோகங்களையும் சேர்த்து உருக்குவதினால் ஒரு கலப்பு உண்டாகிறது; அது வெண்கலம் எனப்படும். அது கடினமானது. அவர்கள் வெண்கலத்தை உபயோகித்தார்கள். அக்காலத்திற்கு வெண்கல காலமென்று பெயருண்டாயிற்று. பின்பு இரும்பினாற் செய்யப்பட்ட ஆயுதங்களை உபயோகப்படுத்தினர். இதற்கு இரும்புக்காலமென்று பெயர். இரும்பைக் கண்டு பிடித்தது இயற்கையமைப்பைச் சயிப்பதற்கு ஏதுவாயிருந்தது.

## நாகரிக அபிவிருத்தி Civilisation.

அவர்கள் ஆயுதங்களைக் கொண்டு காட்டு மிருகங்களோடு சண்டை செய்து வேட்டையாடிச் சீவித்தனர். இவ்வாறு காட்டு மிருகங்களைச் சயித்தனர், ஆடுமாடுகளைப் பழக்கி வளர்த்துப் பால் கறந்து உபயோகிக்கவும் தெரிந்து கொண்டனர். பின்பு ஆடுமாடுகளை மந்தை மந்தையாய் வைத்துக் கொண்டு அவைகளை மேய்ப்பதற்குப் புல்லுள்ள இடங்கள்தோறும் அலைந்து உலைந்து திரிந்தனர். அவர்கள் இயற்கையாய் வளரும் பொருள்களை அகப்பட்டமட்டும் சேகரித்து உபயோகித்தார்களே யன்றி, இயற்கைப் பொருளை வளர்க்கவாவது, செயற்கைப் பொருள்களைச் செய்யவாவது முயற்சி எடுக்கவில்லை. ஆகையால் நாடோடிகளாகத் திரிந்தனர். ஈற்றில் பயிர் செய்வதற்குரிய செழிப்பான விடங்களிலும் ஆற்றங்கரையோரங்களிலும் குடியேறினர். அவர்கள் நிலத்தை உழுது பயிரிட்டு அதிலிருந்து கிடைக்கும் விளைபொருள்களைக் கொண்டு சீவனஞ் செய்யத் தொடங்கினர். அவர்கள் தத்தம் வயல்களிலும் தோட்டங்களிலும் வீடுகளைக் கட்டிக்கொண்டு அவைகளில் வசித்து வந்தனர். இதுவே நாகரிக அபிவிருத்தியின் தொடக்கம்.

அந்தக் காலத்தில் உலகத்தில் மிகவும் செழிப்பாக இருந்த சீனா, மெசொபற்றாமியா, எகிப்து, இந்தியா முதலிய தேசங்களில் மனிதர் ஆதியிற் குடியேறினர்.

---

# 2. உலக சரித்திரம்—பண்டைக்காலம்.

## சீனா China.

உலக சரித்திரத்திற் கூறப்பட்ட சீர்திருத்தங்கதித்த பண்டைத் தேயங்களுட் சீனாவும் ஒன்றாகும். சீனருடைய கொள்கைப்படி அவர்களுடைய சீர்திருத்தம் தொடங்கி ஒரு லட்சம் வருடங்களாயிற்று. ஆயின் ஆராய்ச்சி வல்லோர் கிறிஸ்துவுக்கு முன் 4000 அல்லது 3000 வருடங்களுக்கு முன் அவர்களுடைய சீர்திருத்தம் தொடங்கி யிருக்கவேண்டும் என்பர். கொயாங்கோ, யாங்சிக்கியாங் என்னும் நதிப்பள்ளத்தாக்குகளில் தனித்தனி சிறு கூட்டங்களாக மனிதர் வசித்தனர். பின்பு மத்திய ஆசியாவில் இருந்து காட்டு மனிதர் ஒருங்குகூடி வந்து இவர்களைத் துரத்தத் தொடங்கினர். கி. மு. 246-ல் திசின்சீ என்னும் சக்கரவர்த்தியின்கீழ் எல்லாச் சீனரும் ஒருங்கு சேர்ந்து காட்டுமனிதரைப்பின் வாங்கச் செய்து விட்டு, தனித்தனிக் கூட்டமா யிருந்தவர்கள்

ஒற்றுமைப்பட்டு ஒருமித்திருந்தனர். சிசின்சீ 1800 மைல் நீளமுள்ள பாரிய சுவரைக் கட்டியெழுப்பி அக்காட்டுமனிதரைச் சீனராச்சியத்துக்குள் வராமற்செய்துவிட்டார்.

ஐரோப்பியரால் மேனிலைக்குக் கொண்டுவரப் பட்டிருக்குந் தொழில்களின் பிறப்பிடம் சீனதேசமே. கொயாங்கோ, யாங்சிக்கியாங் நதிப் பள்ளத் தாக்குகளில் இற்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன் வாசஞ்செய்த சீனர்களால் கமத்தொழிற் பிரயோசன விருத்தியின் பொருட்டு வேண்டிய வழிவகைகள் கையாடப்படலாயின; தெருக்கள், பாலங்கள், மாளிகைகள் முதலியன ஆக்கப்பட்டன. பூர்வீகந்தொட்டு இவர்கள் பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பட்டுப் புடவைகளை நெய்வதில் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தனர். பீங்கான் கோப்பை முதலிய பாத்திரங்களின் முதற்பிறப்பிடமும் சீனாவேயாம். ஐரோப்பியர் அச்சுப் புத்தகங்களைப் பாவிப்பதற்கு எண்ணூறு வருடங்களுக்கு முன்னிவர்கள் புத்தகங்களை அச்சிட்டனர். யுத்தத்திற்கு உபகரணமாகப் பாவிக்கப்படும் துப்பாக்கி மருந்து முதலியன முதல் முதல் சீனாவிலேயே பாவிக்கப்பட்டது. மாலுமிகளுக்கு மிகப் பிரயோசனத்தைத் தரும் திசையறியும் கருவியாகிய காந்தப்பெட்டியை இவர்கள் உபயோகித்தனர். இவர்கள் தாங்கள் அறிந்தனவெல்லாவற்றையும் இரகசியமாக வைத்திருந்தபடியால் இவர்களுடைய சீர்திருத்தத்தைப்பற்றி மற்றவர்கள் அறிய முடியாமலிருந்தது.

## கோன்பியூசியஸ் Confucius.

குங் பூ சிசி என்றழைக்கப்படும் கொன்பியூசியஸ் கி. மு. 550ம் வருடத்தில் ஓர் ஏழைக்குடும்பத்திற் பிறந்தார். அவர் கல்வி கற்று அவருக்குச் சமமானவர்கள் ஒருவருமில்லை என்று சொல்லக்கூடிய நிபுணராக இருந்தார். அவரிடம் அநேகர் வந்து கல்விகற்றுத் தேர்ச்சியடைந்தனர். அவர் சிலகாலம் நீதிபதியாக இருந்து நீதியைச் செலுத்திவந்தார். அவருடைய புத்திக் கூர்மையையும் நீதியையும் பார்த்து அனேகர் வியந்து கொண்டார்கள். பின்பு அவர் நீதிபதித்தொழிலையும் உலக வாழ்க்கையையும் துறந்துவிட்டு நாடுகள் தோறும் சிறந்த ஞானியாகத் திரிந்தார்.



சீனாவின் முதல் வேதம் வைதிக காரியங்களைப் பார்க்கிலும் இலௌகிக தர்மத்தையே அதிகமாக அநுசரித்தது. கௌதமபுத்தர் தன் வேதத்தை இந்தியாவில் உபதேசிக்குங் காலத்தில் கொன்பியூசியஸ் என்னுஞ் சாஸ்திரியானவன் சீனருக்கு தயை, பொறை, சாந்தம், தாழ்மை, உண்மை முதலான தர்மங்களைப்பற்றிப் போதித்தனர். ஆயின் அவர் பிறப்பு, இறப்பு, கடவுள் முதலிய மேலான தர்மங்களைப்பற்றிப் போதிக்க எண்ணவில்லை. அவர் உலகத்தில் சிறந்த ஓர் ஞானியாகவும், மகானாகவும், குருவாகவும் விளங்கினார். அவருடைய போதனையைக்கேட்டுக் கோடாகோடி சனங்கள் நன்மை யடைந்தனர். சீனருடைய சீர்திருத்தத்துக்கும் மேலேற்றத்துக்கும் கொன்பியூசியசே ஏதுவாயிருந்தார்.

கொன்பியூசியஸ் தன் தேச முன்னேற்றத்துக்காகச் சனங்கள் நன்னடக்கை யுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்ற பேராவலுடன் வெளியிட்ட விஷயங்களில் சிலவற்றைக் கவனிப்போம். "ஓர் மனிதன் தன்னைத்தானே கல்வியினாலும் ஞானத்தினாலும் சித்த சுத்திசெய்துகொண்டு நன்னடவடிக்கையி லிருந்தால் தன் குடும்பத்தையாளலாம். தன் குடும்பத்தையாள வல்லமை யேற்பட்டால் ஓர் நாட்டை ஆளலாம். ஓர் நாட்டையாளச் சக்தியுண்டேல் ஓர் பெரிய இராச்சியத்தைக் கட்டுக்குள்ளாக்கலாம். ஏனெனில் இராச்சியம் ஓர் பெரிய குடும்பமே. அரசன் குடிகளைத் தன் குழந்தைகளைப் போலக் காப்பாற்றக்கடவன். குடிகளும் அரசனுக்குக் கீழ்ப்படிந்து அவனைக் கௌரவப்படுத்த வேண்டும். கடமை செலுத்துவதென்பது குடிகளுக்கும் அரசனுக்கும் பொதுத்தருமமாகும்". இம்மகான் அரசியலைக் கடவுளாணைக்குட் படுத்தினதால் அவன் சனங்களால் போற்றப்பட்டான், அரசர்களால் நன்கு மதிக்கப்பெற்றான்.

## மெசோபற்றாமியா Mesopotamia.

ஐபிராத் நதிக்கும் தைகிறிஸ் நதிக்கும் இடையில் மெசொபற்றாமியா என்னும் தேசமுண்டு. பபிலோன் பட்டணம் தலைநகராய் இருந்த காலத்தில் இத்தேசம் பபிலோனிய என்றழைக்கப்பட்டது. இது நீர் வளம் நிலவளம் பொருந்திய செழிப்பான தேசமாயிருந்தபடியால், ஆடு மாடுகளை மேய்ப்பதற்கும், மானிட சஞ்

சாரத்துக்கும் ஏற்றவிடமாக இருந்தது. ஆயின் இது எப்போ குடியேற்றப்பட்டது என்று துணிய முடியாது. இற்றைக்கு 14,000 வருடங்களுக்கு முன் அங்கே சிறுகிராமங்களும் பட்டணங்களும் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஆயின் 7000 அல்லது 6000 வருடங்களுக்கு முன் பெரிய பட்டணங்களும் கிராமங்களும் கோட்டை கொத்தளங்கள் கூடகோபுரங்கள் மாடமாளிகைகள் இருந்ததென்பது அங்கு காணப்படும் அழிந்த கட்டடங்களால் நன்கு புலப்படும். இலங்கையின் தலைநகராயிருந்த அநுராதபுரத்தில் மாடமாளிகைகள் கட்ட 4000 அல்லது 5000 வருடங்களுக்கு முன்னமே மெசொபற்றாமியாவில் கட்டடங்கள் கட்டப்பட்டதென்பது ஆராய்ச்சி வல்லோருடைய துணிவு இத்தேசத்திலிருந்து எடுக்கப்பட்ட அனேக சிலாசாசனங்களினால் பண்டைக் காலத்தில் இத்தேசத்தவர்களே நாகரிகத்தில் மேன்மையடைந்தவர்களெனச் சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இத்தேசத்திலுள்ள ஆலயங்களில் விமரிசைகளும் விக்கிரகங்களும், திருவிழாக்களும், தானங்களும் தருமங்களும் வெகு காலமுன்னரேயே வழங்கிவந்தன என்று தெரிகின்றது. பைபிலில் காணப்படும் அனேக வரலாறுகள் இத்தேயத்திற்கும் சம்பந்தப்பட்டவைகளேயாம். இந்த இராச்சியம் உலகில் முதல் ஏற்பட்டதோவெனச் சந்தேகிக்க இடமுண்டு.

இத்தேசத்திலுள்ளவர்களுக்குச் சுமேரியர் என்று பெயர். அவர்கள் மட்பாத்திரங்கள் செய்யவும், செம்பு இரும்பு முதலிய லோகங்களிலிருந்து ஆயுதங்கள் செய்யவும், கப்பி, சக்கரம் முதலியவற்றை உபயோகிக்கவும், நீர்ப்பாய்ச்சவும் அறிந்திருந்தார்கள். கணிதசாஸ்திரம், வானசாஸ்திரம் கற்றிருந்தார்கள். எழுதவும் வாசிக்கவும் அறிந்திருந்தார்கள். அவர்கள் செங்கட்டிகளிலெழுதிக் காய வைத்தார்கள்; அவர்களுடைய புஸ்தகங்கள் செங்கட்டிக் குவியல்களாகவே யிருந்தது. அவர்கள் மிகுந்த சீர்திருத்தமடைந்தவர்களென்பது அவர்களுடைய சரித்திரத்திலிருந்து அறியலாம். சுமேரியர் சீருக்கு முன் சீர்திருத்தத்தில் மிகுந்திருந்தார்களென்பது சரித்திர ஆராய்ச்சிக்காரர் கூறுவர். சுமேரியர் ஒற்றுமையாக இருக்கவில்லை. தனித் தனிப்பட்டணங்களும் கிராமங்களும் இருந்ததே யன்றி அவையெல்லாம் கூடி ஒரு அரசனின்கீழ் இராச்சியமாக இருக்கவும் இல்லை. அவர்கள் கல்வியிலும்



சீர்திருத்தத்திலும் சிறந்தவர்களாயிருந்தபோதிலும், போரில் வல்ல வீரர்களாயிருக்கவில்லை. அது காரணம் பற்றிச் சீர்திருத்தங் குறைந்த அசீரியர் இவர்களை வென்று, இராச்சியம் முழுவதையும் தமதாக்கி ஒரு அரசனையும் ஏற்படுத்தி அரசியற்றினார்கள். அவர்களுடைய இராச்சியம் சில நூற்றாண்டுகளுக்கு நடைபெற்றது.

இது இவ்வாறிருக்கச் சுமேரியர் தங்கள் நாட்டை விட்டுப் பல திசைகளிலுஞ் சென்றனர். தென் இந்தியாவிலும் இலங்கையிலும் இருக்கும் திராவிடர் சுமேரியாவிலிருந்து இங்கே வந்து குடியேறிய சுமேரியர் என்பதே சில ஆராய்ச்சி வல்லோரினுடைய கொள்கை.

## எகிப்து Egypt.

உலகத்தில் நாகரிகமடைந்துள்ள இடங்களுள் ஈஜிப்ட் அல்லது எகிப்தும் ஒன்று. தற்காலம் எகிப்து என்று சொல்லப்படுகிற நாடானது ஆபிரிக்காக் கண்டத்தின் ஒரு பெரிய பாகம் முழுவதும் பரவியிருக்கிறது. ஆனால் பண்டைக் காலத்தில், நீலநதி அல்லது நைல் நதியின் இருகரையிலும் பத்துமைல் அகலமுள்ள செழித்த நாடு மட்டுமே எகிப்து என்று வழங்கப்பட்டது.

எகிப்து தேசத்திலுள்ள நைல் நதியும் அதன் கிளைகளும் அத்தேசத்தை நீர்வளம் பொருந்திய மனுஷ சஞ்சாரத்துக்கு ஏற்ற ஒரு சிறந்த தேசமாக்குகின்றது. ஆகையால் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் மனிதர் பயிர்த்தொழிலைச் செய்து கொண்டு இங்கே இருந்தனர். சிறு கிராமங்கள் தோன்றின; அவை பெரிய பட்டணங்களாயின; கிராமங்களும் பட்டணங்களுஞ் சேர்ந்து ஒரு பெரிய தேசமாயிற்று. அவர்கள் தமக்குள்ளே தலைவர்களை ஏற்படுத்திக்கொண்டு அமைதியுடன் அரசாட்சி செய்யத் தொடங்கினர்; அத் தலைவர்கள் எல்லாருக்கும் மேலாக ஓர் அரசன் இருந்தான்.

அவர்கள் இவ்வாறு ஒற்றுமையாக இருந்தபடியால், பகைவரை வென்று அனேக ஆயிர வருடங்களுக்கு எகிப்து இராச்சியத்தை நிலைநாட்டினார்கள். அவர்கள் தோல்வி அடைந்த காலத்

திலும் புதிய குடிகளைத் தம்முளடக்கி எகிப்திய இராச்சியத்தை
அழியவிடாமல் வைத்திருந்தார்கள். ஆயின் கி. மு. 670-ல்
அசீரியர் மெசொபற்றாமியாவைத் தமதாக்கியபின் எகிப்து ராச்சி
யத்தையும் சயித்தார்கள்.

### பூர்வீக எகிப்தியர்கள் Ancient Egyptians.

எகிப்து தேசத்துச் சனங்கள் நெட்டையராயும் மெலிந்தவர்
களாயும் உஷ்ணதேசத்திலிருந்தவர்களாகையால் பொதுநிறமுடை
யவர்களாயு மிருந்தனர். மாசற்ற வெண்மையான சணலால் செய்த
உடைகளையே ஆண்பெண் எல்லோரும் உடுத்தனர். எகிப்தில்
சணல் அதிகமாய் விளைந்ததினால் அதிநேர்த்தியான ஆடைகளுக்கு
அத்தேசம் பெயர் பெற்றிருந்தது. அவர்களுக்கு அழுக்கு என்
றால் அருவருப்பு. அவர்களிற் பலர் ஆடுமாடுகளை வளர்த்தும், பயிர்
செய்தும், சிலர் கைத்தொழில்களினாலும் வயிறு வளர்த்து வந்த
னர். அழகான மட்பாண்டங்களைச் செய்வதில் அவர்களுக்கு அதி
சாமர்த்தியமுண்டு. அவர்கள் உபயோகப் படுத்தின பாத்திரங்க
ளெல்லாம் அதி யலங்காரமாயிருந்தன. அவர்கள் நாணற் கோரை
யினால் பின்னப்பட்ட பாய்களையும் பாதரட்சைகளையும் அதிகமா
யுபயோகப்படுத்தினார்கள். பாய் முடைகிறவர்களுக்கும் கூடை
பின்னுகிறவர்களுக்கும் எப்பொழுதும் வேலையுண்டு.

அவர்கள் கப்பல்கள் செய்யவும் கடலில்பிரயாணஞ்செய்யவும்
கற்று, பிறதேசங்களுடன் வியாபாரஞ் செய்தார்கள். எகிப்தியர்
விவசாயத்திலும்; சிற்பசாஸ்திரம், வானசாஸ்திரம், மாலுமிசாஸ்
திரம், வைத்திய சாஸ்திரம், கணிதசாஸ்திரம், சித்திரம் வரைதல்,
அரசியல்முறை முதலியவற்றிலும் வல்லவர்களா யிருந்தனர்.
எகிப்தியர் சுமேரியரிலும் பார்க்கப் பன்மடங்கு சீர்திருத்தத்தில்
கூடியவர்கள். கி. மு. 4500-ம் வருடம் தொடங்கி 2500-ம் வரு
டம் வரையும் எகிப்து ராச்சியத்துக்கு நிகரான ராச்சியம்
வேறொன்றுமில்லை.

### எகிப்தியர்கள் எழுதியவிதம் Mode of Writing.

அத்தேசத்தில் அதிகமாய் விளைந்த பேபைரஸ் அல்லது
பேபர் (Papyrus) என்னும் நாணல் கோரையிலேயே அவர்கள்
எழுதிவந்தார்கள். இப்பொழுதுகூட அந்நாணல் நீலநதியோரத்



தில் வளர்கின்றது. காகிதம் என்று பொருள்படும் பேப்பர் என்ற
ஆங்கிலச்சொல் அந்நாணலின் பெயராகிய பேபைரஸ் என்ற
வார்த்தையினின்றும் வந்ததேயாம். பெரியநாணல் கோரைத்
தண்டுகளைக் கீறு கீறாய்க் கிழித்து, வரிசை வரிசையாகப் பரப்பி
அவைகளின் மேல் குறுக்காக மற்றொரு வரிசை கீற்றுகளைப்
பரப்பி இரண்டு வரிசைகளையும் ஒட்டி நன்றாய்ச் சேர்ந்தவுடன்
வெயிலில் காயவைத்துப் பின் இருபுறங்களையும் ஒப்புரவாக்குவார்
கள். இவ்விதமாகக் காகிதத்தைச் செய்து, நாணற்கோலாற்
செய்த எழுத்தாணியால் எழுதிப் புஸ்தகங்களைச் சுருள் சுருளாக
வைத்திருந்தார்கள். அவர்கள் எழுதின மையோ, பல ஆயிர வரு
ஷங்கள் சென்றபோதிலும் இன்னும் கெடாமல் இருக்கிறது. அவர்
களுள் புரோகிதர்கள் மட்டுமே சித்திரலிபி யென்று சொல்லப்
பட்ட எழுத்துக்களை எழுதினார்கள்; அவர்கள் அரசர்களின் சரித்
திரங்களை யெழுதி வைத்திருந்தார்கள்.

### எகிப்தின் அரும் பொருள்கள் Wonders of Egypt.

எகிப்தியர் தங்களுடைய அரசர்கள் சூரியவம்மிசத்தில்
உதித்தவர்கள் என்று நம்பினார்கள். ஆகையால் தங்களுடைய
அரசர்கள் இறந்தபோது அவர்களை அடக்கஞ் செய்து விநோத
மான பெரிய பூரநுதிக் கோபுரங்கள் (Pyramids) கட்டியெழுப்பி
விட்டார்கள். அவை சதுரமான பீடமாய் ஆரம்பித்து ஆகா
யத்தை யளாவிக் கூர்மையாய் முடியும் கூச்சுக்கோபுரங்களாம்.
இந்தக் கோபுரங்கள் இவ்வுலகத்திலுள்ள சமாதிகளுள் அதியற்புத
மானவைகளாய் விளங்குகின்றன.

சீயோப்ஸ் என்னும் கோபுரத்தை நூறாயிரம் வேலைக்காரர்கள்
இருபதுவருஷகாலம் இடையறாது வேலைசெய்து கட்டி முடித்த
னர். இக்கோபுரம் புராதனகாலத்தில் அதியற்புதப் பொருள்க
ளுள் ஒன்றாய் விளங்கிற்று. இதைக் கட்டினவர்கள் யந்திரசாஸ்
திரம், சிற்பசாஸ்திரம் முதலிய கலைகளில் மிகப் பயிற்சியடைந்த
வர்களாயும், அங்ககணிதம், அளவுசாஸ்திரம், சித்திரமெழுதல்
முதலியவைகள் தெரிந்தவர்களாயும் இருந்திருக்கவேண்டும்.
எகிப்து தேசத்தில் கருங்கல் கிடைப்பது அரிதானதால் வெளிநாடு
களிலிருந்து அதைக் கொண்டுவந்து இந்தப் பெரிய வேலையை
நடத்தியிருந்தால் அவர்களுடைய நாகரிகம் மேலானதென்று
நிர்ணயிக்கவேண்டும்.

கீசே யென்னும் ஊரில் ஒரே பாறையினின்று செதுக்கப்பட்டதும் மனிதத்தலையும் சிங்கச்சரீரமும் பூண்டதுமாகிய "ஸ்பிங்ஸ்" என்று ஒரு பிரமாண்டமான சிலையுண்டு.

அக்காலத்தில் எகிப்துதேசத்தையாண்ட அரசர்களுள் ஒருவன் அங்குள்ள ஆலயத்திற்கு அலங்காரமாக ஒரு பெரிய கற்றூணைக் கட்டுவித்தான். அத்தூணில் அவ்வரசனது வீரச்செயல்களெல்லாம் சித்திரத்தில் வரைந்து காட்டப்பட்டுள்ளன. இதன்பின்பு ஏறக்குறைய பதினான்கு நூற்றாண்டுகளுக்குமேல் சீசர் என்னும் உரோம சக்கிரவர்த்தி எகிப்தை யாண்டுவந்த கிளியொபாட்ரா (Cleopatra) ராணியைப் புறங்கண்டு அவ்வற்புதமான கற்றூணை அலெக்சாண்டிரியா என்னும் துறைமுகத்திற்குக் கொண்டுபோனான். கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தூணை அவ்விடமிருந்து அதற்கென்று கட்டப்பட்ட ஓர் கப்பலில் ஏற்றி இங்கிலாந்து தேசத்திற்குக் கொண்டுபோனார்கள். போகும் வழியில் கப்பலுடைந்து தூண் நீரில் மூழ்கிப் போயிற்று. மூழ்கிய கற்றூணை மிகவும் கஷ்டப்பட்டு எடுத்துக் கொண்டுபோய் லண்டன்மாநகரில் தேம்ஸ் நதிக்கரையில் இப்பொழுது வைத்திருக்கிறார்கள். அத்தூணுக்குக் கிளியொபாட்ரா ராணியின் ஊசியென்று பெயர்.

இறந்தவர்களின் உயிர் இன்புற்று இருக்கவேண்டுமானால் அவர்கள் உடம்பை அழியாது பாதுகாத்தல் வேண்டும் என்று நம்பினார்கள். உயிர்நீத்த உடம்பு அழுகிப்போகாது பாதுகாத்தற்கு அதன்மேல் ஒருவித தைலத்தைத் தடவுவது வழக்கம். பின்பு ஒரு அழகிய பெட்டியிலடைத்து, இறந்தவன் உருவத்தை அதன்மேல் வரைந்து அவன் சரித்திரத்தை யெல்லாம் சித்திரரூபமாய் எழுதுவார்கள். அதன்பின்னர் அழகான விசித்திர வேலைகள் செய்யப்பட்ட அறையில் அடக்கம் பண்ணுவார்கள். இவ்விதமான சமாதிகள் எகிப்தில் அநேகம் உண்டு; இவைகள் "மம்மீஸ்" என்றழைக்கப்படும்; இவைகள் மிகவும் விநோதமானவை.

## பினீசியா Phoenicia.

சீரியாவின் வடமேற்குப் பக்கத்தில் கடலோரமாயுள்ள நாட்டில்தான் பினீசியர்கள் வசித்தார்கள். பிறதேசங்களுடன் முதல் முதல் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தவர்களும் வேறு தேசங்களில்



குடியேறினவர்களும் அவர்களே. பழைய சாசனங்களினின்றும் இந்தப் பினீசியர்களைப் பற்றியும் இவர்கள் கீழ்த்தேசங்களினின்றும் வர்த்தகத்திற்காகக் கொண்டு வந்த சாடிகள், ஆபரணங்கள், வாசனைத்திரவியங்கள், நவரத்தினங்கள் முதலியவைகளைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

அவர்களுடைய முக்கிய துறைமுகமாகிய ரயர் என்னும் பட்டணம் இவ்வுலகில் ஒப்புயர்வற்று விளங்கிற்று. வியாபாரம் நாளடைவில் அதிகரித்தபடியால், கரையிலுள்ள இடம் போதாது அருகேயிருந்த ஒரு சிறு தீவையும் துறைமுகமாக்கினர். இவர்கள் மெசொபற்றாமியாவில் வியாபாரத்தையும் பெருக்கினார்கள். மற்றத் தேசங்களைப்போலப் பினீசியாவும் அசீரியருடைய ஆட்சிக்குட்பட்டது.

## ஆரியர் Aryans.

மத்திய ஆசியாவிலோ, ருசியாவிலோ அல்லது ஐரோப்பாவின் ஒரு பகுதியிலோ ஆரியர் என்று ஒரு சாதிமக்கள் இருந்தனர். அவர்கள் பயிர்த்தொழில் செய்து வந்தனர். அவர்களின் சனத்தொகை கூடியபடியால் அங்கே இருக்க முடியாமலிருந்தது. ஆகையால் அவர்கள் ஆடுமாடுகளையும் கொண்டு பயிர்த்தொழில் செய்வதற்கு ஏற்ற இடங்களில் குடிகொண்டனர். அவர்களில் ஒரு பிரிவு மேற்கேயும் ஒரு பிரிவு கிழக்கேயும் சென்றது.

மேற்கே சென்றவர்கள் ருசியாவைத் தவிர ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவினர். அவர்களே மேற்கு ஆரியர் என்றழைக்கப்படுவார்கள்.

(1) மேற்கே சென்ற ஆரியர்கள் ஐரோப்பாவின் தென் பாகத்திலுள்ள லத்தின் சாதியினர் எனப்படும் ரோமர், கிரேக்கர், பிரான்சியர், ஸ்பானியர் முதலியவர்கள்

(2) ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள ரியூரோனிக் சாதியினர் எனப்படும ஜெர்மனியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், தேனியர், நோர்வீசியர் முதலியவர்கள்

(3) ஐரோப்பாவின் மேற்குப் பாகத்திலுள்ள கெல்ரிக் சாதியினர் எனப்படும் ஐரிஸ், உவெல்ஸ், ஸ்கொத் முதலியவர்கள் என மூன்று வகுப்புண்டு.

கிழக்கே சென்ற ஆரியர்கள், பார்சியா, அபுகானிஸ்தான், இந்தியா முதலிய விடங்களுக்குச் சென்று சமஸ்கிருதம், பாலி, பார்சிய முதலிய பாஷைகளைப் பேசினார்கள்.

ஆங்கிலத்திலுள்ள 'பாதர்' லத்தீன் 'பாற்றர்', கிரேக்க 'பாற்றர்' சமஸ்கிருத 'பிதா' எல்லாம் ஒத்திருக்கிறதை உற்று நோக்கத்தக்கது. இவ்வாறு அநேக சொற்கள் இருக்கின்றன. ஆகையால் இந்தச் சொற்களெல்லாம் பொதுவான சில சொற்களிலிருந்து உண்டாயிருத்தல் வேண்டுமென்று யூகிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆரியர்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டு ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள அநேக தேசங்களுக்குப் போய்க் குடியேறினபடியால் அவர்கள் பேசிவந்த பாஷை பலதேச பாஷைகளோடு கலந்து பல மாறுதல்களை அடைந்துவிட்டது.

ஆரியர் மிக்க உயரமும் கம்பீரமான தோற்றமும் உடையவர்; மிக்க அழகுடையவர்; நேர்மையான ஒழுக்கமுடையவர்; திடசரீரமும் தேகபலமும் உடையவர்; மற்றவர்க்குக் கீழ்ப்படிய மனமில்லாதவர்; தம் சித்தப்படி நடக்க விரும்புபவர்.

## இந்தியா India.

பல்லாயிரம் வருடங்களுக்குமுன் இந்தியா காடடர்ந்து விரிந்த ஓர் நிலமாயிருந்தது. அக்காலத்தில் நகராதல் ஊராதல் வீடாதல் வழியாதல் காண்பதரிது. கங்கைநதிப் பிரதேசங்கள் மிக்க நல்ல நீர்வளமும் நிலவளமும் உடையவை. இங்கே அதிகமாய்க் கஷ்டப்பட்டு வேலை செய்யாமலே சனங்கள் சுகமாக வாழமுடியும். இந்தச் சமநிலங்கள் உள்ள பிரதேசத்திற்கு இந்துஸ்தானம் என்று பெயர். இங்கே மனிதர் முதல் முதல் குடியேறினர். அவர்கள் காய் கனி வேர் கிழங்குகளையும், மான் பன்றி முதலிய மிருகங்களின் இறைச்சிகளையும் தின்று வளர்ந்தனர். இவர்கள் சீர்திருத்தங் குறைந்த காட்டு மனிதர்.



## திராவிடர் Dravidians.

திராவிடர் இந்தக் காட்டு மனிதர்களை வென்று இந்தியாவில் குடியேறினார்கள். திராவிடர் மெசொபற்றாமியாவிலிருந்து வந்திருக்கலாம் என்று கூறினோம். அவர்கள் வடகிழக்குக் கணவாய் வழியாய் இந்தியாவுக்கு வந்ததாகச் சிலர் கூறுகின்றார்கள். பழைய குடிகளும் புதிதாய் வந்த திராவிடர்களும் ஒருவரோடொருவர் கலந்து வசித்தனர். திராவிடர்கள் பட்டணங்களில் யுத்தப்பயிற்சி யடைந்த பட்டாளங்களுடன் வசித்துவந்ததாகவும், அவர்கள் ஆயுதங்களையும் கொடிகளையும் உபயோகித்து வந்ததாகவும், பெண்கள் தங்கநகைகள் அணிந்து கொண்டிருந்ததாகவும் தெரிகிறது.

அவர்களுக்குப் பயிர்த்தொழில்செய்யவும், நூல் நூற்று நெசவுசெய்யவும் தெரியும். திராவிடர் ஆதியிலேயே பேசிவந்த சில சொற்களினால் அவர்களுக்கு மரத்தினாலே படகுகளும் தோலினால் பரிசைகளும் செய்யத் தெரியுமென்று விளங்குகின்றது. அவர்களுக்கு நூறு வரையில் எண்ணத் தெரியுமென்றும் சந்திரனைக் கொண்டு வருஷக் கணக்கிடத் தெரியுமென்றும் அறிகிறோம்.

## நாகர் Nagas.

ஆரியர் இந்தியாவுக்கு வரமுன் அங்கே குடியேறியவர்களுள் நாகர் என்று ஒரு வகுப்பினர் உண்டு. இவர்கள் நாகவழிபாடு உடையவர்களாயிருந்தமையால் நாகரென்றழைக்கப்பட்டார்கள். அவர்கள் பரதகண்டத்துக்கு வடகிழக்கிலுள்ள மலைநாடுகளிலிருந்து கீழிறங்கி ஓர்காலம் அக்கண்டத்தின் கீழ் தென் பாகங்களில் எங்கணும் பரவி மிக நாகரிகமுற்றுத் திகழ்ந்தவர்கள்.

## இந்திய ஆரியர் Indian Aryans.

ஐயாயிரம் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன் ஆரியர் கைபர் கணவாயைக் கடந்து இந்தியாவுக்கு வந்து பஞ்சாபில் குடியேறினார்கள். பின்பு இந்தியா வெங்கும் பரவிவிட்டார்கள்; ஆகையால் இந்தியாவுக்கு ஆரிய வர்த்தம் என்கிற பெயர் பிறந்தது. இந்தியாவிலிருந்த பூர்வ குடிகள் ஆரியரை எதிர்த்து அவர்களோடு கொடிய சண்டை செய்து வந்தனர். ஆயின் ஆரியர் அவர்களோடு சண்டைசெய்து வென்று அவர்களுடைய நிலங்க


ளைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆகையால் இந்தியாவிலுள்ள பூர்வ குடிகளாகிய திராவிடர் தெற்கே சென்றனர். ஆரியர் சந்தித்த திராவிடரில் பெரும்பான்மையோர் ஆரியரை விடப் பல விதத்திலும் நாகரிக மடைந்திருந்ததாகத் தெரிகிறது.


## வேதம் Vedas.


ஆரியர்கள் தாம் வணங்கிய தேவர்களைப் புகழ்ந்து பல கீதங்கள் பாடினார்கள். இவை வேதங்கள் எனப்படும். இந்தக் கீதங்களைத் தலைமுறை தலைமுறையாக அத்தியயனஞ் செய்துவந்தார்கள். அப்பால் பல நூற்றாண்டுகளுக்குப் பின், இந்தக் கீதங்களையெல்லாஞ் சேர்த்து இருக்கு வேதத்தை உண்டாக்கினார்கள். இருக்கு வேதம் இந்த உலகில் உள்ள மிகவும் பழைய நூல்களில் ஒன்றாகும். ஆரியருடைய வாழ்க்கையும் நாகரிகமும் இருக்கு வேதத்திலிருந்து அறியலாம். இருக்கு வேதத்தை உண்டாக்கிய பின்பு யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதங்களை உண்டாக்கினர். இருக்கு வேதம் அனாதியாயுள்ளது, அதாவது கடவுளால் அளிக்கப்பட்டது என்பர் சிலர். மேனாட்டு சரித்திர முறையைப் பின்பற்றினோர் இது கிறிஸ்து பிறப்பதற்கு முன் நாலாயிரம் ஐயாயிரம் வருடங்களுக்குட்பட்டதென்றும் அனேக ரிஷிகளால் பாடப்பட்டதென்றும் கூறுவர்.

ஆரியர் பூமியை உழுதும், ஆடுமாடுகளை மேய்த்தும் சீவனஞ் செய்தார்கள், நல்லவஸ்திரங்களை உடுத்தினார்கள். சணல்நார்க் கம்பளங்களை நெய்து உபயோகித்தார்கள். படகுகள் செய்து நதிகளினும் கடலிலும் யாத்திரை செய்வதிற் சந்தோஷம் அடைந்தார்கள். தாம்பிரம், இரும்பு முதலிய உலோகங்களையுருக்கி வேலைசெய்தார்கள். பலவிதமான ஆயுதங்களையும் உபயோகப் படுத்தினார்கள். கிராமங்களைச் சுற்றி அகழமைத்துச் சிற்பசாஸ்திரரீதியாய்க் கோட்டையையும் அதனுள் வீதிகளையும் ஆலயங்களையும் திருக்குளங்களையும் அமைத்துக் கொண்டனர். கிறிஸ்துவுக்கு முன் ஏறக்குறைய மூவாயிரம் வருடங்களுக்கு ஆரியர்கள் மிக்க நன்னிலையிலிருந்தார்கள். ஆயின் இந்தியாவில் சிறு சிறு இராச்சியங்களாக அநேகம் இருந்தன. அவ்விராச்சியங்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.













## 3. இலங்கையின் பூர்வசரித்திரம்.

நீர்வள நிலவளங்களாலும், தீங்கனிச் சோலைகளாலும், பல நிறப்பட்சி சாலங்களாலும், நானாவித விலங்கீட்டங்களாலும் பொன்னுநன் மணியு முத்துமாதியாந் திரவியங்களாலும் சிறந்த நமது தேசத்துக்கு ஆரியர் காந்திநாடென்று அர்த்தமுடைய இலங்கை யென்றும், புத்தர் கடல்படு திரவியத்தின் முதன்மை யான முத்தை நோக்கி நித்தில துவீபம் என்றும், இதன் நவமணிகளை நோக்கிச் சீனர் இரத்தின துவீபம் என்றும் கூறுவர். இலங்கையின் புராதன சரித்திரம் ஏனைய புராதன சரித்திரங்கள் எல்லாவற்றையும் போல் தோரணியற்றதா யிருக்கின்றது. இலங்கையிலுள்ள பூர்வ குடிகளைப்பற்றி யாதொன்றும் தெரியவில்லையென்றாலும், கற்களால் செய்த ஆயுதங்களும், தந்திரமலைக் குகையிலுள்ள பழைய சித்திரங்களும், 4000 அல்லது 5000 வருடங்களுக்கு முன் இலங்கை குடியேற்றப்பட்டிருந்தது என்பதைக் காட்டும். இலங்கையின் பூர்வ குடிகள் காய்கனி கிழங்கு முதலியனவற்றை யுண்டும், வேட்டையாடியும், மீன் பிடித்தும் இலங்கையில் இப்போதிருக்கும் வேடர்களைப்போல் சீவித்தார்கள்.

இராட்சதர் இலங்கையிலிருந்ததாக இராமாயணம் என்னும் காவியம் கூறுகின்றது. இராட்சதருடைய தலைவனாகிய இராவணன் எத்திசையிலுள்ளோரும் தன் பெயர் கேட்டுப் பயந்து நடுங்கி அஞ்சுமாறு உத்தண்ட கம்பீரனாயிருந்து அரசியற்றினான். அவர்கள் தலைப்பட்டணத்தில் அரமனைகளும் கோபுரங்களும் இருந்ததால் அவர்கள் நாகரிகமுள்ளவர்கள் என்றே எண்ண வேண்டும். இற்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன் இலங்கையில் இயக்கர் நாகரென இரு சாதிமக்கள் இருந்ததாக மகாவமிச நூல் கூறுகின்றது. இயக்கரென்பது இராட்சதரைப் போலும். நாகர் இலங்கையின் வடபாகமாகிய நாகதுவீபத்திலும் கல்யாணி யல்லது கழனியாவிலும் வசித்தனர்.

### இராமாயணம் Ramayana.

இந்தியாவிலுள்ள பழைய பெரிய செய்யுட் காவியங்களிலே இராமாயணமும் ஒன்று. இதனை வால்மீகி என்னும் முனிவர்

கி. மு. 400க்கும் கி. மு. 200க்கும் இடையில் சமஸ்கிருதத்தில் இயற்றியருளினார். பின்பு கல்வியில் வல்ல கம்பர் தமிழில் மொழி பெயர்த்தார். ஆரியர் தென்னிந்தியாவைச் சயித்ததும், இலங்கை யரசனாகிய இராவணனையும் இராட்சதரையும் சங்காரஞ் செய்ததும் இராமாயாணத்திலிருந்து தெரிய வருகிறது.

அயோத்திமாநகரைத் தலைமையாகக் கொண்ட கோசல நாட்டுக்குத் தசரதர் அரசராயிருந்தார். அவருடைய மூத்த புதல்வனாகிய இராமர் தம்முடைய வீரச்செயல்களினாலே பெரிய புகழுடைந்திருந்தார். மிதிலாபுரி அரசராயிருந்த ஜனகர் தான் வைத்திருக்கும் பெரிய வில்லை வளைக்கக்கூடிய வீரனுக்கே தனது மகளை விவாகஞ் செய்து கொடுப்பதாக அறிவித்தார். இதனையறிந்த அரசகுமாரர்கள் அனேகர் வந்து வில்லை வளைக்க முடியாமல் போய்விட்டார்கள். பந்தயமாக வைத்திருந்த அந்தப் பெரிய வில்லை இராமர் முறித்தார். பின்பு அவர் சீதாதேவியை மணந்து கொண்டார்.

தசரதராசன் தமக்கு வயது முதிர்ந்து விட்டதை எண்ணி இராமருக்கு இளவரசுப் பட்டங்கட்டத் தீர்மானித்தார். இச்செய்தியை அறிந்த இராமருடைய சிற்றன்னை அதைத் தடுத்துத் தன் மகன் பரதனுக்குப் பட்டங் கட்டவும் இராமர் பதினான்கு வருஷம் காட்டில் சீவிக்கவும் தன்கணவனிடம் வரங்கேட்டு வாங்கிக் கொண்டாள். இராமரைக் காட்டுக்குப் போகாமலிருக்கும்படி சனங்கள் வேண்டிக் கொண்டனர். அவர் அதற்கிணங்காமல் தம் சிற்றன்னையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தமது தந்தையின் சொல்லைக் காப்பதற்கே தீர்மானித்தார். ஆகையினால் அவர் தம் மனைவியுடனும் தம்பி இலட்சுமணனுடனும் காட்டில் வசிப்பதற்குச் சென்றார்.

காட்டில் முனிவர்களுக்கும் துறவிகளுக்கும் தீங்கு செய்து வந்த கொடிய இராட்சதர்களுடன் சண்டை செய்து அவர்களை இராமர் அடக்கினார். இதனால் இராமரை அங்கிருந்த முனிவர்கள் அன்போடு வரவேற்றுபசரித்தனர். இராட்சதர்களுக்கு அரசனாயிருந்த இராவணன் சீதாதேவியைக் களவாய்த் தூக்கிக் கொண்டு போய் இலங்காபுரியில் சிறை வைத்தான். பின்பு இராமர் வானர



ராசனாகிய சுக்கிரீவன், வானர வீரனாகிய அனுமான் முதலியவர்களுடைய உதவியைக் கொண்டு இராட்சதர்களுடன் கொடியபோர் புரிந்தார். அந்தப் போரில் அநேக இராட்சதர்களும் இராவணனும் மடிந்தனர். அப்பால் இராமர் தமது மனைவியைச் சிறை மீட்டுக் கொண்டு இராவணனின் தம்பி விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்கி விட்டுச் சென்றார்.

தென்னிந்தியாவிலுள்ளவர்கள் சீர்திருத்தம் குறைந்தவர்கள் என்றெண்ணி ஆரியர் அவர்களை வானரர் என்று வர்ணித்திருக்கலாம்.

இதற்குள் பதினான்கு வருஷ வனவாசமும் முடிந்தது. பின்பு இராமர் அயோத்திக்குத் திரும்பினார்.

இராமர் காட்டுக்குப்போனதும் அவர் தந்தை தசரதர் இறந்துவிட்டார். இராமருடைய சிற்றன்னை அரசை யாருக்கென்று விரும்பியடைந்தாளோ அந்தப் பரதன் முடிசூட்டிக் கொள்ள மறுத்துத் தம் அண்ணனுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அயோத்தி இந்தநிலைமையில் இருந்தபடியினால் இராமர் அங்கு வந்ததும் அரசுரிமை பெற்று முடிசூட்டிக்கொண்டார். சனங்கள் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

## புத்தர் Buddha.

மூவாயிரம் வருஷங்களுக்கு முன் ஆரியர்கள் இந்தியாவில்பல பெரிய இராச்சியங்களை ஏற்படுத்தி யிருந்தனர்; அவை காம்போஜம், காந்தாரம், குரு, மத்ஸியம், பாஞ்சாலம், கோசலம், காசி, மகதம் முதலிய இராச்சியங்களாம். கோசல தேசத்தின் வடபாகத்தில் சாக்கியர்கள் என்ற ஓர் ஆரிய வமிசத்தார் வாழ்ந்து வந்தனர். சாக்கியர்களுடைய நாட்டுக்குக் கபிலவஸ்து தலைநகராயிருந்தது.

ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் கபிலவஸ்துவில் சுத்தோதனன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு மிகவும் அழகிய மாயாதேவி யென்னும் மனைவியிருந்தாள்.

ஒருநாள் மாயாதேவி நித்திரைசெய்கையில், வானலோகத்திலிருந்து யானை வடிவமான ஒரு நட்சத்திரம் இறங்கி வந்து தன் வயிற்றினுள் புகுந்து கொண்டது போலக்கனவு கண்டாள். அதன்

பின் அவளுக்கு ஓர் அழகான ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் கௌதம சித்தார்த்தர் என்று பெயர் இட்டார்கள். சித்தார்த்தர் பிறந்த ஏழாம்நாள் மாயாதேவி உயிர் துறந்தாள்.

சித்தார்த்தருக்கு எட்டுவயதானதும் சுத்தோதனன் அவரை விசுவாமித்திர முனிவரிடம் கல்விகற்க அனுப்பினான். சித்தார்த்தர் எல்லாக் கலைகளையும் கற்றுப் பேரறிவுடையவராய் விளங்கினார்.

சுபாபுத்தர் ஒருபெரியசுயம்வரம் ஏற்படுத்தினார். அப்பொழுது அநேக இராசகுமாரர்கள் வந்திருந்தனர். அவர்களுள் தேவதத்தனும் சித்தார்த்தரும் இருந்தார்கள். எல்லாரும் தேவதத்தன் சயிப்பான்என்றுசொன்னார்கள். ஆனால் சித்தார்த்தர் வாள்வீசுதல் அம்பு எய்தல், குதிரையேறுதல், மல்யுத்தம் முதலிய எல்லாக்கலைகளிலும் மற்றவர்களைவென்று சுபாபுத்தருடைய மகளாகிய யசோதரையை விவாகம் செய்து கொண்டார். அவர் தம் மனைவியோடு பத்து வருடகாலம் இன்பமாய் வாழ்ந்து வந்தார். யசோதரைக்கு இராகுலன் என்ற ஓர் இராசகுமாரன் பிறந்தான்.

அப்படியிருக்கையில் மனிதர் பலவழியில் துன்பமடைந்து வருந்துவது ஏதோ ஒருநாள் அவர்க்குத் தெரிந்தது. அன்றைய தினம் அவர் தெருவழியே குதிரையேறிக் கொண்டு போனார். அப்பொழுது ஒரு கிழவன் தள்ளாடித் தள்ளாடி நடந்துவருவதையும் சற்றுத் தூரத்திற்கப்பால் ஒரு பிணம் வருவதையும் அவர் கண்டார். மனிதருடைய இப்படிப்பட்ட துன்பங்களை அவர் இதுவரையில் அறியாதவராகையினால் இப்பொழுது கண்டதும் கரைகடந்த கவலை கொண்டார். மனிதர்க்கு இன்னும் அநேகவிதமான நோய்களும் துன்பங்களும் வருவதுண்டென்று அவர் அன்றிரவு கண்டார். பிறகு அவர் மனிதருடைய துன்ப நிவர்த்தி செய்ய ஒருவழி கண்டுபிடிக்கவேண்டுமென்று தீர்மானங் கொண்டு தம் வீட்டையும் மனைவியையும் இளங்குழந்தையையும் விட்டு விட்டு வெளியே புறப்பட்டனர். சில வருஷகாலம் பல இடங்களில் அலைந்து தவஞ்செய்து உடலை வருத்தி அநேக கஷ்டங்களை அநுபவித்தார். அவர் ஒருநாள் ஆழ்ந்த தியானத்திலிருந்தார். அந்தத் தியானத்தில் அவர்க்குத் திடீரென்று ஞானோதயமுண்டாயிற்று. அது காரணம் பற்றி அவருக்குப் புத்தர் என்னும் பெயர் உண்டா




யிற்று. தமது இருளடைந்த மனத்திலுதித்த அந்த ஞானத்தைப்பற்றி உலகத்தோர்க்கு உபதேசிக்க வேண்டியது தமது கடமையென்று அவர் உணர்ந்தார்.

அப்பால் புத்தர் ஒவ்வோர் இடத்திற்கும் போய்த் தம்முடைய புதிய மதத்தைப் பற்றி நாற்பத்தைந்து வருஷகாலம் பிரசங்கம் செய்து வந்தார். அவர் இலங்கைக்கு மும்முறை வந்தாரென்று மகாவமிசநூல் கூறுகின்றது. முதலாவதாக ஞானோதய முண்டாகிய எட்டாம் மாதத்தில் பௌர்ணிமையிலன்று மகாவலிகங்கைக் கரையிலுள்ள விந்தனையில் இயக்கருக்குத் தம்முடைய மதத்தைப் போதித்துப் போயினர். ஆயிரக்கணக்கான இயக்கர்கள் அவருடைய மதத்தைத் தழுவினர்.

இரண்டாவதாக நான்கு வருஷங்களுக்குப் பின் குலோதரன் மகோதரன் என்னும் இரு நாகஅரசர்கள் மணியிழைத்த ஓர் சிம்மாசனத்தைப் பற்றி கொடுஞ்சமர் செய்வதை யறிந்து அவர் வந்து இருவரையும் சமாதானப்படுத்தி விட்டுச் சென்றனர். அவர் பஞ்சசீலத்தினை நாகர்களுக்கு உபதேசிக்க அவர்களும் எண்பது கோடி நாகப்பிரசைகளும் புத்தரைச் சரணடைந்து கொள்ளுதலும் அரசரிருவரும் ஒத்தமனத்தினராய் மணியாசனத்தைப் புத்தருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர். அவர் அதைக் கழனியாவிலுள்ள மணியாக்கிக என்னும் நாக அரசனிடம் கொடுத்து, தமது ஞாபகார்த்தமாய் ஸ்தாபித்து, அதனை வழிபடுமாறு பணித்துப் போயினர்.

மூன்றாவதாக மணியாக்கிக அரசனின் வேண்டுகோளின்படி புத்தர் வைகாசி விசாகத்திலன்று கழனியாவுக்கு ஐந்நூறு குருமார்களுடன் சென்றார். இப்போ புத்த ஆலயம் இருக்கும் இடத்தில் குருமார் சூழ்ந்திருக்க அவர் மணியிழைத்த ஆசனத்திலேறியிருந்து புத்தமதத்தை நாகருக்கு உபதேசித்தார். அவர் இந்தியாவுக்குப் போகும் வழியில் சிவனடிபாதத்துக்கும் அநுராதபுரத்துக்கும் சென்றார்.

புத்தர் தமது கொள்கையைப் பூரணமாக நிலைநிறுத்தி விட்டுத் தமது எண்பதாவது வயதில் சித்தியடைந்தார். கௌதம புத்தர் பரிநிர்வாண மடைந்தது கி. மு. 543-ம் ஆண்டு என ஓர் காலவரையறை வழுவினால் இதுவரையும் கொள்ளப்பட்டது. ஆயின் அம்மகானின் தேகவியோகம் உள்ளவாறு கி. மு. 483 இலேதான் நிகழ்ந்தது என ஆராய்ச்சிவல்லோர் கூறுவர்.



புத்தர். கி. மு. 623-கி. மு. 543.

BUDDHA.



## சிங்கவாகு SINGABAHU.

மகதநாட்டரசன் ஒருவன் கலிங்கநாட்டு இராசகுமாரத்தியைப் பாணிக்கிரகணஞ் செய்து சுப்பாதேவியென்னும் ஒரு புத்திரியைப் பெற்றான். சுப்பாதேவி லால நாட்டுக்குச் சென்று சிங்கனென்னும் ஒருவனைச் சேர்ந்து சிங்கவாகு என்னும் ஒரு புத்திரனையும் சிங்கவல்லி யென்னும ஒரு புத்திரியையும் பெற்றாள். சிங்கவாகு என்பது சிங்கத்தைக் கொன்றமைபற்றி வந்த பெயரென்று மகாவம்சநூல் கூறும். சிங்கவாகு தன் தாயையும் சகோதரியையும் கூட்டிக்கொண்டு மகததேசத்துக்குச் சென்றான். அவனுடைய தகப்பனாகிய சிங்கன் மகதநாட்டுக்கு இவர்களைத்தேடிப் போக மகதநாட்டரசன் பயந்து சிங்கனைக் கொன்று தலையைக் கொண்டுவரும் வீரனுக்கு அனேக வெகுமதிகள் கொடுப்பதாக அறிவித்தான். சிங்கவாகு தன் தகப்பனைக் கொன்று தலையை இராசனிடங் கொண்டு போகமுன் அரசன் இறந்து விட்டான்.

சிங்கவாகு மகதநாட்டுக்கு இராசனாகிசிலநாட்கள் அரசியற்றி பின்பு லாலா நாட்டுக்குச் சென்று சிங்கபுரம் என்னும் இராசதானியை ஏற்படுத்திஅரசியற்றினான். அவனுக்கு விஜயன் சமித்து முதலான 16 இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர்.

## விஜயன் WIJAYA.

விஜயன் துடுக்குள்ள துஷ்டனாகவிருந்து சனங்களுக்குஇடர் விளைவித்துக் கொண்டு திரிந்தமையால், அவர்கள் முறையீட்டுக்கு இணங்கிய தந்தையாகிய சிங்கவாகு அவனையும் அவன் காளையர் 700 பேரையும் லால நாட்டைவிட் டோட்டினான். விஜயனும் அவன்கூட்டாளிகளும் இந்தியாவின்தென்பாகத்திலுள்ள சுப்பாரக வென்னும் துறைமுகத்தை யடைந்தார்கள். ஆயினும் விஜயன் தனது துணைவரின் அட்டாதுட்டித்தனத்தால் அங்குள்ளார் தனக்கு மாறாக எழும்ப நேரிடலாமென்றஞ்சி அவ்விடத்தைவிட்டு இலங்கையை நாடிவந்து தம்பபண்ணை யென்னுந்துறையில் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த தினத்தில் (கி. மு. 483) வந்திறங்கினான்.

அப்போது இலங்கையில் காலசேனன் என்னும் ஒருவன் செங்கோலோச்சிக் கொண்டிருக்கக் கண்டு, விஜயன் அவனைக் கொன்று யக்கருடைய தலைவனின் மகளாகிய குவேனியை மணம் புரிந்தான். ஒருநாள் சிறீவஸ்து என்னும் நகரில் ஒரு பிரதானி வீட்டில் மணவிருந்துக்கு விஜயனும் குவேனியும் போயிருந்தார்கள். அப்பொழுது குவேனியின் சூழ்ச்சிப்படியே அங்கு சமுகமாயிருந்தவருள் தன் அரசுக்கு இடையூறு செய்யக்கூடிய சமஸ்தரையும் சடுதியில் சங்கரிப்பித்துத் தானே ஏகாதிபதியாய் அரசியற்றினான்.

பின்னர் நாட்டைச் சீரிட முயன்று வேற்றுத் தேயங்களில் நின்று வர்த்தகர்களைக் குடும்ப சமேதராய் வரவழைத்து இலங்கைக்குடிபதிகளாக்கி, தனது கூட்டாளிகளைப் பிரதானிகளாக இருத்தி, கிருஷிகத்தை வளர்த்து வந்தான்.

குவேனி பட்டத்துத் தேவியாக இருப்பது கௌரவமில்லையென்று எண்ணி தனக்கு இணையெனத் தகும் ஒரு பாரியையும் தன் துணைவருக்கு 700 கன்னியரையும் அனுப்பும்படி பாண்டிய அரசனுக்குத் தூதனுப்பினான். அவ்வேண்டுகோளுக் கிணங்கிப் பாண்டியன் தன் புத்திரி விஜயையும் 700 கன்னியரையும் பரிவாரங்களோடனுப்பி மணமுற்றுவித்தான்.

குவேனி மனஞ்சகிக்க முடியாதவளாய் தன் புத்திரனோடும் புத்திரியோடும் புறப்பட்டுப் புகலிடமின்றி உலைந்து திரிகையில் அவள் கொலையுண்டிறந்தாள். தப்பியோடிய இருபிள்ளைகளும் சிவனடிபாத மலையின் அடிவாரத்தில்வாழ்ந்திருந்தனர். இவர்களின் சந்ததியாரே தற்காலம் இலங்கையிலிருக்கும் வேடர் என்பர்.

விஜயன் 38 வருடம் அரசு செய்தபின் தனது அந்தியகாலம் நெருங்கி நிற்பதாக அறிந்து பட்டத்துராணி விஜயைக்குப்பிள்ளைப் பாக்கியமில்லையாதலால் தனதுஇராச்சியபாரத்தை ஏற்கத் தனது தம்பி சமித்துவை அனுப்பும்படி தனது தந்தைக்குத் திருமுகம் போக்கினான். அது கைக்கெட்டுமுன் சிங்கவாகு காலஞ் சென்று போனமையால், சமித்து தந்தையின் அரசுரிமையைத்தனதாக்கிக் கொண்டு தனது இளைய மகனாகிய பந்துவாசனை இங்கு அனுப்பி விட்டான்.



பந்துவாசன் இலங்கையை அடையமுன் விஜயன் காலஞ் சென்றமையால் அவன் பிரதம மந்திரியாகிய உபத்தீசனே பிரதியதிபதியாக விருந்து இராச்சிய கருமத்தைப் பார்த்து வந்தான்.

### சிங்களம் SINGHALESL

இலங்கை சிங்கவமிசத்தில் உதித்த விஜயன் கைப்பற்றிய நாடாதலால் சிங்கதுவீபம் என்னும் பெயர்பெற்ற தென்றும், சிறீஈழம் எனும் பூர்வநாமத்தின் சிதைவு என்றும் கூறுவர். யக்கர் நாகரும் விஜயனுடன் வந்த 700 காளையரும், பாண்டி நாட்டிலிருந்து வந்த 700 கன்னிகைகளும் பரிவாரங்களும் சேர்ந்து சிங்களவராயினர். விஜயனும் அவன் காளையரும் பேசிய பாஷையும், யக்கர் நாகர் பேசிய பாஷையும் பாண்டி நாட்டிலிருந்துவந்த தமிழ்க் கன்னிகைகளும் பரிவாரங்களும் பேசிய தமிழ்மொழியும் கலந்து சிங்களமென வருவதாயிற்று.

## 4. மேல் நாட்டுப் பூர்வ சரித்திரம்.

### அசீரியர் ASYRIANS.

மேல் நாட்டில் சீர்திருத்தம் பெற்ற தேசங்களாக விளங்கிய எகிப்தும் மெசொபற்றாமியாவும் நாளளவில் குன்றியது. மெசொபற்றாமியாவை சீர்திருத்தங் குறைந்த ஒரு சாதிக் காட்டு மனிதர் கைப்பற்றினர். சுமேரியருடன் போர்புரிந்தவர்கள் மெசொபற்றாமியாவுக்கு வடக்கேயுள்ள தேசத்தில் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்த செமெடிக் பாஷையைப் பேசும் அசீரியர், அவர்கள் அராபியரையும் யூதரையும் ஒத்தவர்கள். சீர்திருத்தங் குறைந்தவர்களாக விருந்தாலும் தைரிய சாலிகளாக இருந்தார்கள். அசீரியர் சுமேரியருடைய பாஷை, எழுத்து, நடவடிக்கைகள் முதலியவற்றைக் கைக்கொண்டார்கள்.

ஐபிறாத் நதியிலுள்ள பபிலோனியா அசீரியருடைய இராச்சியத்துக்குத் தலைநகராயிருந்தது. பபிலோனிய இராச்சியம் கி. மு. 1275-ம்வருஷத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்திருந்தது. கி. மு. 1600தொடக்கம் கி. மு. 600 வரையும் ஏறக்குறைய ஆயிர

வருட காலத்துக்கு அவர்களுடைய இராச்சியம் மிகவும் மேல் நிலையை அடைந்திருந்தது. கி. மு. 670-ல் அவர்கள் எகிப்து இராச்சியத்தையும் கைப்பற்றினர்.

அசீரிய அரசன் கொடுங்கோல் செலுத்திவர்தமையால் குடிகள் அரசனுக்கு மாறாக எழும்பி கி. மு. 606-ல் அரசனைத் தீக்கிரையாக்கினர். இத்துடன் அசீரிய இராச்சியம் முடிவுக்கு வந்தது.

## பார்சிகர்கள் Persians.

மெசொபற்றாமியாவுக்குக் கிழக்கிலுள்ள மலைப்பிரதேசங்களிலும் பீட பூமிகளிலும் குடியேறின ஆரியர்கள் (1) மேடியர்கள் (2) பார்சிகர்கள் என இருவகுப்பினராகப் பிரிந்தார்கள். மேடியர் அசீரியருடைய தேசத்தைக் கைப்பற்றிக் குடியேறினர். பார்சிகர்கள் எலாம் பிரதேசத்தையும் தற்கால பார்சிகத்தையும் கைப்பற்றினார்கள்.

## சைரஸ் Cyrus.

பார்சிகதேசத்தை அரசாண்ட பல மன்னர்களுள் கி. மு. 553-ம் ஆண்டளவில் அரசியற்றிய சைரஸ் என்பவன் மிகவும் பிரசித்திபெற்றவன். இவனுடைய தலைமையின்கீழ் பார்சிகர் மேடியருக் கெதிரா யெழுந்து கலகஞ் செய்து மேடியவரசனைச் சிம்மாசனத்தாலகற்றி மேடிய நாட்டையும் தந்தேசத்துடன் சேர்த்துக் கொண்டனர். சைரஸ் பார்சிக தேசத்துக்குச் சக்கரவர்த்தியானான். சைரஸின் வலிமையை யறிந்த எகிப்திய அரசனும் பபிலோனிய இளவரசனும் லீதியாவின் அரசனும் பார்சிகர் தம்மை வென்றுவிடுவார்களென்று பயந்து சைரசுக்கு எதிராக ஒருங்கு சேர்ந்துகொண்டனர்.

சைரஸ் புத்திக்கூர்மையுடையவனாதலால், தன்னைச் சருவுதற்கு ஆயத்தங்கள் செய்யமுன் தானே யவர்கள்மேற் படையெடுத்துச் சென்றான். முதலில் லீதியாவினரசனாகிய குரேசைத் தோற்கடித்து அவனாட்சிக்குட்பட்ட தேசங்களையும் சில கிரேக்க நகரங்களையும் தன் தேசத்தோடு சேர்த்துக்கொண்டான். அதன் பின்னர் ஆறு வருடகாலமாக மத்தியாசியாவிலிருந்து படை



யெடுத்து வந்த சித்தியர் (Scythians) எனப்பட்ட சாதியாரோடு சமராட வேண்டி நேர்ந்தது. சைரஸ் சித்தியரைப் பின்னிடச் செய்ததுமன்றித் தனதிராச்சியத்தை கிழக்குப் பக்கமாக இந்தியா வரையும் விசாலிப்பித்துக் கொண்டனன்.

பின்னர், கி. மு. 538-ல் மேற்குப்பக்கத்திலுள்ள தனது சத்துராதிகளை எதிர்த்தான். பபிலோனியாவையும் தனது இராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டான். இப்போது பார்சிகசக்கிராதிபத்தியம் கிழக்கே இந்தியாவின் எல்லை தொடங்கி மேற்கே கிறீஸ் வரையும் பரவியிருந்தது. சீர்திருத்தம் பெற்ற தேசங்களுள் எகிப்து தேசமொன்றே சேர்க்கப்படாம லிருந்தது. சித்தியர் மறுபடியும் படையெடுத்துச் செல்லாவிடின் சைரஸ் எகிப்தையும் தனதாணைக்குட்படுத்தியிருப்பான். சித்தியரைத் துரத்தும்படி முயன்றபோது கி. மு. 529-ல் கொல்லப்பட்டான். எகிப்தை அவன் மகன் கம்பிசெஸ் என்பவன் கி. மு. 525-ல் முற்றிக்கை யிட்டுத் தனதாக்கினான்.

## பார்சிக சக்கிராதிபத்தியம் Persian Empire.

சைரஸால் ஸ்தாபிக்கப்பட்டு மகன் கம்பிசெஸ் என்பவனால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பார்சிக சக்கிராதிபத்தியமானது உலகத்திற்றோன்றிய சக்கிராதிபத்தியங்களில் பெரியதாயிருந்தது. அது இந்தியாவும் சீனாவும் புறநீங்கலாகப் பழைய உலகத்தில் சகலதேசங்களையு முள்ளடக்கி யிருந்தது.

சைரஸ் ஓர் சிறந்த யுத்த வீரனாயிருந்ததுமன்றிக் கூர்மையான புத்தியும் நீதியும் படைத்த நல்லரசனாயிருந்தான். சைரஸ் பபிலோனை வெற்றி கொண்டபோது, பபிலோனியர் சிறைப்படுத்திய யூதரை விடுதலையாக்கி அவர்களைச் சொந்த நாட்டுக்கு அனுப்பிவிட்டான். அவன் தெருக்களையும் பாதைகளையும் திறந்து காசு நாணயங்களை வழங்கச் செய்து வர்த்தகத்தையும் ஊக்கப்படுத்தி நீதியான வரி வாங்கி நல்லரசு புரிந்து வந்தான். தனதாணையின் கீழ்ப்பட்ட தேசத்தவர்கள் தம் சொந்தப் பழக்கவழக்கங்களையும் உடைநடைகளையும் சமயங்களையும் அனுசரிக்கும்படி விட்டுவிட்டான்.

பார்சிக சக்கிராதிபத்தியமானது இருபது மாகாணங்களாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு தேசாதிபதி நியமிக்கப்பட்டனர். சைரஸுடைய சக்கிராதிபத்தியம் வல்லபம் படைத்ததாயும் நன்கு அரசாளப்பட்டதாயு மிருந்தது.

## கிறீஸ் GREECE.

கிறீஸ் அல்லது கிரேக்கை ஐரோப்பாவின் தென் பாரிசத்தி லிருக்கும் ஒரு சிறு தேசம். ஆரியர்களில் ஒருபகுதியார் இங்கே குடியேறினர். கிரேக்கை ஆரியருக்கும் இந்திய ஆரியருக்கும் மிகவும் ஒற்றுமையுண்டு. மலைகளும் குன்றுகளும் அதிகமானதால் முதலிற் சிறு சிறு தேசங்கள் தனித்தனி தோன்றிச் சுயஆட்சிக் குட்பட்டதாயின. கடல் சூழ்ந்த தேயமானதால் கிரேக்கர் மரக்கலங்களைக் கட்டி யோட்டுந்திறமையுடையவர்களா யிருந்தார்கள். கிரேக்கருக்கு முன் பெலாஸ்ஜியர் என்னும் ஓர் சாதிமக்கள் அங்கே வசித்தனர். கிரேக்க தேசத்தில் குடியேறிய ஆரியர், கல்வி, ஞானம், சிற்பசாஸ்திரம் முதலியவற்றை எகிப்தியர், பபிலோனியரிட மிருந்து கற்றார்கள்.

கிரேக்க தேசத்தின் பூர்வீக சரித்திரத்தில் விசேஷித்த சம்பவம் துரோய்ப்பட்டணத்தின் முற்றுகையே. இதைப்பற்றி ஹோமர் என்னும் கவிவாணன் இந்திய ஆரியரின் இராமாயணத்துக்கு இணையான இல்லியட் என்னும் தனது காவியத்தில் வர்ணித்துப் பேசுகின்றார். பிரையத்தின் குமாரனாகிய பாரிஸ் என்பவன் கிரேக்க பிரபுவாகிய மெனிலோசினுடைய மனைவியைத் திருடினான். அதினிமித்தம் கிரேக்க அரசர் யாவரும் அவனைத் தண்டிக்கும்படி ஒருமித்தார்கள். அவர்கள் துரோய்ப் பட்டணத்துக்குக் கப்பல் மார்க்கமாகச் சென்று கி. மு. 1184-ம் ஆண்டில் பத்து வருஷ முற்றுக்கையின் பின் அப்பட்டினத்தைப் பிடித்தார்கள்.

கிரேக்கர்களுக்குள் பாகுபாடுகள் பலவுண்டான போதிலும் ஒற்றுமைக்குக் காரணங்கள் பலவுள. ஆதிகாலம்முதல் வீரத்தன்மையைப் புகழும் விகிதங்கள், மதக்கோட்பாடுகள், சடங்குகள், கோவில்கள், திருவிழாக்கள், இவைகள் யாவும் ஒற்றுமைக்கான வழியைப் பற்றினவைகளே. ஆனால் தேசிக விஷயத்திற் பகையும்



போட்டியும் பலவாண்டுகளாய்ப் பெருகி வந்தன. ஆகையினால் எல்லாவிதமான ராசரீக முறைகளும் ஒன்றன்பின் ஒன்றாய் கிறீஸ் தேசத்தில் கிளம்பின தற்காலத்தில் உலகத்தில் வழங்கும் அநேக ராசநீதிகள் யாதாமோர் மாதிரியில் அங்கேவழங்கிவந்தது. அங்கே தனியரசு, பிரபுக்களரசு, சாமானிய அரசு, குடியரசு, பொது நன்மையரசு, ஐக்கியமாகாணமுறை இத்தகைய அரசாங்கவழிகள் ஒன்றன்பின்னொன்றாய் விருத்தியாயின. கலைஞான விருப்பத்திலும் நாகரீக வித்தையை விருத்தி பண்ணுவதிலும் கிரேக்கர் பேர்பெற்றவர்களாக இருந்தார்கள்.

கிரேக்கர்கள் பார்சிக சக்காராதி பத்தியத்துக்குக் கெதிராக எழும்பினார்கள். கம்பிசெஸின் மகனாகிய தாரியஸ் என்னும்பார்சிக அரசன் ஓர் சேனையை யனுப்பினான் கி. மு. 490-ம் ஆண்டில் 'மரதோன்' போரில் கிரேக்கர் பார்சிகர்களைப் பின்வாங்கச் செய்தார்கள். கி. மு 480-ல் சலமீஸிலும் கி. மு. 479-ல் பிளாத்தெயாவிலும் பார்சியர்கள் தோல்வியடைந்தார்கள் பார்சிகர் தங்கள் பெருமையாலும் பணச்செருக்காலும் வலியற்றவர்களாய் போர் முகத்தில் நிற்கத் தைரியமில்லாதவர்களானார்கள்; கடற் சண்டையில் பயிற்சியில்லாதவர்களா யிருந்தார்கள். ஆகையால் அவர்கள் தோல்வியடைந்தார்கள். இத்துடன்பார்சிகராச்சியம் குன்றியது.

பார்சிகர்களை வென்றபின் அவர்கள் தனித்தனியவேயிருந்தார்கள். பின்பு அவர் ஒற்றுமையில்லாதவர்களா யிருந்தமையாலும் அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தமையாலும் அவர்களுடைய தேசத்துக்கு வடக்கே மசிடோனியராச்சியம் வளர்ந்து வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

## சோக்கிறற்றிஸ் SOCRATES.

பற்பலதேசங்களிலிருந்து மகாயுத்த வீரரும், தேர்ச்சிபெற்ற மாலுமிகளும், சிறந்த அரசர்களும் தோன்றினர். ஆயின் கிரேக்க தேசத்தில் மகாஞானிகள் தோன்றினர். அவர்களுள் சோக்கிறற்றிஸ் என்பவர் சிரேட்டமானவர்.

சோக்கிறற்றிஸ் கி. மு. 469-ம் ஆண்டளவில் ஓர் சிற்ப சாஸ்திரிக்குப் புத்திரனாய் கல்விப் பொருளும் செல்வப் பொருளும் சிறந்தோங்கிய எதன்ஸ் நகரியில் பிறந்தனர். அவர் கல்விகற்றுக்



சோக்கிறற்றிஸ்
SOCRATES.
கி. மு. 469-கி. மு. 399.





கலைக் ஞானங்களில் வல்ல நிபுணராய் விளங்கினர். அவரிடத்தில் மாணுக்கர் அனேர் கல்வி பயின்று வந்தார்கள். அவர்களும் பேர் போன வித்துவான்களானூர்கள். அவர் படிப்பித்த முறை யென்ன வெனில் முதல் ஒரு சூத்திரம் கூறுவர். அப்புறம் அதின்கருத்து மாணுக்கர் மனத்திற் படத்தக்கதாய் பலகேள்விகளை வினவுவா. புது ஆராய்ச்சிகள் மூலமாய் உண்மையைக் கண்டு பிடிப்பதிலும். தவறுனவற்றை நீக்குவதிலும் காலம் முழுவதையும் போக்கினர். மனிதர் தம்பகுத்தறிவைக்கொண்டு ஒவ்வொன்றையும் ஆராய்ந்து அவற்றின் உண்மையைக் கண்டறியவேண்டியதென்பதே அவரின் பேராவலாயிருந்தது.

சோக்கிறற்றிஸ் பல வருடங்களாக எதன்ஸ் நகரிலுள்ள பிரசித்த தலங்கள் தோறுஞ் சென்று கல்வியில் விருப்புடையார்க்குப் போதித்துக் கொண்டு வந்தார். அவர் தம் வாக்கு வல்லமையினுலும் சாதுரியத்தினுலும் சனங்களிடத்திருந்த அறியாமையை மெல்ல நீக்குவதோடு அவர்கள் தம்மனதைப் புதுவழியிற் செலுத்துதற்குத் தூண்டியும் விட்டார். இவர்முன்னிருந்தஞானிகளைப் போலச் சனங்களுக்கு ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லாமல், அவர்கள் தம் யோசனையினுல் அவற்றைக் கண்டுபிடித்தற்குரிய வழி வகைகளைக் காண்பித்து விட்டார்.

அவர் உலகத்தில் தோன்றி மறைந்தஞானிகளுள் முதன்மை பெற்றவரா யிருந்தபோதிலும் அவலட்சண உருவமுடையவராயிருந்தார். அவர் பார்வைக்கு அவ்வளவுஅவலட்சண முடையவராயிருந்ததினுல் அவரின் போதனைகளை முன்னொருபோதும் கேளாதவர்கள் அவரை முதன்முறை கண்டவுடன் கேலிபண்ணிச் சிரித்தார்கள். எப்படியிருப்பினும் பலம் பொருந்தியவராயிருந்ததினுல் வாலப்பாரயத்தில போர்ச் சேவகத்திலமர்ந்து பல யுத்தங்களிற் பங்கு பற்றினுர்;

சோக்கிறற்றிஸ் வயோதிகதசை யடைந்திருக்கையில் அதாவது எழுபதாம் பாரயத்தில் எதன்ஸ் நகரத் தலைவர்களிற் சிலர் அவர் எதன்ஸ் நகரவாசிகளைத் தவறுன வழியில் நடத்தினுரென்றும், முன்னோராற் கைக்கொள்ளப்பட்ட போதனைகளையும் ஓர்

களால் வணங்கப் பெற்ற தேவதைகளையும் நீக்கும்படி புத்தி சொன்னாரென்றும் அவர்மேற் குற்றம் பாரித்தனர். அதினாலவர் நீதாசனத்தின்முன் விளங்கப்பட்டு நஞ்சுண்டு இறக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சோக்கிறற்றிஸ் எதன்ஸை விட்டுப் போயிருப்பின் தன்னுயிரைக் காப்பாற்றியிருக்கலாம். ஆயின், அவ்விதஞ் செய்தல் அவருக்கு ஓர் வெறுப்பான செய்கையாயிருந்தது. அன்றியும், அவர் நாட்டை விட்டுப் போயிருப்பின் தாம் போதித்தவை தவறென்பதை ஒப்புக்கொண்டவராயுமிருந்திருப்பார். ஆதலினாற்றான் அவர் தம்முயிரைத் தத்தஞ் செய்வதற்குப் பின்னிற்கவில்லை. கி.மு 399-ல் தனது சொந்த மாளிகையில் தம் சுற்றத்தவர் முன்பே நஞ்சு கலங்கப்பட்ட பானத்தைப் பருகி உயிர் துறந்தார்

அவருடைய மரணமானது மகத்துவம் வாய்ந்த வொன்றென இதிகாசங்கள் கூறுகின்றன. அவருடைய எண்ணம் உண்மையையும் நீதியையும் மாத்திரம் போதிக்க வேண்டுமென்பதே. அதினாலேயே எவ்வித பயமும் யோசனையுமின்றி அவ்விதமான மரணத்துக்குத் தன்னைக் கையளித்தார். நீதியை எவ்வளவாய் நேசித்தாரென்பதை, மரிக்கிறதற்குச் சொற்ப நேரத்துக்குமுன் தய்சினேதரொருவரை நோக்கித் தாம் கொடுக்க வேண்டிய ஒரு சிறுகடனை இறுத்து விடும்படி கேட்டுக் கொண்டதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

எதன்ஸ் நகரவாசிகள் இப்பெரு ஞானியை கொன்றபோதிலும் அவரால் போதிக்கப்பட்ட போதனைகளை மாத்திரம் அழித்துவிடமுடியவில்லை; அவரைப் பின் தொடர்ந்து அவர் மாணாக்கர் அவர் போதனைகளைப் போதித்தனர். அவர்களுட் சிரேட்டம் பெற்றவர் பிளாற்றோ என்பவர். அவர் தம்மாசிரியரின் போதனைகளை எழுதி வைத்ததுமன்றி அவரின் மரணத்தையிட்டும் விரிவாயெழுதி வைத்தனர்.

## மசிடோனியா MACEDONIA.

கிரேக்க தேசத்துக்கு வடக்கே பலவளப்பமும் நிறைந்த மசிடோனியா என்றொரு சிறு தேசமுண்டு. கிரேக்கர்கள் மசிடோனியரைச் சீர்திருத்தங் குறைந்த ஓர் சாதியினர் என்று சொன்ன



போதிலும் அவர்கள் கிரேக்கரைச் சேர்ந்த ஆரிய வகுப்பினரே. அவர்கள் பேசுவதும் கிரேக்க பாஷையே. அவர்கள் கல்விப்பயிற்சியிலும் நாகரிகத்திலும் குறைந்தவர்களாயிருந்தும், ஒற்றுமையுள்ளவர்களாகவும் சிறந்த போர்வீரர்களாகவுமிருந்தார்கள். அவர்களைப் பற்பல அரசர்கள் ஆண்டு வந்தார்கள்.

## பிலிப்பு PHILIP.

கி. மு. 359-ம் ஆண்டில் பிலிப்பு என்பவன் மசிடோனியாவுக்கு அரசனானான். இவன் சிறுபிராயத்திற்றானே கிரேக்கையில் வசித்ததினால் அவர்களிடமிருந்து கலைக்ஞானங்களையும் அரசியல் முறைகளையும் கற்றுக் கொண்டான். அவன் உத்தம அரசனாயும் சிறந்த போர்வீரனாயுமிருந்து அரசியற்றியதுடன், தம் பிரசைகளுக்கு யுத்தப்பயிற்சி செய்து, வல்லபம் மிக்கவோர் சேனையுமாக்கிக் கொண்டான்.

கிரேக்கர் தம்முட் தாம் சண்டையிட்டுவல்லபம் குறைந்திருப்பதைக் கண்ட பிலிப்பு அரசன் அவர்கள்மேற் படையெடுத்துச் சென்று அவர்களைத் தோற்கடித்தான். கி. மு, 338-ல் கிரேக்க ராச்சியம் அவனுடைய ஆணைக்குட்பட்டது. பின்பு கி. மு. 356-ல் பிலிப்பு அரசனை அவனுடைய பகைவன் ஒருவன் வஞ்சகமாய் வாளுக்கிரையாக்கினான்.

## மகா அலெக்சாந்தர் ALEXANDER THE GREAT.

பிலிப்பு அரசன் மரணத்தின் வாய்ப்பட்டபின் அவன் மகன் அலெக்சாந்தர் இருபதாம் பிராயத்தில் அரசனானான். அவன் தன்னைப்பயிற்றிய தன்பிதாவிலும் பார்க்கக் கல்வியிலும், யுத்தப்பயிற்சியிலும் மேலானவனெனத் தம் பிரசைகள் அறியும்படி செய்தான். இவனுடைய பிதா இவனுக்குக் கிரேக்கையிலுள்ள அரிஸ்தோத்தில் என்னும் உத்தம ஆசிரியனைக் கொண்டு கல்வியூட்டுவித்தான். கல்வியில் மிகவும் விருப்பமாக இருந்தான். உலகம் முழுவதையும் தன் ஆணைக்குள் கொண்டுவர வேண்டுமென்னும் ஆசைகொண்டவனாயிருந்தான்.

பிலிப்பு அரசன் மரிக்குமுன் பார்சியாவுக்குப் படையெடுத்துச் செல்லப் பல ஆயத்தங்கள் செய்தபோதிலும், அவ்வெண்ணத்தை முற்றுவிக்குமுன் அவன் இறந்தபடியால், அலெக்சாந்தர் தம் பிதாவின் எண்ணத்தை நிறைவேற்றத் தீர்மானித்தான். ஆயின், பார்சியாவானது கிரேக்கை மசிடோனியா இரண்டையும் பார்க்க ஐம்பது மடங்கு பெரிதாயிருந்ததுமன்றி அலெக்சாந்தருடைய சேனையைப்போல இருபதுமடங்கதிகமான சேனையையுங்கொண்டிருந்தது. அலெக்சாந்தர் தாமே தீரவீரனாய் நன்கு பயிற்றப்பட்ட சிறு சேனையுடன் சென்று தமதெண்ணத்தைப் பூர்த்தி செய்தான். அவன் ஆசிய துருக்கியைச் சேர்ந்ததும் அங்கிருந்து கீழ்த்திசையை நோக்கித் தம் படையை நடத்திச் சென்றான். அவன் அவ்வாறதிக தூரஞ் செல்லமுன் பார்சிக சேனை அவனை வழிமறித்துக் கொண்டது. அலெக்சாந்தர் தம் குதிரைமீதேறித் தம் வீரர்க்குத் திடமொழி பகர்ந்து யுத்தத்தை ஆரம்பித்தான். பார்சிகசேனை எத்துணைப் பெரியதாயிருந்தபோதிலும் அலெக்சாந்தருடைய சேனை அவர்களைத் தோற்கடித்தது. இவ்வெற்றியினால் ஆசிய துருக்கையிலிருந்த கிரேக்கைச் சேர்ந்த நாடுகள் பார்சிக அரசனினின்றும் விடுவிக்கப்பட்டன.

அதன் பின்னர் அலெக்சாந்தரும் அவன் சேனையும் கோர்டியம் என்னும் நகர்க்குச் சென்றன. அந்நகரின் கோட்டையுள் ஓரிரதம் ஓர் தூணோடு பிணிக்கப்பட்டிருந்ததைக் கண்டான். இதையிட்டு ஓர் கதையுண்டு. அஃதாவது, அவ்விரதம் பிணிக்கப்பட்டுள்ள பிணிப்பை யார் அவிழ்த்து விடுகிறாரோ அவனே ஆசியாவின் அரசனாவான். இதைக் கேட்டதும் அலெக்சாந்தர் தம்முடைய வாளால் அதைத் துணித்துவிட்டான். அங்கிருந்த சனங்கள் அலெக்சாந்தரே ஆசியாவினரசனாய் வருவானென்று நம்பிக்கொண்டனர்.

பின்னர் அலெக்சாந்தர் ஆசிய துருக்கையின் கரையோரத்திலுள்ள இசஸ் என்னும் நகரை அடைந்தான். இங்கே தாரியஸ் என்னும் பார்சிக அரசனும் யுத்தம் புரியும் நோக்கமாய் வந்தான். பார்சிக சேனையோ பார்வைக்கு மிக்க அழகுடையதாயிருந்தது. அச்சேனையின் முன்னணியில் பரிசுத்த நெருப்பைக் கொண்ட வெள்ளிச்சின்னங்கள் வர, அதன்பின்னர் தூயவெண் பரிகளாலிழுக்கப்பெற்று வரும் இரதம் ஒன்றில் அரசனும் வந்





மகா அலெக்சாந்தர்
ALEXANDER THE GREAT.
கி. மு. 356-கி. மு. 323.

தான். அவனைச் சூழப் பொன்மயமான உடைகளை அணிந்து வெள்ளிமயமான ஈட்டிகளைக் கரத்தேந்திய யுத்தவீரர்சென்றனர். அவர்களின் பின்னர் யுத்தவீரர் அணிவகுத்துச் சென்றனர்.

இருதிறத்தாருக்குமிடையில் கொடிய யுத்தம்உண்டாயிற்று அதில் அலெக்சாந்தர் காயப்பட்ட போதிலும் அவனே வெற்றியடைந்தான். பாரியஸ் ஒரு குதிரையிலேறி யோட, அவனுடைய கூடாரத்தில் அலெக்சாந்தர் தங்கினான். அங்கிருந்த விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் கைப்பற்றினான்.

அலெக்சாந்தர் பார்சியாவுக்கு நேரே போகாமல், ரயர் என்னும் நகருக் கூடாகச் சென்று சூறையாடி அப்பட்டணத்தையு மழித்து விட்டான். அதன்பின்னர் எகிப்துக்குச் செல்ல, அங்குள்ளோர் பார்சிக அரசியல் முறையில் வெறுப்புடையவர்களாயிருந்தமையால் அலெக்சாந்தரின் ஆணைக்குட்பட்டனர். நைல்நதி முகத்துவாரத்தில் அலெக்சாந்திரியாவென்னும்நகரைக்கட்டினான். ரயர் நகர மழிக்கப்பட்டதினால், அலெக்சாந்திரியா ஓர் விசேஷமான பட்டணமாய் விளங்கியது.

அலெக்சாந்தர் எகிப்திலிருந்து பார்சிக தேசத்துக்கு மலைகள் ஆறுகள் வனாந்தரங்களைத் தாண்டிச் சென்றான். தாரியஸ் ஒரு பெரிய சேனையுடன் வந்து அலெக்சாந்தரையும் அவன் சேனையையும் எதிர்த்துச் சமராடினான். அந்த யுத்தத்தில் அலெக்சாந்தர் வெற்றியடைந்தான். தாரியஸ் தப்பியோடும் பொழுது பார்சியன் ஒருவனுடைய வாளுக்கிரையாகினான். அலெக்சாந்தர் பார்சியாவின் அரசனாகிப் பல நகர்களைக் கட்டி ஆங்காங்கு சேனையின் ஓர் பாகத்தை நிறுத்திச் சென்றான். இந்தியாவுக்கு வடமேற்கே யிருக்கும் ஆபுகானிஸ்தானையும் தனதாக்கி விட்டு மலைகளைத் தாண்டி இந்தியாவுக்குள் சென்றான். இந்தியாவில் யானைப் படையைச் சந்தித்து பஞ்சாப் அரசனோடு யுத்தஞ்செய்து வெற்றியடைந்தான்.

இந்தியாவிலிருந்து அலெக்சாந்தர் தனது தலை நகருக்குப் போகும் வழியில் கி. மு. 323-ல் காய்ச்சலாற் பீடிக்கப்பட்டு மரண நித்திரையுள் மறைந்தான். அவன் மரிக்கும்போது அவனுக்கு வயது முப்பத்திரண்டு. அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்ட



வுடனே அவனுடைய இராச்சியத்தை அவனுடைய சேனைத்தள கர்த்தர்கள் பங்கிட்டுக் கொண்டனர். ஆயின் அவர்களுடைய இராச்சியங்கள் ஒன்றாவது நிலைநிற்கவில்லை; ஒன்றன்பின் ஒன்றாய் உரோமர் கைப்பட்டன.

அலெக்சாந்தர் பல தேசங்களைச் சயித்ததுமன்றி கிரேக்க பாஷையையும், கலைக்ஞானங்களையும், பழக்க வழக்கங்களையும் நாகரிகத்தையும் தான் சென்றவிடமெல்லாம் பரப்பினான். ஆகவே அவன் மூலமாக ஆசிய துருக்கி தொடங்கி இந்தியா வரையுமுள்ள கீழைத் தேசத்தவர்கள் கிரேக்கரையும் இவர்கள் நாகரிகத்தையும் கண்டறிந்திருந்தனர்

## உரோம் Rome.

அசீரிய இராச்சியமும், மசிடோனிய இராச்சியமும் அதன் கீழ் கிரேக்கையும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி மறைந்தன. அவன்பின்னர் உரோம இராச்சியம் உன்னத நிலையையடைந்தது.

உரோம் முதலில் சிறிய கிராமமாயிருந்தும் வரவரப் பெரிதாய் இற்றாலி தேசத்துக்குத் தலைநகராயும் பூர்வகாலத்தில் ஏற்பட்ட இராச்சியங்களுட் சிறந்ததாயும், செல்வாக்குடையதாயும், சட்ட விதிகளுக்குத் தாய்வீடாயும், கிரேக்கர்களின் நாகரிகத்தையும் வித்தையையும் பின்பற்றினபோதிலும் தன் லத்தின் பாஷை சிறப்புற்றோங்க இயற்றப்பட்ட காவியங்கள், நாடகங்கள், இதிகாசங்கள், தத்துவ சாஸ்திரங்கள் முதலியவற்றுக்குப் பிறப்பிடமாயும் வாக்குச் சாதுரியத்திலும் பிரசங்கஞ் செய்வதிலும்தேறிய நாவலர்களுக்கு இருப்பிடமாயும், உல்லாச வீதிகளையும், ஆடல்பாடல்களுக்குரிய நாடகசாலைகளையும் உடையதாயும் விளங்கிற்று. இங்ஙனம் அனேக நூற்றாண்டுகள் வாழ்ந்த பின்னர் உரோம இராச்சியமும் கீழ் நோக்கிச் சென்றது.

ஐரோப்பாவின் தென் பாகத்திலும் மத்திய பாகத்திலும் இங்கிலாந்துள்பட அனேக நாடுகளும், ஆபிரிக்காவில் எகிப்தும் கார்த்தேசும் சின்ன ஆசியாவில் சிலபாகங்களும், மத்தியதரைக் கடலிலுள்ள தீவுகளும் உரோம ராச்சியத்தினின்று சிதறின சிறு கணங்களென்றே சொல்லலாம்.

## ரோமுலியஸ், றீமஸ் ROMULUS AND REMUS.

உரோம நகரம் என்ற பெயரின் வரலாறு மிகவிநோதமானது.
துரோய் நகரம் பிடிபட்ட காலத்தில் ஈனியன் அங்கும் இங்கும்
ஓடித்திரிந்து, இறுதியில் இற்றலி தேசத்திற்குள் வந்து லவீனியா
என்னும் அரசகன்னிகையை மணஞ் செய்து கொண்டு அங்கே
குடியேறினன். அவர்கள் வமிசத்தார் ஏறக்குறைய மூன்னூறு
வருஷம் ஆண்டுவந்தார்கள். அவர்கள் மரபில்தோன்றிய ரோமுலஸ்
றீமஸ் என்னும் இராசகுமாரர்கள் குழந்தைப் பருவத்தில் அவர்
விரோதி யொருவனால் சிறு வள்ளத்திலிட்டு றைபூர் நதியில்எறியப்
பட்டு ஓர் ஓநாயால் காப்பாற்றப் பட்டு வந்தார்கள். பின்பு ஆட்டி
டைய னொருவனால் வளர்க்கப்பட்டு வயது வந்தவுடன் சௌரியத்
தினால் விரோதியை வென்று ரோமுலஸ் ஒரு நகரையும் றீமஸ்
ஒரு நகரையும் கட்டத் தொடங்கினார்கள். ரோமுலஸ் தன் சகோ
தரனாகிய றீமசை வாளுக்கிரையாக்கி விட்டு ரோமுலஸ் உரோமா
புரியென்னும் நகரை ஸ்தாபித்தான்.

## உரோமராச்சியம் THE ROMANS.

உரோமை கி. மு. 509-ம் ஆண்டு வரையும் அரசர்கள் ஆண்டு
வந்தார்கள். பின்பு குடிகள் இரு தலைவர்களை மகாசனசபையில்
தெரிந்தெடுக்க ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் ஒவ்வொரு
வயது வந்த ஆண்பிள்ளையும் சைனியத்தில் சேர ஆயத்தமாயிருந்
தார்கள். சனங்கள் பொதுவாக பிளிபியர் என்ற சாமானியர்க
ளும், பட்ரிஸர்கள் என்ற தனவான்களும் என இரு வகுப்பினர்க
ளாய்ப் பிரிந்திருந்தார்கள். அவர்கள் எப்பொழுதும் சண்டை
செய்துகொண்டேயிருப்பார்கள். சாமானியர்களைப் போர் வந்த
காலத்தில் தனவான்கள் உதவிசெய்யும்படி கேட்க நேரிட்ட
போது அவர்களுக்குச் சில உரிமைகள் கிடைத்தன. அவை
களில் முக்கியமானது றிறிபியூன் என்ற இரண்டு அதிகாரிகள்
சாமானியர்களினின்று நியமிக்கப்பட்டதே. காலவளவில் விவ
சாய சம்பந்தமாகவும் உத்தியோக முறையிலும் வர வர விருத்தி
யடைந்தார்கள்.

றைபர் நதிக்கரையிலிருந்த உரோம் நகரம் விருத்தியாய்
இற்றலி முழுமையும் சயித்து ஒரு தேசத்தை உண்டாக்கிற்று.



கி. மு. 266 முதல் 133-க்குள் கார்தேஜ், ஸ்பெயின், மசி டோனியா, சின்ன ஆசியா முதலியன வெல்லப்பட்டன. கி. மு. 133 முதல் கி. மு. 27-க்குள் இங்கிலாந்து, பிரான்சு முதலிய தேசங்கள் சயிக்கப்பட்டன. எகிப்தும சயிக்கப்பட்டது. குடியரசு அழிக்கப்பட்டது; மறுபடியும் அரசாட்சி ஆரம்பித்தது. ஆகஸ்டஸ் சக்கரவர்த்தியாகி நல்லரசு புரிந்தான். இவன் காலத்தில் இயேசுக்கிறீஸ்து பிறந்தார். இவனிறந்தது முதல் கி. பி. 395 வரையும் சக்கரவர்த்திகள் ஒருவன்பின் ஒருவனாய் அனேகர் அரசியற்றினார்கள்.

உரோமர்கள் பலசாலிகளாகவும் மனத்தைரியமுள்ளவர்களாகவும், போர் முகத்தில் பின் செல்லாமல் நிற்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

## கார்தேஜ் CARTHAGE.

பினிசியர்கள் வியாபார முயற்சியில் சிறந்தவர்களென அறிந்தோம். அவர்கள் தம்வியாபாரத்தின் பொருட்டு இத்தாலிக்கெதிரேயுள்ள ஆபிரிக்காக் கரையில் கார்தேஜ் என்னும் நகரத்தை உண்டு பண்ணினார்கள். இந்நகர் ஒரு காலத்தில் உலகத்திற் சிறந்த செல்வஞ் செழித்த நாடாய் விளங்கிற்று. அலெக்சாந்திரியா கிழ் மத்தியதரைக்கடலோரத்திலுள்ள நாடுகளுடன் வர்த்தகஞ்செய்து வந்தது போலக் கார்தேச்சும் மேல் மத்தியதரைக் கடலோரத்திலுள்ள நாடுகளுடன் வர்த்தகஞ் செய்து செல்வத்தைப் பெருக்கிற்று. "திரைகடலோடியும் திரவியந் தேடு' என்று ஔவையார் கூறியபடி இந்நகர் வாசிகள் வியாபாரத்துக்காகக் கடலிற்பிரயாணஞ் செய்தனர். அவர்கள் தேர்ந்த கப்பலோட்டிகளாயிருந்தமையால் கடலின் பாதைகள் எல்லாவற்றையும் கண்கறிந்திருந்தனர். இவர்கள் பாரிய யுத்தக் கப்பல்களையும் உபயோகித்தனர். இவர்கள் 'தகரத்தீவு' என்று அழைக்கப்பட்டு வந்த பிரித்தானிய தீவுகளின் ஒரு பாகத்தையும் அறிந்திருந்தனர்.

கார்தேஜ் நகரவாசிகள் குடியேறிய நாடுகள் பலவுண்டு. அவை கோர்ச்சிக்கா, சார்டினியா முதலிய தீவுகளும், ஸ்பானியாவிற் சில பாகங்களும், செழிப்பு வாய்ந்த சிசிலித் தீவினோர் பாகமுமாம். சிசிலி நீர்வளம் நிலவளமுடைய தீவாதலின் கோதுமை

நன்றாக விளைந்து வந்தது. சிசிலியானது உரோமுக்குச் சமீபத்தி
லிருந்தமையால் உரோமர் தமக்குத் தேவையான கோதுமையை
அங்கிருந்தே பெற்றனர். ஆயின், உரோம் நன்னிலையை அடைந்
திருக்குங் காலத்தில் கார்தேஜ் சிசிலியில் செலுத்தும் அதிகார
வல்லமையில் பொறாமை யடைந்தது. ஆகையால் உரோமர் கார்
தேச்சினியரை சிசிலியில் நின்று துரத்துவதற்கு எத்தனித்துப்
போர் செய்யத் தொடங்கினர். இவ்வாறு கார்தேச்சுக்கும் உரோ
முக்கு மிடையில் மூன்று யுத்தங்கள் நடந்தன. அவ்யுத்தங்கள்
"பியூனிக்" யுத்தங்கள் என்று கூறலாயின; ஏனெனில், கார்தேச்
சினியர் பினிசியாவிலிருந்துவந்து குடியேறிய பியூனிக்சாதியினர்.

## பியூனிக் யுத்தம் PUNIC WAR.


முதலாம் பியூனிக் யுத்தமானது கி. மு. 260-ல் தொடங்கி
விசேஷமாய் சிசிலியிலேயே நடைபெற்றது. கார்தேச்சினியர் கடற்
படையிலும் உரோமர் தரைப்படையிலும் வல்லபர்களாயிருந்த
மையால் உரோமர் கார்தேச்சினியரை வெற்றிகொள்வதற்குத்தம்
கடற்படையை அதிகரிப்பிக்கவும் நன்கு பயிற்றவும் வேண்டியவரா
யினர். பின்பு உரோமர் அனேக யுத்தக் கப்பல்களைச் செய்து
கொண்டதுமன்றிக் கார்தேச்சினியருடைய கப்பல்களைக் கண்ட
கண்ட விடங்களில் அழித்தும்விட்டனர். கார்தேச்சினியருடைய
கடற்படை இவ்வாறு அழிந்துவிட, அவர்கள் வலியற்றவர்களாகிச்
சிசிலியை விட்டோடினர். உரோமர் சிசிலியைத் தமக்காக்கியது
மன்றி கோர்ச்சிக்கா சார்டினியாவையும் தம்மாணைக் குட்படுத்
தினர். இவ்விதம் உரோமர் முதலாம் பியூனிக் யுத்தத்தில் வெற்றி
யடைந்ததைச் சகிக்க மாட்டாதவர்களாய் கார்தேச்சினியர்
இருந்தனர்.

## கனிபல் HANNIBAL.

இரண்டாம் பியூனிக் யுத்தம் மிகவும் விசேஷமானது. கார்
தேச்சினியர் தோல்வி யடைந்ததைக் கண்ட அவர்கள் தலைவன்
கமில்கார் என்பவன் ஸ்பானியாவை முற்றிக்கையிடத் தீர்மானித்
தான். இவன் ஒன்பது வயதுடைய தன் மகன்கனிபல் என்பவனைத்
தங்கள் தேவதை "பாலி"யின் பீடத்துக்கு அழைத்துச் சென்று,



யுத்தம்



கனிபல்

HANNIBAL.

கி. மு. 247—கி. மு. 183.

உரோமுக்கு எப்பொழுதும் சத்துராதியாயிருப்பதோடு உரோமை முற்றிக்கையிடுவதாகச் சத்தியஞ் செய்வித்தான்.

கனிபல் ஸ்பானியாவில் வசித்து போர் செய்யப் பயின்று, சிறந்த போர் வீரனாயினான். கமில்கார் மரிக்க ஸ்பானியாவிலிருந்த போர்வீரர் யாவரும் கனிபல் என்பவனையேதமக்குத் தலைவனாக்கிக் கொண்டனர். கனிபல் தனது வலிமை பொருந்திய யுத்தவீரரின் துணையோடு சீக்கிரத்தில் எபிரோநதிவரையும் ஸ்பானியாவைத் தனதாணைக்குட்படுத்தினான். அங்குள்ள வெள்ளிச் சுரங்கங்களிலிருந்து ஏராளமான வெள்ளி கார்தேசுக்குக் கொண்டுபோகப் பட்டது. இதுவரையும் கனிபல் ஸ்பானியருடன் போர்புரிந்து, தம் சேனையைப் பயிற்றியது, உரோமருடன் புரியவிருக்கும்பெரிய யுத்தத்துக்கு ஆயத்தமாகவேயாம்.

கி. மு. 218-ல் கார்தேச்சினியர் எபிறோ நதியைக் கடந்து உரோமருடன் யுதத்ஞ் செய்யத் தொடங்கினர். உரோமர் கார்தேச்சோடு யுத்தஞ் செய்யப் போர்க்கறை கூவியதும், கனிபல் தரைமார்க்கமாக இத்தாலிக்குச் செல்லத் தீர்மானித்தான். கார்தேச்சினியர் இப்பொழுது கடற்படையின் வல்லபத்தை யிழந்ததினாலும், இத்தாலியின் வடபாரிலுள்ள காலியரும் கிரேக்கரும் தமக்குத் துணைசெய்வார்களென்று நம்பியிருந்ததினாலும் அவன் கடல் மார்க்கஞ் செல்லாது தரை மார்க்கமாகச் சென்றான். இது மிகவும் பயங்கரமான பாதை. ஏனெனில், பிறினீஸ் மலையில் வசித்த முரட்டுத்தனம் நிறைந்த ஸ்பானியருடன் யுத்தஞ் செய்து அவர்களை வென்று, எத்தனையோ விரைவான நதிகளைக் கடந்து, பின்பு அல்ப்ஸ் மலையைத் தாண்டிச்செல்ல வேண்டியதாயிருந்தது. இம்மலையைத் தாண்டிச் செல்வதில் கனிபல் காட்டிய திறமையே அவனுடைய புகழை நிலைநாட்டியது. மலையின் உச்சியில் தாங்குதற்கரிய குளிரோடு கனிபல் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அத்துடன் அங்கு வசித்த மலைவாசிகளோடு போர்புரிய வேண்டியவனுமாயிருந்தான். ஆகையால் அவன் பட்ட கஷ்டமும் துன்பமும் சிறிதல்ல.

கடைசியாக அவன் இத்தாலியை அடைந்தபோது தன்சேனாவீரரில் ஒருபெரிய பாகத்தையிழந்துவிட்டான். எஞ்சியவர் இந்தப் பிரயாணத்தால் இளைப்படைந்தவர்களாய் போர்செய்யவலியற்றவர்



களாயிருந்த போதிலும் கனிபலைத்தலைவனாக வைத்திருந்தபடியால் அவர்கள் உரோமருடன் எதிர்த்துப் போர் புரிந்தனர்.

பதினைந்து வருடகாலமாக உரோமரோடு யுத்தம் புரிந்து கொண்டு இத்தாலியிலேயே கனிபல் தங்கினான். அக்காலத்தில் அவன் ஒருயுத்தத்திலாவது தோற்றுப்போகவில்லை. கனிபல் உரோமரைத் தோற்கடிக்கக் கூடியவனா யிருந்தபோதிலும் உரோமபுரியைக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. உரோமர் புதிய புதிய சேனைகளை அனுப்பிக் கொண்டே யிருந்தனர்; கனிபலுக்கோ கார்தேசிலிருந்து துணைப்படை அனுப்பவழியில்லாமலிருந்தது. ஆயினும் உரோமரால் கனிபலைத் தோற்கடிக்க முடியவில்லை. இதனையறிந்த உரோமர் ஒரு உபாயஞ்செய்தனர். அதாவது, சிசிப்போ என்னும் தளகர்த்தனின்கீழ் ஒருபடையை கார்தேசுக்கு அனுப்பினார்கள். கார்தேச்சினியர் கனிபலை அங்கே வரும்படி அழைத்தனர்.


கி. மு. 202-ல் கனிபல் கார்தேச்சுக்குச் சென்று ஒரு புதுச் சேனையுடன் சிசிப்போவைச் சந்தித்துச் சமராடித்தோல்வியடைந்தான். இத்துடன் இரண்டாம் பியூனிக் யுத்தம் முடிந்தது.

கார்தேச்சினியர் ஸ்பானியாவையும் அங்குள்ள யுத்தக்கப்பல்களையும் கொடுத்ததுமன்றி ஒரு தொகைப் பணத்தையும், கனிபலையும் அவர்களுக்குக் கையளிக்கஉடன்பட்டனர். ஆனால் கனிபல் ஒளித்தோடிச் சிலகாலத்துக்குப் பின் ஆசிய துருக்கையில் இறந்தான்.

இந்த யுத்தம் கார்தேச்சினியருடைய வீழ்கைக்குக் காரணமாயும் உரோமசக்கிராதிபத்தியத்தின் மேலேற்றத்திற்கு ஏதுவாயுமிருந்தது.

## யூலியஸ் சீசர் JULIUS CAESAR.

கி. மு. 102-ம் ஆண்டில் யூலியஸ் சீசர் ஓர் தனவானின் வமிசத்தில் உரோமாபுரியில் உதித்தான். அவன் ஓர் ஆசிரியரிடஞ் சென்று கல்வி கற்று வந்தான். அவனுடைய புத்தகங்களையும் எழுதுகோல் முதலியனவற்றையும் ஓர் அடிமை சுமந்து செல்வான். அக்காலத்தவர் பாவித்த புத்தகங்கள் தற்போதையபுத்தகங்களைப்



யூலியஸ் சீசர்.
JULIUS CAESAR.
கி. மு. 100-கி. மு. 44.



போன்றனவன்று. அவைதோலின்மேல்எழுத்தாணிகளால் எழுதப் பட்டுச் சுருள் சுருளாகக் கிடந்தன.

சீசர் உரோமராச்சியத்தை நேசிக்கவும், அரசாட்சி முறை முதலியவற்றைப் பற்றி ஆராயவும் தொடங்கினான், சீசர்புருடபருவத்தை யடைந்தபோது அரசியல் விஷயங்களிற் பங்குபற்றினான். பின்னர் அவன் "செனெற் என்னும்" சட்டசபைத் தலைவனாகவும், உரோம தேசத்துப் பிரதமதேசாதிபதியாகவும் தெரியப்பட்டான். அவன் ஓர்பேர்பெற்ற யுத்தவீரனாய்வந்து எத்தனையோயுத்தங்களைப் புரிந்தான்.

இற்றலிக்கு வடக்கே அல்ப்ஸ்மலைக்கப்பால் மூர்க்கத்தன்மை பொருந்திய ஓர் சாதியார் வசித்தனர். இவர்கள் பலமுறை படையெடுத்து இற்றலிக்குச்சென்று அங்குள்ள பொருட்களைச் சூறையாடிச் செல்வது வழக்கம். இவர்களை யடக்குவது சீசரின் பெரிய வேலையாயிருந்தது. அவன் உரோம சேனையை நடத்திக் கொண்டு பிரான்ஸ், ஸ்பானியா முதலிய விடங்களுக்குச் சென்று யுத்தம் புரிந்து அவ்விடங்கள் எல்லாவற்றையும் சயித்தான். சீசர் போன விடங்களெல்லாம் வெற்றியாகவே யிருந்தது; சீசரின் போர்வீரர்கள் அவன் போகுமிடங்களெல்லாம் பின்தொடர்ந்து செல்லும் விருப்புடையராயிருந்தனர். சீசர் பத்து வருடங்களில் 800 நகர்களையும் பெருந்தொகையான சாதியினரையும் சயித்தான்.

சீசர் பிரான்ஸ் என்றழைக்கப்படும் காலியாவில் தங்கி அரசியலை நாட்டினான். அங்கு வசித்த சனங்கள் லத்தீன் பாஷையைப் பேசத் தொடங்கினார்கள். உரோம நகரங்களுடன் வியாபாரஞ் செய்யவும் தொடங்கினர். சீசர் அடைந்த வெற்றிகளை யறிந்த உரோமர் அவனை ஒரு பெரிய தளகர்த்தனென்று உணர்ந்து கொண்டதோடு அவனைக் கனம்பண்ணத் தொடங்கினர்.

பின்பு காலியருக்குஉதவிசெய்தபிரித்தானியரைத் தண்டிக்க வெண்ணி கி. மு. 55-ல் கால்வாயைத்தாண்டிப் பிரித்தானிய கரையையடைந்தான். மலைகளிற் பிரித்தானிய யுத்தவீரர்கள் ஈட்டிகளோடு நிரை நிரையாக நின்றனர். அப்போது இருபகுதியார்க்குமிடையில் கொடும் யுத்தம் நிகழ்ந்தது. பிரித்தானியர் உரோம

ருக்கு முன்னிற்கமாட்டாதுபோகவேபிரித்தானிய வீரரின் தலைவன் சீசரிடஞ்சென்று தாமொருபோதும் உரோமருக்கெதிராக யுத்தம் செய்வதில்லையென்று உறுதிவாக்குக் கொடுத்தனன். ஆகையால் பிரித்தானியாவைத்தம்மாணைக்குட்படுத்தாமற் சென்றான். இதுவே பிரித்தானியரைப்பற்றி முதற் கூறப்பட்ட சரித்திரம்.

சீசர் காலியாவுக்குத் தேசாதிபதியாகவும், உரோமிலுள்ள இரு தலைவர்களில் ஒருவனாகவும் இருப்பதை யறிந்த பொம்பி தான் தலைவனாகவரமுயற்சிகள் செய்தனன். பொம்பி அப்பொழுது இற்றாலி தேசத்திலுள்ள சேனையின் தலைவனாயிருந்தான். பொம்பி சீரியா, பலஸ்தீனா, பினிசியா முதலிய நாடுகளைச்சயித்தான். பின்பு பொம்பி உரோமாபுரிக்கு வந்து சீசர் அங்கே வரமுன் தான் தலைவனாகவர எத்தனித்தான். இதனையறிந்த சீசர் உரோமுக்குப் போகவும் பொம்பியுடன் யுத்தஞ் செய்யவும் தீர்மானித்தான்.

உரோமராச்சியத்தின் வடக்கெல்லையிலுள்ள றூபிக்கன் நதியைக் கடந்து ஓர் சேனையோடு சீசர் சென்று பொம்பியுடன் நீடிய யுத்தஞ்செய்து ஈற்றில்வெற்றியடைந்தான். அவனே உரோமராச்சியங்கள் முழுவதற்கும் தலைவனானான். பொம்பி எகிப்துக்கு ஓடிச் செல்ல அங்கேயுஞ்சென்று பொம்பியுடன் கொடிய யுத்தஞ் செய்து வெற்றியடைந்தான். இருதலைவர்கள் இருப்பதினால் எப்பொழுதும் சண்டையும் சச்சரவுமாக இருப்பதை யறிந்து சீசர் ஒருவனையே சனங்கள் தலைவனாக்கினார்கள்.

ஆனால், உரோமில் வசித்தோரிற்சிலர் உரோமின் முன்னேற்றத்துக்காகவே சீசர் உழைத்தார் என்பதை நம்பவில்லை. அவன் உரோமின் அரசனாய் வரவே தெண்டித்தானென்றும், அவ்வெண்ணம் அப்போதிருந்தகட்டளைச்சட்டத்திற்குமாறென்றும்கருதினர்.

ஒருநாள் உரோமாபுரியிலே ஓர் பெருவிழாக்கொண்டாட்டம் நடைபெற்றது. அதற்குச்சீசரும்போயிருந்தான். அங்கேபிரசித்தமான ஓரிடத்தில் அவன் தலைமையிடம் வகித்துப் பொன் ஆசனத்தமர்ந்திருந்து விழாக்கொண்டாட்டத்தைப்பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அவ்வண்ணமிருக்கும்போது, மார்க் அந்தோனியென்பவன் ஓர் முடியை அவனுக்குக் கொடுத்தான். அதற்குச் சீசர்



தானோர் அரசனல்லனென்றும் யூபிற்றர் என்னுங்கடவுள் உரோமரின் அரசனென்றுஞ் சொல்லி அக்கொடையை வேண்டாமென்று மறுத்துவிட்டான். இதைக்கண்ட சனங்கள் கரகோஷஞ் செய்தனர். ஆனால் சீசரின் சத்துராதிகளோ சீசர் அரசனாகு மெண்ணத்தோடுதானிருக்கிறானென்று நம்பி, ஒரு பிரசித்த கூட்டத்தில் சீசரைக் குத்திக் கொன்று விட்டனர். இதையறிந்த அவனுடைய சினேகிதர் அவனைக் கொன்றவர்களைக் கொன்று பழிக்குப் பழி வாங்கினர். அவ்வாறு நடந்த யுத்தத்தின் பின்னர் சீசரின் மருமகன் ஒக்ரேவியஸ் அகஸ்தஸ்சீசர் என்னும்பெயரோடு உரோமின் முதற் சக்கிரவர்த்தியாய் வந்தனன். யேசுக்கிறிஸ்து நாதர் பெத்தலேமிற் பிறந்தபோது அரசாண்ட அகஸ்தஸ் சீசரென்பவர் இவரே.

## யேசுக்கிறிஸ்து JESUS CHRIST.

கிட்டத்தட்ட 2000 வருடங்களின்முன் சின்ன ஆசியாவைச் சேர்ந்த பலஸ்தீனாவிலே யுள்ள யூதேயா நாட்டிலே பெத்லகேம் என்னு மிடத்தில் யேசுக்கிறிஸ்து சனனமாயினர். தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடியும் யூதரின் காத்திருப்பின் படியும் அவதரித்த அவர் தாவீது என்னும் கீர்த்தி பெற்ற அரசனின் வம்சத்தில் மரியாள் என்னுங் கன்னி வயிற்றிற் பிறந்தார்.

ஓர்நாள் தேவதூதன் மரியாளுக்குத் தோற்றப்பட்டு அவள் கர்ப்பந்தரித்து ஓர் குமாரனைப் பெறுவாள் என்றும் அவர் சனங்களின் பாவத்தைச் சுமந்து தீர்ப்பார் என்றும் அவருக்கு யேசு என்று பேர் இடவேண்டும்என்றுஞ் சொன்னான். அந்தப்பிரகாரம் மரியாள் கர்ப்பவதியாகி யிருக்கும் காலத்தில் குடிமதிப்பொன்று இராசகட்டளைப்படி எடுக்கப்பட்டது. அவரவர் தாம் தாம்பிறந்த விடத்துக்குப் போகவேண்டும் என்று கட்டளை பிறந்ததினால் மரியாளும் புருஷனான யோசேப்பும் யோசேப்பின் செனன ஸ்தானமாகிய பெத்லகேமுக்குப் போய் அங்கே தங்க இடமின்றி ஓர்மாட்டுத்தொழுவத்திற் தங்க வேண்டியதாயிற்று. அங்கே மரியாள் ஓர் அழகிய புத்திரனைப் பெற்றனள். அத்தருணத்தில் தேவதூதர்கள் வானத்திலேதோன்றி அப்புத்திரனின் பிறப்பைக் குறித்துப்பாடிப் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

இப்புத்திரனின் பிறப்பைக் குறிப்பித்த ஓர் விசேஷ நட்சத்திரத்தைக் கிழக்குத் தேசத்திலிருந்தசாஸ்திரிகள் கண்டு அதினுல் நடத்தப்பட்டுப் பெத்லகேமுக்குவந்து பிள்ளையின்முன் விலையேறப்பெற்ற பொருட்களைக் காணிக்கையாய் வைத்துப் பணிந்து கொண்டனர். அவர்கள் பிள்ளையை யூதரின் ராசாவென்று சொல்லக் கேட்ட உரோம தேசாதிபதியாகிய ஏரோது இப்பிள்ளையைக் கொல்ல விரும்பி அவ்விடத்திலிருந்த 2 வயதுக்குட்பட்ட சகல ஆண்பிள்ளைகளையுங் கொல்லும்படி கடினமான கட்டளை கொடுத்தான். தேவ எத்தனமாய், இக் குரூரசெய்கை நடைபெறுமுன் யேசு என்னும் பிள்ளை எகிப்து தேசத்துக்குக் கொண்டு போகப் பட்டமையாற் தப்பிற்று.

பிள்ளைப் பராயத்திலேயே யேசு சகல நற்குணங்களும் பொருந்தி அடக்கமுங் கீழ்ப்படிவு முள்ளவராய் யாவராலும் நேசிக்கப்பட்டனர். இளமையிலேயே யூதரின் சகல கலைகளிலும் திறமையுற்றனர். பன்னிரண்டு வயதாயிருந்தபோது எருசலேம் தேவாலயத்திற்குப் போனபோது அங்கிருந்த யூத பண்டிதரோடு சம்பாஷணை செய்து தமது ஆழ்ந்த அறிவினுல்அவர்களைப் பிரமிக்கச் செய்தார்.

30 வயதானபோது யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்று, வனாந்தரத்துக்குச் சென்று அங்கே தமது ஊழியத்துக்காரம்ப ஆயத்தமாக 40 நாட்களாக உபவாசித்துத்தேவதியானத்திலிருந்தனர். அது முடிந்தவுடனே மனிதரின்நித்திய சத்துருவான சாத்தான் அவரிடம் வந்தனன் உலகத்திலுள்ள சகல மனிதரும் பாவத்தின் சம்பளமாய் அடைய வேண்டிய தண்டனையிலிருந்து அவர்களை விலக்கி இரட்சிப்பதற்கு வழியாக ஏற்படுத்தப்பட்ட பிராயச்சித்த பலியாய் தம்மை யேசு ஒப்புக்கொடாதபடி விலக்குவதற்காகச் சாத்தான் தெண்டித்து அவருடைய நோக்கத்தை விட்டுவிடுவதற்கேதுவான உலகத்துக்குரியகவர்ச்சிகளை அவர்முன் வைத்தான். அவரோ தம் நோக்கத்திலுறுதியுள்ளவராய்ச் சாத்தானின் சோதனைகள் யாவற்றையும் எதிர்த்து வெற்றி பெற்றார். சாத்தான் வெட்கத்தோடு அகன்றான்.

அப்பால் யேசு தமது அன்பின் ஊழியத்திற் பிரவேசித்தார். தம்மோடு கூடவிருந்து தமது மறுவற்றசீவியத்தைக் கவனித்துத் தமது உச்சித போதனைகளைக் கேட்டு அவற்றாற் தமது சுவிசேஷ




பிரசங்கிகளாகப் பக்குவமடையும்படிகல்வியற்ற சாமானியமனுஷர் பன்னிரண்டு பேரைச் சீஷராய்த் தெரிந்தனர், அவர்களோடு நாடெங்குஞ் சுற்றித் திரிந்து தமது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்.

அவர் அதிகாரத்தோடேபேசுவதையும் அவருடையபோதனை மற்ற யூத போதகர்மாரின் போதனைகளைப்பார்க்க மிகச்சிறந்ததாக இருந்ததையுங் கண்டு யாவரு மாச்சரிய முற்றனர். அவர் சென்ற இடமெல்லாம், குருடருக்குப் பார்வை யளித்து, சப்பாணிகளை நடக்கச் செய்து, ஊமையர் பேசவும் செவிடர் கேட்கவுஞ்செய்து, குஷ்டரோகிகளைக் குணமாக்கி, திமிர்வாதக்காரர் தம்மவயவங்களைப் பாவிக்கச் செய்து இவ்வாறு திரளானோரின் கஷ்டங்களை நிவிர்த்தி செய்து துக்கத்தைப் போக்கிச் சென்றவிடம் எல்லாம் பிரகாசத்தையுஞ் சந்தோஷத்தையும் பரப்பினர். கனவான்கள் தனவான்களைத் தேடி அவர்கள் தயவை நாடாது ஏழைகள் சிறியோரைத் தேடி அவர்களின்குறைகளைத்தீர்த்தார். அன்பு, தயவு, இரக்கம், சாந்தம், பொறை, அடக்கம், தெய்வபத்தி முதலாஞ் சகல நற்குணங்களிலும் மிக்க உயர்ந்த முன்மாதிரி வைத்தனர்.

சர்வ சனங்களுக்கும் நன்மை செய்து கொண்டு திரிந்த இவரின் மறுவற்ற சுத்த சீவியமும், உச்சிதமான போதனைகளும், கடுகளவேனும் சுயநய விருப்பமில்லாத சுபாவமும், தன்னய விருப்பமும் சுகசீவியமுமுள்ள பிரதான ஆசாரியர் வேதபாரகர், மூப்பர் ஆதியோரின்போக்கைக்கண்டித்தமையாலவர்கள், விசேஷமாய்ப் பிரதான ஆசாரியர், அவரிற் கடும்பகை கொண்டு அவருக்குத் தீங்கு செய்ய நாடினர். அவரது போதனையிலாவது சீவியத்திலாவது ஏதேனும் வழுக்கண்டு பிடிக்கப் பெருமுயற்சி செய்தும் வாய்க்காமற் கலகம் எழுப்பினுர் என்று பொய்க்குற்றச் சாட்டு அவரில் ஏற்றி உரோம தேசாதிபதியான பிலாத்துவின் முன் கொண்டுபோய் நிறுத்தினர். பிலாத்துவும் மரணத்துக்கேதுவான குற்றம் அவரிற் காணுதிருந்தும் செல்வாக்குள்ளவர்களான பிரதான ஆசாரியரின் தயவைப் பெறும் நோக்கமாய் அவரைச் சிலுவையிலறையும்படி தீர்ப்புச் செய்தனன்.

நன்மையேயன்றித் தீமை ஒன்றுஞ் செய்யாத யேசு பாரதூரமான குற்றவாளிபோல் இருகள்வரின் மத்தியிற் சிலுவையில் அறையுண்டனர்.




பூர்வீக இந்தியா
ANCIENT INDIA.



பிராயச்சித்த பலியாகி இரட்சிப்பின் கிருத்தியத்தை இவ்வாறு நிறைவேற்றியபின் அவர் சரீரத்தை அவரை நேசித்த யோசேப்பு என்னும் ஓர் சீஷன் எடுத்து தனதுபுதிய கல்லறையில் அடக்கம் பண்ணினன். கல்லறைக்குமுன் உரோம போர்ச்சேவகர் காவல் வைக்கப்பட்டனர். மூன்றும்நாள் யேசு உயிரோடெழுந்து வெளியே வந்து 40 நாளாகத் தமது சீஷருக்கும் வேறுசிலருக்குந் தரிசனங் கொடுத்துப் பலர் முன்னிலையிற் பரலோகஞ் சென்றனர் என்று கூறுவர்.

யேசுக்கிறிஸ்துவின் மலைப் பிரசங்கம் மிக உச்சித போதனைகளடங்கியது.

அவருடைய அடியவர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். விவிலியநூல் அவர்களுக்குப் பிரதானமானது.

## V. இந்தியாவின் பூர்வ சரித்திரம்.

இந்தியாவில் ஆரியர்கள் வந்து குடியேறினர்களென்றும் அநேக சிறு இராச்சியங்கள் இருந்ததென்றும் அறிந்தோம். இச் சிறு இராச்சியங்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

இராமர் இலட்சுமணருடைய காலத்துக்குப் பின்னும் புத்தர் பிறப்பதற்கு முன்னும் அலெக்சாந்தர் இந்தியாவுக்கு வர முன்னும் இந்தியாவில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. இதுவே மகாபாரதத்தில் கூறப்படும் பாரத யுத்தம்.

### பாரதயுத்தம் BHARATA WAR.

பழைய ஆரிய வகுப்பைச் சேர்ந்த கௌரவர்க்கும் அவர்களுடைய சகோதரராகிய பாண்டவர்க்கும் இடையில் நடந்தபெரிய யுத்தத்தைப் பற்றி மகாபாரதம் கூறுகின்றது. இந்தப் பெரும் யுத்தத்தைப்பற்றிக் கூறுவதுடன் இது அநேக கதைகளடங்கிய ஒருபெரிய பொக்கிஷம்போலிருக்கிறது. அந்தக்காலத்து அரசியல் முறைகளும் சனங்களுடைய நடவடிக்கைகளைப் பற்றிய விஷயங்களும் இதில் அடங்கியுள்ளன

அஸ்தினபுர அரசனுடைய புதல்வராகியபீஷ்மர் பட்டத்துக்குரியவராயிருக்க, இவருடைய சிற்றன்னை தன் பிள்ளைக்கும் அவர் சந்ததியாருக்குமே பட்டம் வேண்டும் என்று விரும்பினள். அவ

ளுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு, பீஷ்மர் தாம் விவாகமே செய்து கொள்வதில்லையென்றும் அரசுரிமையைத் தாம் இழந்து விடுவதாகவும் பெரியசபதஞ்செய்தார். இது செய்தற் கரியகடுஞ்சபதமாதலால்அவருக்குப் "பயங்கர பீஷ்மர்" என்னும் பெயர் உண்டாயது.

பாண்டவர்களும் கௌரவர்களும் பீஷ்மருடைய சிறியதாயா ரின் பேரன்மார்களின்புத்திரர்களாவர். இவர்கள் சிறுவராயிருந்த பொழுது பீஷ்மர் இவர்களுடைய கல்வி, பயிற்சி, தேர்ச்சிமுதலிய வற்றைக் கவனித்து வந்தார். பாண்டவர்கள் ஐந்து பேர்; கௌர வர்கள் நூறு பேர். கௌரவர்கள் மூத்தவனுடைய பிள்ளைகள். அவர்கள் பாண்டவர்களுக்குப் பலவிதமான இடையூறுகள்செய்து வந்தனர். பாண்டவருடைய தந்தை இறந்து விட்டபடியால் அவர் கள் கௌரவர்களுடனிருந்து வளர்ந்து வந்தனர். பாண்டவர்கள் நல்வழியில் நடந்து வந்தனர். தீரச்செயல்கள்செய்யும் பராக்கிரம சாலிகள். ஆகையால் அவர்களுக்கு நல்ல கீர்த்தி உண்டாயிற்று. இதனால் கௌரவர் அவர்களிடம் பொறாமைகொண்டு அவர்களைத் தொலைத்துவிடப் பலவழியிலும் முயற்சி செய்தனர். அவர்கள் செய்த சூழ்ச்சிகளிலே பாண்டவர்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பினார்கள். பின்பு அவர்கள் பாஞ்சால தேசஞ் சென்று அந்த அரசனுடைய மகள் திரௌபதி யென்டவளை விவாகஞ் செய்து கொண்டனர்.

பாண்டவர்கள் காடுகளையெல்லாம் அழித்து அங்கே தங்க ளுக்கு ஒரு பட்டணம் உண்டாக்கிக் கொண்டு அதில் வசித்தனர். இந்திரப்பிரஸ்தம் என்னும் அந்தப் பட்டணம் இப்பொழுதுள்ள டில்லி மாநகருக்குத் தெற்கில் சற்றுத் தூரத்திலிருந்தது.

சில வருஷங்கள் சென்றபின்பு பாண்டவர்களுள் மூத்தவ ராகிய யுதிஷ்டிரர் என்பவர் கௌரவரோடு சூதாடினார். கௌர வர்க்குப்பதிலாக அவர்களுடைய மாமன் சகுனி என்பவன்முன்வந்து சூதாடினான். அதில் யுதிஷ்டிரர் தமது பொருள்கள், தமது பட்ட ணம், தமது தம்பிமார் எல்லாவற்றையும் பந்தயம் வைத்து இழந்து விட்டார். பாண்டவர்கள் பதின்மூன்று வருஷம்வனவாசஞ்செய்து



திரும்பி வருவார்களானால் பிறகு அவர்களுக்குப் பாதி இராச்சியம் கொடுப்பதாகக் கௌரவர் ஒப்புக் கொண்டனர்.

பாண்டவர்கள் காட்டுக்குச் சென்று பதின்மூன்று வருஷ காலத்தையும் கழித்துப் பின் திரும்பி வந்து பாதி இராசசியம் தரும்படி கௌரவர்களைக் கேட்டனர். கௌரவர்களுக்குமூத்தவ னாகிய துரியோதனன் ஒரு குழி நிலங்கூடக் கொடுக்க மாட்டே னென்று மறுத்து விட்டான். அதனால் இருதரத்தினர்க்கும் குரு க்ஷேத்திரத்தில் பெரிய யுத்தம் நடந்தது. கௌரவர் உள்பட அநேக வீரர்கள் இந்த யுத்தத்தில் மடிந்தனர். கௌரவரின் உணவை உண்டவராகையால் அந்தச் சோற்றுக்கடனைக் கழிக்கத் தீர்மானித்துப் பீஷ்மர் கௌரவருடைய பக்கமிருந்து பத்துநாள் கடும்போர் புரிந்தனர். அவருடைய உடம்பெல்லாம் அம்புகள் பாய்ந்துவிட்டபடியால், அவர் சோர்வடைந்து கீழே விழுந்து விட்டார். ஆனால் அவர் உடனே இறக்கவில்லை சண்டை முடியும் வரையும் உயிரோடிருந்தார். பதினெட்டுநாள் யுத்தம் நடந்தது. ஈற்றில் பாண்டவர்கள் வெற்றியடைந்தனர்.

## ஸ்ரீ கிருஷ்ணர் SRI KRISHNA.

யாதவ அரசராகிய ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களுக்குப் பெருந்துணையா யிருந்தார். அவர்பாண்டவர்களைப் பெருங்கஷ்டங் களிலெல்லாங் காப்பாற்றினார். அன்றியும் கௌரவர் திரௌபதி யைச் சபையில்எல்லோருடையமுன்னிலையில் அவமானஞ்செய்யத் தொடங்கிய பொழுது அவளுக்கு மானபங்கம நேரிடாமல் காப் பாற்றினார். வில்வித்தையில் வல்லவனாகிய அர்ச்சுனன் என்னும் பாண்டவ அரசனுக்கு இவர் சாரதியாயிருந்தார். இந்தப் பெரிய போர் தொடங்குவதன்முன் அர்ச்சுனன் தன்னுடைய உறவின ரின் அநேகரை வீணே கொல்லும்படி நேரிடுகிறதே என்கிற துயரத்தினால் போர் புரிய மறுத்து நின்றான். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் மானிடருடைய நடவடிக்கைகளைப்பற்றித் தெளி வாய்க்கூறி அவருக்குத் தைரியம்உண்டாக்கினார். இந்த உபதேசங் களெல்லாம் பகவத்கீதை என்னும் சிறந்த நூலில அடங்கியிருக் கின்றன.

## மகததேசம் MAGHADA.

அலெக்சாந்தர் இந்தியாவுக்கு வந்தபின் இந்தியாவிலுள்ள சிறு இராச்சியங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டன. மகதராச்சியத்துக்கு அருகிலிருந்த சிறு ராச்சியங்கள் ஒன்றோடொன்று அடிக்கடி சண்டை செய்து கொண்டன. அதனால் மகதராச்சியம் முன்னேற்றம் அடைந்தது. மற்ற இராச்சியங்களெல்லாம் தம்தம் சுய அரசுரிமையை இழந்து கடைசியில் மகதராச்சியத்தோடு சேர்ந்து விட்டன.

கி. மு. 326-ம் வருஷத்தில் அலெக்சாந்தர் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தாரென்று அறிந்தோம். அவர் வடமேற்குப் பக்கங்களில் அநேக இராச்சியங்களைச் சயித்தவர். அவர் மகத ராச்சியத்தின் மேலும் படையெடுத்து வந்திருப்பார்; ஆனால் அவருடைய படைவீரர்கள் அதற்கு மேற்செல்ல மறுத்து விட்டனர். திரும்பிப்போக விருப்பமில்லாதிருந்தும் அலெக்சாந்தர், திரும்பித் தமது தேசத்துக்குப் போகவேண்டியதாக இருந்தது. கி. மு. 323-ல் அவர் இறந்துபோக அவர் ஏற்படுத்திய ராச்சியம் பல துண்டுகளாகச் சீர்குலைந்து போயிற்று.

## சந்திரகுப்தர் CHANDRA GUPTA.

சந்திரகுப்தர் மகத இராச வமிசத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர். அவர் அந்த வமிசத்தரசர்களைத் தொலைக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். அலெக்சாந்தர் இறந்தபிறகு வடமேற்குப் பக்கங்களிலே பல குழப்பங்களுண்டாயின. இதுதான் நல்ல தருணம் என்றறிந்து சந்திரகுப்தர், உடனே பெரும்படை திரட்டிக்கொண்டு மகததேசத்துக்குப் போய் ஒரு கஷ்டமுமில்லாமல் தாமே மகததேசத் தரசராய் விட்டார்.

சந்திரகுப்தருடைய குணங்களையும் அவருடைய இராச்சிய பரிபாலன விமரிசையையும் பற்றி கிரேக்கரிடமிருந்து நாம் அறிகிறோம். அவர் சனங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டு நடத்த வல்ல தலைவர். அதி சாமர்த்தியமான தளகர்த்தர், அரசு புரிவதில் அதி சமர்த்தர். கி. மு. 305-ல் அலெக்சாந்தரின் தளகர்த்தரில் ஒருவனாகிய செலுக்கஸ் என்பவன் இந்தியாவில் அலெக்சாந்தருக்கு உரியவைகளாயிருந்து கைதவறிப்போன தேசங்களை மீண்டும் பெறும் எண்ணத்துடன் புறப்பட்டான். அவனைச் சந்திரகுப்தர் எதிர்த்து இந்துகுஷ்பர்வதத்தைக்கடந்து வரவிடாமல் அங்கிருந்த



படியே திரும்பிப் போகும்படி செய்து ஆப்கானிஸ்தானத்தையும் பலுகிஸ்தானத்தையும் மகத தேசத்தோடு சேர்த்துக் கொண்டார். பின்பு செலூக்கஸ் தன் மகளைச் சந்திரகுப்தருக்குக் கல்யாணஞ் செய்து கொடுத்து மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கனொருவனைப் பாடலிபுரத்திலிருக்கும்படி செய்து விட்டான். மெகஸ்தெனீஸ் என்னும் கிரேக்கர் இந்தியாவைப் பற்றித் தாம் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பற்றி விபரமாய் எழுதி வைத்திருக்கிறார்.

சந்திரகுப்தர் வட இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட முதலரசர். அவருடைய இராச்சியம் இமயமலையிலிருந்து விந்தியபர்வதம் வரையிலும், கிழக்குக் கடலிலிருந்து மேற்குக் கடல்வரையும் பரவியிருந்தது அவருக்குச் சேனைகள் அதிகமாயிருந்தன; சண்டை செய்யும் பழக்கமுடைய அநேக யானைகள் அவரிடமிருந்தன. முப்பது அங்கத்தினர் சேர்ந்த ஒரு சபையார் இராசாங்க சம்பந்தமான பலவிஷயங்களையும் நடத்தி வந்தனர். நிலவரி, சந்தைவரி, காட்டுவரி, மீன்குத்தகை, அபராதம், காணிக்கை முதலியவைகளே அரசருடைய வருமானம்.

குடியானவர்களுக்கு அருந்துவதற்கு ஏற்ற தண்ணீர் எடுக்க வசதி செய்து கொடுப்பதிலும், போக்கு வரவுக்கு ஏற்ற வீதிகள் பாலங்கள் போடுவதிலும், வழிப்போக்கர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பதிலும் சந்திரகுப்தருடைய துரைத்தனத்தார் கவனம் செலுத்தி வந்தனர். நகரபரிபாலனத்திற்காக அநேக சபைகள் ஏற்படுத்தியிருந்தார்கள். ஒவ்வொரு சபையாரும் ஒவ்வொரு வேலையைக் கவனித்து வந்தனர்.

சாணக்கியன் என்பவன் சந்திரகுப்தருடைய பிரதானமந்திரி. அவனுடைய சாமர்த்தியத்தினாலேதான் சந்திரகுப்தர் அவ்வளவு புத்திசாலித்தனமாகவும் செவ்வையாகவும் அரசு புரிந்து வந்தார். சாணக்கியன் அர்த்த சாஸ்திரம் என்னும் ஒரு நூலை எழுதினான். அதில் இராசரீக முறைமையும் அரசருடைய கடமையும் வெகு நன்றாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. சந்திரகுப்தருடைய இராச்சியம் கி. மு. 298-ல் முடிவுக்குவந்தது. சந்திரகுப்தர் இந்தியாவின்

சரித்திர காலத்தில் முதன் முதலில் தோன்றிய மகாவீரர். அவரு
டைய பேரனாகிய அசோகர் சந்திரகுப்தரைப் பார்க்கிலும் கீர்த்தி
பெற்று விளங்கினார்.

## அசோகர் ASOKA.

உலக சரித்திரத்தில் மிகப் பேர்போன அரசருள் அசோக
சக்கரவர்த்தி யொருவர். இளவரசரா யிருந்தபோது அசோகர் ஒரு
நாட்டிற்கு அதிபதியாயிருந்தார். அசோகர் அரசனான பிறகு
பன்னிரண்டு வருஷகாலம் வரையில் நடந்தவிஷயங்கள் ஒன்றுமே
தெரியவில்லை. பின்பு அவர் கலிங்கருடன் சண்டை செய்து அவர்
களுடைய தேசத்தைத் தமது இராச்சியத்தோடு சேர்த்துக்
கொண்டார். அப்பொழுது யுத்தத்தில் அநேக சனங்களைக்
கொல்ல நேர்ந்தது பற்றி மிகவும் துக்கமடைந்தார். அதிலிருந்து
யுத்தஞ் செய்கிறதில்லை யென்றும் தீர்மானித்தார்.

இத்தீர்மானத்தைக் கொண்ட பிறகு, தர்மமுறை அல்லது
நீதி மார்க்கத்தையே உலகம் முழுவதும் பரவச் செய்வது தம்மு
டைய தொழிலாகக் கொண்டார். புத்தமதம் உயிர்களின் தன்மை
யையும் எல்லா உயிர்களிடத்தும் காட்டவேண்டிய அன்பையும
போதித்தது. அதனால் அசோகர் புத்தமதத்தில் சேர்ந்து இதன்
கொள்கைகளைக் கைக்கொண்டார். புத்த சந்நியாசிகளுள் ஒருவ
ரானார். மற்ற பௌத்த சந்நியாசிகளைப் போலவே தன் தேசத்தில்
அங்கும் இங்கும் அலைந்து திரிந்து புத்த தருமத்தைப் பரவச்
செய்தனர்.

அசோக சக்கரவர்த்தி செய்த முயற்சியினாலே இந்தக் காலத்
தில் பூலோகத்தில் வசிக்கும் சனங்களிலே ஏறக்குறைய மூன்றி
லொரு பாகத்தினர் புத்த மதத்தினரா யிருக்கின்றனர். புத்த தரு
மத்தைப் பரவும்படி செய்ய அசோகர் பிரசங்கிகளைப் பலவிடங்
களுக்கு மனுப்பினார். இலங்கைக்குத் தன் மகன் மகிந்தனையும்,
தன்மகள் சங்கமித்தையையும் அனுப்பினார். புத்தகுருமார் தென்
னிந்தியா, இலங்கை, எகிப்து, ஸிரியா முதலிய தேசங்களுக்குப்
போனதுமல்லாமல் திபெத், சீனம், ஜப்பான் முதலிய தேசங்க
ளுக்குக் கூடச் சென்றனர்.

இரக்கம், ஈகை, உண்மை, பரிசுத்தம், அன்புமுதலிய உத்தம
குணங்களோடிருக்க வேண்டும் என்று அவர் உபதேசித்தார். மிக
எளியதும் உயர்வானதுமான இந்தத்தருமத்தை உலகம்முழுவதும்



பரவச் செய்ய எண்ணங் கொண்டார். அவருடைய உபதேசங்க
ளெல்லாம் கற்பாறைகளிலே சனங்கள் பேசும் எளிய நடையிலே
எழுதப்பட்டிருக்கின்றன. அவருடைய தருமத்தை மலைகளிலும்
கற்பாறைகளிலும், கற்றூண்களிலும். சாசனங்களிலும் வெட்டி
வைத்திருப்பதை இப்பொழுது காண்கிறோம் நேபாளம், பெஷா
வர்ப்கம், கூர்ஜரம், மைசூரிலுள்ள சித்தபுரம், கஞ்சம் முதலிய
விடங்களிலே அப்படிப்பட்ட சிலாசாசனங்கள் இருக்கின்றன.
அவர் கி. மு 257, 256-ம் வருஷங்களில் பதினான்கு கட்டளைகள்
பிறப்பித்திருக்கின்றார். அவையெல்லாம் இந்தியாவில் அநேக
இடங்களில் கற்பாறைகளில் செதுக்கப்பட்டிருக்கின்றன. பின்பு
அநேக கட்டளைகள் பிறந்திருக்கின்றன.

அசோகர் காலத்தில் அநேக புத்தமத மடங்களும் ஸ்தூபி
களும கட்டப்பட்டிருக்கின்றன. உச்சயினி நகரத்துக்கு அருகி
லுள்ள ஸாஞ்சி என்னு மிடத்திலே அநேக ஸ்தூபிகளை இப்பொ
ழுதுங் காணலாம்.

சந்திரகுப்தர் வட இந்தியா முழுவதையும் சயித்தார். அவரு
டைய மகன் சில பாகங்களைத் தம்முடைய இராச்சியத்துடன்
சேர்த்துக் கொண்டார். பின்பு அவருடைய பேரன் கலிங்க நாட்
டைச் சயித்து, இந்தியாவின் தென்பாகத்தில் ஒருபகுதி தவிரமீதி
முழுவதையும் அரசியற்றினார். அசோகர் தம் ஆட்சியின் ஆரம்பத்
தில் ஒரு பெரிய யுத்த வீரராயிருந்தார்; ஆனால் அவருடைய
வெற்றித் திறமைக்காக அவரைப் புகழ்வதில்லை.

கி. மு. 231-ல் அசோக சக்கரவர்த்தி காலமாயினார். அவருக்
குப் பின்பு ஐந்து அரசர்கள் அரசு புரிந்தனர். அடுத்த நூற்றாண்டில்
சந்திரகுப்தருடைய வமிசம் முடிவடைந்தது.

## தென்னிந்தியா SOUTH INDIA.

திராவிடர்களைப்பற்றி முன் அறிந்தோம். தென்னிந்தியாவில்
பண்டைக்காலம் முதல் முதல் வசித்த திராவிடர்கள் ஆரியர்களுக்
கெவ்விதத்திலும் தாழ்ந்தவர்களல்லர். ஒருகாலத்தில் இந்தியா
முழுவதிலும் அவர்களுக்குச் செல்வாக்கிருந்ததென்று சிலப்பதிகார
மென்னும் தமிழ்க்காவியம் கூறுகின்றது. திராவிடர்கள்வெகுகால
மாய் மேற்கு ஆசியாவுக்கும் சீனதேசத்துக்கும் நடந்தவியாபாரத்

தில் சம்பந்தப்பட்டிருந்தார்களென்று தெரிகிறது. பாரசிகத்துடனும் உரோம ராச்சியத்துடனும் வியாபாரஞ் செய்தார்கள். கஜ ரத, துரக, பதாதிகளின் இருப்பிடமும் தளவாடங்களின் உபயோகமும் அவர்களின் நாகரிகத்தை நன்கு விளக்கும்

திராவிடதேசம் அல்லது தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய என மூன்று ராச்சியங்களுண்டு.

### சேரதேசம் SERA COUNTRY.

சேரதேசமென்பது அசோகரால் வெளியிடப்பட்ட பிரசுரங்களில் கேரளபுத்திரமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் தற்காலத்தில் வழங்கும் மலையாளப்பாஷை எக்காலத்திலுற்பத்தியானதாயிருக்கினுமிருக்க, அக்காலத்தில் தமிழ்தான் தேசபாஷையாயிருந்ததெனக் கொள்வதற்கையமில்லை. மேற்குச் சமுத்திரக் கரையிலுள்ள முசிரித்துறைமுகப் பட்டணத்தில் அராபியர்கள் பண்டங்களைக்கொண்டு எகிப்து முதலிய மேற்கு நாடுகளில் வியாபாரஞ் செய்து வந்தார்கள்.

### சோழதேசம் CHOLA COUNTRY.

சோழதேசம் காவிரியாற்றின் மகிமையால் இன்றைக்கும் பெருமை வாய்ந்து வருகின்றது. அசோகர் இதைத் தனிராச்சியமெனக் குறிப்பிட்டிருக்கிறார் காவிரியாற்றின் முகத்துவாரத்திலிருக்கும் காவிரிப்பூம்பட்டினம் ஓர் காலத்தில் சோழநாட்டுக்குத் தலைநகராயும் வெளிநாட்டு வியாபாரத்துக்குத் துறைமுகமாயும் இருந்தது. இதைக் கரிகாற் சோழராசன் ஸ்தாபித்தான். அவன் கஜபாகு ஆண்ட இலங்கைத் தீவை வென்று தான் காவிரிக்குக்கட்டிய பெரிய அணையில் வேலைசெய்ய அநேகாயிரங் கூலியாட்களை இலங்கையிலிருந்து கொண்டுவந்ததாய் பாவலர்கள் பாடியிருக்கிறார்கள்.

### பாண்டிநாடு PANDIYA COUNTRY.

பாண்டிய நாடென்பது ஐந்து மாகாணங்களையுடையது. தாமிரபர்ணியின் கரையிலுள்ள கொற்கை நகரம் வெகுகாலம் இதற்குத் தலைநகராயிருந்ததென்றும், சேர சோழ பாண்டிய நாட்டைப் பங்கிட்டுக் கொண்ட மூன்று சகோதரர்களும் பிறந்த



விடமென்றும் அவ்விடமே திராவிட நாகரிகத்துக்குப் பிறப்பிடமென்றும், கப்பல்வியாபாரத்துக்குத் துறைமுகமென்றும், முத்துக் குளித்தலுக்கு முக்கியமான விடமென்றும், பிற்காலத்தில் மதுரை தலைநகரான காலத்தில் இளவரசனி னிருப்பிடமென்றும் தமிழ் நூல்களில் இனிது புலப்படும். கி. மு. 20-ல் ஆகஸ்தஸ் சீசருடைய சந்நிதானத்தில் பாண்டிய நாட்டின் ராசதூதனிருந்ததாய் உரோம சரித்திரத்தினால் தெரிகின்றது.

---

## VI. இலங்கைச் சரித்திரம்—விஜயவம்மிசம்.

### பந்துவாசன் PANDU VASA.

பந்துவாசன் தன்னுடைய பரிவாரத்துடன் இலங்கைக்கு வந்தவுடன் உபதீசன் சிறிதும் மாறாது இராசாதிகாரத்தை அவனுக்குக் கொடுத்தான் கௌதம புத்தரின் சிறிய பிதாவின் மகனாகிய சாக்கிய பாண்டுவின் மகள் பத்தகச்சய வென்பவளை மங்கிலியவதியாக்கிக் கொண்டு பந்துவாசன் பத்துப் புத்திரரையும் உன்மாத சித்திரை யென்னும் ஓர் புத்திரியையும் பெற்றான்.

பத்தகச்சய வென்பவளோடு வந்த அவள் சகோதரர் ஆறு பேரும் ஆறுசிறுசில ராஜதானிகள் கட்டி அவற்றுட் சிலவற்றைச் சுயாதிபத்திய மாக்கிக் கொள்ளப் பார்த்தார்கள். அந்நகரங்கள் இராமன் கட்டிய "இராமகோணம்" ஊருகுணன் கட்டிய "ஊருகுணை" திக்காயனன கட்டிய "திக்கமதுனை" உறுவல்லி கட்டிய "உறுவலை" அநுரதன் கட்டிய "அநுரதபுரம்" உச்சிதன் கட்டிய "உச்சிதபுரம்" என்பனவாம்.

இவன் முப்பது வருஷகாலம் யாவருங் களிகூரச் செங்கோல் செலுத்தி நற்கீர்த்தியோடிறந்தான்.

பந்துவாசன் காலத்தில் இலங்கை மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது அவை:-

(1) பிகிற்றி அல்லது இராசரட்டை; இது மகாவலிகங்கை கெதுறுஓயா என்னும் இரு நதிகளுக்கும் வடபாலுள்ள நாடு.

(2) மாயரட்டை இதுவடக்கே செதுறுஓயாவையும் கிழக்கே மகாவலி கங்கையையும் தெற்கே காலுகங்கையையும் மேற்கே கடலையும் எல்லையாகக் கொண்ட நாடு.

(3) உறுகுணை: இதுகிழக்கேயும் தெற்கேயும் எஞ்சிக்கிடந்த கரைநாட்டை யடக்கிய பகுதி.

## அபயன் ABHAYA

பந்துவாசனின் மூத்தகுமாரனாகிய அபயன் சிம்மாசனமேறினான். அவன் அரசு புரிந்து வருகையில் அவன் சகோதரி புத்திரனாகிய பந்துகபாயன் என்பவன் ஒரு தனவந்தனாகிய பார்ப்பானுடைய பொருளுதவி கொண்டு கஜ, ரத, துரக பதாதிகளடங்கிய ஒரு சேனையைச் சேர்த்து மகாவலிகங்கா தீரத்தில் ஒரு கோட்டையையுங் கட்டிக்கொண்டு கலகஞ்செய்யத் தொடங்கினான். இதைக்கண்ட அபயராசன் அச்சங்கொண்டு இரகசியமாய் அவனுக்கு ஒரு பாகம் கொடுக்க உடன்பட்டான். அதன்பின் அபயனின் சகோதரர் அதனை அறிந்து அவனை இராசபதத்தினின்றும் நீக்கி விட்டுத் தம்முளொருவராகிய தீசனை அரசனாக்கினார்.

## பந்துகபாயன் PANDUKABHAYA.

பின்னர் பந்துகபாயன் இயக்கரைத் துணைக்கொண்டு தன் மாதுலருடைய சேனைகளை முறியஅடித்து மாதுலருள் எண்மரைக் கொலைசெய்து உடனே தீசராசனையும் துரத்தினான். அங்ஙனமும் அரசு ஒருவழிப்படாமல் பந்துகபாயனுடைய கலகத்தினால் பதினேழு வருஷம் அலைவு கொண்டு நின்று ஈற்றில் அவன் கைப்பட்டது. உடனே பந்துகபாயன் உபத்தீசபுரியினின்றும் இராஜதானியைப் பெயர்த்து அநுராதபுரிக்குக் கொணர்ந்து அங்கே ஸ்தாபித்தான். நாளடைவிலே அநுரதபுரியை பொன்னகர் என அலங்காரஞ் செய்வித்து, அநேக குளங்களைக் கட்டி சூழ்ந்த காடுகளையும்சிறந்தநாடுகள், கிராமங்கள், வயல்கள், தோட்டங்களாக்கினான். அநுரதபுரத்துக்குச் சமீபமாயுள்ளதும் சிங்களச் சரித்திரத்தில் முதன்மையாகக் கூறப்பட்டுள்ளதுமான அபயவாவி என்னுங் குளம் அவனால் கட்டப்பட்டது.



## முத்துசிவராசன் MUTASIVA.

பந்துகபாயனிறக்க அவன்மகன் முத்துசிவராசன் அரசனாகிப் பத்துப் புத்திரரையும் இரு புத்திரிகளையும் பெற்று 60 வருடமாண்டான். இவனாற்றான், "மகாமேகம்" என்னும் அலங்காரத் தோட்டம் அமைக்கப்பட்டது; அத்தோட்டம் செப்பனிட்டு முடிந்தவுடன் அகாலமழை பிரவாகமாய்ப் பொழிந்தது பற்றியே அதற்கு 'மகாமேகம்'' என்னும் பெயர் கிடைத்தது.

இவன் குமாரருள் தீசன், மகாநாகன், உத்தியன், மகாசிவன், சூரத்தீசன் என்னும் ஐவரும் கண்ணியமுடையோராய் ஒருவரின் பின் ஒருவராய் அரசாண்டு வந்தனர்.

## தேவநம்பிய தீசன் DEVANAMPIYA TISSA.

தீசன் மகுடாபிஷேகம் பெற்றபோது பூவகத்திருந்த இரத்தினம் பொன்னாதியவை வெளியேறினவென்றும், கடலகத்திருந்த முத்து முதலியன கரையேறினவென்றும், சிதைவுண்ட கப்பல்களின் திரவியமாதியவை துறையேறினவென்றும், அநுரதபுரத்துக்கணித்தாய் மூன்று மூங்கில்கள் வளர்ந்து அவைகளுள் ஒன்று பன்னிறப் பறவைகள் மிருகங்களையும், ஒன்று அலங்காரமான புஷ்பங்களையும், ஒன்று தங்கமயப்படர் கொடிகளையும் பிறப்பித்தனவென்று மகாவமிசநூல் கூறுகின்றது. இவ்வாறு பலவாச்சரியங்கள் நிகழ்ந்ததாகக் கூறுவது கற்பனாலங்கார மன்றி உண்மையன்று. தேவர்க்கின்பம் உண்டாகும்படி நடந்தபடியால் தீசனுக்குத் தேவநம்பியதீசன் எனவும் தேவப்பிரிய தீசன் எனவும் பெயரிட்டார்கள்.

தீசனும் பாடலிபுரத்தரசனாகிய அசோகனும் நட்பாளராயிருந்தமையால் தீசன் விலையுயர்ந்த இரத்தினங்களையும் வேறு பொருட்களையும் உபகாரமாக நான்குசிங்களப் பிரபுக்கள்வசத்தில் கொடுத்தனுப்பினான். அவர்கள் யாழ்ப்பாணத்தில் சம்புகோலாவெனவும் தற்போது சம்புத்துறையெனவும் பெயருடையதான துறைமுகத்திற் படகேறி பாடலிபுரஞ்சென்று உபகாரப்பொருள்களை அரசன்முன் வைத்துப் பணிந்தனர். பாடலிபுரத்தரசனும் அவர்களை மரியாதையோடுபசரித்துத் தான்பெற்ற பொருள்களுக்குப் பிரதியாக வேறுபல பொருள்களையும் தன்னூதர் சிலரிடத்திற்

கொடுத்தனுப்பினான். அத்துடன் 'நான் புத்தனிடத்தும் அவன்
சமயத்தினிடத்தும் அவன் குரவரிடத்தும் சரண் புகுந்துகொண்
டேன். பிரசாபரிபாலகனே, நீயும் உன்னத செல்வம் பொழியுமிச்
சமயத்தில் சரண் புகுந்துகொள்' என வரைந்து ஓர் திருமுகத்
தையும் தன் தூதர்களிடம்கொடுத்தனுப்பினான். அன்றியும் தருமா
சோகன் பௌத்தயதித்திற் பெருமபிரமையுடையனாய் இருந்தமை
யால் பௌத்த குருமார்களி லொருவனாயிருந்த தன்மகன் மகிந்த
னையும் அவ்விடத்திற் கனுப்பினான். மகிந்தன் இலங்கைக்கு வந்து
புத்தமதத்தைப் போதிக்கத் தொடங்கினான்; புத்தமதமும் இலங்
கையில் முளைப்பதாயிற்று.

தீசன் மகிந்தனின் போதனையால் புத்த சமயத்தைக் கைக்
கொள்ளவே அவன் பிரசைகளும் அம்மதத்தை அநுசரிக்கத்
தொடங்கினர். அரசனின் இளைய சகோதரனின் மனைவி அனலையும்
மற்ற ஸ்திரிகளும் மகிந்தனை அணுகி தங்களுக்குக் குருத்துவம்
தரும்படி வேண்டினார்கள், மகிந்தனக்கேள்விக் கிசையாது தன்
சகோதரியாகிய சங்கமித்தையை அழைப்பிக்கும்படி அறிவித்தனர்.
உடனே அனலை பாடலிபுரத்துக்கு ஒரு தூதனை யனுப்பிச் சங்க
மித்தைக்குத் தனது கருத்தை அறிவித்தாள். அவள் தன்பிதாவிடம்
விடைபெற்று வெள்ளரசு மரத்தினொரு கிளையையுங் கொண்டு
குருத்தினிகள் பதினொருவரோடு நாகதீபத்தில் வந்திறங்கி அநுரத
புரத்தையடைந்து மகாமேகதோட்டத்தி லக்கிளையை நாட்டினாள்.

தீசன் தன் காலத்தையும் தன் முயற்சியையும் தன் திரவியத்
தையும் புத்தசமயத்துக்காகவே செலவழித்தான். அவன் இலங்
கையில் அநேக விகாரைகளையும் கட்டுவித்து பௌத்த மதத்தை
வளர்க்கத் தொடங்கினான்.

மகிந்தனினேவுதற்படி தீசன் தன் நண்பனாகிய தர்மாசோக
னுக்குத் தூது போக்கிப் புத்தனின் வலப்புறக்காறை யெலும்பை
யனுப்பும்படி கேட்டான். அவனதற்கிசைந்து அத்துடன் வேறு
சிலவற்றையு மனுப்பி வைத்திருந்தனன். இக்காறை யெலும்பை
மகிந்தன் அநுரதபுரத்திற் சேமித்து தூபராமய என்னும் விசித்
திரமான ஓர் சமாதியை யெழுப்பினான்.



## உத்தியன் UTTIYA.

தீசன் 40 வருடம் நல்லரசு புரிந்து இறக்க, அவன் தம்பி உத்தியன் இராசனானான். இவன் அரசனாகி எட்டாம் வருடத்தில் மகிந்தனிறந்து போக அவனுக்குடைய தீக்கடன் முதலிய செய்து அவனை அதிசம்பிரமத்துடன் தகனஞ் செய்வித்தான். அடுத்த வருஷத்தில் சங்கமித்தையு மிறந்தாள். மகிந்தனிறந்த இடம் இப்போது மகிந்தமலை யெனப்படும்.

## மகாசிவன் முதல்—அசேலன் வரையும்

## MAHASIVA—ASELA.

இவ்வுத்தியராசன் இறக்க அவன் தம்பி மகாசிவன் அரசனானான். அவனும் பத்துவருடமாண்டுமடிந்துபோக சூரதீசன் அரசனானான். அவன் தன் அவிவேகத்தால் துரக சேனாதிபதிகளாக சேனன் கூத்திகன் என்னுமிரு தமிழரை நியோகிக்க அவர்களும் சமயம் வாய்த்தது என்று அரசனுக்கு மாறாய்த்திரும்பி அவனைக் கொன்று தாமே அரசராயினர். இவ்வாறிவர்கள் அரசராகி 22 வருடமாண்டு வருமளவில மேற்கூறிய மகாசிவராசனது ஒன்பதாம் புத்திரனாகிய அசேலனென்பவனாற் கொலையுண்டிறந்தார்கள். அப்பால் அசேலன் தானே அரசனாகிப் பத்துவருடம் செங்கோலோச்சி வந்தான்.

---

# VII. இலங்கைச் சரித்திரம்—தமிழரின் முதலாம் படையெழுச்சி.

தமிழர் எப்பொழுது வந்து இலங்கையிற் குடியேறினார்கள் என்று சொல்வதற்கு முடியாது. ஆயின் பௌத்த சமயத்தை இலங்கையில் நிலைநாட்டிய தேவநம்பியதீசன் மரித்து முப்பது வருடஞ் செல்லுவதற்கிடையில், சேனன் கூத்திகன் என்னும் இரு சகோதரர், தம்மவர் பலரோடு தென்னிந்தியாவினின்றும் வந்து சூரதீசன் என்னும அரசன் கீழ் சேனாவீரராயிருந்து அரசனைக்

கொன்று, செங்கோலை அப்பிக் கொண்டு அநுராதபுரத்திலிருந்து
அரசாண்டார். இதுவே தமிழர் இலங்கையில் முதல் அடைந்த
வெற்றி.

## ஏலேலன் ELALA.

கூத்திகனும் சேனனுமடைந்த வெற்றியையும், அசேலனால்
அவர்கள் கொலையுண்டிறந்தார்கள் என்பதையும் கேள்வியுற்ற
ஏலேலனென்னும் ஓர்சோழநாட்டுச் சிற்றரசன் இருதமிழரையும்
வென்ற அசேலனோடு போர்செய்வேன் எனத்தீர்மானித்து இலங்
கைக்கு ஒரு பெரிய சேனையுடன் புறப்பட்டான்.

அவன் மகாவலிகங்கைச் சங்கமத்திற்குச் சமீபமாகத் தனது
சேனைகளோடு வந்திறங்கிச் சேனைகளை அணிவகுத் தழைத்துக்
கொண்டு நேரே அநுராதபுரத்திற்குச் சென்று அங்கே எதிர்த்த
அசேலனைப் புறங்கொடுக்கச் செய்து ஊ நகுணையொழிந்த மற்றைய
நாடெல்லாம் ஒருங்கே கைப்பற்றி ஆங்காங்கும் ஓரோர் கோட்
டையாக 32 கோட்டைகளைக் கட்டிக் காவல் செய்தான். அன்றி
யும் மன்னாருக்குச் சமீபத்தேயுள்ள மாதோட்டமென்னும் நகரமு
மிவனாற் கட்டப்பட்ட தென்பது சிலர் துணிபு.

தமிழர் இலங்கையின்மேற் பெரும்படைகொண்டு நடந்தது
இம்முறைதான். ஏலேலன் சைவ சமயத்தவனாயிருந்தது பற்றி
பௌத்தமதத்தை அடியோடு களையும்நோக்கத்தோடு அப்பௌத்
தாலயங்களையெல்லாம் தகர்ப்பித்து நாசஞ் செய்தானாயினும்
தமர் என்றும் பிறர்என்றும் வேற்றுமைசெய்யாது சமநிலையுடைய
உள்ளத்தினனாய் யாவரையும் நீதிவழிநின்று காத்தானெனச் சிங்
கள சரித்திரங்களே கூறும். இன்னும் சயன காலங்களில் முறை
யீட்டுக்காக வருவோர் சபாமண்டபத்தில் நின்றபடியே அசைத்
தொலித்துத் தம்வரவை அரசனுக்குணர்த்துதற்கு உபகரணமாக
அச்சபா மண்டபமுதல் சுவர்களை யூடறுத்துச் சயனமண்டபம்
வரையில் நீண்ட ஓர் கயிற்றுடன் ஓரோசை மணி அச்சயன மண்
டபத்திலே மஞ்சத்தின்மீது கட்டித் தூக்கப்பட்டிருந்ததென்றால்
அவனிடத்தில் இராசலக்ஷணம் நன்றாயமைந்து கிடந்ததென்பதை
சொல்லவும் வேண்டுமோ?





ஏலேலன்

## துஷ்டகைமுனு DUTTHA GAMUNU.

ஏலேலன் அநுராதபுரத்திலிருந் தரசியற்ற, ஊருகுணையில் மகாநாகனுக்குப் பின் அவன் வமிசத்தவனாகிய கவந்தீசன் அரசனாகி அரசு செய்து வந்தான். அவன் புத்திரருள் மூத்தவனாகிய கைமுனு என்பவன் பாலப் பிராயந் தொட்டுத் தமிழர் கையினின்றும் இலங்கையை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்ற பேராவலும் உள்ளக்கடுப்பு முடையவனாயிருந்தான்.

ஒருநாள் அவன் தன் கால்களை மடக்கிக்கொண்டு படுத்திருக்கக் கண்ட கவந்தீசன் அவனை நோக்கி, "அப்பா என்பாலா, நீ நீட்டி நிமிர்ந்து படுக்கலாகாதா?" என்று கேட்க, அதற்குக் கைமுனு "தந்தாய் நான் நீட்டி நிமிர்ந்து படுக்கப் போந்த இடம் தேடிவைத்தீரோ? ஒருபக்கத்தை ஆற்றுக்கப்பால்தமிழர் கட்டிக் கொண்டார்கள். மற்றொரு பக்கத்தையோ சிறிதும் பின்வாங்காத சமுத்திரங் கொண்டது. பின்னை யெனக்கிட மெங்கேயோ?" என்றுத்தரமாய்க் கூறினான். அதைக்கேட்டுத் தந்தை வெட்கத்துடன் அப்புறம் போயினான்.

சிலநாட் சென்றபின், கைமுனு யுத்தவீரர் சிலரைச் சேர்த்துக்கொண்டு தந்தையிடஞ் சென்று ஏலேலனோடு போர்செய்யப் போகத் தனக்கு விடைதரும்படி கேட்க, அவன் அதற்கு உடன்படாது மறுத்தான்.

இப்படிச் சின்னாள் இடை இடையே விட்டு, கைமுனு மும்முறை போயிரந்துகேட்க, அம்மும்முறையும் அவன் தந்தை உடன்பட்டானில்லை. அதனால் கைமுனு மிகுந்த கோபாவேசனாய் உடனே அந்தப்புரஞ்சென்று பெண்களணியுமோர் ஆபரணத்தை வாங்கி அதையோர் தூதனிடங் கொடுத்து "என்தந்தை ஆண்பிள்ளை யல்லனாக; இதை அவன் அணியத் தகும் என யான் சொன்னதாகச் சொல்லித் தந்தையிடம் கொடுத்துவா" வென்றனுப்பினான். அம்மரியாதைக் குறைவான செயலுக்காகக் கவந்தீசன் தன்மகனை தண்டிக்க முயன்றான். கைமுனு அதற்கஞ்சி அவ்விடம் விட்டு மலைநாடு தேடி யோடித் தந்தை இறக்கும்வரையில் ஊருக்கு மீளுவதில்லையென்னும் விரதத்தோடங்கிருந்தான். இவ்வகைப் படிவின்மை காரணமாக அவனுக்குஅவன் தந்தையே "துஷ்டன்" என்னும் பட்டப்பெயரைக் கொடுத்தான்.



இது நிகழ்ந்து சின்னாளில் கவந்தீசன் இறந்துபோக, "நெய்க்குடமுடைந்தது நாய்க்கு வாய்ப்பான" பான்மைபோல் கைமுனு தன் எண்ணங்களை முடித்தற்கு நல்லசமயமாயிற்று. உடனே அவன் போரில் வல்ல கஜ ரத துரகபதாதிகளுடன் ஓர் சேனையைச் சேர்த்துக்கொண்டு மகாவலிகங்கையைத் தாண்டி உச்சிதபுரத்தையடைந்து அதனை வளைந்தான். அப்படி வளைந்தும், அவ்வரண் அதி தீரராற் காக்கப்பட்டிருந்தமையால், அநேக மாசங்கள் வரையில் அவன் அப்பட்டணத்தைக் கைப்பற்றற்கு இயலாதவனாய் இருந்தான்.

ஒருநாள் அவன் யானைகளிலொன்று அந்நகரத்து இருப்புக் கபாடங்களு ளொன்றைத் தகர்த்து உள்ளே நுழைந்தது. அவ்வழியாய் மற்றைய சேனாவீரரும் பிரவேசித்து உள்ளிருந்த காவல் வீரரை வாளுக்கிரையாக்கித் தங்கொடியையுயர்த்தினர். இவ்வாறு துஷ்டகைமுனு கீழ்த்தரமான பல இடங்களைக் கவர்ந்து கொண்டு அநுராதபுரத்தைநோக்கிச் சென்றான் அநுராதபுரத்துக்கயலிலுள்ள வோரிடத்தைப் பிடித்து அதைத்தனக்குப் பாசறையாக்கி, அதை மேலும் பலப்பித்தற் பொருட்டு அங்கு 32 உபஅரண்களையும் அமைப்பித்தான்.

இதனை ஒற்றராலறிந்த ஏலேலன் தன் சேனைகளை அதிதீர சேனாதிபதியாகிய தீர்க்க சயந்தனால் நடத்திக்கொண்டு தானுங் கஜாரூடனாய்ப் புறப்பட்டு எதிர்த்து வந்த கைமுனு சேனையோடு முட்டினான். இப்படி முட்டிய இருதிறச்சேனைகளில் தமிழர்சேனை தீரவீரத்தோடாரவாரித்து யுத்தஞ் செய்தது. சிங்களர்சேனை புறங்கொடுத்துத் தம் அரண்தேடி ஓட அங்கும் தீர்க்கசயந்தன் போய் ஒன்றன்பின் ஒன்றாய் அரண்களை அழித்தான். இவ்வாறு சிங்களரைக் காற்றின்முன் பஞ்சுபோல் ஊதிவருஞ் சமயத்தில் கைமுனுவினுடைய சேனாவீரரொருவன் தீர்க்கசயந்தனைச் சாடி அவன் வலியை யொழித்தான். இதனால் தமிழர்படை கலங்கிப் புறங்காட்டவும், சிங்களர்படை முழங்கித்திறங்காட்டவும் தொடங்கியதை ஏலேலன் கண்டான். புறங்கொடுத்தோடும் தன் சேனைகளைத் திரட்டும்படி தனக்குகந்த வீரர் சிலரோடு செல்லுகையில் கைமுனுவும் போரில்வல்லவோர் யானைமேலேறி எதிர்த்து வந்து தனிப்போர் செய்யத் தலைப்பட்டான்.

அப்போது ஏலேலனும் யானைமேல் தவிசினிலிருந்தபடி தன் ஈட்டியை யெடுத்துக் கைமுனுபேரில் விட்டெறிந்தான். அவ்வல்லயத்திற்குக் கைமுனு உபாயமாய் நகர்ந்து தப்பிக்கொண்டு தன் யானையாற் தாக்கிக் கீழே தள்ளலும், ஏலேலன் விழுந்து அதன் காலாலரைபட்டிறந்தான். அப்பால் கைமுனு வெற்றி சிறந்தவனாய் சயபேரிகை முழங்க நகரத்துள் பிரவேசித்து மீண்டும் சிங்கவமிசத்தை நிலைநிறுத்தினான்.

அதுநிற்க, துஷ்டகைமுனு அரசர் இயல்புக்கேற்பப் போர் முகத்தில் ஏலேலன்மேல் வன்கண்மை கொண்டு நின்றானாயினும் அவன் விழுந்து மடிந்தவுடன் பெருந் தண்ணளி கொண்டான். அவன் தைரியத்தை வியந்து, அவன் விழுந்த விடத்திற்றானே போராடம்பரத்துடன் அவனைத் தகனஞ் செய்வித்தான். அன்று முதல் அவ்வழியாய்ச் செல்வோர் பிரசைகளேயாயின் அவ்விடத்திற் தக்க வணக்கத்தோடும், அரசாங்கத்தவரேயாயின் வாத்தியங்களை நிறுத்திக் கால்நடையாயும் செல்லுதல் வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான்.

இது நிகழ்ந்து சிலகாலங்கழிந்தபின் துஷ்டகைமுனு பள்ளிக்கூடங்களும் ஆலயங்களும் கட்டுவதிலேயே தன் சம்பத்து முழுவதையும் போக்குவானாயினான்.

அப்படி அவனாலியற்றுவிக்கப்பட்ட பணிகளுள் மிகப்பெரியது அநுராதபுரத்திலுள்ள மகாலோகபவனம் என்னும் அரமனை. "மகாலோகபவனம்" என்பதன் பொருள் பெரிய செப்புமாளிகை என்பது. அதுநிரையொன்றுக்கு நாற்பது தூணாகச் சதுராகாரமாய் உட்பட்ட 1600 கற்றூண்களின்மேல் தொளாயிரமறைகளுள்ள ஒன்பது நிலைமாடமாய் அகலநீள உயரங்களால் தனித்தனி 270 அடியுள்ளதாய் அமைக்கப்பட்டுச் செப்புத்தகட்டால் வேயப்பட்டிருந்ததெனச் சொல்லுவர். இவ்வரமனையின் மத்தியில் ஓர் பெரிய சபாமண்டபமும், இதிலே தங்கவர்ணமிட்ட சிங்கப் பிரதிமைகள் யானைப்பிரதிமைகள் முதலிய அலங்காரத் தோற்றங்களும் தந்தத்தாலாயவோர் அழகியசிம்மாசனமும் இருந்தது. இப்போது அவ்வரமனை அழிந்துபோகத் தூண்கள் மாத்திரஞ் சில 12 அடியுயரமுள்ளனவாய் நிறுவியபடி நிற்கின்றன.



மற்றொன்று உருவன்வல்லி சமாதி; அதுவும் ஏறக்குறைய 270 அடி உயரமும், 3000 அடி சுற்றளவும் உடையவோர் கருங்கற்கட்டடம். அதனைச் சூழ்ந்து 70 அடி அகலமுள்ள அகழியொன்று கிடந்தது. அத்திருப்பணி வேலை சீக்கிரத்தில முடியாதிருந்தது. அவன் சகோதரன் அக்கோவிலின்மேல் வேலையைப் போலி வேலையாய் மாததினாற் கட்டி வஸ்திரங்களால் வேய்ந்து ஒருவாறு முடித்துவிட்டுத் தமையனாகிய கைமுனுவை ஓர்சிவிகையிலேற்றி வீதிவலங் கொணர்ந்து ஓரிடத்தில் நிறுத்தி, "அதோ பாரும் உம் எண்ணப்படி சமாதிவேலை சமாப்தியாயிற்று" என்று அவனுக்குரைத்தான்.

அப்போது கைமுனு, தன்னிடத்தில் முன்னே சேனாபதியாயிருந்து பின்னர் குருத்துவம் பெற்ற ஒருவனைக் கூவியழைத்தான். அவனைப் பார்த்து, "என் கௌமார பருவத்தில் யுத்த வீரரைத் துணைக்கொண்டுயுத்தங்கள் செய்தேன். இப்போதோ ஒன்றியாய் யார் துணையுமின்றி வெல்லுதற்கரிய கொடுங்கூற்றுவனோடு அமர் தொடங்குகின்றேன்." அந்தோ! என்றிரங்குகையில் அவனாலியற்றப்பட்ட தருமங்களின் நாமாவலி வாசிக்கப்பட்டது. அதனைக் கைமுனு கேட்டு மீண்டும் சொல்லுவான், "உலகத்திலயான் பலத்தினாலும் செல்வத்தினாலும் ஓங்கியிருந்த நாட்களில் இவற்றையெல்லாஞ் செய்து முடித்தேன்; செய்தும் அவை எனக்கித்தருணத்தில் எந்த சகாயம் ஒன்றுமில்லை; ஆயினும் என் மானுவஸ்தையின் ஆரம்பகாலத்தில் நான் செய்த பூசாபலிகளே எனக்கித் துணைத் தேறுதலைத் தந்தன" என்று இவ்வாறு சொல்லி அச்சமாதிமேல் வைத்த கண்ணுங் காதலுமாய்க் கைமுனு உயிர் துறந்தான்.

### மேல்நாட்டாரும் இலங்கையும் Ceylon And the West.

அலெக்சாந்தரும் அவருடைய போர்வீரர்களும் இந்தியாவுக்கு வந்தபோது இலங்கையைப் பற்றியும் இலங்கையின் விசேஷங்களைப் பற்றியும் யானைகளைப் பற்றியும் அறிந்திருந்தார்கள்.

பாடலிபுரத்தில் வசித்த மெகஸ்தெனீஸ் என்னும் கிரேக்கன் இலங்கையைப்பற்றி அறிந்துஎழுதியிருக்கின்றான். இலங்கைத்தீவு ஒரு (மகாவலிகங்கை) ஆற்றால் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றதென்றும், கரையோரங்களில் பனை தென்னையிருந்ததெனவும், 700கிராமங்கள் இருந்ததெனவும் கூறுகின்றான்.

கி. பி. முதலாம் நூற்றாண்டில் உரோமருடைய கப்பலொன்று புயலினால் அலைந்தலைந்து இலங்கையின் மேற்குக் கரையிலுள்ள குதிரைமலையில் வந்து அடைந்தது. கப்பலில் வந்த உரோமர் இலங்கை அரசனிடஞ் சென்று உரோமபுரியைப் பற்றியும் உரோமரைப் பற்றியும் கூறினார்கள். இலங்கையரசன் மனம் மகிழ்ந்து நான்கு சிங்களப் பிரபுக்களை உரோமாபுரிக்குத் தூதனுப்பினன். அப்பொழுது இவர்கள் பிளினி யென்னும் சரித்திராசிரியனுக்கு இலங்கையின் விருத்தாந்தங்களை யெடுத்துக் கூறியிருக்கின்றனர். இலங்கையில் 500 பட்டணங்களிருப்பதாகவும், அதில் அநுராதபுரமே பிரதானமானபட்டணமெனவும், தண்ணீர் பாய்ச்சக்கூடிய பெரிய குளங்களிருப்பதாகவும் விலையுயர்ந்த முத்தும் பவளமும் கடலில் ஏராளமாக இருப்பதாகவும் சிறந்த காய்கனி புஷ்பங்கள் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள். வியாபாரத்துக்காக இலங்கையிலிருந்து சீனாவுக்குப் போக்குவரவு செய்வதாகவும் பிளினிக்கு அறிவித்திருக்கிறார்கள்.

கராம்பு ஏலம் கறுவா முதலிய வாசனைத் திரவியங்களை வாங்குவதற்காக எகிப்திலிருந்தும் அராபியாவிலிருந்தும் அநேக கப்பல்கள் வந்தன. சாலமோன் இராசாவினுடைய கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருமுறை யானைத்தந்தம், வானரம், மயில், மயிலிறகு, பொன், வாசனைத் திரவியங்கள் முதலியன வாங்குவதற்காக தாசிஸ் என்னும் துறைகத்துக்கு வருவதாக விவிலியநூல் கூறுகின்றது. இந்தத் துறைமுகம் இலங்கையிலுள்ள தென்றே துணிவதற்கு அநேக நியாயங்களுண்டு. தொலிமி யென்னும் எகிப்தியன் இலங்கைக்குப் போகும் மாலுமிகளிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் இலங்கையைப் பற்றிய விருத்தாந்தங்கள் கேட்டு எழுதியதுடன் இலங்கைப்படமும் ஒன்று வரைந்திருக்கிறார்.

## VIII. மேல்நாட்டுச் சரித்திரம்

### மத்தியகாலம்.

### உரோமராச்சியம் — Roman Empire.

கி. பி. 284 தொடக்கம் கி. பி. 305 வரையும் அரசு புரிந்த டயோசினியன் என்னும் உரோமசக்கிரவர்த்தி தனது இராச்சியம் மிகவும்பெரிதாக இருப்பதைக்கண்டு இரண்டு இராச்சியங்களாகப்



பிரித்து விட்டான். இவ்விராச்சியங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதை யறிந்த மகாகொன்ஸ்தாந்தின் (கி. பி. 324—327) என்னும் அரசன் இரண்டு இராச்சியங்களையும் ஒன்றாக்கி ஐரோப்பாவின் கிழக்கெல்லையில் உரோமபுரிக்கு நிகராக கொன்ஸ்தாந்தி நோபிள் என்னும் நகரத்தையும் உண்டாக்கினான். இதுவே இரண்டாவது தலைநகரமா யிருந்தது.

உரோம ராச்சியத்தின் வளர்ச்சியையும் அது எவ்வாறு உன்னத நிலையை யடைந்ததென்றும அறிந்தோம். உரோம இராச்சியமும் மற்றைய இராச்சியங்களைப்போல் கி. பி. முதலாம் நூற்றாண்டுக்கு மேல் குன்றத் தொடங்கியது.

### ஜேர்மானியர் GERMANS.

ஜேர்மனியாவில் கூட்டங் கூட்டமாய்த் திரண்டுவந்த முரட்டுச்சாதியார் உரோம இராச்சியத்தை அழிக்கத் தொடங்கினர்; மத்திய ஐரோப்பாவைக் கலக்கின முரட்டுச்சாதியாரைத் துரத்தியடித்து விட்டு உரோமராச்சியத்திற்குள் அங்கும் இங்கும் தலைகாட்ட ஆரம்பித்தார்கள், கி. பி. 410-ல் உரோம நகரையும் அடைந்தார்கள். அவர்கள் பின்பு, பிரான்ஸ், இற்றாலி, ஸ்பெயின் வட ஆபிரிக்கா. உரோமராச்சியத்தின் மேற்குப் பாகம் எல்லாவற்றையும் கட்டியாண்டனர்.

ஜேர்மனியர்கள் சீர்திருத்தங் குறைந்தவர்களாக இருந்தபடியால் உரோமருடைய நாகரிகத்தைக் கனம்பண்ணவும் அவர்களுடைய உடை நடை பாவனைகளைக் கைக்கொள்ளவும் தொடங்கினர். நாளடைவில் அவர்கள் சீர்திருத்தம் அடைந்தார்கள்.

### கன்ஸ் HUNS.

மத்திய ஆசியாவின் உயர்ந்த சமபூமியிலிருந்து பெருந்தொகையானதும், போர்ப்பிரியமுமுள்ளதுமான கன்ஸ் சாதியார் சீனதேசத்துப் பாரிய சுவர் கிழக்கே செல்வதற்குத் தடையாக இருந்தமையால் கி பி 375 அளவில் மேற்கே சென்றனர். அவர்கள் அதிக தொகையாக வந்து உரோம இராச்சியத்தைச் சருவினர். எல்லாச் சாதிகளிலும் கன்ஸ்சாதி மிகவும் பயங்கரமானவர்

களும் இரத்தப் பிரியமுள்ளவர்களாயுமிருந்தார்கள். ஜேர்மனியர்களை அவர்கள் தேசத்தினின்றும் துரத்தினார்கள்.

மனிதருக்குச் செய்த கொடுமைக்காகவும் சங்காரத்திற்காகவும் தேவசாட்டி (Scourge of God) யென்று அழைக்கப்பட்ட தங்கள் அரசனாகிய அற்றில்லாவென்பவனைத் தலைவனாகக்கொண்டு கி. பி. 433-ல் ஐரோப்பாவின் அதிகப் பகுதியான தேசங்களை அக்கினியினாலும் கட்கத்தினாலும் பாழாக்கினார்கள்.

தியடோறிக் என்னும் ஜேர்மனிய போர்வீரன் இற்றாலி தேசத்துக்கு அரசனாகி உரோம ஜேர்மனியசேனைகளையெல்லாம் ஒருங்கு சேர்த்து அற்றில்லாவை பிரான்சிலுள்ள சாலோன்ஸ் பட்டணத்தில் நடந்த கொடிய யுத்தத்தில் புறங்காட்டியோடச் செய்தான். இது நிகழ்ந்தது கி. பி. 451-ல். இதுவே உலகத்தில் நடந்த யுத்தங்களில் மிகவும் கொடியது என்று சொல்லலாம். பல்லாயிரம் மனிதர் இறந்தனர். இந்த யுத்தத்தில கன்ஸ் வெற்றியடைந்திருந்தால் மேனாட்டுச் சீர்திருத்தம் அழிந்துவிடும். ஒரு வருஷத்துக்குப்பின் அற்றில்லா இற்றாலியின் சிலபாகங்களைத்தாக்கிக்கொண்டுஅரசியற்றினான். அவனிறந்தபின் கன்ஸ்சாதியார் சிதறுண்டு போனார்கள்.

## ஜஸ்தீனியன் JUSTINIAN.

உரோமஇராச்சியத்தின் மேற்குப்பாகம் ஜேர்மனியருடைய ஆளுகைக்குள் அகப்பட்ட பின்பு, உரோமர்கொன்ஸ்தாந்திநோப்பிளைத் தலைநகராக வைத்துக் கிழக்குப்பாகத்தை யரசியற்றி வந்தனர். ஜேர்மனியரைத் தங்களுடைய நாட்டுக்குள்வராமல்பணங் கொடுத்து மறித்து வைத்திருந்தனர். ஜஸ்தீனியன் என்பவன் ஜேர்மனியரிடமிருந்துஉரோமராச்சியம் முழுவதையும் கைப்பற்ற வேண்டுமென்னும் ஆவலுடன் இருந்தான்.

ஜஸ்தீனியன் கி. பி. 485-ல் பிறந்து அவனுடைய சிற்றப்பனாகிய ஜஸ்தீன் சக்கரவர்த்திபால் வளர்க்கப்பட்டு கி. பி. 527-ல் ஜஸ்தீன் வயோதிபனானபடியால் அவனுடன் சக்கரவர்த்தியாகவும் பின்பு தனிமையாகச் சக்கரவர்த்தியாயுமிருந்தான்.



அவன் கிழக்கு உரோமராச்சியத்துக்குப் பகைவராயிருந்த பாரசியர்களுடன் யுத்தஞ் செய்து அவர்களைத் தன்னிடம் சமாதானம் கேட்கும்படி செய்தான். ஆறுவருஷத்துக்குப் பின் பாரசிகர்கள் கொஸ்றோஸ் என்னும் அரசனின் கீழ் சண்டை செய்யத் தொடங்கினர். நீடிய யுத்தஞ் செய்து 20 வருஷத்துக்குப் பின் ஜஸ்தீனியன் சமாதானம் பண்ணினான்.

ஜஸ்தீனியன் பெலசாரியஸ் என்னும் சேனாதிபதியை வடஆபிரிக்காவுக்கு ஒரு சேனையுடன் அனுப்ப, அவன் ஜேர்மனியர்களைத் தோற்கடித்து ஆபிரிக்காவை உரோமராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டான். வெற்றி வீரனாகிய பெலசாரியஸை இற்றாலிக்கு அனுப்ப, அவன் ஜேர்மனியருடன் போர் செய்து இற்றாலி தேசத்தையும் கைப்பற்றினான். ஆயின் இற்றாலி தேசத்திலிருந்த ஜேர்மனியர் எப்பொழுதும் எதிர்த்துக் கொண்டேயிருந்தார்கள். இவ்விதமாக ஜஸ்தீனியன் வெற்றியடைந்த போதிலும் உரோமராச்சியத்தின் பணம் முழுவதும் போர் புரிவதிலும் கட்டடங்கள் கட்டியெழுப்புதலிலும் அழிந்து போய்விட்டது.

ஜஸ்தீனியன் உண்டாக்கிய கட்டளைச் சட்டங்களும் விதிகளும் அவனுடைய புகழையும் மகிமையையும்நிலைநாட்டுகின்றன. உலகத்திலுள்ள கட்டளைச் சட்டங்கள் விதிகளுள் ஜஸ்தீனியனால் உண்டாக்கப்பட்டவை விசேஷமானவை. இலங்கையிலும் வேறு தேசங்களிலும் இச்சட்டங்களையும் விதிகளையும் ஏற்றுக் கொண்டார்கள்.

ஜஸ்தீனியன் கொன்ஸ்தாந்திநோப்பிளில் மிகவும் விநோதமான ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்பி விட்டான். அது ஒரு காலத்தில் மிகவும்விசேஷமான கட்டடமாயிருந்தது. இப்பொழுது முகம்மதியருடைய பள்ளிவாசலா யிருக்கின்றது.

ஜஸ்தீனியன் மிகவும் செல்வாக்குடன் அரசியற்றி இறந்துபோனபோதிலும், அவனுக்குப்பின் அரசியற்றியவர்கள் கடன்கள் எல்லாவற்றையும் செலுத்தவேண்டியவர்களா யிருந்தார்கள். ஆகையால் அவர்கள் மேலேற்றம் அடைய முடியாமலிருந்தது. மேற்கு உரோம ராச்சியம் ஜேர்மனியர் கைப்பட்டது. கிறிஸ்தமதம் பரவியதுமுதல் உரோமபுரியில் அம்மதத்திற்குத்தலைவனாகப்

போப் இருந்து பின் அதிகாரத்தில் ஓங்கினமையினாலும், உரோம ராச்சியமழிந்து பின்பு உற்பத்தியான நாடுகளில் ஜேர்மனிய அரசன் ஒருவன் கி. பி. 800-ல் போப்பினுதவியால் கிரீடம் பெற்றதும் அதுமுதல் 1806 வரையும் பரிசுத்த உரோம ராச்சியம் என்ற பெயர் ஒன்று விளங்கி வந்ததும் ஈண்டுரைக்கத் தக்கதே. இஃதிவ்வாறிருக்க, கிழக்கு உரோமராச்சியம் உன்னத நிலையை அடையாமலிருந்த போதிலும் ஒருவாறு கி. பி. 1453 வரையும் நடைபெற்று வந்தது. பின்பு முகம்மதிய மதத்தை அநுசரித்து மத்திய ஆசியாவில் வசித்த துலுக்கர் என்னும் ஒரு சாதி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. முகம்மதிய சமயமும் பரவத் தொடங்கியது.

## முகம்மதுநபி MOHAMED.

முகம்மது நபியானவர் கி. பி. 570-ம் வருஷம் மெக்காவில் பிறந்தார். அவர் அரேபியாவில் கோரிஷ் என்னும் வகுப்பினரான ஓர் ஏழை வியாபாரியினுடைய புத்திரர். அவருடைய சிறுவயதிலேயே அவர் தந்தை இறந்து விட்டார். ஆகையினால் முகம்மது ஒட்டக வியாபாரிகளுடன் சேர்ந்து சீரியா தேசத்துக்குப் போவதும் வருவதுமாயிருந்து சீவித்து வந்தார். அவர் தமது இருபத்தைந்தாவது வயதில் காடிஜா என்னும் ஒரு பெரிய பணக்கார விதவையினுடைய நிலச்சம்பத்துகளுக்கு ஒரு காரியஸ்தராக அமர்ந்தார். சிலவருஷங்களுக்குப் பின்பு அவர் அந்த மாதையே மணந்து கொண்டார் அப்பால் அவர்களுக்கு பாடிமா என்கிறஒரு பெண் குழந்தை பிறந்தது

எப்பொழுதும் ஏதோகனவுகாண்பதுபோல் ஒருவித நிலையில முகம்மது இருப்பார். அவர் தனியிடத்திலே இருக்க விரும்புவார். சூரிய அஸ்தமன காலமே அவருடைய மனதைமிகுதியாகக் கவர்ந்தது. அவர் அடிக்கடி அனேக மணித்தியாலங்களுக்கு தெய்வத் தியானத்தில் இருந்து விடுவார். அப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள் மெக்காவுக்குச் சமீபத்தில் சிராமலையில் ஏகாந்த நிஷ்டையிலிருக்கும்பொழுது அவருக்கு முதன் முதல் தீர்க்க தரிசனம் கிடைத்தது. ஒரு தேவதூதன் அவர் முன்னே தோன்றி, புதிய மதம் ஒன்றைப் பரவச் செய்யும்படி கட்டளையிட்டார்.



“கடவுள் ஒருவரே, முகம்மது அவருடைய நபி” என்னும் இதுவே அவருடைய பெரிய உபதேசம். இந்த மதத்திற்கு இஸ்லாம் என்று பெயர்; இஸ்லாம் என்பது கடவுளுடைய கட்டளைக் கடங்கியிருப்பது. அப்படி அடங்கி நிற்பவரையே முஸல்மான் என்பார்கள்.

முகம்மது தம்முடைய ஊர்ச்சனங்களின்கெட்டபழக்கவழக்கங்களையும். மூடத்தனமான கொள்கைகளையும் கண்டித்துப் பிரசங்கஞ் செய்தார்; விக்கிரக வணக்கத்தைத் தடுத்தார். இதனால் மெக்காவிலுள்ள சனங்கள் அவருக்கு விரோதமாகக் கிளம்பி அவரை அவ்வூரை விட்டுத் துரத்தி விட்டனர். மெக்காவிலுள்ள சனங்களுடைய தொந்தரவைப் பொறுக்கமுடியாமல் அவர் கி. பி. 622-ல் மெடினா என்னும் இடத்துக்கு ஓடி விட்டார். மெடினாச் சனங்கள் அவரை நபியாக ஏற்றுக்கொண்டு அவருக்கு வேண்டிய உதவி செய்வதாக அவரைச் சேர்த்துக் கொண்டனர். பின்பு முகம்மது மெக்காவுக்குத் திரும்பி வந்து அந்தப் பட்டணத்தைத் தம்வசமாக்கிக் கொண்டனர் பத்து வருஷ காலம் தமது மதத்தைப் பற்றி உபதேசஞ் செய்து கொண்டிருந்து கி. பி. 632-ல் காலஞ் சென்றார். அவருடைய சரீரத்தை மெடினாவில் அடக்கஞ் செய்தனர்.

முகம்மது மெடினாவுக்கு ஓடியதிலிருந்து முகம்மதியசகாப்தம் ஆரம்பமாகிறது. இந்தச் சகாப்தத்திற்கு “ஹிஜிரா” என்று பெயர் அதன் முதல வருஷம் கி. பி. 622.

அவர் தாம் இறப்பதற்கு முன்பே தமது புதிய மதம் பரவி விட்டதைக் கண்டு திருப்தியடைந்தார். அரேபியாவிலிருந்த சனங்களெல்லாரும் அவருடைய மதத்தை அநுசரிப்பவர்களாயினர்.

அவருக்குப் பின்னே இந்த மதத்தினருக்கு அதிபதியாக வந்தவருக்குக் காலிப்கள் (Khalifs) என்ற பெயருண்டாயிற்று. அவர்கள் ஒருபெரிய இராசசியத்தை ஆண்டுவந்தனர். நபி பிறந்த ஒரு நூற்றாண்டுக்குள் அவருடைய மதமானது இவ்வாறாக அத்லாந்திக் மகா சமுத்திரத்திலிருந்து இந்துமகாநதி வரையில் பரவி விட்டது. முகம்மது நபியின் கொள்கையை மேற்கொண்டவர்கள், விக்கிரக ஆராதனை செய்பவர்களையும், முஸல்மான் அல்லாதவர்களையும் முற்றும் வேரற ஒழிப்பதே தங்களுடைய உத்தமமான தருமமென்று கொண்டனர். அவர்களுடைய சமயநூல் கோறான்.

முகம்மதியருடைய அரேபியசேனை உரோம கீழைத்தேய சக்கரவர்த்தியின்சேனையோடு அமராடி அவர்களுடையநாடுகளிற் சிலவற்றைக் கைப்பற்றியது. பின்பு பார்சியாவையும் இந்துநதி வரையுமுள்ள மற்றைய நாடுகளையும் தமதாக்கினர். எகிப்தும் ஆபிரிக்காவின் வடபகுதியும் அவர்கட்காயின. வெற்றியடைந்த அரேபியர் ஐரோப்பாவை நெருங்கிச் சேர்ந்து கொண்டேயிருந்தனர். ஆயின் அரண மிக்கிருந்த கொன்ஸ்தாந்தி நோப்பிள் என்னும் நகரே ஐரோப்பாவை முகம்மதியரிலிருந்து காப்பாற்றியதுமன்றிப் பலவருடங்களாக அவர்கள் உட்செல்ல விடாது தடுத்துக் கொண்டுமிருந்தது.

அவர்கள் சென்றவிடமெல்லாம் அல்லாவென்னும் கடவுளையும் அவருடைய நபியாகிய முகம்மதுவையும் தொழுதேற்கும்படி வலோற்காரஞ் செய்தனர். அதன்பின் அவர்கள் ஜிபிறோல்றர் சலசந்தியைக் கடந்து ஐரோப்பாவினுட் புகுந்தனர். அப்பாகத்தில் அரண்மிக்க நகரமொன்றும் அக்காலத்தில் இல்லாமையால் இவர்களைத் தடைசெய்பவர் யாருமின்றி ஸ்பானியா தேசத்துக்குட்புகுந்து அங்கு வசித்த கொத்ஸ் சாதியாரோடு போராடி அவர்கள் இராச்சியத்தைக் கைப்பற்றினர்.

### அரேபியா ARABIA.

அரேபியாவில் ஆதிகாலம் முதல் சனங்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளும் தன்மையுடையவராயிருந்தனர். முகம்மதிய சமயத்தை அநுசரிக்கத் தொடங்கியதுடன் அவர்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள். முகம்மதுநபி தோன்றும் வரையும் அரேபியா சில சமயங்களில் சுயராச்சியத்திற் குட்பட்டும் சில சமயங்களில் மக்காநகரத்தலைவனுக்கடங்கியுமிருந்தது. பல சனத்தலைவர்கள் ஏற்பட்டமையால் உள்நாட்டுக்கலகமும் கொலையும் அதிகரித்திருந்தது அவர்கள் மிகவும் பலசாலிகளாயிருந்தார்கள். கல்வியின் சிறப்பு அங்கும் இங்கும் தோன்றியிருப்பினும் சாதாரணமாகச் சீர்திருத்தங் குறைந்தவர்களென்றே சொல்ல வேண்டும் அவர்களிடமிருந்தே 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 முதலிய இலக்கங்களைக் கற்றுக் கொண்டோம் அரேபியர் மூலிகளைப் பற்றியும், ரசாயனசாஸ்திரத்தைப்பற்றியும் கணித சாஸ்திரத்தைப் பற்றியும் அறிந்திருந்தார்கள்.



காலிப்பை நியமிப்பதில் முகம்மதியருக்குள் சண்டை எப்பொழுதும் நடந்து கொண்டேயிருந்தது. காலிப்பைச் சிலகாலங்களில் அரேபியாவிலும், சிலகாலங்களில் மேசொபற்றேமியாவிலுள்ள பக்டாட்டிலும் நியமித்தார்கள். ஸ்பானியாவும்வட ஆபிரிக்காவும் முகம்மதிய ராச்சியத்தினின்றும் பிரிந்து வேறொரு சிறு முகம்மதிய ராச்சியமாயிருந்தது; அவர்கள் வேறொரு காலிப்பையும் நியமித்தார்கள். முகம்மதியர் ஸ்பானியாவிலிருந்து ஐரோப்பாவின் மற்றைய பாகங்களுக்குச் செல்ல விடாமல் அவர்களின் புயவலியின் மிக்க பிராங்கு சாதியார் அவர்களையெதிர்த்தனர். முகம்மதிய சக்கராதிபத்தியமானது நெடுங்காலம் நீடித்திருக்கவில்லை.

### பிராங்ஸ்சாதியார் FRANKS.

கி. மு. 500-ம் ஆண்டளவில் மேற்கு உரோமச் சக்கராதிபத்தியம் வீழ்ச்சியடைந்தபோது அதன் இடத்தில் சிலசீர்திருத்த மற்ற சிறு இராச்சியங்கள் வசிக்கலாயின என்றறிந்தோம். அவைகளுள் ஒன்றாகிய பிராங்ஸ்சாதியார் ஜேர்மனிய சாகியத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பலவழிகளாலும் வந்து றைன் நதிக்கரையில் குடியேறினர். இவர்கள் அங்கிருந்து கொண்டே மெல்லமெல்லத் தமதருகிலிருந்த காலியாவையும் ஜேர்மனியாவில் ஒரு பகுதியையும் தமதாக்கிக் கொண்டனர். பிராங்ஸ்சாதியார் காலியாவிலுள்ள சனங்களின் நாகரிகத்தையும், உரோம அரசாட்சியையும் பின்பற்றினார்கள் காலியா பிராங்ஸ்சாதியாரினுடைய ஆளுகைக்குள் வந்தவுடன் பிரான்ஸ் என்றழைக்கப்பட்டது.

பிராங்ஸ்சாதியாருடைய தலைவர்களுளொருவராகிய சாள்ஸ் மார்ஷெல் என்பவனே கி. மு. 432-ல் முகம்மதியர்க் கெதிராய் யுத்தஞ் செய்து, வெற்றிமாலை சூடி, அவர்கள் காலியாவினுள் நுழையாவண்ணஞ் செய்தான். இவனுடைய பெரும் வெற்றியானது முகம்மதியர் மற்றைய ஐரோப்பிய தேசங்கட்குச் செல்ல விடாது தடுத்ததுமன்றிக் கிறிஸ்த மதத்தை நிலைநாட்டியது.

### சார்ளிமேன் CHARLEMAGNE.

சாள்ஸ் மார்ஷெல் என்பவனின் பேரனாகிய சார்ளிமேன் அல்லதுசாள்ஸ் கி. பி. 742-லபிறந்தான். அவனுடையபிதாவாகிய பிப்பின் அரசன் இறந்த பின்பு, அவனும் அவன் சகோதரன்

கார்ளமானும் இராச்சியத்தை இருபாகங்களாகப் பிரித்துக் கொண்டனர். சார்ளிமேன் வடபகுதியிலும் கார்ளமான் தென் பகுதியிலும் அரசியற்றி வரும்பொழுது, கார்ளமான் இறந்து போக கி. பி. 771-ல் சார்ளிமேன் அரசனானான்.

சார்ளிமேன் வடக்கே சாக்சனியரோடும், தெற்கே அல்ப்ஸ் மலையைக் கடந்து சென்று லொம்பாடியரோடும் போர் புரிந்தது மல்லாமல் பிராங்ஸ் சாதியாருடைய இராச்சியத்தோடு பல நாடு களையுஞ் சேர்த்துக் கொண்டான். இவனது பெரிய வெற்றியினால் இவன் லொம்பாடியரின் அரசனாகவும் முடிசூட்டப்பட்டு லொம் பாடியென்றழைக்கப்படும் இத்தாலியின்வடபகுதியிலுள்ளபெரும் பாகத்தைத் தனதிராச்சியத்தோடு சேர்த்துக் கொண்டான்.

சார்ளிமேனுடைய வல்லபம் எங்கு மெட்டிற்று. கொத்ஸ் சாதியினரின் வம்சத்தவராகிய ஸ்பானியர் தமது சத்துராதிகளாகிய முகம்மதியரைத் துரத்துகிறதற்குத் தமக்குத்துணைபுரியும்படி இவனை மன்றாடிக் கேட்டனர். முகம்மதியர் கிறிஸ்தவர்களின் சத்துருக்களா யிருந்தமையால் சார்ளிமேன் சந்தோஷமாக அவர்கட்குத் துணைபுரியச் சென்றார்.

பல யுத்தங்கள் நிகழ்ந்தன; சிலவற்றில்பிராங்ஸ் சாதியாரும் சிலவற்றில் முகம்மதியரும் வெற்றி பெற்றனர். சார்ளிமேன் நெடுங்காலம் ஸ்பானியாவிற் றங்கி நிற்க முடியாமையால், வடபகுதியைத் தன தாணைக்குட் படுத்திக் கொண்டு தனது இராச்சியத் திற்குத் திரும்பினான்.

சார்ளிமேன் ஓர்பாரியயுத்தவீரனாயிருந்தது மன்றி நல்லாட்சி புரிவோனாயு மிருந்தான். இவன் பல ஒழுங்குகளையுங் கட்டளைச் சட்டங்களையுஞ் செய்தான். தனது சேனாவீரருந் தூதரும் இலகுவிற் பயணஞ் செய்யும் பொருட்டுத் தெருக்களையும் பாலங்களையு மமைப்பித்தான். கல்வியைத் தன்தேயத்திற் பரப்புதற்கு வேண்டிய எத்தனங்களையுஞ் செய்தான். அதற்காக அப்போது கல்வியில மேம்பட்ட அனேக ஆசிரியர்களை வரவழைத்துத் தம்பிரசைகட்குக்கல்வி யூட்டுவித்தான். அவன் அனேக கலாசாலைகளையும் தேவாலயங்களையும் நவயாய்க் கட்டி யெழுப்பினான்.



அக்காலத்தில் தேவாலயங்களோடு சம்பந்தம் பூண்டோரன்றி மற்றையோரி லொரு சிலரே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாயிருந்தனர். சார்ளிமேன் சக்கரவர்த்தி தானும் ஜேர்மனிய பாஷையைப் பேசுபவனாயும் சொற்ப லத்தீனும் கிரேக்கும் தெரிந்தவனாயு மிருந்தான். அவன் வாசிக்கத் தெரிந்து கொண்டானேயன்றி எழுதப் பழகிக் கொள்ளவில்லை. இதற்குக்காரணம் அதிக வயது சென்றதின்பின் கற்கத் தொடங்கியமையே. அவன் எழுத அதிகம் பிரயாசப் பட்டானென்றும் எழுதும் புத்தகத்தைத் தமது தலையணையின் கீழ் வைத்துக் கொண்டு படுத்துக் கண் விழித்ததும் எழுதப் பிரயாசப் பட்டானென்றுஞ் சொல்லப்படுகிறது. ஆயினவன் பிரயாசையின் பலனாகத் தனது கைச்சாத்தையிடமாத்திரம் பழகிக் கொண்டான், எப்படியிருப்பினும் பழைய உரோம சக்கராதிபத்தியத்தைத் தமது வசிப்பிடமாகக் கொண்ட வரசர்களில் ஒரு சிலரே வாசிக்கக் கூடியவர்களா யிருந்தார்கள்.

சார்ளிமேன் உரோமபுரிக்குச் சென்று பாப்பானவருக்கு எதிராயிருந்த லொம்பாடியருடன் யுத்தஞ் செய்து அவர்களைப் புறங்காட்டச் செய்தான். மகாகொன்ஸ் தாந்தினால் கட்டப்பட்ட அர்ச்பீற்றர் தேவாலயத்தில் நத்தார் திருநாளிலே போப் சார்ளிமேனுக்குப் பொன் மகுடத்தைப் பல சனங்களின் முன்னிலையில் சூட்டினார்.

இழந்துபோன உரோமர் சக்கராதிபத்தியம் சார்ளிமேனால் நிலைநாட்டப்பட்டது. சார்ளிமேன் சக்கரவர்த்தியானான். இவன் அதிக காலஞ் செங்கோல் செலுத்திப் பிரசைகளால் நேசிக்கப்பட்டு 814-ம் ஆண்டில் மரணத்தின்வாய்ப் பட்டான். இவனுடைய சரீரமானது ஆச்செனிலுள்ள அழகுவாய்ந்த தேவாலயத்திற் புதைக்கப்பட்டது.

இவன் மரணமடைந்த பின்பு இவனுடைய இராச்சியம் மூன்றாகப் பகுக்கப்பட்டு அவனுடைய மூன்று பேரப்பிள்ளைகட்கும் கொடுக்கப்பட்டது.

## IX. இலங்கைச் சரித்திரம்—மத்தியகாலம்.

### சயத்தீசன் SADDHA TISSA.

துஷ்டகைமுனு 24 வருட மரசியற்றி இறக்க, அவன் தம்பி சயத்தீசன் அரசனானான். இவன் கைமுனு காலத்திலே ஊரு

குணையிலே உபஅரசனாயிருந் தரசாளுகையில் மூலகிரி விகாரையைக் கட்டி முடித்தான். இப்பட்டத்துக்கு வந்தபின்னர் அவன் உறுவனவல்லி சமாதியையுஞ் சம்பூரணமாக்கி, 12 குளங்களையும் கட்டி 18 வருஷம் அரசு செய்தான்.

## துல்லதானகன் முதல் கலுனன் வரையும் (கி. மு. 119-109)

THULATHANA—KALUNNA

இவனுக்குப் பின், இவன் குமாரன் துல்லதானகன் அரசனாகி ஒன்றரை மாசமரசியற்றி வருகையில, அவன் தமையனாகிய இலயமினித்தீசன் அவனைக்கொன்று அரசனாகி 9½ வருஷமரசாண்டான். அவனுக்குப் பின் துல்லதானகன் மகன கலுனன் என்பவன் சிறிதுகாலமரசியற்றித் தன் மந்திரியால் மாண்டான். இவனைப் பற்றி இங்கு சொல்லக்கிடந்த தொன்றுமில்லை.

## வாலகம்பாகு (கி. மு. 109 76) walagambahu.

இதன்மேல் கலுனனுடைய சகோதரனாகிய வாலகம்பாகு அரசனாகி 5 மாசமரசாண்டபின் இரண்டாம்முறை தமிழர்படையெடுத்து வருவாராயினர். இப்படி வந்த தமிழ்ப் பிரதானிகள் எழுவரும் தத்தம் படையுடன் இலங்கையில் வேறுவேறிடங்களில் இறங்கி ஒத்த நெறியினராய் அநுராசபுரத்தைநோக்கிச்சென்றார். அங்கே இருதிறத்தினரும் போர் முனைந்தபோது, வாலகம்பாகு புறங்கொடுத்ததுமன்றித் தன் பத்தினியையும் பறிகொடுத்துக் காடு தேடி யோடினான். அப்பால் தமிழ்ப் பிரதானிகள் தாமே அரசராகிப் பதினான்கு வருஷம அரசுசெய்து வந்தனர். அவர்கள் தம்முள்ளே ஒருவர் மேல ஒருவா பகைதூண்டி ஒருவரொருவராய்க் கொலையுண்டிறக்க, ஈற்றில ஒருவனே யிருந்தரசு செய்வானாயினன். இப்போது "அடம்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு, பிரிந்தாற் போச்சு" என்றபடி அவன் வலிமையை யுணர்ந்த வாலகம்பாகு காட்டினின்றும மீண்டு வந்து அவனைத் துரத்தி அரசனானான்.

இவன், முன் தமிழர்க்கஞ்சி மறைந்துறைந்த காலில், மாத்தளைக்குச் சமீபத்தேயுள்ள அலுவிகாரையிலிருந்து அநேக பௌத்த குருமாரைச் சேர்த்து கன்ன பரம்பரையாய் வழங்கி வந்த திரிபீடகம் என்னும் பௌத்த நூலை முதன் முதல எழுதுவித்துப் புத்தகங்களாக்கிஇன்றைக்கு மழியாததோர் கீர்த்தியைப்



படைத்தான். தம்பளை விகாரையும், அநேக கெபிக் கோயில்களையும் அநுராதபுரத்திலுள்ள 400 அடியுயரமும், இந்நாள் அளவைப்படி ஒன்றேமுக்கால் மைல் சுற்றளவுமாக விசாலமுமுள்ள புறச்சுவரையுமுடைய அபயகிரிச் சமாதியையும் இவனே கட்டுவித்தான். இவையன்றியும் அவன் தன்பத்தினியைச் சிறைமீட்டதற்கோர் அறிகுறியாக, 313 அடியுயரமுடைய சுவர்னராமசமாதியையும் பின்னர் கட்டுவித்தான். இப்படி வாலகம்பாகு சர்வஜனோபகாரியாய் இரண்டாம்முறை 13 வருஷ மரசுசெய்து இறந்தான்.

## மகாசூரன் முதல் மகாலந்தீசன் வரையும் கி. மு. (76–2[illegible])

Mahachura Mahalantissa.

அதன்பின்னர், அவன்மகன்மகாசூரன் அரசனாகிப்பதினான்கு வருஷமாண்டான். அவனுக்குப்பின் அவன் தம்பி சோரநாகன் அரசனாகித் தன் பெயருக்கிசையக் கள்வனாயும் துஷ்டனாயுமிருந்து 12 வருட மரசியற்றி யிறக்க, அவன் தமையன் மகன் குடதீசன் இராசாவானான்.

அவன் ஆளத்தொடங்கி மூன்றாம் வருடத்தில் அவனை அவன் மனைவி அனுலை யென்பவள், தன் சோரநாயகனாகிய பவாட்டிய செய்வர்மன் என்னுமோர் சிர்கேடன் நிமித்தமாக, நஞ்சூட்டிக் கொன்று விட்டுத் தானே அரசியானாள். அவள்தான் இலங்கையில் அரசு புரிந்த அரசிகளில் முதல் அரசி. அது நிற்க, அவள் அரசியாகிச் சிலநாளில் ஓர் தமிழன் அவள்கண்களிற்குடிகொள்ள அவள் பவாட்டிய செய்வர்மன்மேல் வெறுப்புற்று அவனையும் நஞ்சினு லெமபுர மனுப்பிவிட்டு, அத்தமிழனைச்சேர்த்துக்கொண்டாள். இப்படியே அத்துஷ்டை தான் ஆண்ட 5 வருடத்துக்குள் ஒரு பிராமணனுட்பட ஐவருயிரை எமபுரஞ் சேர்த்தாள். ஈற்றில் தனித்திருந்து அரசு செய்கையில் முன் அவளுக் கஞ்சியோடிய அவள் புத்திரன் மகாலந்தீசன். ஓர் பெருஞ்சேனையோடு திரும்பி வந்து அவளோடு போர்செய்து அவளைத் தோற்கடித்து, அநுராதபுரத்தைக் கவர்ந்தான்.

அங்ஙனமும் அனுலை அடங்காது தன் அரமனையிலிருந்தபடி மீண்டும் முரண, உடனே மகாலந்தீசன் அரமனையோடு அவளையும் அக்கினிக்கிரையாக்கினான்.

அப்பால் மகாலந்தீசன் அநுரதபுரத்தைச் சூழ அநேக குளங்களையும் விளைநிலங்களையும் உண்டாக்கி 64 மைல் சுற்றளவும் 7முழ உயரமு முள்ள ஓர் கன்மதிலைக் கட்டி யெழுப்பினான். அவன் 22 வருஷ மரசு செய்து கி. மு. 20-ல் இறந்தான்.

### 1-ம் பாத்தியந்தீசன் முதல் சந்தமுகுணன் வரையும் (கி. மு. 20—கி. பி. 52)

Battyatissa—Chandamuhunu.

அவன் மகன் பாத்தியந்தீசன் அரசனாகி, கோவில் குளங்களைப் புதுக்கித் தான தருமங்களைப் பெருக்கிச் சனங்களுக்கிதமுடையவனாய் 28 வருஷம் அரசு செய்திறந்தான்.

இவன் மலர்களின் மேல் மிக்க விருப்புள்ளவனாய் இராசதானியில் ஆங்காங்கு பல நந்தவனங்களை ஆக்குவித்தான். அவற்றுள் றுவனவல்லிச் சமாதியைச் சூழ்ந்ததே மிகச் சிறந்தது. இதற்கு நீர்ப்பாச்சுதற்கென அபயவாவியில் ஓர் சல சூத்திரத்தையும் அமைப்பித்தான். மணிநாகவிகாரையைச் சமர்ப்பித்தான். இந்த விகாரை காகதீபம் அல்லது மணிநாக தீபத்தில் உள்ள விகாரையாயிருக்க வேண்டும். இவனுடைய காலத்தில் உரோமபுரிக்கு தூதனுப்பப் பட்டது.

அப்பால் அவன் தம்பி மகாதைலியன் 12 வருஷமும், அவன் மகன் அட்டகைமுனு 10 வருஷமும், அவன் தம்பி கனிஜனிதீசன் 4 வருஷமும், அட்டகைமுனு மகன் சூலாபன் 1 வருஷமும், அவன் சகோதரி சீவல்லியரசி 4 மாசமும், அவள் சிற்றப்பன் மகன் ஈழநாகன் 6 வருஷமும், அவன் மகன் சந்தமுகுணன் 8½ வருஷமும் அரசு புரிந்தார்கள்.

### யதலாகதீசன் (கி. பி. 52-60) Yatalakatissa.

அப்பால் சந்தமுகுணன் தம்பி யதலாகதீசன் முடிதரித்தரசு செய்து வந்தான். அவனுடைய வாயிலாளருள் ஒருவனாகிய சுப்பன் என்பவன் தேகரூபத்தால் அவனையொத்திருந்தமையால், அரசன் அவன்மேல் விசுவாச முடையவனாயிருந்தான். ஒருநாள் தன் உடுப்பை அச்சுப்பனும், அச்சுப்பன் உடுப்பைத் தானுமாக மாற்றி யணிந்து கொண்டு காலக்ஷேபம் செய்யும் வழக்கப்படி



ஓர் நாள் இருவரும் அவ்வாறு வேடிக்கையா யிருக்கும்போது, சுப்பன் என்பவன் தன் வேஷத்துக்கிசைய இராசாதிகாரஞ் செய்பவன்போல் வஞ்ச மனத்தோடு வாயிலாளனாகிய அரசனை அணுகி, "நீ இன்றைக்கோர் பெருங்குற்றஞ் செய்தனை ஆதலால் உன்னை இவ்வாளுக்கிரையாக்கப்போகின்றேன்" என அச்சுறுத்திக்கண்டிப்பான் போல நடித்து அரசன் சிரசை யுண்மையாகவே கண்டித்து விட்டான். அரசன் விழுந்த மாத்திரத்தில் பாதகனாகிய சுப்பன், தானே அரசனாகி அரசு செய்து வருகையில், ஓர் குறிசொல்லி அவனிடம் வந்து "அரசனே உன்னை வாகாப்பு என்னும் பெயருடைய ஒருவன் கொலவான்" என்று கூறினன்.

அவன் அதைக் கேட்டு, தன் சேவகரை அழைத்து, "எனது நாட்டில் வாகாப்பு என்னும் பெயருடையாரெல்லாரையும்தேடிக் கொல்லுங்கள்" என்றாஞ்ஞை செய்தான். அப்பெயருடைய யாவரையும் கொல்வித்தும், வாகாப்பு என்ற அவனுடைய சத்துரு கொல்லப்படவில்லை. இப்படி அவன் 6 வருட மரசு செய்தபின் குறித்த வாகாப்பு என்பவனே வந்து அவனைக்கொன்றரசனானான்.

### வாகாப்பு (கி. பி. 66-110) Vasabha.

இவ்வாகாப்பு அநுராதபுரத்து மதில்களை 18முழம் வரையிலுயர்த்திக் கட்டுவித்தது மன்றி 3 விகாரைகளையும் 11 குளங்களையும்அமைப்பித்தான். 44 வருஷம்கலங்காதசெங்கோலோச்சி இறந்துபோக அவன் குமாரன் வங்கநாசிகதீசன் அரசனானான்.

### வங்கநாசிகதீசன் (கி. பி. 110-113) Vankanasikatissa.

இவன் அரசியற்றி வருநாளில். சோழநாட்டினின்றும் தமிழராகிய சோழியர் மூன்றாம்முறை (கி. பி. 111) படையெடுத்து வருவாராயினார்கள். அச்சோழியர் இலங்கையில் வடமேற்றிசையில் வந்திறங்கி, அதுமுதல் இராசதானி வரையிலுள்ள நாடுகளையெல்லாஞ் சூறையாடி எண்ணிறந்ததிரவியங்களைவாரிக் கொண்டும் 12,000 சனங்களை சிறைகளாகப் பிடித்துக் கொண்டும் தந்தேசம் நோக்கி மீண்டார். இதனையறிந்த வங்கநாசிகன் குமாரன் கஜபாகு என்பவன் பதிலுக்குப் பகை சாதிக்க லெண்ணி ஓர் பெருஞ் சேனையோடு சோழநாடு சென்று, முன் சோழியர் கைப்பட்ட

சிங்களர் யாவரையுஞ் சிறைமீட்டு, அங்குநின்றும் அத்தனைசோழியர்களை கைதிகளாக்கிக் கொண்டு மீண்டான். அங்ஙனம் சிறைகளாக வந்த சோழியர் அலுத்துக்கோறளை, கரிஸ்பற்று, தம்பளையென்னுமிடங்களில் குடியேற்றப்பட்டார்கள்.

## கஜபாகு முதல் சங்காதீசன் வரையும் (கி. பி. 113-220)

Gajabahu—Sangatissa.

இவ்வண்ணம் வங்கநாசிகன் மூன்றுவருட மாண்டபின் அவன் குமாரன் கஜபாகு அரசனாகி 22 வருடமரசு புரிந்தான். அவனுக்குப்பின் மகாலுமானன் 6 வருடமும் 2-ம் பாத்தியதீசன் 24 வருடமும், கணட்டுதீசன் 28 வருடமும், குலநாகன் 2வருடமும், குடநாகன் 1 வருடமும், 1-ம் ஸ்ரீநாகன் 19 வருடமும், வைரத்தீசன் 22 வருடமும், அபயநாகன் 8 வருடமும், 2-ம் ஸ்ரீநாகன் 2 வருடமும். இந்துவிஜயன் 1 வருடமும், சங்காதீசன் 4 வருடமு மரசியற்றினார்கள். இவர்கள் விசேட கீர்த்திபபிரதாபரல்லர். கீர்த்திக்கு ஏதுக்களாயுள்ளன அதிவித்தை, அதிநன்மை முதலிய வாதலின் இவற்றிலொன்றாயினுமவர்களிடத்தில் பொருந்தியிருந்த தின்மை பற்றியே அவர்களிங் கெடுத்துப் பேசப்படா தொழிகின்றார்.

## ஸ்ரீ சங்கபோ (கி. பி. 252 254) Sri Sangabo.

இவருக்குப் பின் இந்துவிஜயன் வமிசத்தவனாகிய தரும ஸ்ரீ சங்கபோ அரசனாயினான். அவன் அட்டசீல விதியைக் கிரமப்படி சிறிதும் வழுவாது கைக்கொள்பவனும் விபரீதபக்தியுடையவனுமா யிருந்தான். கொலையென்ற சொல்லையும் காதினாற் கேட்கச் சகியான். கொலைத் தண்டனைக் கருகரான குற்றவாளிகளுக்கு உலக நடைக்கொப்ப அத்தண்டனையை விதித்து விட்டுப் பின்னர் அவர்களை இரகசியமாய்த் தப்பியோடச்செய்து அவர்க்குப் பதிலாய்ச்செத்த பிணங்களைக் கொணர்வித்துக் கழுமரம் முதலிய கொலைக்கருவிகளில் ஏற்றிச் சனங்களுக்குக் காட்டுவிப்பான்.

இதனால் அவன் நாட்டில் அரச பயங்கர மென்பது சிறிதுமில்லாமற் போக கொலையும் களவுமே அதிகரிக்கத்தலைப்புட்



## கோர்தாப்பயனும் க-ம் தேத்து தீசனும். (கி. பி. 254-277)

Gothabhaya—Jetthatissa.

இவ்வுண்மையை யுணர்ந்த அவன் சிரேஷ்ட மந்திரியாகிய கோதாபயனென்பவன் அவனைத் துரத்திவிட வகை தேடினான். அவனக் குறிப்புணர்ந்து நீர்வடிக் கருவியொன்றை மாத்திரம் கையிலெடுத்துக் கொண்டு இராச்சியத்தை விட்டோடிப்போய், அட்டநாகமலைச் சாரலில் தவஞ்செய்து கொண்டிருக்க, இங்கே கோதாபயன் அரசனாகி, ஸ்ரீ சங்காபய னெங்கிருக்கினும் அவனைத்தேடி அவன் சிரசைக் கொணடு வருவோர்க்குப் பரிசு கொடுக்கப்படுமென்று முரசறைவித்தான்.

அப்படியே ஓர்கிருஷிகன் அவ்வரசனைத்தேடி சிரசைக் கொய்தான். அப்பால் கோதாபயன் அத்தலையை அம்மலையிலேயே புதைக்கச் செய்து, அவ்விடத்திலே ஒரு சமாதியையு மியற்றுவித்தான். பின்பு இவன் தனது நாட்டுச சீரைத் திருத்தி வருகையில், சமய ஒழுக்கந் தவறிய 60பௌத்த குருமாரைப்பிடித்து அவர் முதுகில் சிவக்கக் காய்ச்சிய இரும்புக் கோலால் முத்திரையிட்டு இலங்கையை விட்டோடச் செய்தான். அவர்கள் சோள நாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டணத்திற்குப் போய் அங்கே குடியேறினார்கள். இவன் 13 வருட மாசு செய்தபின், அவன் மகன் மெகலதேத்துதீசன் அரசனாகி 10 வருட மரசாண்டான்.

## மகாசேனன் (கி. பி. 277 – 304) MAHASENA.

கிறிஸ்துவுக்குப்பின் 277-ல் அவன் சகோதரனாகிய மகாசேனன் என்பவன் பட்டாபிஷேகம் பண்ணப்பட்டான். அவன் தனக்கு உபாத்தியாயனா யிருந்த ஓர் பௌத்த குருவினது மதமாகிய போலிப் பௌத்த மதத்தில முன்னரே பிரவேசித் திருந்தமையால், அம்மதாபிமானம்பற்றி அக்காலத்தில் பிச்சையேற்றுண்ணலொன்றால் மாத்திரம் காலங்கழித்து வந்தவராகிய இந்தச் சுத்த பௌத்த குருமாருக்கு ஊரில் யாரேனும் பிச்சை கொடுக்கலாகாதெனக் கட்டளையிட்டான். பின்னர் மகாலோகபன மென்னும் அரமனையையும் 363 பௌத்தாலயங்களையும் இடித்தழித்து விட்டான்.

சிலகாலங் கழிந்த பின்பு, அவன் தான்செய்தவை யெல்லாம் தவறென்று மனஸ்தாப மடைந்து, முன் இடித்தழித்து விட்ட அரமனை முதலியவற்றை யெல்லாம் மீளக் கட்டுவித்தது மன்றி அநுராதபுரத்திலே ஜயதவனராம சமாதியையும் நவமாய்க் கட்டுவித்தான். ஈற்றில் அப்போலிப் பௌத்தகுருவையும் தன்பத்தினி கேள்விப்படி சிரபங்கஞ் செய்தான்.

இவன் மின்னேரி, கந்தளாய் முதலிய மிகப் பெரிய குளங்களைக் கட்டுவித்தும் பெயர்படைத்தான். அவற்றுள் மின்னேரியாகிய வாவி 20,000 வயற் பாத்திகளுக்குப் பாயப் போதிய ஜலமும், 20 மைல் சுற்றளவு முள்ளது. அதற்கயலில் மகாசேனனுடைய ஞாபகார்த்தமாக ஓர் சிறிய கோவில் அமைக்கப்பட்டிருத்தலின், பிற்காலத்துப் பேதைச் சனங்கள் மின்னேரி யாண்டவனென்று அவனை ஓர் தெய்வமாகக் கொண்டாடுவார்கள். இவன் ஏறக்குறைய 23 வருட மரசுபுரிந்திறந்தான்.

இவன் மகாவமிசத்தரசரிற் கடையரசன். இனிக் கூறப்படுவோர் சுலுவமிசத் தரசர் சுலெனபதன் பொருள் கீழ் என்பது அவர்க்கிப்பெயர் வந்தது. அவர்காலத்திலேயே இலங்கைபொன்றவந்தமையா லெண்க.

ஸ்ரீ மேகவர்ணன் (கி. பி. 304—332) Sri Meghavarna.

304-ல் மகாசேனன் குமாரன் கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன் அரசனாயினன். இவன் நாளிற்றான் புத்தகடவுளுடைய பல்லெனப்படும் தாலதம் கலிங்க நாட்டிலேயுள்ள தந்தபுரத்தினின்றும் அவ்வூரிலிராச புத்திரியால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதென்பர். இவன் 28 வருஷ மரசாண்டான்.

தேத்துதீசனும் புத்ததாசனும் Jetthatissa—Puttatasan

அப்பால் அவனுடைய சகோதரனாகிய 2-ம் தெத்துதீசன் அரசனாகி 9 வருஷ மரசு செய்தான். இவன் சிற்ப சாஸ்திரத்தில் அதிவல்லவன். அவனுக்குப் பின், அவன் குமாரன் புத்ததாசன் (கி. பி. 341-ல்) அரசனானான். அவனை அவனுடைய நற்குணம் விசேடசம்பத்து முதலியவை காரணமாக, "சனகரம்" என்றும் "தனேதி" என்றும் புகழுவர். அவன்வைத்தியத்தில் அதிவல்லவனாகி ஓர் வைத்திய நூலையியற்றினான். அன்றியும் வன் அநேக தரும வைத்தியசாலைகளையும். அங்கவீனர் அகதிகள் முதலாயினோர்க்கு அறச்சாலைகளையும், ஆங்காங்கு ஸ்தாபித்துச் சனங்களுக்குப் பெருஞ் சகாயங்கள் செய்தான். இவனிவ்வாறு 29 வருஷம் செங்கோலோச்சி யிறந்தான்.



உபத்தீசனும் மகாநாகனும் JETTHATISSA II BUDDHADASA

புத்த தாசனின் குமாரன் 2-ம் உபத்தீசன் அரசனாகி 42 வருடம் அரசு புரிந்தான். அவனுக்குப்பின், கி. பி. 370-ல் மகாநாகன் அரசனாயினன். அந்நாளில், தன் நாவல்லபம் பற்றிப் புத்தகோசன் எனப் பட்டப் பெயர் கொண்ட ஓர் பௌத்தன் இந்தியாவினின்றும் இலங்கைக்கு வர, அவனை மகாநாகன் உபசரித்து, அவனால் சிங்கள பாஷையிலுள்ள பிடக வியாக்கியானங்களைப் பாலிபாஷையில் மொழி பெயர்ப்பித்தான். இதன் பின் தமிழ்ப் பிரதானிகள் படையெடுத்து வந்து இலங்கையை வளைய மகாநாகன் அவர்களை யெதிர்த்து யுத்தத்தில் மடிந்தான்.

சத்திசேனன்முதல் தத்துசேனன்வரையும்(கி. பி. 434—497)

SATTHISENA—DHATU SENA.

இப்படி இவன் 22 வருடம் அரசாண்டிறந்து போக, இவன் குமாரன் சத்திசேனன் அரசனாகி ஒருநாள் அரசு செய்யா முன் அவனை அவன்மனைவிபோலும்நஞ்சூட்டித் தொலைத்தாள். அவளோ வதுவை செய்த சத்தகாகக்கன் அரசனாகி யொருவருட மாண்டான். அவனுக்குப் பின் மித்தசேனன் அரசனாகி ஒருவருடத்துக்குள் தமிழராற் கொல்லப்பட்டான். அப்பால் தமிழரறுவர் 25 வருட மரசியற்றினர். அவர்கள் அரசியற்றத் தொடங்க, பௌத்த மதமென்னும் சந்திரனுக்கும் அபரபட்சமாயிற்று.

அடுத்த 463-ல், சிறிதுகாலம் உறுகுணையை யாண்டிருந்த தத்துசேனன் தமிழரைப் பறக்கடித்து இலங்கை முழுமைக்கும் தானே அரசனாதலும், அவன் காலத்திற் சமாதானம் ஓங்கவும் முன் பொன்றிக்கிடந்த பௌத்தசமயம் தழைக்கவும் தொடங்கின. பின்னர் அவன் விவசாய விருத்திக்கு வேண்டுவன செய்யத் தொடங்கி ஈற்றில் காளவாவிக் குளத்தைக் கட்டுவித்தான். அதனைக் கட்டுவிக்கும்போது அணைகட்டக் குறித்தவிடத்தில் ஐம்புலனொடுங்கி யோகத்திலிருந்த ஓர் தபசியைச் சிறிதும் இரக்கமின்றி அவ்வணையினுள் இட்டுமூடிக்கட்டுவித்தான். இதன் பின்பு அவன் தனது மாமனும் பௌத்த குருவுமாகிய மகாநாகன் என்பவனுக்

விஜயராசன் இலங்கைக்கு வந்தது முதல் மகாசேனன் இறந்தது முதலாகவுள்ள அரசர் சரித்திரத்தை "மகாவமிசம்" என்னும் பெயரால் எழுதுவித்தான்.

### க-ம் காசியப்பனும் முகலானனும் (கி. பி. 479-515)

KASYAPA I AND MUGALAN.

கடைசியில் "பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்"

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி, தத்துசேனனை அவன் குமாரனாகிய க-ம் காசியப்பன் சங்கிலியிற் கட்டி மடக்கி ஓர் மதிற் சுவருக் கடிப்படையாகப் போட்டுக் கட்டுவித்தான்.

இப்படித் தத்துசேனன் 18 வருடமரசாண்டு காசியப்பனும் கொலையுண்டு இறந்து போனமையை மனதில் வைத்துச் சகிக்கலாற்றாத இளைய குமாரனாகிய முகலானன் என்பவன் தன் தமையனோடு பகை சாதிக்க வெண்ணி இந்தியாவுக்குப் போய் ஓர்சேனையைச் சேர்த்துக் கொண்டு கொழும்பில வந்திறங்கினான். அதனை அப்பிதுர் சேதகன் கேள்வியுற்று அஞ்சிஅநுராதபுரத்தினின்றும் தனக்கு வேண்டிய திரவியங்களை வாரிக்கொண்டு மாத்தளைக்கோடி அங்கே யார்க்கு மேறுதற்கரிய சீயகிரி என்னும் குன்றின்மேல்ஓர் கோட்டையைக்கட்டிக்கொண்டங்கிருந்தான். சில நாட்சென்றபின் காசியப்பன் குருநாக்கலுக்குப் போக நேரிட்டபோது அங்கே அவனை முகலானன் எதிர்த்து யுத்தத்தில் கொன்றான். அப்பால் முகலானன் அரசனாகிஅநுராதபுரத்தை ராஜதானியாக்கி 18வருடமாண்டு (கி. பி. 515-ல்) இறந்தான்.

### குமாரதாசன்முதல்6-ம்அக்கிரபோதிவரையும்(கி. பி.515-781)

Kumaradasa—Agrabodhi VI.

அவனுக்குப் பின் கி. பி. 781-ம் வருடம் வரையில் ஆண்ட அரசர் குமாரதாசன் முதல் ஆறும் அக்கிரபோதி ஈறாக இருபத்தொன்பது பேராம். ஏறக்குறைய அவர்களெல்லோரும் அநுராதபுரத்திலேயே யிருந்தரசு செய்து வந்தார்கள். இவர் காலமெல்லாம் அஃதாவது ஏறக்குறைய 200 வருடம் வரையில் தமிழர் இந்தியாவினின்றும் அடிக்கடி இலங்கைக்குவந்து கொள்ளையடித்துப் போவாராயினர்.



## பொல்லநறுவை அரசர்கள்.

### 7-ம் அக்கிரபோதி (கி. பி. 781-787)

Agrabodhi VII

6-ம் அக்கிரபோதிகுமாரன் 7-ம் அக்கிரபோதி அரசனானான் அவன் தமிழருக்கு அச்சுற்று அநுராதபுரியை விட்டுப்பொல்லநறுவையை யடைந்தான்; அதனைத் தனக்கு இராசதானியாக்கி "மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்" என்றபடி அதனைச் சிறப்பிக்கவேண்டி அதன் சூழலில் அநேக பெரியகுளங்களையும் ஓர் விசித்திரமான இராசமாளிகையையும் அநுராதபுரியிலுள்ள சபாதிகளுக்குச் சரிவந்த சமாதிகளையும் அமைப்பித்தான். இவன் புத்திரரைப் பெற்றும்அவர்கள் அற்பஆயுசுடையவராய்இவனுக்கு முந்தி யிறந்து விட்டமையால் மகிந்தனென்னும் பெயருடைய ஒருவனைச் சுவீகார புத்திரனாக ஏற்று வளர்த்தான்.

### 2-ம் மகிந்தனும் தபுலுவும் (கி. பி. 787-812)

Mahinda II and Dappula II.

அக்கிரபோதியின் சுவீகார புத்திரனாகிய மகிந்தன் அரசனாகி தங்கத்தினால் புத்த விக்கிரகத்தை அமைப்பித்து, அதற்கு இரத்தினப்பிரசாதம் என்னும்ஆலயத்தைக்கட்டி அதில் ஸ்தாபித்தான் அவன் 20 வருட பாண்டான். அப்பால் 807-ல் அவன் மகன் 3-ம் தபுலு செங்கோல் கைக்கொண்டான். அவன் தன்குடிகளுடையக்ஷேமத்தைவிரும்பி, குளந்திருத்தல்முதலியவேலைகளை அதியூக்கத்தோடும் நடப்பித்தான். தன் நாட்டில் வைத்தியரையதிகரிப்பிக்கும் நோக்கத்தோடு ஓர் வைத்திய கலாசாலையை ஸ்தாபித்தான். ஈற்றில்அந்நாட்டு அரசியற்பிரமாணங்களெல்லாம் தனக்குப்பின்னும் பிறழாது கைக்கொள்ளப்படவேண்டும்என்னும் கருத்தினனாய் அவற்றைத்திரட்டி ஓர் தரும நூல்ஆக்குவித்தான். இவன் இப்படி 5 வருடமாண்டான்.

### 3-ம் மகிந்தன் முதல் 1-ம் சேனன் வரையும்

Mahinda III—Sena I.

அவன் மகன் தர்மமிக்க சீலமேகன் என்னும் பட்டப்பெயரையுடைய 3-ம் மகிந்தன் 4வருட மரசியற்றினான். அவனுக்குப்பின் அவன் தம்பி 8-ம் அக்கிரபோதி 11வருடம் பிரஜாபரிபாலனம் பண்ணினான். அவனுக்குப்பின் அவன் மகன் 4-ம் தபுலு

16 வருடம் செங்கோலோச்சினான். அவனுக்குப் பின் அவன் தாயாதியாகிய 9-ம் அக்கிரபோதி 3 வருடமரசு புரிந்தான். அவனுக்குப்பின் (கி. பி. 846) அவன் குமாரன் மித்தவேலசேனன் அரசனானான்.

அப்போது பாண்டியன் படையெடுத்து வந்து பொல்லநறுவையை வளைந்து அரசனோடு போர்தொடுத்து அரசனைப் புறங்காட்டச் செய்து அவன் மக்களில் ஒருவனைக் கொன்று ஆலயங்களுள் பிரவேசித்து தங்கத்தினாலாய புத்த விக்கிரகங்களையும் திருவாபரணங்களையும் ஆதிபுத்தருடைய திருப்பாத்திரத்தையும் கையாடிப் பொதிபொதியாய்த் திரவியங்களை வாரிப் பாண்டிநாட்டுக்கு அனுப்பினான். சிறிது நாளின்மேல் மித்தவேலசேனன் பாண்டியனோடு உறவாடி ஒப்புரவாகித்தனது இராச்சியத்தைமீளப் பெற்று சிறிதுகாலம் செங்கோலோச்சி வருகையில் இந்தியாவினின்றும் பௌத்த மதத்தில் ஓர் பேதமாகிய விச்சிரவாதி மதம் இலங்கையில் வரலாயிற்று. இவன் 20 வருடமரசியற்றி இறந்தான்.

## 2-ம் சேனன் முதல் 4-ம் மகிந்தன் வரையும்
## Sena II—Mahinda IV

பாண்டியனாற் கொல்லப்பட்ட காசியப்பன் மகனாகிய 2-ம் சேனன் அரசனானான். அக்காலையில் பாண்டியன் மகன் தன் தந்தையோடு போர்புரிந்தாற்றாமல் புறங்கொடுத்து இலங்கையையடைந்து சேனனைத் தஞ்சமாய்ப் பற்றினான். 'ஆனைக்கொருகாலமானாற் பூனைக்கொரு காலம்' என்றபடி சேனனும் என்பகைதீர்க்க இதுதான் சமயமென்று பாண்டிநாட்டுக்குப் படையோடு சென்று பாண்டியனைக் கொன்று அவன் மகனை அரசனாக்கி முன் பாண்டியன் வாரிப்போன பொருள்களோடு ஏராளமான நிதிகளை ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு மீண்டான்.

இவன் இப்படி வீரசூரனாய் 35 வருடம் அரசியற்றிப் போக அவன் சகோதரன் 1-ம் உதயன் அரசனாகிச் சலாதாரங்களைத் திருத்தி 11 வருட மரசு செய்தான்.

உதயனுக்குப் பின் அவன் மருமகன் 4-ம் காசியப்பன் முதல் 5-ம் சேனன் ஈறாக (கி. பி. 912-1001) ஆண்ட அரசர் பதின்மர்; இதுவரையிலும் தலைநகராயிருந்த நகர் பொல்லநறுவை.



## 5-ம் மகிந்தன். Mahinda V

அப்பால் கி. பி. 1001-ம் வருடம் 5-ம் சேனன் சகோதரன் 5-ம் மகிந்தன் அநுராதபுரியை இராஜதானியாக்கி அங்கிருந்தரசு செய்கையில் சோழர் படையெடுத்து வந்து யுத்தஞ் செய்து அவனையும் அவன்தேவியையும் சிறைப்படுத்திச்சோழநாட்டுக்குக் கொண்டு போனார். அப்படிப் போகும்பொழுது இலங்கைக்குப் பிரதியதிபதியாக ஓர் தமிழனை நியோகித்துப் போக அவனும் 30 வருட மரசு செய்தான்.

## 1-ம் விஜயபாகு Vijaya Bahu I

அக்காலத்தில் பயிர்ச்செய்கை யில்லாது கிடந்த உருகுணை நாடுமாத்திரம் சிங்கள-அரசர் கையிலிருந்தது. அதுவும் சிறிது காலம் உரிமைக்காரரற்றுக்கிடக்க, ஈற்றில்மந்திரியாகியலோகேசுபரன் அரசனாகி கதிர்காமத்தில் இருந்து அரசாட்சி செய்து (கி. பி. 1056-ல்) இறந்தான். அப்பால் அந்நாட்டுக்கு அரசனாக ராஜவமிசத்திலொருவன் விஜயபாகு என்னும் பட்டப்பெயருடன் வந்தான். அவன் அதி பராக்கிரமசாலியா யிருந்ததனால் மற்றைய நாடுகளினின்றும் தமிழரைத் துரத்திப் பொல்லநறுவை முதலிய பூர்வ தலைநகரங்களைக் கவர்ந்து இலங்கை முழுமைக்கும் ஏகசக்கிராதிபதியானான். பின்னர் அவன் தன் தேயத்தில் ஆன்றோருரைப்படி பிரதமிகக்குருமார் ஐவர்க்குக் குறையாமல் இருத்தல் வேண்டுமென்றெண்ணி சீயநாட்டி லுள்ளதென அநுமிக்கப்படும் ஆரமண நாட்டுக்கு ஓர் தூதனையனுப்பி அங்குநின்றும் அவர்களை வரவழைத்து மதாதி விஷயங்களைச் சீர்ப்படுத்தினான். இவன் 55 வருடம் செங்கோல் செலுத்தி இறந்தான்.

பின்னர், இராஜசத்துவம் எனக்குனக்கென்று வாதிட்டுக் கலகம் விளைத்து விஜயபாகுவின் தம்பி ஜயபாகு ஒருவருடமும் விஜயபாகுவின் இளையமகன் விக்கிரமவாகுவும் அவன் தமையன் மகன் 2 ம் கஜபாகுவும் இணைந்து 20 வருடமும் ஆண்டார்.

## X. இலங்கைச் சரித்திரம்—மத்தியகாலம்

### அரசியற் குறைவு Causes of the Decline.

விஜயன் இலங்கைக்கு வந்தநாள் முதல் துஷ்டகைமுனுவினுடைய காலம் வரையில் இலங்கை முன்னேற்ற மடைந்து கொண்டே யிருந்தது. ஏலேலனுடைய தமிழ்ப்படை யெழுச்சிக்குப் பின்னும் இலங்கை நன்னிலையை யடைந்தது. சமாதானமும் நீதியும் நிலையாய் நின்றது. துஷ்டகைமுனு இறந்த பின்பு செல்வாக்குக் குறைந்தது ஏனெனில்-

(1) அரசர்கள் நீதிவழியில் நடவாததினால் பிரசைகள் அவர்களைக் கனம்பண்ணி நடக்கவில்லை. அரசர்கள் கொலை செய்வதற்குப் பின் வாங்கவில்லை. அனுலை செய்த துரோகத்தையும் காசியப்பன் செய்த கொடுமையையும் பாருங்கள்.

நல்லரசு புரிந்தவர்களுள் முதலாம் தாத்து சேன் சித்திர வேலையில் நிபுணனாகவும், புத்ததாசன் வைத்திய சாஸ்திரத்தில் வல்லவனாகவும்; குமாரதாசன் கீர்த்திபெற்ற புலவனாகவும் இருந்தார்கள். ஆயின் வீரமும் வலிமையும் குறைந்தவர்களாய் தமிழரின் வரவைத் தடுக்க முடியாதவர்களா யிருந்தார்கள். ஆகையால் தகுதியான அரசர்கள் இல்லாததே ஒரு காரணம்.

(2) தமிழர்கள் சிங்கள அரசர்களுடைய வலியின்மையை யறிந்து மீண்டும் மீண்டும் இலங்கைக்குப் படையெடுத்து வரத் தொடங்கினர். இதுவே இரண்டாவது காரணம்.

(3) புத்த சமயத்தைக் கைக்கொண்ட பின்பு சிங்களவர் அமைதியாகவும் சாந்தமாகவுமிருந்து கிருஷிகத்தொழில் முதலியவற்றில் காலத்தைப் போக்கினர். அவர்கள் யுத்தப்பிரிய முள்ளவர்களாயும் யுத்தவீரர்களாயு மிருக்கவில்லை. தமிழர் சிறந்த யுத்த வீரர்களாக இல்லாமலிருந்த போதிலும் பெருந்தொகையினராக வந்தனர். சிங்கள அரசர்கள் தமிழ்ப் போர்வீரர்களையே சேனைகளில் வைத்திருந்தார்கள், சிங்களவர்களுக்குள் தகுந்த வீரர்கள் இல்லாததே மூன்றாவது காரணமாம்.



### அரசர்கள் Kings.

தமிழர்களுடைய படையெழுச்சியினால் சிங்கள அரசர்களுடைய வலிமை குறைந்தது. ஆகையினால் அவர்கள் இலங்கையின் வடபாகத்தில் குடியேறத் தொடங்கினர். புத்தகுருமார்கள் மூலமாகப் பிரசைகளை யடக்கி ஆளத்தொடங்கினர்.

### சபைகள் Councils.

பிரசைகளினுடைய எண்ணங்களை அறிவிப்பதற்கும் குறை குற்றங்களை வெளிப்படுத்துவதற்கும் உபஅரசர்கள், மந்திரிமார் அதிகாரிகள், தேசாதிபதிகள் முதலிய அங்கத்தவர்களை யுடைய ஒரு சபையுண்டு.

### உத்தியோகஸ்தர் Officials

அரசனுடைய கட்டளைகளை நடத்தி வரவும் வரிகளை அறவிடவும் பிரசைகளுக்குள்ளிருக்கும் வாக்குவாதங்களை விளக்கித் தண்டிக்கவும் ஊர்கள்தோறும் உத்தியோகஸ்தர்கள் இருந்திருக்கிறார்கள்.

பஞ்சாயத் அல்லது கன்சபா என்று சொல்லப்படும் கிராம சங்கங்கள் ஊர்கள்தோறும் இருந்தன. அவைகளே பெரும்பாலும் ஒவ்வொரு கிராமத்திலும் செய்ய வேண்டிய வேலைகளை யெல்லாஞ் செய்து வந்தன. சிற்பசாஸ்திர நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். எட்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலுள்ள காஷ்மீருக்குச் சிற்ப சாஸ்திரிகள் இலங்கையிலிருந்து போயிருக்கிறதாகத் தெரிகிறது.

### போக்குவரவு Communication.

விஜயனுக்கு முன் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் போக்குவரவு குறைவாயிருந்தது. தேவநம்பிய தீசனின்காலத்தில் போக்குவரவு அதிகமாய் நடந்தது. பின்பு ஸ்ரீ மேகவர்ணனின் சமுத்திரகுப்தருக்குத் தூதனுப்பியதாகவும் போக்குவரவு இருந்ததாகவும் அறிகிறோம். கியுயன்திசாங் என்னும் சீனயாத்திரிகன் கி. பி. 630க்கும் 643க்கும் இடையில் இந்தியாவுக்கு வந்தபோது உண்ணாட்டுக் கலகத்தாலும்பஞ்சத்தாலும்ஒளித்தோடிய சிங்களவரை இந்தியாவில் கண்டதாகக் கூறுகின்றார்.

சீனாவிலிருந்து இலங்கைக்குத் தரைமார்க்கமாக திபத்துக்கூடாய் வந்து இந்தியா மார்க்கமாகவும் கடற்பாதையாகச் சிங்கப்பூரைக் கண்டும் வருவதற்கும் அறிந்திருந்தார்கள். சீனர் பண்டமாற்றுக்காகவும், நவரத்தினங்கள் முத்து முதலியவற்றைக்கொள்வதற்காகவும் புத்த ஸ்தலங்களைத் தரிசனம் பண்ணுவதற்காகவும் இலங்கைக்கு வந்தனர். இலங்கை அரசர் சீன அரசனுக்குத் தூதனுப்பியதாகவும் விலையுயர்ந்த பொருள்களை யனுப்பியதாகவும் சீன இதிகாசங்களினின்றும் அறிகிறோம். காசியப்பன் சீன அரசனுக்கு கி. பி. 527-ல் ஒருகடிதம் அனுப்பியிருக்கிறான்.

பாகியன் • Fa Hien.

கி. பி. 326-ம் ஆண்டளவில் சீனாவில் பிறந்த பாகியன் என்னும் புத்த குரு இந்தியா, இலங்கை, யாவா, முதலிய தேசங்களில் நடமாடிப் புத்த வேதத்தைப்பற்றி யெழுதியிருந்த பல புத்தகங்களைக் கைப்பற்றிக் கொண்டு சென்று அவற்றைச் சீன பாஷையில் மொழி பெயர்த்து புத்தமதத்தை மேலும் மேலும் பரவச் செய்தான். பாகியன் என்பது சீனபாஷையில் தர்மத்தின் ஒளியென அர்த்தங் கொள்ளும். 15 வருடங்களாகத் தேச சஞ்சாரஞ் செய்த இவன் கி. பி. 399-ல் புறப்பட்டு கி. பி. 414-ல் சீனாவுக்கு வந்து சேர்ந்தாரென அவரது தேசசஞ்சாரக் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

பாகியன் சிறுபராயத்திலேயே துறவறத்தைக் கைக்கொண்டான். இவனுடைய மூத்த சகோதரர் மூவர் இளம் வயதிலேயே மரணம் அடைந்த நிமித்தம் இவனுடைய தந்தை இவனைத் தேவ தொண்டுக்கு ஒப்பித்தான். இவனுக்கு பத்தாம் பிராயமாகும் போது இவன் தந்தையிறந்தான். இவன் தன்னிஷ்டப்படி காலத்தைக் கழித்து வந்தான். சிறுபராயந் தொட்டே பாகியன் அஞ்சா நெஞ்சுடையவனா யிருந்தான். இவன் சிறுபராயத்தில் தேச சஞ்சாரஞ் செய்ததினால் சீவனுக்கு எவ்வித கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளக்கூடிய சக்தியுண்டு.

இவன் இந்தியாவின் அனேக பாகங்களைத் தரிசித்துப்பின்னர் தர்மஅசோகனால் கட்டப்பட்ட சமாதிவிகாரை யாதியவற்றைத் தரிசிக்கச் சென்றான். இவன் தான் எழுதிய நூலில் தர்மஅசோக



அரசனின் தலைநகராகும் பற்னு அல்லது பாடலிபுரத்தைப் பற்றியும் அசோக ராசனைப் பற்றியும் அப்போது இருந்த விழாக் கொண்டாட்டங்கள், தர்மக் கிரியைகள், மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் முதலியவற்றைப் பற்றியும், கௌதமபுத்தர் புத்தத்துவ மடைந்த விடத்தைப் பற்றியும் மற்றைப்பரிசுத்த ஸ்தலங்களைப் பற்றியும் எழுதியிருக்கின்றனன். பின்பு, இலங்கைத்தீவை யடைந்த பாகியனிங்கு இரண்டு வருட காலமாகத் தங்கியிருந்தனன். அக்காலத்திலே அநுராதபுரமென்னும் புத்த பரிசுத்த தலத்தைப் பற்றியும் சிவனொளிபாத மலையின் சிறப்பைப் பற்றியும் யாத்திரை ஸ்தலங்களைப் பற்றியும் எழுதியிருக்கின்றனன்.

பல்லாண்டுகளாகத் தன்தேசவாசிகளுளொருவரையாகிலும் காணப் பெறாத இவன் இலங்கைப் பரிசுத்ததலமொன்றில் ஓர்புத்த விக்கிரகத்திற்குப் பட்டு வஸ்திரமொன்றைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்க வந்தவோர் சீன வியாபாரியைத் தரிசித்ததாக வங்கு குறித்திருக்கின்றனன். மேலும் அபயகிரி விகாரையில் இரண்டாயிரம் புத்த குருக்களையும் பகா விகாரையில் மூவாயிரம் புத்த குருக்கள்மாரையும் பாகியன் கண்டதாக அவனெழுதிய புத்தகத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்திலே அநுராதபுரியிற் கொண்டாடப்பட்ட புத்த தந்தத்தின் பெரகராவைப் பற்றியும் அதிலெழுதி யிருப்பதுமன்றி, அராபிய தேசவர்த்தகர் இந்நகரில் குடிபதிகளாக விருந்ததைப் பற்றியும் பாகியன் வரைந்துள்ளான்.

பாகியன் மூலமாகவும் சீன வியாபாரிகள் மூலமாகவும் சீனர் சிங்களவருடைய உடை நடை பாவனைகளைப் பின்பற்றித் திரிந்தார்கள். பாகியனிரண்டு வருட மிலங்கையிற் றங்கியிருந்தபின், ஓர் வர்த்தகக் கப்பலிலேறி யாவாதீவுக்குச் சென்று ஐந்துமாதம் தங்கியிருந்து பின், சீனாவையடைந்தான். சீனாவில் புத்த மதத்தை நிலைநாட்ட இவ்வளவு துன்பத்தை யனுபவித்த பாகியன் 88 வருடம் இவ்வுலகத்திற் சீவித்துத் தேகவியோக மாயினன்.

## அரேபியர் Arabs.

பண்டைக்காலந்தொட்டு அரேபியர் இலங்கையோடும் இந்தியாவோடும் வியாபாரஞ்செய்து வந்தார். உரோமர் எகிப்தியருக்கு வேண்டிய முத்து, இரத்தினம் முதலியவற்றை வாங்குவதற்காக அவர்கள் இங்கு வந்தார்கள். ஏழாம் நூற்றாண்டில் இலங்கைக் கரையிலுள்ள காலி முதலிய துறைமுகங்களில் அரேபியர் குடியேறினர். அவர்கள் முகம் புதியாக இருந்த போதிலும் வியாபார முயற்சியில் போக்குகிறார்களே யன்றித் தமது மதத்தைப் பரப்ப எத்தனிக்கவில்லை. சிங்கள அரசர்களுடைய வலிக்குறைவையறிந்த அரேபியர் இடையிடையே கொள்ளையடிக்கவும் தொடங்கினர். பதினான்காம் நூற்றாண்டில் அரேபிய கடற் கொள்ளைக்காரன் ஒருவன் கொழும்பு நகரத்தைப் பற்றிக்கொண்டு மிகவும்கொடுமை செய்து வந்தான். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்வரையில பிறதேச வியாபாரம் முழுவதும் அரேபியர் கையிலிருந்தது.

## சோனகர் Moors.

இலங்கையில் குடியேறிய அரேபியரும் அவருடைய சந்ததியாரும், பின்பு இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய முகம்மதியரும் முகம்மதிய மதத்தைக் கைக்கொண்ட சில தமிழருஞ் சேர்ந்து இலங்கைச் சோனகர்களானார்கள்.

# XI. இந்தியாவுஞ் சீனாவும்—மத்தியகாலம்.

## இந்தியா India.

அசோக சக்கரவர்த்தி இறந்தபிறகு சந்திரகுப்தர் ஸ்தாபித்த மௌரிய ராச்சியம் சிதறிப்போய் விட்டது. அரசர் தங்களுக்குக் கீழிருந்த சிற்றரசர்களை அடக்கியாள முடியவில்லை. கி. மு. 200 வது நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தி சயித்த கலிங்க நாடு சுதந்தர மடைந்து விட்டது நாளடைவில் ஆந்திரர் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் ராச்சியத்தைப் பெரிதாக்கிக் கொண்டு வந்தனர். வடமேற்கில் அநேக கிரேக்க அரசர்கள் இந்தியாவிற்குள் வரமுயன்றனர். அந்த கிரேக்க அரசர்களுள் ஒருவரான மினாந்தர் என்பவர் படையெடுத்துக் காபூல் கணவாயைக் கடந்து மதுரா



நகரம் வரையில் வந்தார், ஆனால் அப்போது மகததேச அரசரா யிருந்த புஷ்பமித்திரர் என்பவர் மினாந்தரை எதிர்த்துமுறியடித்து அவரைத் திரும்பிப் போகும்படி செய்தனர். பின்னர் நூறு வருஷம் வரையில் மகத தேசத்தை அநேக அரசர் ஆண்டனர்.

## சாகர் குர்கஷ் Sakhas, Gurkhas,

மகத தேசம் வலிமைகுறைந்து வரும்போது சாகர் என்னும் ஒரு புதிய சாதியார் இந்தியாவிற்குள் படையெடுத்து வந்தனர். இவர்கள் பார்சீகதேசத்தில் அப்பொழுது ஆட்சி செய்து வந்த பார்சியர்களுக்கு அடங்கியவர்கள் போலும். பின்பு இவர்கள்வந்த வழியாகவே மற்றொரு கூட்டத்தினர் இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். குஷர்கள்என்கிற பெயர்கொண்ட அந்தப்புதிய கூட்டத்தினர் இந்துக் குஷமலையின் இரு பாகங்களிலும் அநேக இராச்சியங்களைச் சயித்து விட்டனர். அவர்கள்வடமேற்கு இந்தியாவில் பலமான இராச்சியத்தை கி. மு. 50-வது ஆண்டில் ஸ்தாபித்து பின்பு காசிமா நகரம் வரையும் இராச்சியத்தை அபிவிருத்தி செய்து கொண்டார்கள். குர்கஷ்களின் அரசர்களுள் கனிஷ்கர் என்பவரே பெரிய அரசர். அவருடைய பெயரைப் பௌத்தமத கிரந்தங்களில் எடுத்துப்புகழ்ந்துபேசியிருக்கிறார்கள். கனிஸ்கரின் இராச்சியம் மிகப் பெரியதாயிருந்தது. கனிஷ்கர் கட்டிய அழகான கோவில்கள் இக்காலத்திலும் அழிந்துபோன நிலையில் இருக்கின்றன. கனிஷ்கர் கி. பி. 153-ல் இறந்துபோனார். மூன்றாவது நூற்றாண்டுவரையும் இந்த தேச சரித்திரம் இருளடைந்து இருந்தது.

## குப்த இராச்சியம் Gupta Empire.

கி. பி. 320-ம் வருஷத்தில் சந்திரகுப்தர் என்னும் இந்திய அரசர் ஒரு பெரிய ராசசியத்தை ஸ்தாபித்தார். அவருடைய ராச்சியம் குப்தராச்சியமென்றழைக்கப்பட்டது. குப்த அரசருள் சமுத்திர குப்தரே பேர்பெற்ற அரசர். அவர் பெரிய சேனையுடை சூழச் சென்று வட இந்தியா முழுவதும் சயித்து வந்தார். அவர் தெற்கே காஞ்சீபுரம் பாலக்காடு முதலிய இடங்களுக்கு வந்து பின்பு கூஜராத்தின் வழியாகப் பாடலி புரத்துக்குப் போனார். தமது பெயர் எங்கும் பரவிப் பெருங்கீர்த்தி பெறவேண்டும் என்பதும், ஏராளமாய்த் திரவியத்தைக் குவிக்க வேண்டுமென்பதே

இவர் எண்ணமாயிருந்து. இவர் தம்முடைய வீரச் செயல்களை யெல்லாம் அசோகச் சக்கரவர்த்தி நாட்டியிருந்த கற்றூண்கள் ஒன்றில் வெட்டுவிக்கும்படி கட்டளையிட்டார். இவருடைய அரண்மனையில் வித்துவான்களும் பாடகர்களும் இருந்தனர்.

சந்திரகுப்தர் இறந்தபிறகு அவர்குமாரனாகிய இரண்டாவது சந்திரகுப்தர் அரசரானார். இவர் கூஜராத்திலிருந்த சாகர்களைச் சயித்தார். பின்பு இவர் விக்கிரமாதித்தன் என்னும் பெயரை வகித்துக் கொண்டார். மகாகவிராசனாகியகாளிதாசர் இவருடைய காலத்தில் இருந்தாரென்பர். இவருக்குப் பின் குப்தராச்சியம் அதிகாரத்திலும் பெருமையிலும் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது.

## கன்ஸ் The Huns.

இந்தப் பெரிய இராச்சியம் இவ்வாறு நிலைகுலைந்து போகும் சமயத்தில் இந்தியாவின் மேல் கன்ஸ் சாதியார் படையெடுத்து வந்தனர். இவர்கள் மத்திய ஆசியாவின் அலைந்து திரிந்த ஒரு சாதியென்று அறிந்தோம். முதலில் இவர்கள் காபூலைச் சயித்தார்கள். பின்பு கங்காநதி வரையில் வந்து தேசங்களைக் கொள்ளையடித்தார்கள். அப்போது பலவான்களான அரசர்கள் ஒருவரும் இல்லாமையால் இவர்கள் கிராமங்களை யெல்லா மழித்து விட்டதுமல்லாமல் ஆயிரக்கணக்கான சனங்களைக் கொன்று விட்டார்கள் சில வருஷங்களுக்குப் பிறகு இந்திய அரசர்கள் இந்தக் கொடிய சனங்களைத் துரத்துவதற்காக ஒன்று சேர்ந்தனர். அவர்களைத் திரும்பிக் காஸ்மீர் தேசத்திற்கு ஓட்டி விட்டனர். அவர்களிலே அனேகர் வியாபாரிகளாகவும், விவசாயிகளாகவும் பற்பல இடங்களில் தங்கி அந்தந்த நகர சனங்களோடு கலந்து வசிக்கத் தொடங்கினர். இதன் பின்பு ஏழாவது நூற்றாண்டு வரைக்கும் நடந்த விஷயங்கள் ஒன்றும் தெளிவாகவில்லை.

## கர்ஷவர் Harsha.

வட இந்தியாவில் அரசு புரிந்து கீர்த்தி வாய்ந்த இந்து சக்கரவர்த்திகளில் கர்ஷவர் கடைசியானவர்; இவர் மறுபடியும் முன்போல் வட இந்தியா முழுவதையும் ஓர் அரசாட்சிக்குள்ளாக்கினார் அப்பொழுது தேசமெங்கும் குழப்பமாயிருந்தது. பின்பு சமா



தானம் விருத்தியடைந்தது. இவர் கி. பி. 618-ம் வருஷத்தில் இறந்தார், இவருடைய இராச்சியம் நிலைநிற்கவில்லை. தேசத்தில் எங்கும் பெருங் குழப்பமான சண்டை சச்சரவுகள் மிகுந்திருந்தன. அப்பொழுது தேசம் முழுவதும் இராசபுத்திரருடைய சிறு இராச்சியங்களாகவே யிருந்தன.

## இராசபுத்திரர் Rajputs.

இராச புத்திரர் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொண்டே யிருந்தனர். அன்னியர் படையெடுத்து இந்தியாவுக்கு வந்த காலத்திலுங்கூட இவர்கள் ஒன்று சேரவில்லை; இராசபுத்திரருடைய சிறு இராச்சியங்களை யெல்லாம் ஓர் ஆளுகையின் கீழ்க்கொண்டு வரத்தக்க சாமர்த்திய சாலியான அரசர் ஒருவருமில்லை; பத்தாவது நூற்றாண்டில், இந்தியாவுக்குச் சமீபத்தில் முன்னே வந்துவிட்ட முகம்மதியர் கைபர்கணவாயின் வழியாக இந்தியாவுக்குள் வந்தனர். இராசாங்க நிர்வாகிகள் அன்னியர் இந்தியாவுக்குள் வருவதற்கேற்ற வடமேற்குக் கணவாய்களிருப்பதையும் அவற்றைக் காத்து வேண்டிய பொறுப்பையும் முற்றும் மறந்துபோயிருந்தார்கள்.

## சஜனி முகம்மது Mahmud of Ghazni.

கசனி, வடமேற்கு இந்தியாவிலிருக்கும் ஆப்கானிஸ்தானிலுள்ள சிறிய முகம்மதிய இராச்சியம். அந்த ராச்சியத்து அரசராகிய முகம்மது லாகூர் இராசபுத்திர அரசராகிய ஜயபாலருக்கு விரோதமாய்ப் படையெடுத்துச் சென்றார். கசனீ முகம்மது ஜயபாலரைத் தோற்கடித்து விட்டார்; அந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமல் அவர் தீயில்விழுந்துஇறந்தார். அவருடைய மகன் அனங்கபாலர் படையெடுத்து வருகிறவர்களை எதிர்ப்பதற்காக இராசபுத்திரர்களை ஒன்று சேர்க்கப் பிரயாசப்பட்டார். மறுபடியும் கி. பி. 1009 ல் பெசாவர் என்னு மிடத்தில் முகம்மது வெற்றியடைந்தார். பின்பு முகம்மது வருஷந்தோறும் படையெடுத்து வருவதும்போவதுமாயிருந்தார். முகம்மது பன்னிரண்டு தடவைக்கு மேலேயே இந்தியாவின்மீது படையெடுத்து வந்திருக்கின்றார். அவன் நாகர் கோட்டை யென்னும் பட்டணத்தை

நாசமார்க்கி அக்ரகாரத்திலுள்ள கோவிலிலிருந்து ஏராளமான பொருள்களையும்கைப்பற்றிக்கொண்டார். கி. பி. 1019 ம் வருஷம் அவர் மதுரை நகரைக் கொள்ளையடித்துக் கன்னோசியையும் பிடித்துக் கொண்டார். முகம்மது திரும்பிப் போனதும் கன்னோசி அரசன் தன்நகரத்தை இழந்ததற்காக அடுத்த கலிஞ்சார் அரசன் கன்னோசி அரசனை எதிர்த்து அவனுடன் போர்புரிந்து அவனைத் தோற்கடித்து கொன்று விட்டான். கி. பி. 1022 ல் முகம்மது இந்தியாவுக்கு வந்த பொழுது கலிஞ்சார் நகரத்தைப் பிடித்துக் கொண்டார்.

கூஜராத்திலுள்ள ஒரு தீபகற்பத்தில் கட்டியிருக்கும் சோமநாதபுரக் கோயிலைக் கொள்ளை கொண்டதுதான் முகம்மதின் படையெழுச்சிகளில் மிகவும் முக்கியமானது. இந்தக் கோயிலுக்கு ஏராளமான பொருளிருந்தது. கி. பி. 1024-ல் முகம்மது இந்த இடத்திற்கு வந்து கோட்டையைத்தகர்க்கும்படி உத்தரவிட்டார் இந்தக் கோட்டை மதிலின்மீது கடல் அலைகள் மோதிக்கொண்டேயிருக்கும். முகம்மதியர் மதிற்சுவரில் ஏணிகளைச் சார்த்தி அவற்றிலேறி மதிலின் மேலே போய்நின்று "நாங்கள் எங்கள் இஸ்லாம் மதத்தினுடைய சக்தியினால் இதோ வெற்றி யடைந்தோம்" மதப்போருக்குரிய ஆரவாரத்தோடு கத்தினார்கள். பின்பு பயங்கரமான படுகொலை நடந்தது. கோயிலின் சந்நிதி வயலில் நடந்த போரில் பல்லாயிரம் சனங்கள் மடிந்தனர். இடையில் முகம்மதிய வீரர் கொஞ்சம் சோர்வமடைந்ததுபோலிருக்க, அதைக்கண்ட முகம்மது தமது குதிரையிலிருந்து குதித்து தரையில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக ஆண்டவனைப் பணிந்து உதவி செய்யும்படி பிரார்த்தித்தார். உடனே முகம்மதியர் வெற்றிகொண்டு ஆரவாரத்துடன் கிளம்பி ஆயிரக்கணக்கான இந்துக்களை வெட்டி மடித்தார்கள். பின்பு முகம்மது கோயிலுக்குள் போனார். அங்கிருந்த குருக்கள் மூலவிக்கிரகத்தை மாத்திரம் ஒன்றும் செய்யாமல் விட்டு விடும்படி கெஞ்சிக் கேட்ட போதிலும், முகம்மது விக்கிரகத்தைத் தகர்த்து அழித்து விட்டு அந்தக் கோவிலிலிருந்த பெரும் பொருளைக் கொள்ளை கொண்டு போய்விட்டார். அந்தப் பொருள் இரண்டுகோடிடைனார்களுக்கு மேலிருக்குமென்று மதிப்பிட்டிருக்கின்றனர்.



கி. பி. 1030-ல் முகம்மது காலஞ்சென்றார். கஜனியில் அவர் வெகு விமரிசையாக அரசியற்றினார். அங்கே ஒரு கலாசாலையும் சர்வகலாசபை யொன்றுமிருந்தன. அந்தப்பட்டணத்தில் அநேக வித்துவான்கள் வசித்து வந்தனர். அவர்களுள் பருணி என்கிற சோதிடரும், பிர்தவசி என்னும் கவிஞரும் விசேட கீர்த்தி பெற்றவர்கள். முகம்மது இந்தியாவில் நிலையான ஆட்சியை ஏற்படுத்தவில்லை. இந்த இராச்சியம் அவர் இறந்த கொஞ்சம் காலத்திலே அழிந்து போய் விட்டது. அவர் இறந்தவுடன் அயலிலேயுள்ள கோர் நகரத்து முகம்மது அரசர் கஜனி நகரத்தைச் சயித்துப் பாழாக்கினார்.

## கோரிமுகம்மது Mahmud of Ghori.

கோரிமுகம்மது கி. பி. 1191-ல் இந்தியாவின்மேல் படையெடுத்தார். இந்தக் காலத்திலே வட இந்தியாவில் அரசு புரிந்த அரசர்களில் பிருத்தி என்பவரே பெரிய அரசர். டில்லி நகருக்கருகே தானேசுவரம் என்னுமிடத்தில் கோரி முகம்மதுவுக்கும் பிருத்திக்குமிடையில் சண்டை நடந்தது. இதில் முகம்மதியர் முற்றிலும் தோல்வியடைந்தனர்; கோரிமுகம்மதுகாயமடைந்தார். கோரி அரசர் தாம் அடைந்த தோல்வியை நினைத்துப் பழிக்குப் பழி வாங்குவதாகத் தீர்மானஞ் செய்து கொண்டார். அப்பால் அகோரமான சண்டை நடந்தது. பிருத்விராசா போர்க்களத்தில் இறந்து போய்விட்டார்; ஆயிரக்கணக்கான இராசபுத்திர வீரர்களும் மடிந்தனர். முகம்மதியர்களின் வெற்றி நிச்சயமாகி அவர்களுடைய ஆட்சி நிலைபெற்று விட்டது. டில்லி, கன்னோசி, காசி முதலிய இடங்களை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள். பின்பு வட இந்தியா முழுவதையும் சயித்தார். அவர் இறந்தபிறகு அவருடைய அன்பான அடிமையாகிய குப்த்-உத்-தீன் கி. பி. 127-ல் டில்லி அரசானார்.

## அடிமை அரசர் Slave Kings.

குப்த்-உத்-தீனுக்குப் பின் ஆட்சிசெய்த அரசர்களும் அவர்களுடைய சிறுவயதில் அடிமையா யிருந்தவர்களே. ஆகையினால் இந்த வமிசத்திற்கு அடிமை வமிசமென்று பெயர். இந்த வமி

சத்தைச் சேர்ந்த பால்பன் மங்கோலியரை இந்தியாவுக்குள் வரா மல் துரத்திவிட்டார். கி. பி. 1290-ல் அடிமை அரசு முடிவடைந்தது.

## கில்ஜி வமிசம் Khilh Dynasty.

பின்பு கில்ஜி என்னும் வேறொருவமிசம் தோன்றியது. இந்த வமிசத்தில் அடல்லா-உத்-தீன் என்பவர் மிகவும் பராக்கிரமசாலியான அரசர்; இவர் காலத்தில் மொங்கோலியர் அடிக்கடி படையெடுத்து வந்தனர். அவர்களை இந்தியாவுக்குள் வராமல தடுத்தனர். அவர்தான் முதன்முதலில் தென்னிந்தியாவின் மேல் படையெடுத்துச் சென்று மதுரை முதலிய நகர்களைச் சயித்தார். 1316-ல் அவர் இறந்து போன பிறகு பெருங்குழப்பமுண்டாயிற்று

## துக்ளக் அரசர்கள் Tughlak Dynasty.

கியாஸ் உத்தீன் துக்ளக் 1320-ல் அரசரானார். அவர் ஐந்து வருஷகாலந்தான் அரசாண்டார். 1325-ல் ஒரு கட்டடம் அவர் மேல் விழுந்ததனால் அவர் இறந்தார். பின்பு அவருடைய மகன் முகம்மது பின் துக்ளக் அரசரானார். இவருடைய இராச்சியம் மிகப்பெரியது; அவர் பார்சிகத்தையும சீனதேசத்தையும் சயிக்க வேண்டுமென்று எண்ணினார்; ஆகையினால் அவர் இமயமலையைக் கடந்து செல்லும்படி சேனைகளை அனுப்பினார். இராச்சியத்தின் செல்வம் வீணாயிற்று. அவருடையகாலத்தில்கொடுமை மிகுந்தது வட இந்தியாவிலுள்ள பெரிய முகம்மதிய ராச்சியம் வரவரச் சிதைந்து போய் அனேக தனி அரசுகளாய் விட்டது; உண்ணாட்டுக் கலக முண்டாயிற்று. கி. பி. 1351-ம் வருஷத்தில் முகம்மது பின்-துக்ளக் இறந்துபோக, தென்னிந்தியாவில் இரண்டு இராச்சியங்கள் உண்டாயின.

## விஜய நகர இராச்சியம் Vijayanagar.

முகம்மதியர் வந்தவுடன் பழைய இராச்சியங்களிலிருந்து பயந்து ஓடியவர்கள் புதிய இராச்சியங்களை ஏற்படுத்திக் கொண்டனர். கி. பி. 1336-க்கும1376-க்கும்இடையிலே கரிகரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்கள் துங்கபத்திர நதியின்தென்கரையில்



விஜயநகரத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். தென்னிந்தியாவில் பலசாலிகளான அரசர் ஒருவருமில்லாத இந்த சமயத்தில் அவர்கள் இந்தப் புதிய ராச்சியத்தை ஏற்படுத்தினர். தெற்கேயிருந்த சோழராச்சியம் முன்னிருந்த நிலைமை போய் இப்பொழுது அழிந்து போயிற்றென்று சொல்லலாம். வடக்கேயிருந்த டில்லி அரசனுக்கோ அங்கு நடக்கும் அலுவல்களையே கவனிக்க முடிந்ததன்றி தக்ஷிணத்தில் நடக்கும் விசேஷங்களைக் கவனிக்க முடியவில்லை. இப்படியாகவே ஒரு நூற்றாண்டுக்குள் பக்கத்திலிருந்த சிறிய இராச்சியங்களெல்லாம் பெரிய விஜயநகரத்தில் சேர்ந்து விட்டன. துங்கபத்ரா நதியிலிருந்து கன்னியாகுமரி வரையில் விஜயநகர இராச்சியம் பரவியிருந்தது. தலைநகரமாகிய விஜயநகரம் தக்ஷிண தேசத்தின் மத்தியில்விளங்கியது. சோழபாண்டிய இராச்சியங்களும் மைசூரும் மலையாளமும் விஜயநகர சக்கரவர்த்தியின் ஆளுகைக் குள்ளாயின.

## பகமனி ராச்சியம் Bahmani Kingdom.

விஜயநகரத்திற்குக் கொஞ்சம் வடக்கே பகமனிராச்சியம் இருந்தது. விஜயநகர ராச்சியம் ஏற்பட்ட காலத்திலே இந்த ராச்சியம் ஏற்பட்டது. பகமனி என்பவர் இந்த ராச்சியத்தை ஏற்படுத்தினர். முதலில் டில்லி அரசனுடைய சேனையில் அவர் ஓர் உத்தியோகஸ்தரா யிருந்தார்; முகம்மது துக்ளக் காலத்தில கி. பி. 1347-ல் குல்பர்க்கா என்னும் நகரத்தை ஸ்தாபித்தார். பின்பு அந்த நகரமே பகமனி ராச்சியத்திற்குத் தலைநகராயிற்று. சில வருஷங்களுக்குப் பிறகு பீடர் (Bidar) தலைநகரமாயிற்று. பகமனி அரசருடைய அதிகாரம்வரவரவிருத்தியாயிற்று. பகமனி இராச்சியம் மேற்கே இரு பக்கத்துக் கடல்வரையிலும் பரவியது. கி. பி. 1398-ல் தமிழர் டில்லியை நாசமாக்கியபோது, பகமனி ராச்சியம் மகா, உன்னதமான நிலையிலிருந்தது. தற்காலத்தில் நிஜாம் ராச்சியம் என்ற பாகமும் கோதாவரி நதிப் பிரதேசம் முழுதும் பகமனி ராச்சியமாயிருந்தது. விஜயநகர அரசருக்கும் பகமனி அரசர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நடந்துவந்தன.

## விஜயநகர ராச்சியத்தின் முன்னேற்றம்.

## Advancemeut of Vijayanagar

பகமனி இராச்சியம் நிலை குறைந்து பிரிவு பெறத் தொடங்கி பல சிறு இராச்சியங்களாகி ஒன்றோடொன்று சண்டை செய்து கொண்டிருந்த சமயத்தில விஜயநகர ராச்சியம் அதிகாரத்திலும விஸ்தீரணத்திலும் விருத்தியடைந்து வந்தது. விஜயராசசியம் மிக மகிமையோடும் மேன்மையோடும விளங்குவதைக்கண்ட வட திசை முகம்மதிய ராச்சியங்கள் பொறாமை கொண்டன. முகம்மதியர், தமக்கருகே யிருந்த இந்து ராச்சியங்களை அழிப்பதற்குத் தாமெல்லோரும் ஒன்றுசேரவேண்டுமென்பதை உணர்ந்தார்கள் விஜயநகர அரசரும் முகம்மதிய ராச்சியங்களைச் சயித்துவந்த தால் முகம்மதிய அரசாட்சியே அழிந்து விடுமென்ற பயமுண்டா யிற்று. கி. பி. 1556-ல் இந்துக்களுக்கும் முகம்மதியருக்கு மிடை யில் யுத்தம் நடந்தது. அதில் இந்து சைநியம் முழுதும்அழிந்தது.

## மொங்கோலியர் Mougols.

மொங்கோலியர் அல்லது மொகலாயர் என்பவர்கள் இந்தியா வுக்குள் வருவதற்கு எத்தனித்தார்கள் என்று கூறினோம் கன்ஸ் துலுக்கர் முதலியவர்கள் மத்திய ஆசியாவின் புற்றரைகளில் அலைந்து உலைந்து திரிந்த மொங்கோலிய வகுப்பினரே. இவர்கள் சீனாவுக்குப் போனார்கள். பின்பு அற்றிலாவின் தலைமையின் கீழ் ஐரோப்பாவுக்கும் போனார்கள். இவர்களில் ஒரு பகுதியார் முகம்மதிய மதத்தைத் தழுவி துலுக்கரானார்கள். துலுக்கர் அரேபியர் அன்று. பின்பு பன்னிரண்டாம்நூற்றாண்டில் மங்கோ லியரில் எஞ்சியவர் எல்லோரும் ஒருங்குகூடி சிங்கிஸ்கான் என்ப வரைத் தலைமையாக வைத்து சீனாவுக்குப் படையெடுத்துச் சென்றனர்.

## சிங்கீஸ்கான் Chingiz Khan.

சிங்கிஸ்கான் என்பவன் கி. பி. 1162-ம் ஆண்டு ருசியாவின் தென்பாகத்தில் அல்லது மொங்கோலியாவிலுள்ள புற்றரைகளில் பிறஒரு மொங்கோலியா தலைவனின் மகன். இவன் மிகவும் சாமார்த்தியசாலியான போர்வீரன். மொங்கோலியர் எல்லாரை



யும் ஒரு பெருஞ் சேனையாகத் திரட்டிக் கொண்டு குதிரைவீரர் பலருடன் 1214-ம் ஆண்டு சீனாதேசத்துக்குள் புகுந்தான். சீனா தேசத்திலுள்ள கன்ஸையும் சீனரையும் தோற்கடித்து, பீக்கின் நகரம் வரையும் சென்று சீனாதேசம் முழுவதையும் தன்னுடைய ராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டான்.

இப்பொழுது முகம்மதியரும் துலுக்கரும், பார்சியாவையும், அப்கானிஸ்தானையும், துருக்கிஸ்தானையும், வட இந்தியாவின் ஒரு பகுதியையும் தமதாக்கிக் கொண்டு அரசியற்றினார்கள். சிங்கிஸ் கான் அனுப்பிய தூதரை இவர்கள் கொன்று விட்டார்கள்.

இதனையறிந்த சிங்கீஸ் கான் ஒரு பெரிய சேனையுடன் கி. பி 1218-ல் மேற்கே சென்றான். சீனாவுக்குச் சென்று வெடி மருந்து துப்பாக்கியினுடைய உபயோகத்தை அறிந்தபடியாலும், சீனரை யும தனது சேனையில்சேர்த்துக்கொண்டபடியாலும், சிங்கீஸ்கான் மிகவும் இலகுவாக பார்சியாவையும் ஆப்கானிஸ்தானையும் துருக் கிஸ்தானையும ருசியாவின் தென்பாகத்தையும் பிடித்துக் கொண் டான். சிங்கீஸ்கான் கிராமங்களையும் நகரங்களையும் அழித்துக் கோடாகோடி சனங்களையும் தொலைத்து விட்டான்.

கி பி. 1221-ல் சிங்கீஸ்கான் இந்தியாவுக்கு வந்து லாகூர் வரையுஞ் சென்று பஞ்சாப்பைக் கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டான். அவன் ருசியருடன் போர் புரிந்து மேற்கில் கருங்கடல் வரையுமுள்ள தேசத்தை சயித்தான். 1 26-ல் அவன் இறந்தபோது அவனுடைய ராச்சியம் கிழக்கில் பசிபிக்சமுத்திரத் திலிருந்து மேற்கில் கருங்கடல் பார்சியாக் குடாக்கடல் வரையும் ஆசியாவின் பெரும்பாகத்தை அடக்கியிருந்தது.

சிங்கீஸ்கான் யுத்தப் பிரியமும் இரத்தப் பிரியமு முள்ள அதி சாமர்த்தியமான போர் வீரனாயும், நீதிதவறாத அரசனாயு மிருந்தான்.

## மொங்கோலிய சக்கராதிபத்தியம் The Mongolian Empire.

சிங்கீஸ்கான் நன்றாகப் பழகிய சேனையை வைத்திருந்தான். வரிவைத்துப் பிரசைகளிடமிருந்து பணத்தை அறவாக்கிப் போர் வீரர்களுக்குச் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுத்தான். அவனுக்

குப் பின்வந்த அரசர்களும் அப்படியே செய்து வந்தார்கள். ஆகையால் அவர்கள் மிகவும் பெரியதும் தைரியமானதுமான ஒரு சேனையை வைத்திருந்தார்கள். இதுவே அவர்கள் அடைந்த வெற்றிகளுக்குக் காரணமாயிருந்தது. கி. பி. 1240-ல் ரூசியா, போலாந் ஜேர்மனி முதலிய தேசங்களும் மொங்கோலியசக்கராதிபத்தியத்துடன் சேர்க்கப்பட்டது.

போக்கு வரவுக்கேற்ற எத்தனங்களில்லாத அந்தக்காலத்தில் அந்தப் பெரிய சக்கராதிபத்தியத்தைக் கொண்டு நடத்துவது முடியாத காரியமாயிருந்தது. குபிளாய் கான் (1260-1294) பீக்கினைத் தனது தலைநகராக்கிக் கொண்டு சீனாவிலிருந்தபடியால் ரூசியா, பார்சியா, துருக்கிஸ்தான், மெசொபற்றாமியா முதலிய விடங்களெல்லாம் சிறு ராச்சியங்களாகப் பிரிந்தன. சிங்கிஸ்கான் இறந்து ஒரு நூற்றாண்டுக்குள் அவனுடைய பெரிய ராச்சியம் சிதறுண்டு போயிற்று. மொங்கோலியர் சிறந்தபோர்வீரராயிருந்த போதிலும், அரசியல்முறை தெரியாதவர்கள் ஆதலால் அவர்களுடைய இராச்சியம் நிலை நிற்கவில்லை.

## மார்க்கோ போலோ Marco Polo.

மார்க்கோ போலோ என்னும் இற்றாலிய தேசத்து வணிகன் தேசசஞ்சாரஞ் செய்து குபிளாய்கானுடைய அரண்மனைக்கு 1260 அளவில் சென்றான். மார்க்கோ போலோ அரசனின் கீழ் உத்தியோகம் வகித்துக் கொண்டு சிலகாலமிருந்து, பின்பு சீனா தேசத்து மாகாண மொன்றுக்குத் தேசாதிபதியாகவும் நியமிக்கப்பட்டான். சீனா தேசத்துக்குத் தரைமார்க்கமாக காலநடையிலும் ஒட்டகத்தின் மேலேறியும் வந்த போலோ 1295-ல் கடல்மார்க்கமாக சுமேத்திரா, இந்தியா, இலங்கை, பார்சியா முதலிய விடங்களுக்கூடாக இற்றாலிக்குச் சென்றான். சீனா தேசத்தையும் கிழக்கு நாடுகளையும் பற்றியறிந்த மார்க்கோ போலோ, தனது தேசத்தவர்களுக்கும் மேல்நாட்டாருக்கும், சீனாவுக்கும் இந்தியா முதலிய விடங்களுக்கும் தரை மார்க்கமாயும் கடல்மார்க்கமாயும் போகும் வழிகளைப் பற்றியும், அங்குள்ள பொன், வெள்ளி நவரத்தினம் முதலிய திரவியங்களைப் பற்றியும் வினோதங்களைப்பற்றியும்



அறிவித்தான். அவன் சீனாவில் கோடா கோடி சனங்கள் இருப்பதாகவும் லட்சக்கணக்கான திரவியங்களிருப்பதாகவும் கூறினான். ஆனால் அவன் உண்மை பேசிய போதிலும், அவனுடைய தேசத்தவர்கள் அவனை நம்பவில்லை. 1298-ம் ஆண்டில் இற்றாலி தேசத்தில் ஒரு யுத்தம் நடந்தது. அப்பொழுது கப்பல் சேனாதிபதியாயிருந்த மார்க்கோ போலோ சிறைப்படுத்தப் பட்டான். அவன் மறியற்சாலையிலிருக்கும் பொழுது தான் சந்தித்த தேசங்களைப் பற்றியும் அங்குள்ள மனிதர்களைப் பற்றியும் தொகுத்தெழுதி வைத்தான். சீனர் இரகசியமாக வைத்திருந்த திசையறியுங் கருவியையும், அச்சுயந்திரத்தையும், வெடிமருந்து துப்பாக்கி முதலியவற்றைப்பற்றியும் அவைகளின் உபயோகங்களைப்பற்றியும் வெளியிட்டான். அவனுடைய மூலமாகவே ஐரோப்பியர் சீனருடைய நாகரிகத்தைப் பற்றி யறிந்தனர்.

## தயமூர் Timur.

மொங்கோலிய சக்கராதிபத்தியத்தின் மேற்குப் பக்கத்தில் ஒரு எழுச்சி உண்டாயிற்று. இந்தப் பாகத்தில் இருந்தவர்கள் முகம்மதிய மதத்தைக் கைக்கொண்டார்கள். தயமூர் என்னும் போர்வீரன் 1369-ல் பெரிய சேனை ஒன்றைத் திரட்டிக் கொண்டு பார்சியா, மொங்கோலியா, ரூசியா முதலியவிடங்களைச் சயித்துச் சக்கரவர்த்தியானான். அவன் 1398-ல் இந்தியாவின் வடபாகத்தையும் சயித்தான். பின்பு எகிப்தையும் துருக்கியையும் சயித்துக் கொண்டு சீனாவுக்குப் போகும்பொழுது 1405-ல் இறந்தான்.

## துலுக்கர் The Turks.

மொங்கோலியரில் ஒரு பகுதியார் கிழை உரோம ராச்சியத்தை 1453-ல் சயித்து, கொன்ஸ்தாந்தி நோப்பிளை அழித்து, அங்கே குடியேறினர். மொங்கோலிய ராச்சியங்கள் அழிந்து போனபின்பு துருக்கர்களுடைய இராச்சியமே இப்பொழுதும் நிலை நிற்கின்றது.

## XI. மேலைத்தேசங்கள் The West.

சார்லிமேன் ஸ்பானியாவும் போர்த்துக்கலும் தவிர ஐரோப்பாவின் மற்றைய பாகங்கள் முழுவதையும் சயித்து அரசாற்றினன் என்று அறிந்தோம். கிறிஸ்தமதத் தலைவனான போப் சமயகாரியங்களிலும், அரசியல் காரியங்களிலும் அதிகாரம் பண்ணிவந்தார். பின்பு சக்கரவர்த்தியும் போப்பும் இடையிடையே அரசியல் முறையைப் பற்றிச் சண்டையிட்டுக் கொண்டனர். ஒரு காலத்தில் போப்பினுடைய அதிகாரம் மேற்பட்டது. சக்கரவர்த்தியினுடைய அதிகாரங் குறைந்தது. ஆகையால் பிராங்ஸ் சக்கரவர்த்திகள் இராச்சியத்தைப் பிள்ளைகளுக்குப் பங்கிடத் தொடங்கினார்கள். அப்பொழுது பிராங்ஸ் சக்கிராதிபத்தியம் கி. பி. 843-ல் பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி என மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டது.

இங்ஙனமிருக்க, ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள நோர்த்மென் (வடக்கத்தியர்கள்) அடிக்கடி எதிர்க்க ஆரம்பித்தார்கள். அவர்களைத் தடுக்க முடியாமல் ஈற்றில் நோர்மண்டி என்ற மாகாணத்தை ரோலோவின் தலைமையின் கீழ்வந்த வடக்கத்தியர்களுக்குக் கொடுக்க நேரிட்டது. இவர்களும் நாகரிகமடைந்து கிறிஸ்த மதத்தைக் கைப்பற்றினார்கள்.

### ஸ்காந்திநேவியா Scandinavia.

ஸ்காந்திநேவியா என்பது சுவீடன்நோர்வேஎன்கிற இரண்டு நாடுகளடங்கிய தவீபகற்பம். அவைகளின் பூர்வகால சரித்திரத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இத்தேசத்தில் ஸ்வெர் காடர் என்ற இருவகுப்பினர்களிருந்ததாகத் தெரிகின்றது. நோர்வே சுவீடன் ஒரு அரசனின் கீழும், பின்பு வேறிராச்சியங்களாகவும், அதன் பின்பு டென்மார்க்குடன் சேர்ந்து மூன்று நாடுகளும் ஒரே ராச்சியமாயும் வாழ்ந்தன.

### தேனியர் The Danks.

தேனியருடைய தேசம் தென்மார்க் எனப்படும். இவர்களைக் குறித்து கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பம் வரையும் ஒன்றும் தெரியாது. இவர்கள் வடக்கத்தியர்கள், ஆங்கிலர்கள்,



சாக்சன்கள், ஜூடுகள் என்னும் மூன்று ஜெர்மனிய வகுப்பையடக்கிய ரியூற்றன் சாதியர்களைப்போல கடற்கொள்ளைக்காரர்கள். பதினோராவது நூற்றாண்டு வரையும் இவர்கள் பெயர் எல்லோருக்கும் நடுக்கத்தை விளைவித்தது. அவர்கள் சென்றவிடங்களிலெல்லாம் கொள்ளையும் கொடூரமுமன்றி வேறில்லை. ஜெர்மனியாவை எதிர்த்துச் சிலபாகங்களைத் தமதாக்கிக் கொண்டார்கள். இங்கிலாந்தைப் பலமுறைதீர்த்துப் பின்பு அவ்விடத்தில் தங்கிய காலத்தில் அரசாண்ட கனியுட் டென்மார்க். சுவீடன் நோர்வே இவைகளையு மாண்டான். பதின்மூன்றாவது நூற்றாண்டில்தான் தேனியர்களுக்குக் கல்வியினாலும் செல்வத்தினாலும் மேன்மையுண்டாயிற்று. அப்பொழுது இரண்டாவது வால்டிமோர் அரசனாயிருந்தான். அவனிறந்த பிறகு உள்நாட்டில் கலகம் ஏற்பட்டது. பிரபுக்கள் அரசன் ஆட்சியைமிஞ்சினார்கள். பின்பு பதினான்காவது நூற்றாண்டில் வேறோர் வால்டிமோர் அரசனாகி, நல்லரசு புரிந்தான்; அவனுடைய குமாரனின் காலத்தில் நோர்வேயும சுவீடனும் டென்மார்க்கும் ஒன்று கூடி ஓர் அரசின் கீழ்சுகித்திருந்தன. பதினைந்தாவது நூற்றாண்டில் பிரபுக்கள் செய்த கொடுமையால் விவசாயத் தொழிலில் அடிமையாயிருந்தவர்கள் கலகஞ்செய்து சுதந்திரம் அடைந்தார்கள். இந்தச் சமயம் சுவீடன் தனிராச்சியமாயிற்று.

### பிரித்தானியா Britannia.

இங்கிலாந்து தேசம் முன்னொரு காலத்தில் பிரித்தானியா அல்பியன் (Britannia Alpion) என்று வழங்கப்பட்டு வந்தது. அப்பொழுது இங்கிலாந்து தேசமாவது, ஆங்கிலேயர் என்னும் சாதியாவது, ஆங்கிலேய பாஷையாவது இருந்ததில்லை. பிரித்தானியர், கிரேக்கர் உரோமரைப் போன்ற ஓர் சீர்திருந்திய சாதியாரல்லர். செம்பு, ஈயம், தகரம் முதலியவைகளால் கத்தி ஈட்டி முதலிய ஆயுதங்கள் செய்யவும் மிருகங்களின் தோலைக் கொண்டு வள்ளங்கள் உண்டு பண்ணவும், அழுத்தமில்லாத பட்பாத்திரங்களை வனையவும் பழகியிருந்தார்கள். அவர்கள் தங்கள் அவயவங்களில் பலபாகங்களிலும் பச்சைமைச் சித்திரம் செய்யும் வழக்கமுடையவர்கள். இவ்வழக்கம் இன்னும் பிரித்தானிய இராணு

வத்தாருள் இலைமறை காய்போற் காணலாம். பூர்வ பிரித்தானியரின் பின் சந்ததியாரே இன்றைக்கும் உவேல்ஸ் மாகாணத்திலும் அயர்லாந்திலும் பெரும்பான்மையும் வசிக்கின்றனர்.

பிரித்தானியா நெடுங்காலமாகப் பல சிற்றரசர் நிலைந்த ஓர் நாடாகவே யிருந்தது. இச்சிற்றரசர் எல்லாரும் ஒருவர் மீதொருவர் அழுக்காறுடையவராயும் நித்திய சண்டை புரிவாராயு மிருந்தனர். சூரியன், சந்திரன், வானசோதிகள், அக்கினி, அப்பு காடு, சிந்தூரமரச் சோலைகள், சர்ப்பம், விக்கிரகம், குருவிச்சை முதலிய இயற்கை யமைப்பிற் சிறந்த விநோதப் பொருட்கள்தான் இவர்கள் வணங்கிய தெய்வங்களாகும்.

கி. மு. 55-ம் வருடத்தில், உலகத்தி லெக்காலத்திலாயினு மிருந்த மகாசேனதிபதிகளு ளொருவராகியயூலியஸ்சீசர் காலியா நாடு முழுவதையும் பிடித்த பின்பு பிரித்தானியாவுக்குச் சென்று போர் செய்து ஈற்றில் சில சமாதான ஒழுங்குகள் செய்தனர் என்று அறிந்தோம். அடுத்த வருடம் அனேக கப்பல்களுடனும் பெரியசைனியங்களுடனும் வந்திறங்கிப் பலஇடங்களிலும யுத்தம் புரிந்தனர். யூலியஸ்சீசர் அவர்களை இலகுவில் வென்று சமாதான உடன்படிக்கையுஞ் செய்து கொண்டு தம்மூரேகினர். கி. பி. 43-ம் ஆண்டில் உரோமர் மறுபடியும் பிரித்தானியாவுக்குவந்து அந்நாட்டைத் தம் நாடாக்க வேண்டிய முயற்சிகள் செய்து கி. பி. 78-ம் ஆண்டளவில் பிரித்தானியாவைத் தமதாளுகைக் குள்ளாக்கினார்கள். இவ்விதமாக உரோமர் பிரித்தானியாவை 300 வருஷகாலம் ஆண்டனர். இவர்கள் காலத்தில் நகரங்களும், வீடுவாயில்களும், கடைகளும் வீதிகளும், நாடகசாலைகளும், ஆலயங்களும், உரோமர் மருமுறைகளும், அரசியல் முறைகளும் ஸ்தாபிககப் பெற்று நாகரிகமும் மேம்பட்டு வளர்ந்தது. பிரித்தானியர் உரோமரிடமிருந்து கமத்தொழிலையும் வியாபார முறைகளையும் நன்குகற்றதுமன்றி, அவர்கள் தேசத்திலிருந்து வந்த கிறிஸ்து மதத்தையும் தழுவத் தொடங்கினர். ஆனால் ஐந்தாம் நூற்றாண்டளவில் உரோமைச் சக்கராதிபத்தியம நிலைதளையத் தொடங்க, உரோமைச் சைனியங்களெல்லாம் பிரித்தானியா நாட்டை விட்டு உரோமாபுரிக்குச் சென்றன. பிரிததானியர் மறுபடியும் அனாதையிற் கைவிட்டனர்.



இப்படியிருக்குங் காலத்தில் அயற்பாகங்களில் வசித்த ஸ்கொற்றியரும் (Scots) பிக்தியரும் (Picts) சாக்சனியரும் (Saxons) பிரித்தானியாவின் துறைமுகங்களை யடைந்து கொள்ளையடித்துச் செல்வாராயினர். ஜேர்மனியாவிலிருந்து கடலேறிக் கொள்ளை யடிக்கும் சாக்சனியரும், ஆங்கிலரும் (Angles) வேறு பல சாதியாரும் வந்தனர். ஆங்கிலரும் சாக்சனியரும் அரசியற் சம்பந்தங்களாலும் விவாகக் கலப்பாலும் ஆங்கில சாக்சனியர் (Anglo Saxons) எனப் பொது நாமம் பூண்டனர். ஆங்கிலர் அக்காலத்தில பிரித்தானியாவில் அநேக பாகங்களைப் பிடித்து தமதாட்சிக்குள்ளாக்கின ராதலால், பிரித்தானியாவுக்கு ஆங்கில நாடு (Angle-Land) அல்லது இங்கிலாந்து என்னும் நாமத்தைக் கொடுத்தனர்.

கடற் கொள்ளையிற் பிரபல கியாதி பெற்ற தேனியர் இங்கிலாந்து, பிரான்சு முதலிய கிறிஸ்த இராச்சியங்களைத் தமதாளுகைக்குக் கீழ்க் கொண்டுவரக் கருதி, எட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலந் தொடங்கி ஏறக்குறைய 200 வருடங்கட்கு ஆங்கிலேயருடனும் வேறு சாதியாருடனும் சமர் புரிந்தனர். ஆனால் மகா அல்விறெட் எனப் பெயரிய ஆங்கிலேய அரசன் காலத்தில் தேனியர் தாம் அக்காலவரையும் இங்கிலாந்தில் கைப்பற்றியிருந்த நாடுகளை இழந்தும் தோற்கடிக்கப்பட்டும் அல்விறெட்டுடன் சமாதான ஒழுங்குகள் செய்து அவன் கீழ்ப் பிரசைகளாய் இங்கிலாந்தில் அவனால் கையளிக்கப்பட்ட சில நாடுகளையும் பெற்றனர். இந்த தேனியர் ஆங்கில பழக்க வழக்கங்களையும் கிறிஸ்து மதத்தையும் தழுவவும் அவரோடு விவாக சம்பந்தங்கள் செய்யவும் தொடங்கினர்.

அல்விறெட்டின் பின் வந்தவர்களுக்கும் தேனியர்களுக்கும் போராட்ட முண்டாய்ப் பதினொன்றாவது நூற்றாண்டில் தேனிஸ் மன்னனான கானியூட் இங்கிலாந்தைக் கைக்கொண்டான். அவனுக்குப்பின் ஆங்கில அரசாட்சி ஸ்தாபிக்கப்பட்டது. கி. பி. 1066-ல் பிரான்சு தேசத்து நோர்மண்டியின் பிரபுவான (வெற்றி

வீரமன்னன்) உவில்லியம் (William the Conqueror) என்பவன் இங்கிலாந்தை எதிர்த்து கால்ட் என்ற அரசனைக் கொன்று நோர்மன் பிரான்சு இராச்சியத்தை ஸ்தாபித்தான். உவில்லியம் இங்கிலாந்தை யடக்கியாளத் திறமை வாய்ந்த ஓர் பெருந்தலைவன். அவன் இங்கிலாந்தை மாகாணங்களாகப்பிரித்துப்பிரபுக்களுக்குப் பங்கிட்டு அப்பிரபுக்கள் அரசனுக்கு வரி செலுத்துவது மன்றி யுத்தகாலத்தில் சைனியத்துக்கு மனிதர்களையும் அளிக்கவேண்டும் என்னும் ஏற்பாட்டை (Feudalism) அவன் செய்தான்,

## சிலுவை விரர் The Crusaders

உரோமைச் சக்கராதிபதியம் தாழ்ச்சியடைந்த பின்னும் ஐரோப்பாவில் அநேக யுத்தங்கள் நடைபெற்றன. அரசர்கள் அரசர்களுக் கெதிராகவும், சிற்றரசர் தம் அரசர்களுக் கெதிராகவும், பிரபுக்கள் தம் அரசர்களுக் கெதிராகவும் பிரபுக்களுக் கெதிராகவும் அநேக வருட காலங்களாகச் சமராடினர். பிரபுக்கள் தங்கள் சத்துராதிகளிடத்திருந்து தம்மைக் காப்பாற்றும்படி அரண் அமைத்தனர். வாலிபப்பிரபுக்கள் யுத்தாப்பியாசஞ்செய்து தம் அரசர்க்காகவும், தம் தேசத்துக்காகவும் தம்மதத்துக்காகவும் சமராடக் காலத்தை எதிர் பார்த்திருந்தனர். தேசாபிமானமும் மதாபிமானமும் கொண்ட இந்தப் பிரபுக்கள் உண்மையை எப்பொழுதும் பேசுவோம் என்றும், வலியாரைத் தண்டித்து எளியாரைக் காப்பாற்றுவோம் என்றும், வாக்குத்தத்தஞ்செய்து ஊர்கள் தோறும் சென்றனர். பலசாலிகளாயும் மேன்மையான நோக்கமுடையவர்களாகவும் இருந்தபடியால் அவர்கள் வீரர்கள் (Knights) என்று அழைக்கப்பட்டார்கள். அந்தக் காலத்தில் சில போலி வீரரும் இருந்தனர்.

அராபியர் முகம்மதியரான போது அநேக இடங்களைத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். அவ்வாறு அவர்கள் கைபற்றிய தேசங்களுள் பலஸ்தீனுவும் ஒன்று. அந்நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் கிறீஸ்துநாதர் நடமாடிய விடமாகிய பலஸ்தீனுவுக்குப் போக விரும்பினர்; சிலர் தம்பாவத்துக்குப் பரிகாரமாகவும், சிலர் கிறிஸ்துநாதரின் கல்லறையைத் தரிசிக்கும் பொருட்டும், சிலர்



பிரயாண விருப்பினாலும் அந்தப் பரிசுத்த பூமியைத் தரிசிக்கச் சென்றனர். அக்காலத்தில பிரயாணஞ் செய்வதற்கு இப்போதிருக்கும் வசதிகள் ஒன்றும் இல்லாதிருந்தமையால், எல்லோரும் கால்நடையாகவே சென்றனர்.

அப்பொழுது முகம்மதியர் சீர்திருத்த முடையவர்களாயும், கற்றவர்களாயும், பற்பல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி அடைந்தவர்களாயும் இருந்தமையால், அவர்கள் மூர்க்ககுண மில்லாதவர்களாய் பிறசமயத்தாருடன் இணங்கி நடந்தனர். ஆகையால் கிறிஸ்தவர்கள் பரிசுத்த பூமியைத் தரிசிக்கவும் தேவாலயங்களைக் கட்டியெழுப்பவும் இடங்கொடுத்தனர். ஆயின் இவ்வித சமாதானம் நெடுங்காலம் நிலைநிற்கவில்லை. கி. பி. 1087-ம் ஆண்டளவில் கிழக்குப் பகுதியிலிருந்து துருக்கியர் என்றழைக்கப்படுகிற ஓர் சாதியார் வந்து சீரியாவையும் பலஸ்தீனுவையும் கைப்பற்றினர். இவர்கள் முகம்மதிய சமயத்தவர்களாயிருந்தமையால் கிறிஸ்தவர்களுக்குத் துன்பஞ் செய்து அவர்களுடைய தேவாலயங்களையும் அழித்து விட்டனர்.

இதனையறிந்த கிறிஸ்தமத குருவாகிய போப் 2-ம் ஏர்பன், பிரபுக்களையும், வீரர்களையும், சனங்களையும் அழைத்துக் கிறிஸ்தவர்கள் அடையும் துன்பத்தையும், கிறிஸ்தவர்களுக்குத் துருக்கியர் செய்யும் அவமானத்தையும் கூறி, அவைகளை நீக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். அப்பொழுது சகலசனங்களும் "இதுவே கடவுளின் சித்தம்" என்று ஒரே குரலொலியாய்க் கூவினர். போப் "அவ்வார்த்தைகளே உங்கள் யுத்தகளத்தில் சப்திக்கும் போர்க்குறையாயிருக்கக் கடவது; நீங்கள் சிலுவைவீரர்; உங்கள் மார்பிற் சிலுவையைத் தரித்துக் கொள்ளுங்கள்" என்றுசொல்லி அவர்களை அனுப்பி விட்டார்.

பல்லாயிரம் யுத்தவீரர் சிலுவைப் படையிற் சேர்ந்தனர். பீற்றர் என்னும் ஓர் குருவின் தலைமையின் கீழ் வறிஞரும் அறிவீனரும் பலர் பலஸ்தீனுவுக்குச் சென்று அங்கு மடிந்தனர். பின்பு ஐரோப்பாவிலுள்ள அரசர்களும் சிற்றரசர்களும் வர்த்த

கரும் பிரபுக்களும் மற்றையோரும் சேர்ந்து கி.பி. 1096-ல் யெருசலேமை நோக்கிக் குதிரைப் படையாகவும் காற்படையாகவும் சென்றனர். இந்தச் சைனியமானது கொன்ஸ்தாந்தி நோப்பிளை அடைந்து அங்கிருந்து பொஸ்போறஸ் தொடுவாய் வழியாய் பலமாதங்களின் பின் யெருசலேமை அடைந்தது. அங்குள்ள துருக்கியரோடு சிலுவைப் படைவீரர் யுத்தம் செய்து யெருசலேமை மீட்டனர். பின்பு ஒரு சிறுசேனையை யெருசலேமைக் காக்கும்படி அங்கு நிறுத்திவிட்டு எஞ்சியோர் ஐரோப்பாவுக்கு மீண்டனர்.

சில வருடங்களின் பின்னர் முகம்மதியர் சலாதீன் என்பவனைத் தலைமையாகக் கொண்டு யெருசலேமைக் கைப்பற்றினர். சலாதீன் உண்மை யுடை யவனும் தெய்வபக்தி யுடையவனும் இருந்தமையால், யெருசலேமைக் காக்க வேண்டியது தனது கடமை என்று உணர்ந்து சிலுவை வீரரோடு யுத்தஞ் செய்து யெருசலேமைக் கைப்பற்றினன்.

சலாதீனிடம் இருந்து யெருசலேமைத்திரும்பவும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மூன்றும் சிலுவைப்படை ஆரம்பமானது. அநேக அரசர்கள் பங்கு பற்றினர்; அவர்களுள் இங்கிலாந்து அரசனாகிய 'சிங்க இருதயமுடைய றிச்சாட்' என்பவனும்ஒருவன் மூன்றும் சிலுவைப்படை எழுச்சி தோல்வி அடைந்தது. அதன் பின் அநேகபடைகள் ஒன்றன்பின் ஒன்றாகமடிந்தனர். சிலுவைப் படை எழுச்சிகள் எல்லாவற்றிலும் மிகவிசேஷமானது ஸ்ரீபன் என்னும் பன்னிரண்டு வயதுடைய பிராஞ்சிய வாலிபனால் சேர்க்கப்பட்ட சிறுவர்கள் சேனை. ஸ்ரீபண் பாட்டுப் பாடிக் கொண்டு சென்றான்; ஆயிரக்கணக்கான சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்தனர். அவர்கள்பலங்குறைந்தவர்களாய் இருந்தமையால் பரிசுத்த நகரை அடையுமுன் அநேகர் மாண்டனர். சிலர் அடிமை வியாபாரிகளின் கையில் அகப்பட்டனர்.

சிலுவைப்படை யெழுச்சியினால் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர் மடிந்தனர்; ஆயின் அநேக நன்மைகளை அடைந்தனர். ஐரோப்பியர் கீழைத்தேச வாசிகளின் பழக்கவழக்கங்களைப் பற்றி



யும், விளைபொருட்கள், வாசனைத்திரவியங்கள், மற்றும் பற்பல பொருட்களைப் பற்றியும் அறிந்து அவர்களுடன் வியாபாரம் செய்யத் தொடங்கினர்.

யெருசலேமானது 1917-ம் ஆண்டு வரையும் துருக்கியரின் கைவசமிருந்தது. அதை 1917-ம் ஆண்டே பிரித்தானிய போர் வீரர் துருக்கியரிடமிருந்தெடுத்துக் கொண்டனர். பிரித்தானியர் லோட் அலெம்பி என்பவரின் தலைமையின் கீழ்ச்சென்று துருக்கிய சேனையைத் தோற்கடித்து அதைப் பிரித்தானிய சக்கராதிபத்தியத்துடன் சேர்த்துக் கொண்டனர்.

## இங்கிலாந்து England.

பதின்மூன்றும் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மன்னன் ஜோன் என்பான் மிகக்கொடூரமாய் வல்லரசு புரிந்தமையால் பிரபுக்கள் ஒன்றுகூடி அவனிடமிருந்து 1215-ல் மகாசாதனம் (Magna Car[illegible]) ஒன்றை முடித்தார்கள். இச்சாதனமே ஆங்கிலேய அரசனிடமிருந்து பிரசைகள் முதன்முறை பெற்ற மகா சுவதந்திரப் பத்திரம். பின்பு மூன்றும் கென்றி என்பான் நியாயமாய் அரசு புரியாமலும் தன்னிஷ்டமுறையாய் நடந்தமையாலும் பாராளுமன்றம் (Parliament) என்னும் மகாசபை 1265-ல் கூட்டப்பட்டது.

## செயின்ற் யோன் ஒவ் ஆக் St. Joan of Arc.

சாளிமேன் ஆண்ட பெரிய சக்கராதிபத்தியத்தைப் பற்றி நாங்கள் வாசித்தறிந்தோம். இந்தத்தேசம்இப்பொழுது பிரான்ஸ் என்று அழைக்கப்பட்டது. இத்தேசமானது ஐரோப்பாவில் விசேஷம் பெற்ற தேசங்களுள் ஒன்றாக இருந்தது. பதினைந்தாவது நூற்றாண்டில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றது. அப்பொழுது பிரான்சு தேசத்தில் லூறெயினிலுள்ள டொமிறெமி என்னும் கிராமத்தில் யோன் ஒவ் ஆக் 1410-ம் ஆண்டில் பிறந்தாள். அவளுடைய பிதா ஓர் கமக்காரனாயிருந்தமையால் அவள் சிறு பராயத்தில் தன் தகப்பனுடைய ஆடுமாடுகளை மேய்த்து வந்தாள்.

லூறெயின் மாகாணமானது நீர்வளம் நிலவளங்களால் செழித்த அழகுவாய்ந்த இடமாயிருந்தது. பிரான்சு தேசத்தின் வேறொருபாகத்தில் பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் ஏறக்குறைய நூறு வருடங்களாகக் கொடிய யுத்தம் நடந்து வந்தது. ஆகையால், பிரான்சுதேசத்தில் சமாதானமில்லாதிருந்தது. பதினைந்தாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் யுத்தத்தில் வெற்றி பெற்று பிரான்சின் வடபாகம் முழுவதையும் தமதாணைக்குட்படுத்தி வைத்திருந்தனர். தென்பகுதிக்குப்போகு முன்னர் இவர்கள் ஆர்லியன்ஸ் நகரைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் 1428-ல் அந்த நகரை முற்றிக்கையிட்டனர். பிரான்சியர் தாம் அடைந்த தோல்விகளால், தங்களில் நம்பிக்கை யில்லாதவராயிருந்தனர். அரசனும் அதிகம் இளமையாயிருந்தமையால் சேனையை நடத்தி யுத்தம் புரிவதற்கியலாதவனாயிருந்தான். அப்பொழுது யோன் ஒவ் ஆக் என்னும் இம்மாது அவர்களுக்கு நம்பிக்கையும் திடமும் கூற முன் வந்தாள்.

பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில்நடைபெறும் யுத்தங்களைப் பற்றியும் அதனால் பிரான்சியருக்குண்டான கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் சமாதானமற்ற அவர்கள் வாழ்வைப் பற்றியும் யோன் ஒவ் ஆக் கேட்டிருந்தமையால் அவள் தன் தேயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினாள். அவள் ஒருநாள் ஒரு மலைச்சாரல் ஓரத்தில் தனது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது பிரான்சு தேசத்தை எவ்விதம்காப்பாற்றலாமோ எனபதைக் கடவுள் அவளுக்கு அறிவித்தார். கடவுளுடைய அனுக்கிரகம் பெற்ற அவளுக்கு "ஆர்லியன்ஸ் நகரவாசிகளுக்குத் துணையாய்ப் போய் அவர்களை வெல்லும்படி செய்" என்ற ஒலி அடிக்கடி கேட்டது.

அவள் தான்கேட்ட சத்தத்தைப் பற்றித் தன் சிநேகிதருக்குச் சொன்னபோது அவர்கள் அவளுக்குப் பித்தம் பிடித்துவிட்டதென்று கேலிபண்ணினார்கள். அவள் தன் பிதாவிடம் பிரான்ஸிளவரசனுக்குத் துணை செய்யப் போகிறதற்கு உத்தரவு கேட்டபோது, அவன் ஒரு எளிய பெண்பிள்ளையால் பிரான்சு



தேசத்துக்கு என்ன துணை செய்யக்கூடுமென்று சொல்லிமறுத்துவிட்டான், பின்பு தன்னுடையசிற்றன்னையைத் துணைக் கொண்டு ஓர் பிரபுவின் வீட்டுக்குச் சென்றாள். அப்பிரபு அவளை இளவரசனிடமனுப்பச் சம்மதித்தான். பின்பு அவளுக்கு ஆண்வேடம் தரிப்பித்து ஒரு குதிரையின் மேலேற்றி ஆறு போர்வீரர்களுடன் இளவரசனிடம் அவளை அப்பிரபு அனுப்பிவிட்டான். அப்பொழுது அவளுக்கு வயது பதினேழு. அவள் அரச சபைக்குச் சென்றபோது முன்னூறு வீரர்களுடன் இளவரசன் விருந்தருந்தும் மண்டபத்தில் இருந்தான். அவனும் அந்த வீரர்களைப்போலவே உடை அணிந்திருந்தான். அவள் இளவரசனை ஒருபோதும் காணவில்லை. ஆயின், அவள் நேரே இளவரசனிடம் சென்று "யான் பிரான்சை அதன் சத்துராதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகக் கடவுளால் அனுப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னாள்.

அவளுடைய உறுதி மொழியையும் விடாப்பிடியான மன்றாட்டத்தையும் பார்த்த இளவரசன் ஒருசேனையை ஆங்கிலேயர்க்கெதிராக வழிநடத்த விடுவதாக வாக்களித்தான். அவள் வெண் ஆடைதரித்து வெண்பரியிலேறி வெண் பட்டுக் கொடியை பிடித்துக்கொண்டு பிரான்சிய சேனையை வழிநடத்திச் சென்றாள். பிரான்சிய போர்வீரரும் மிகுந்த உற்சாகத்துடன் அவளைப் பின்பற்றிச் சென்றனர். அவள் ஆர்லியன்ஸ் நகரை அடைந்ததும் "கன்னிகை வருகின்றாள்! கன்னிகை எங்களை இரட்சிக்க வருகின்றாள்!" என்று நகரவாசிகள் ஆரவாரப்பட்டனர். இச்சேனையோடு நகருள் அடைபட்டிருந்தோர்க்கு உணவும் அனுப்பப்பட்டது. இக்கன்னிகை முன்னின்று யுத்தம்புரிந்ததினால் பிரான்சியருக்குத் துணிவுண்டாயதோடு ஆங்கிலேயருக்குப் பயமும் நடுக்கமும் உண்டாயிற்று. பிரான்சிய சேனையும் உணவுப்பொருட்களும் நகரத்துக்குப் போயின. ஆர்லியன்ஸ் நகர் காப்பாற்றப்பட்டது.

யோன் ஒவ் ஆக் அதன்பின் ஆர்லியன்ஸின் கன்னிகை என்று அழைக்கப்பட்டாள். பின்பு அவள் இளவரசனைச் சந்தித்தபொழுது, அவள் தன்னோடு றீம்ஸ் நகரத்திலுள்ள ஆசனக்கோவிலுக்குச் சென்று அங்கே முடிசூட்டப்பட வேண்டுமென்று

விரும்பினாள். இவர்கள் றீம்ஸ் நகரை அடைவதற்கு முன் ஆங்கிலேயர்களோடு எத்தனையோ யுத்தங்கள் புரியவேண்டியவர்களாயிருந்தார்கள். அவ்யுத்தங்களில் சத்துராதிகள் தோற்கடிக்கப்பட்டனர். பின்பு யோன் ஒவ் ஆக் தன் வெண்கொடியை உயரப் பிடித்துக் கொண்டுகோவிலின் மூலமண்டபத்தில் நிற்க இளவரசன் முடிசூட்டப் பட்டான்.

அதன் பின்னரவள் தன்னுடைய வீட்டுக்குச் செல்ல விடை கொடுக்க வேண்டுமென்று இரந்து கேட்டுக்கொண்டாள். ஆயின் அரசன் அதற்கு இசையவில்லை. ஏனெனில் பிரசைகளெல்லாம் அவளில் பூரண நம்பிக்கை உடையவர்களாய், அவளைப் பின் தொடர்ந்து செல்ல விருப்பமுடையவர்களா யிருந்தார்கள்.

இஃது இவ்வாறிருக்க, இக்கன்னிகையின் பிற்காலசரித்திரம் மிகவும் பரிதாபமானது. ஒருநாள் இக்கன்னிகையை ஆங்கிலேயர் சார்பாக நின்ற பிரான்சிய போர்வீரர் சிறைப்படுத்தி ஆங்கிலேயருக்கு காலாயிரம் பவுணுக்கு விற்று விட்டனர். ஆங்கிலேயர் அவளோர் மாந்திரீக ஸ்திரியென்று குற்றம் பாரித்து நீதாசனத்தின்முன்னிறுத்தி விளங்கினர். பின்பு றூவென் நகரிலுள்ள சந்தை கூடுமிடத்துக்கு நடத்திச் செல்லப்பட்டு அங்கே எரித்துக் கொல்லப்பட்டனள். எல்லா மெரிந்து முடிந்தபின் எஞ்சியிருந்த புகைநிறைந்த சாம்பர்க் குவியலிலிருந்து ஓர் அழகான வெண்புறா வெளியேறி ஆகாயத்தை நோக்கிப் பறந்ததென்று யோன் ஒவ் ஆக்கின் மேலன்பு மிகுந்தோர் சொல்லுகின்றனர்.

இக்கன்னிகையின் மரணத்தின்பின் ஆங்கிலேயர் சொற்பம் சொற்பமாகத் தமதாட்சிக்குட்பட்டிருந்த பாகங்களை இழந்தனர். ஈற்றில் 1453-ல் கலேயிஸ் என்னும் துறைமுகம் தவிர ஏனைய விடங்கள் யாவற்றையும் இழந்தனர்.

### ஐரோப்பா தேசத்தில் கல்வி விருத்தி
### The Revival of Learning in Europe.

பதினைந்தாம் நூற்றாண்டிலும் அதன் முன்னரும் ஐரோப்பாவில் படித்தவர்கள் மிகவும் குறைவாக இருந்தனர். அந்தக் காலத்தில் கத்தோலிக்க குருலானவர்களே கற்றவர்களாயிருந்தார்கள்; அவர்கள் லத்தீன் பாஷையைக் கற்றவர்களாயும் சமய



சம்பந்தமான விஷயங்களை அறிந்தவர்களாயு மிருந்தார்கள். கொன்ஸ்தாந்தி நோப்பிளிலும் ஐரோப்பாவின் தென்கிழக்குப் பாகங்களிலும் கிரேக்கருடைய கலைஞானங்களைக் கற்றவர்கள் இருந்தனர். முகம்மதியரும் அரேபியரும் வைத்திய சாஸ்திரம்



வாஸ்கோடிகாமா.

ரசாயனம் முதலியவற்றைக்கற்றுத்தேறியிருந்தார்கள். ஐரோப்பா தேசத்துக்கு அறிவு விருத்தி இரண்டு காரணங்களால் வந்தது. முதலாவதாக 1453-ல் கொன்ஸ்தாந்தி நோப்பிளைத் துருக்கியர் கைப்பற்றியவுடன் கிரேக்க கலைஞானிகள் ஐரோப்பாவுக்குப் போயினர். இரண்டாவதாக ஐரோப்பாவிலிருந்துசென்ற சிலுவை வீரர் அரேபியர் எகிப்தியர் முதலியவர்களிடமிருந்து பலசாஸ்திரங்களையும் கற்றனர். இவ்வாறாகக் கல்வி ஐரோப்பா முழுவதும் பரம்பியது. அநேகர் லத்தீன்பாஷை, கிரேக்க பாஷை முதலியனவற்றைக் கற்கத் தொடங்கினர்.

### புதிய தேசங்களை அறிதல் The Age of Discovery.

ஐரோப்பியர், கல்வி விருத்தியின் காரணமாக அரேபியர் எகிப்தியரைப் பற்றியும்அவர்களுடைய சீர்திருத்தத்தைப்பற்றியும் இந்தியா சீனா முதலிய தேசங்களைப்பற்றியும் அறிந்தனர். சிங்கிஸ் கான் ஐரோப்பாவில் அடைந்த வெற்றி காரணமாகவும் சீனா இந்தியாவைப் பற்றி அவர்கள் அறிந்தனர். சிலுவை வீரர்கள் அரேபியரிடமிருந்து இந்தியா முதலியகீழைத்தேசங்களிலிருந்து வரும் பொருட்களை வாங்கிக் கொண்டு வந்தனர். கீழைத் தேசங்களுக்கும் மேலைத் தேசங்களுக்கு மிடையிலுள்ள வியாபாரஞ்

முழுவதும் அமேரியரால் செய்யப்பட்டது. இற்றலி தேசத்திலுள்ள வெனிஸ் நகரமும் ஜெனோவா நகரமும் வியாபாரத்தில் மிகவும் மேம்பாடடைந்தன.

### கிறிஸ்தோபர் கோலம்பஸ் Christopher Columbus.

பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன் இற்றலி தேசத்தில் ஜெனோவா என்னும் நகரத்தில் பெருத்த வியாபாரம் நடந்து வந்தது. அந்நகரத்துக் கப்பல்கள் மத்தியதரைக் கடலிலே ஓடின. அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற மாலுமிகளும் வியாபாரிகளும் அந்நகரவாசிகளே. கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்னும் பெரிய மாலுமி ஜெனோவா நகரத்திலே 1447-ல் பிறந்தான்.

சிறு பிராயந் தொடக்கம் கப்பற் பிரயாணஞ் செய்வதிலும், புதியதேசங்களைப் பார்ப்பதிலும் விருப்பமுடையவனாயிருந்தான். பலமுறை யாத்திரை செய்து கப்பற்றிருடர்களிடத்தி லகப்பட்டுப் பலவித வருத்தங்களை அனுபவித்தான். தான் கற்ற கல்வி மிகச் சிறியதாயிருந்தும், அதைத் தகுதியாக உபயோகப்படுத்திமேலும் மேலும் விருத்தி செய்து வந்ததுமல்லாமல், தான் வறுமையினால் மிகுதியும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தும் தன்னோடிருப்பவர்கள் அப்போதைக் கப்போது தங்களுக்கு வேண்டியவைகளைத் தேடிக் கொள்வதே தவிர வேறு பெரிய காரியங்களைப்பற்றி யோசிக்கும் திறமையற்றவர்களாயிருந்தும் அவன் கொண்ட சில உயர்ந்த கருத்துக்கள் அவன் மனத்தை விட்டு நீங்காமலே யிருந்தன.

போர்த்துக்கல்தேசத்தரசனான ஹென்றி என்பவன் செய்யுங் காரியங்களைக் குறித்தும் அதிசயிக்கத்தக்க அனேக விஷயங்கள் கண்டு பிடிக்கப் படுவதைப் பற்றியும் அக்காலத்தில் சனங்கள் வியந்து பேசிக் கொள்வார்கள்.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொள்வதன்பொருட்டு லிஸ்பனுக்குச்சென்றகொலம்பஸ் அவ்விடத்திலேயே நிலைத்துவிட்டான். சென்றசிலநாட்களுக்குள் அவ்விடத்திலுள்ள சௌரியவானான ஒரு வயசு சென்ற கப்பற் றாரனுடைய குமாரத்தியை விவாகஞ் செய்து கொண்டான். இக்



கலியாணத்தினால் இவன் தனதெண்ணங்களை நிறைவேற்றுவதற் குரிய உதவிகளைச் செய்யக்கூடிய சிலர்நட்பு இவனுக்குக் கிடைத்தது. பூமி தட்டைவடிவமாயில்லாமல்உருண்டைவடிவமாயிருக்க வேண்டுமென்றும் மேற்கு மகா சமுத்திரத்திற் கப்புறம் இதுவரையும் காணப்படாத தேசம் இருக்க வேண்டுமென்றும் இந்து தேசத்திற்குப் போவதற்கு மேற்காக ஒரு மார்க்கமிருக்க வேண்டுமென்றும் உறுதியாய் நம்பினதுமல்லாமல், அது தன்னால் கண்டு பிடிக்கப்பட வேண்டுமென்பதும் அவன்நெஞ்சில் நன்றாய் ஊன்றி யிருந்தமையால், அவ்விஷயத்திலேயே தன் வாழ்நாளை முற்றுஞ் செலுத்த வேண்டுமென்று துணிந்தான். இச்சமயத்தில் கொலம்பஸுக்குச் சில இடையூறுகள் நேர்ந்தன. வியாதியும் மரணமும் அவன் குடும்பத்தைப் பிடித்தன. ஒன்றன்மேலொன்றாகப் பல



கிறிஸ்தோபர் கோலம்பஸ்
மேற்கிந்திய தீவுகளுக்குச் சென்ற கப்பல்

இடுக்கண்கள் அவனை வருத்தின. அவன் மனைவி தேகவியோகமடைந்தாள். அக்காலத்தில் அத்தேசத்தை அழிவு செய்து கொண்டிருந்த போரினால் தன் சொத்துக்களை யெல்லாம் இழந்து தன் சிறு குமாரன் தவிர வேறோர் ஆதரவுமின்றி வீட்டையும் துறந்து வெளிப்படும்படி நேரிட்டதனால், ஒருமடத்தைஅடைந்து தன் சிறு குழந்தையின் பொருட்டே இரந்து உயிர்வாழ்ந்தான். அக்காலத்திலும் புதிய தேசமொன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் எண்ணம் அவனை விட்டு விலகவில்லை.

மேற்குத் திசையில் ஒருபுதிய கண்டமாவது இருக்கவேண்டும் அல்லது அவ்வழியாக இந்தியாவுக்குப் போக, ஒரு சமீப மார்க்கமாவது இருக்க வேண்டுமென்றுதான் எண்ணிக்கொண்டிருந்ததைப் பரிசோதித்தறியும் பொருட்டுக் கப்பல் யாத்திரை செய்வதற்கு ஓர் அவாவைப் போர்த்துக்கல் தேசத்தரசனுக்கு அறிவித்தான். அவ்வரசனோ அதைப் பராமுகஞ் செய்ததுமல்லாமல் கடைசியாக அம்முயற்சி பயனற்றதாகும் என்று மறுத்தும் விட்டான். அதன்மேல் கொலம்பஸ் அவ்விஷயத்தைப் பற்றி ஸ்பெயின் தேசத்து அரசியிடத்தில் விண்ணப்பஞ் செய்யத் தீர்மானித்து, அத்தேசத்து ராஜதானிக்குப் போய்ச் சேர்ந்தான் அவ்விடத்தில் பலவருஷம் அதிககஷ்டத்தோடு வசித்துக்கொண்டு சமயம் வாய்த்தபோதெல்லாம் தன் கருத்தை அரசியாருக்கு வெளிப்படுத்திக் கொண்டு வந்தான். கடைசியாக இஸ்ஸபெல்லா என்னும் ராணியார் மனமிரங்கி, மந்திரிகள் தன்னை எவ்வளவோ அதைரியப் படுத்தியும் அவர்கள் சொல்லைத் தட்டிவிட்டு கொலம்பஸை அனுப்பினாள்.

1492-ம் வருஷம் கொலம்பஸ் ஸ்பெயினின் தென்திசையிலிருந்து புறப்பட்டான். ஆனால் நேர் மேற்குமுகமாகப் போகவில்லை. அவனுக்கு ஸ்பெயினின் தென்பாகத்திலிருந்துஅடிக்கும் காற்று வடக்கிலிருந்து நேர்தெற்கு முகமாய் அடிப்பது தெரியும். ஆதலால், அவன் முதலில் தெற்கு முகமாகப் போனான். பின்பு காற்று சற்று வடக்கிலிருந்தும் கீழ்த்திசையிலிருந்தும் அடித்தலினால் அவன் சற்று தெற்கே சாய்ந்தும் மேற்கு நோக்கியே சென்றான். இக்காற்று நிலைபரமாய் பின்புறத்திலிருந்து அடித்தபடியால் அவனுடைய மாலுமிகள் தாங்கள் திரும்பி வீடுசேரமுடியாதென்று பயந்து, அவனை அடிக்கடி திரும்பும்படி வற்புறுத்தினார்கள். ஒரே ஒருநாள் தான் காற்று எதிர்முகமாய் அடித்தது. ஆதலால், அவர்கள் இரண்டு மாதத்திற்குள் அச்சமுத்திரத்தைக் கடந்து விட்டார்கள். அச்சமுத்திரத்தைக் கடந்ததும், பஹாமா தீவுகள் என்று சொல்லப்படும் ஒரு தீவுக் கூட்டத்திற்கு வந்தார்கள்.



பின்பு அத்தீவுகளுக்குத் தெற்கேயிருந்த கியுபா என்னும் பெரிய தீவையும், அதற்கப்பாலிருந்த கயிற்றி என்னும் வேறொரு தீவையும் கண்டுபிடித்து விட்டுத் தங்கள் தேசத்துக்குத் திரும்பினார்கள்; ஆனால், அவர்கள் வந்த வழியாகத் திரும்பவில்லை. விரோதமாய்க் காற்று அடிக்குமென்று கொலம்பஸுக்குத் தெரியுமாகையால், அவன் ஒரு சாமார்த்தியமான காரியம் செய்தான், முதலில் வெகுதூரம் வடக்கே போய் மேல் காற்று அடிக்கும் வெளிக்கு வந்ததும், ஸ்பெயினை நோக்கித் திரும்பினான். மேல் காற்று அவ்விடத்தில் அடிக்குமென்று அவனுக்கு ஒருவரும் சொல்லவில்லை. அவன் தானாகவே அப்படியிருக்க வேண்டுமென்று யூகித்தான்.



ஸ்பெயினுக்குத் திரும்பி வந்ததும், அரசி அவனுக்கு வேண்டிய மரியாதை செய்து, முந்திய கப்பல்களை விடப் பெரிய கப்பல்களைக் கொடுத்து இன்னொருமுறைதெற்கே போவதற்குஅனுமதி கொடுத்தாள். இம்முறை கயிற்றிக்குத் தென்கிழக்கிலுள்ள தீவுகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு, இன்னும் தெற்கே சென்றான். காற்றும் முன்போல் அனுகூலமாய் அடிக்காததினால் உத்தேசித்த தீவுகளைக் கண்டுபிடித்ததோடு நிற்காமல் போர்ட்டோ ரிகோ, சமெயிக்கா தீவுகளையும் கடந்து சென்றான். திரும்பி வரும்பொழுது காற்றுக்கு எதிராகப் போனால் எத்தனை நாள் பிடிக்குமென்பதைத் தெரிந்து கொள்ளும்பொருட்டு தெற்கேயேகப்பல்களை ஓட்டச்சொன்னான். காலமும் அதிகம்பிடித்தது ஆனால் அவன் நேர் எதிர்முகமாகப் போகவில்லை.

அவன் மூன்றாம்முறை போனபொழுது இன்னும் தெற்கே சென்று திறினீதாத் என்னும் தீவையும் தென் அமெரிக்காவின் ஒருபாகத்தையும் கண்டுபிடித்தான். கடைசித்தடவையில்மத்திய அமெரிக்காவைக் கண்டு பிடித்துவிட்டு அங்கே ஏதாவது ஒரு ஜல சந்தி யிருக்கிறதோவென்று கடலோரமாய் வெகுகாலம் அலைந்தான். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை.

ஆனால் தான் கண்டு பிடித்தது அமெரிக்காக் கண்டமென்று அவனுக்குத் தெரியாது. உலகத்தைச் சுற்றிக்கொண்டு ஆசியாவின் கீழ்ப்பாகத்திற்குப் போய் அங்குள்ளவை இந்தியத் தீவுகள் அல்லவென்று தெரிய வந்ததும் அத்தீவுகளையும் கீழ்இந்தியத் தீவுகளையும் பகுத்தறியும் பொருட்டு அவைகளுக்கு மேல்இந்தியத் தீவுகளென்று பெயரிடப்பட்டது.

இவ்விதமாகக் கொலம்பஸ் நான்குமுறை பிரயாணஞ் செய்தும் புதிய தேசங்களைக் கண்டுபிடித்தும் ஈற்றில் கையிற் பணமில்லாதவனாய் 1506-ம் ஆண்டில இறந்தான்.

## போர்த்துக்கலின் முன்னேற்றம் The Rise of Portugal.

போர்த்துக்கேயர் இலங்கைச் சரித்திரத்துடன் சம்பந்தப் பட்டிருப்பதால் அவர்களைப்பற்றி நாம் அறிவது மிகவும்அவசியம். போர்த்துக்கல் முதலில் ஸ்பெயின் தேசத்தின் ஒரு பாகமாகவேயிருந்தது. உரோம ராச்சியத்துக்குட்பட்ட பின்பும் ஸ்பானியா தேசத்தின் ஒரு மாகாணமாயிருந்தது. பிரித்தானியரைப்போன்ற ஓர் சாதிமக்கள் இத்தேசத்தில் இருந்தனர். பின்பு உரோமராச்சியத்தை அழித்த ஜேர்மானிய வம்மிசத்தைச் சேர்ந்த முரட்டுச் சாதியார்களாகிய சூவி ஆவர் வாண்டல் காத் முதலியவர்கள் அங்கே குடியேறினர். எட்டாவது நூற்றாண்டில் முகம்மதிய அரேபியர்கள் இத்தேசத்துக்குட் புகுந்தார்கள். இம்மூன்று வகுப்பினரும் சேர்ந்து பிற்காலத்தில போர்த்துக்கேயர் என்றழைக்கப்படும்சாதியாராயினர். மூர்கள் என்றழைக்கப்படும் முகம்மதிய அரேபியர்களுக்கும கிறிஸ்தவர்களுக்கும் இடையில் அடிக்கடி பகையும் போராட்டமும் ஏற்பட்டன.



1095-ல் பிரான்சு தேசத்திலுள்ள போர்கண்டி மாகாணத்தில் கென்றி என்னும் ஓர் பிரபு இருந்தான். அவன் முகம்மதியரை ஸ்பானியா தேசத்திலிருந்து தலைத்துவிட வேண்டும் என்னும் எண்ணத்துடன் ஸ்பானியா தேசத்து அரசனுக்கு உதவிபுரிய வந்தான். ஆயின் முகம்மதியரைப் பதின்மூன்றாவது நூற்றாண்டுவரையில் முற்றாகத்துரத்திவிட முடியவில்லை. கென்றியென்பவன் அரசனுடைய மகளை விவாகஞ் செய்து போர்த்துக்கல் என்னும் மாகாணத்தைச் சீதனமாகப் பெற்றான். பின்பு அவனுடைய வம்மிசத்தார் போர்த்துக்கலைத் தனிராச்சியமாக்கிக் கொண்டனர்.

அப்பொழுது போர்த்துக்கல ஒரு வறிய தேசமாயிருந்தது. போர்த்துக்கேயர் முகம்மதியருடன் நூற்றுக்கணக்கான வருஷங்களாக நடத்திய போராட்டத்தால் தைரியம், சாந்தம் உழைப்பு உற்சாகம் வீரசாகசம் பொருந்திய மக்களாக வந்தனர். பதினைந்தாவது நூற்றாண்டில் புதியநாடுகளைக் கண்டுபிடிப்பதிலும கப்பல் வியாபாரத்தை விருத்தி செய்வதிலும் இத்தேசத்தவர்கள் மிக்க ஊக்கமுடையவர்களாயிருந்தனர். கப்பலோட்டி என்றபெயருள்ள கென்றி கப்பற்படையின் ஏற்பாட்டைச் செய்ததுமன்றி மாலுமி சாஸ்திரப் பயிற்சிக்காக ஒரு வித்தியாசாலையும் அமைத்தான். பின்பு, போர்த்துக்கேயர் ஆபிரிக்காவில் காங்கோ அங்கோலா தேசங்களைக் கைக்கொண்டனர். 1487-ல் பார்தலோமியூ டயஸ் ஆபிர்க்காவைச் சுற்றி இந்தியாவுக்குப் போக வழிதேடினான். 1498-ல் வாஸ்கோடிகாமா அவ்வழியாக இந்தியாவைச்சேர்ந்தான் இந்தியாவுக்குப் போக வழிஅறிந்ததே போர்த்துக்கேயர் வியாபார முயற்சியை மிகவும் உற்சாகமாக நடத்தினர். இலங்கை முதலிய தேசங்களைத் தமதாக்கினர். மிகவும் வறிய தேசமாகிய போர்த்துக்கல் செல்வத்தையும் செழிப்பையும் அடைந்தது.

## ஒல்லாந்து Holland.

இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தபின்பு ஒல்லாந்தர் வந்தனர். ஆகையால் ஒல்லாந்தருடைய பூர்வ சரித்திரத்தைப் பற்றியும் அறிவது அவசியம். ஒல்லாந்து அல்லது நெதர்லண்டு என்று அழைக்கப்படும் இத்தேசம் சமுத்திர மட்டத்திற்குத்

தாழ்ந்த நிலைமையிலுள்ள நாடு. இத்தேயம் பாதிக்குமேல் சில காலம் சமுத்திரத்தில் மூழ்கிச் சிலகாலம் மணற்குவியலாய்க் காணப்படும். போர்த்துக்கேயர் கீழைத் தேசங்களில் செய்த வியாபார முயற்சிகளை அறிந்து இத்தேசத்தார்கள் ஒரு காலத்தில் உலகிலோங்கிய கடல் வியாபாரத்தை முற்றிலும் கையாண்டு வந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய விடாமுயற்சி, புத்தி, யுத்தி, சாதுரியமே. ஆதியிலித்தேசத்தவர்களை உரோமர்கள் படாவியர்கள் என்றும் பிரினியர்களென்றும் சொல்வதுவழக்கம். அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தவர்கள் என்றும் அன்னியர்களை வரவேற்கும் குணமுடையவாக ளென்றும் ஆடுமாடுகளை மேய்த்து அதனாற் பயனடைந்தவர்களென்றும் சொல்லப்படுகின்றது.

கி. பி. நான்காவது நூற்றாண்டில் இத்தேயத்தைப்பிராங்குகள் தங்களுடைய தேசத்துடன் சேர்த்துக் கொண்டார்கள். எட்டாவது நூற்றாண்டில் சார்ளிமேன இத்தேயத்தையும் தன் இராச்சியத்துக்குள்ளாக்கிக் கொண்டான். அக்காலத்தின் வழக்கப்படி இத்தேசம் பிரபுக்களுக்குளடங்கிடப்பட்டிருந்தது. பின்பு 1384-ல் ஒரு பர்கண்டிப் பிரபுவால ஆளப்பட்டது. பின்பு பதினைந்தாவது நூற்றாண்டில் ஐந்தாவது சாள்ஸ் இத்தேயத்தை ஸ்பெயினுடன் சேர்த்துக் கொண்டான்.

---



# XIII. சிங்கள அரசர்களின் முன்னேற்றம்

## The Sinhalese Revival

### மகாபராக்கிரமபாகு [கி. பி. 1153—1186]

### PARAKRAMA BAHU THE GREAT.

1153-ல் மகா பராக்கிரமபாகு அரசனானான். சிங்கள சரித்திரத்தில் இவ்வரசசிரோன்மணியுடைய பெயரே அதிப் பிரபலியமுடையது. இவன் கல்வியைக் கிரமமாகக் கற்று, நானாகாரிய அறிவு விருத்தியின் பொருட்டுப் பரதேச சஞ்சாரஞ் செய்து, அவ்வத் தேசத்தாருடைய ஒழுக்க வழக்கங்களைக் கிரகித்துணர்ந்தான். இவன் தனது அரசியல் விஷயத்தைக் கவனிக்கத்தொடங்கி தூர்ந்து கிடந்த அநேக குளங்களையும் பாய்கால் வடிகால்களையும் திருத்திக் காடு மேடுகளை யெடுத்து விளை நிலங்களாக்கி நீர்வளம் நிலவளங்களைப் பெருக்கினான். ஆபத்து வருங் காலங்களில் புகலிடங்களாக உபயோகமாகும் பொருட்டுப் பற்பல விடங்களில் கோட்டைகளைக் கட்டுவித்தான். பொல்லநாருவை நகருக்கு அரணாகச் சுற்றியோர் கொத்தளத்தையும் அமைப்பித்தான. சுருக்கிச் சொல்லின், இவன் தன் நாட்டிற்கு வளத்தளவிலும் வலியளவிலும் விட்டகுறை ஒன்றேனு மில்லை யென்க.

இவனிப்படித் தன் நாடும் குடிகளும் சீரினாலும் சிறப்பினாலும் செழித்தோங்க அரசியற்றி வருநாளில், இலங்கையினின்றும் சிலகுலீன ஸ்திரிகளை ஓர் தளகர்த்தனோடும் ஏற்றிப் பரத கண்டம் நோக்கிச் சென்ற சில மரக்கலங்கள காம்போஜநாட்டின் ஓரமாகப் போயின. அவைகளை அத்தேசத்தரசன் கண்டு அவற்றிற்குத் தலைவனாகச் சென்ற தளகர்த்தனையும் மதியாது தடுத்து அவற்றிலிருந்த பெண்களைக் கவர்ந்தான். அதுகாரணமாக அவ்வரசனோடு போர்தொடுக்க வெண்ணிப் பராக்கிரமபாகு 590 மரக்கலங்களோடு ஓர் பெருஞ் சேனையையும் அச்சேனைக் கதிபதியாக அதிகாரமெனப் பெயரிய ஓர் தமிழனையு மனுப்பினான். அப்படிப் போன சேனாபதிதன்சேனையோடும் காம்போஜநாட்டையடைந்து

அங்கே யுத்தகளத்தில் அரசனைச் சாய்த்து அந்நாட்டிற்கு ஓர் பிரதிநிதியை நியோகித்து அதனைத் தன் எசமானாகிய பராக்கிரம பாகுவுக்குத் திறைநாடாக்கி மீண்டான்.

அதன்பின்னர் பராக்கிரமபாகு சோழபாண்டியர் செருக்கையடக்கவெண்ணி அங்குமோர் சேனையையும் சேனாதிபதியையும் அனுப்பினான். இதனைச் சோழ பாண்டியருணர்ந்து இருவரும் ஐக்கியப்பட்டுப் பராக்கிரமபாகு சேனையை யெதிர்த்தார். எதிர்த்தும் நிர்வகிக்க வாற்றாமல் அவர்கள் பின்வாங்க, அச்சேனாபதி வெற்றி சிறந்தவனாய் இராமேசசரத்தையும் அதன் அயல்நாடுகளையும் சிங்கள ராச்சியத்துக்குட்பட்டவைகளாக்கினான். அப்பால் பாண்டி நாட்டுக்குப் பாண்டியனை நீக்கி அவன் மகனைத் திறை அரசனாக நியோகித்துவிட்டுத் திரும்பினான்.

இவ்வண்ணம் பராக்கிரமபாகு பிறதேசத்தரசரை யடக்கி அவரிடத்திற் திறை வாங்கி வேற்றரசர்பகை சிறிதுமின்றி அரசு செய்து வந்தான். தன் நாட்டை யின்னுஞ் சிறப்பிக்க வேண்டுமென்றெண்ணி பழந்தரு மரச்சோலைகளை யுண்டாக்கல், கால்வாய் வெட்டல், குளங்களில் எந்நாளும் நீர் குறையாதிருக்கும்படி ஆறுகளைத் திருப்பல் முதலிய நன்முயற்சிகளில் கைவிட்டுத் தன் காலத்தைக் கழித்தான்.

இவன் இவ்வாறு ஊருக்கு அநேக நன்மைகளைச் செய்து உலோக ரட்சகனென்று சனங்கள் வாழ்த்தும்படி 33 வருடம் செங்கோல் செலுத்தி 1186-ல் இறந்தான்.

## 2-ம் விஜயபாகுவும் 6-ம் மகிந்தனும் (கி. பி. 1186—1187)

Vijaya Bahu II and Mahinda. vi.

அவன் சகோதரி புத்திரனாகிய 2-ம் விஜயபாகு அரசனாகி ஒருவருடமரசு செய்து வருகையில் அவனை யோர் காமக்கிழத்தி பொருட்டால் 6-ம் மகிந்தன் என்றொருவன் கொன்றுதானே அரசனாகினான். அவனும் ஐந்துமாதம் ஆண்டு கொலையுண்டிறந்தான்.



## கீர்த்தி நிசங்க மல்லன் [கி. பி. 1187—1196]

Kirthi Nissanka Malla.

அடுத்த 1187-ல் கலிங்கநாட்டு அரசவமிசத்துக் கீர்த்தி நிசங்கமல்லன் அரசனானான். அவனும்பராக்கிரமவாகுவைப்போல் ஊர்ச்சேமத்துக்கு வேண்டுவன வெல்லாம் செய்து குடிகள் மனங் கோணாமல் நீதிவழி அரசு செய்தான். அவன் சிம்மாசனத்தைத் தாங்கி நின்ற கற்சிங்கம் இப்பொழுது கொழும்பு புராதனசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. இவன் 9 வருட மரசியற்றி 1196-ல் இறந்தான். அவன் மகன் வீரவாகு அரசனாகி ஒருநாள் அரசு செய்யாமுன் பரிசாரகனாற் கொல்லப்பட்டான்.

## லீலாவதி [1197-1212] Leelavathi.

பின்பு 1197-ல் பராக்கிரமபாகுவின் கைம்பெண்ணாகிய லீலாவதி அரசியானாள். இவள் மும்முறை அரசியாகி அம்மும்முறையிலும் சிறிது சிறிதுகாலம் அரசு செய்து கலகக்காரரால் அரசிழந்தாள். இறங்கோட்டுச் சமாதியெனப் பொலந்நறுவைக் கணித்தாகக் கிடக்கும் மகோன்னதபௌத்தாலயத்தின் வில்மாடத்துக்குத் தங்கப் பூச்சிடுவித்தவள் இவளே. அன்றியும் இவள் தன் சமஸ்தானத்து வித்துவான்களால் சசதாவம் மூவ தேவதாவம் என்னுமிரு சிறந்த காவியங்களை யியற்றுவித்தாள்.

## XIV தமிழர்படையும் சிங்கள அரசர்களும்
## The Sinhalese Kings and the Tamils.

பதின்மூன்றும் நூற்றாண்டின்மேல் தமிழர்படைவரவுமிகுதியாக இலங்கை பட்டதுயர் சிறிதல்ல. பாண்டிய நாட்டினின்றும் தமிழர் திரள் திரளாய் வந்து எண்ணிறந்த சமாதிகளை யிடித்து விட்டார்கள். விகாரைகளைப் படை வீடுகளாக்கினார்கள் சிங்களருடைய மதநூல்களை யெரித்தார்கள்; பிரபுக்களைச் சிறைப்படுத்தினார்கள்; திரவியங்களைக் கொள்ளையாடினார்கள். திரவியங்களிருக்கு மிடத்தைக் காட்டாதவர்களுடைய கைகால்களைச் சேதித்தார்கள்.

### மாகன் [கி. பி.1215-1363] 3-ம்விஜயபாகு (கி.பி.1220-1234]
### Magha and Vijaya Bahu III.

இப்படி யெல்லாஞ் செய்த ஈற்றில் 1214-ல் தமிழரிற் பிரதானியாகிய மாகனென்பவன் இலங்காதிபதியாகி 21 வருடம் அரசு புரிந்து வந்தனன். ஸ்ரீ சங்காபன் மரபிற் பிறந்த 3-ம் விஜயபாகு 1220-ல் அம்மாகனை இலங்கையின் தென்பாலினின்றும் தொலைத்து அரசனாகினான். ஆனால் மாகனும் 1236-ம் ஆண்டு வரையும் ஓர் பாகத்தை ஆண்டு வந்தான். தமிழர்களெல்லோரும் தற்காலத்திலுள்ளவாறே வடபாகத்திற் செறிந்து குடிகொண்டார். அதனால் விஜயபாகு தமிழர்க்கஞ்சி தான் நாமமாத்திரை யிலாயினும் அவர்க்குத் திறைபரசனாகி யிருத்தல் புத்தியென்றடங்கி ஏறக்குறைய 500 வருஷ காலமாகத் தன் முன்னோரிருந் தரசாண்டவிடமாகிய பொலநறுவையை விட்டு சத்தகோறளையிலுள்ள தம்பதேனியா நகரியைத் தன் துரைத்தன ஸ்தானமாக்கினான். இவன் 24 வருடம் அரசியற்றினான்.

### 2-ம் பராக்கிரமபாகு [கி. பி. 1234-1267]
### Parakrama Bahu II.

1234-ல் 3-ம் விஜயபாகுவின் மகன் பண்டித [2-ம்] பராக்கிரமபாகு அரசனாகி வழிச்சாலைகளைத் திருத்தி, பாலங்களைக் கட்டி ஸ்ரீ வர்த்தன புரியை அமைப்பித்தான். அவன் வித்தியா



விநோதனாயிருந்தது பற்றி ஊர்கள்தோறும் வித்தியாசாலைகளைத் தாபித்துக் கல்வியை அபிவிருத்தி செய்வதில் அதி ஊக்கமுடையவனாயிருந்தான். இப்படி அவன் அரசாட்சி செய்து வருகையில் தமிழர் படையெடுத்து வந்தனர். அவன் அவர்களை யெதிர்த்து ஆனைக்கூட்டத்திற் சிங்கம் பாய்ந்தாலொப்ப அநேகரைச் சங்கரித்துத் தமிழர் படையை அடியோடு களைந்தான் ஆதிபுத்தருடைய சரித்திரத்தை மயூரபாதன் என்னும் பண்டிதனையியற்றுவித்தவன் இவனே. இவனிவ்வண்ணம் 35 வருடம் அரசியற்றினான்.

### 4-ம் விஜயபாகுவும் 1-ம் புவனேகபாகுவும்[கி.பி. 1267-1283]
### Vijaya Bahu IV and Bhuvaneha Bahu

அப்பால் நான்காம் விஜயபாகு அரசனாகிப் பொல்லநருவையிலிருந்து 2 வருடமரசியற்றிய பின் ஓர் பெண் பொருட்டுக் கொலையுண்டான். அப்பால் அவன் தம்பி 1-ம் புவனேகபாகு என்பவன் அரசனாகி இயப்பாகு நகரைத்தனக்கு ராஜதானியாக்கி அங்கிருந்து அரசு செய்யத் தொடங்க உடனே பாண்டியர் வந்து அரண்வளைத்துச் சூறையாடி "தாலதம்" என்னும்புத்தாசனத்தையும் உடன்கொண்டு போயினர். அப்படியிருந்தும் அவன் 11வருடம் அரசியற்றினான்.

### 3-ம் பராக்கிரமபாகு [கி. பி. 1302-1310]
### Parakrama Bahu III.

அப்பால் 1302 ல் நான்காம் விஜயபாகு புத்திரன் மூன்றும் பராக்கிரமபாகு அரசனாகி முன் பாண்டியர் அபகரித்துப் போன திவ்விய தந்தத்தை அவரிடத்திற் போய்க் குறையிரந்து மீட்டுக் கொணர்ந்தான். இனியிங்கிருக்கலாகாதென இயப்பாகு நகரை விடுத்துக் குருநாகலை நகருக்கேகி அங்கிருந் தரசியற்றினான். இவன் 8 வருடமரசு செய்தான்.

### 2-ம் புவனேகபாகு முதல் 5-ம் பராக்கிரமபாகு வரையும் [கி. பி. 1310-1357]
### Bhuvaneha Bahu II—Parakrama Bahu V.

அப்பால் இரண்டாம் புவனேகவாகு முதல் 5-ம் விஜயபாகு ஈறாக நால்வர் அரசராகி இந்நகரிலிருந்தே முறையே அரசு செய்தார்கள்.

அவர்க்குப்பின் அதாவது கி. பி. 1344-ல் அரசனான நான்காம் புவனேகபாகு அந்நகரை விட்டுக் கம்பளைக்குப் போய் அங்கிருந்து 12வருடமாண்டான். இவ்வண்ண மிவ்வரசர்கள் "பூனை குட்டிபோட்டு எழுவீடு தூக்கிச்செல்வதுபோல" அடிக்கடி இராஜதானியை மாற்றிக் கொண்டது தமிழருடைய துன்பத்துக் கஞ்சி யென்பது வெளிப்படை.

அப்பால் 1344-ல் 5-ம் பராக்கிரமபாகு அரசனாகி 4-ம் புவனேகபாகுவுடன் சிலகாலமும், தனியே சிலகாலமும் அரசியற்றினான்.

## 3-ம் விக்கிரமபாகுவும் 5-ம் புவனேகபாகுவும்

## [கி. பி. 1357-1391]

## Vikrama Bahu III and Bhuvaneha Bahu V.

1357-ல் 3-ம்விக்கிரமபாகு அரசனாகிச் சிறிதுகாலம் கம்பளையிலும் சிறிதுகாலம் கண்டியிலுமிருந்து அரசு புரிவானாயினான். அங்கிருந்தபடியே அவன் மந்திரியாகிய அழகேசுபரனால்கொழும்புக்குச் சமீபத்தில் ஒரு கோட்டையையும் ஜயவர்த்தன புரியென்னும் பெயருள்ள ஒரு நகரையு மமைப்பித்தான்.

அந்நாளில் பாண்டியன் ஏவலின்வழி பெரும்படையோடு வந்த ஆரியச்சக்கிரவர்த்தி கொழும்பு நீர்கொழும்புசலாபமென்னுமிடங்களிற் கோட்டைகளைக் கட்டுவித்து அழகேசுபரனைத்திறை கொடுக்குமாறடக்கி இலங்கையின் வடபாகத்தை தன தாளுகைக் குள்ளாக்கி, யாழ்ப்பாணத்திலிருந்தரசு செய்தான். அப்படியே அழகேசுபரனும் அச்சக்கரவர்த்திக்குச் சிறிதுகாலங் கப்பங்கட்டிப் பின்னர் தமிழரைச் சிறிதுந் தலையெடுக்காவண்ணம் பறக்கடித்து இலங்கை முழுவதையும் விக்கிரமபாகு பெயரால் வெற்றி கொண்டான். கண்டி முன்னோரால் செங்கடக நகரி யெனப்படும். இவ் விக்கிரமபாகு ஏழுவருடம் அரசியற்றிப்போக, 5-ம் புவனேகபாகு அரசனாகி கோட்டைக் காட்டிலிருந்து 20 வருடமாண்டான்.



## 2-ம்வீரவாகுவும் 6-ம் பராக்கிரமபாகுவும் [கி. பி. 1391-1468]

## Vira Bahu II and Parakramo Bahu VI.

அப்பால் 2-ம் வீரவாகு அரசனாகி கோட்டைக் காட்டிலேயிருந்து அரசாண்டுவருகையில் சீனதேயத்தினின்றும் சிலபௌத்தர் ஓர் தளகர்த்தனைத் தலைமையாக்கிக்கொண்டு தம் வழக்கப்படி யாத்திரிகராய்ப் புறப்பட்டு இலங்கையிலுள்ள தாலதமகாலயத்துக்குக் காணிக்கை கொண்டு வரலாயினர். அவர்களை விஜயபாகு ராசன் பதிவிருந்து சதிசெய்யப் பிரயத்தனித்தபோது அவர்கள் அதிப்பிரயாசையோடும் அரசன் கைக்குத் தப்பித் தம கப்பலுக் கோடிப் போயினர். அதனை அவர்கள் தங்கள் மனதிற் கொண்டு சீனதிற் கேகியவுடன் அத்தளகர்த்தன் ஓர் கப்பற் சேனையை அங்கு நின்றும் சேர்த்துக் கொண்டு யுத்தசன்னத்தனாய் மீண்டும் இலங்கையை நாடி வந்து கம்பளையரனை வளைந்து அரசனையும் அவன் மனைவி மக்களையும் சிறைப்படுத்திச சீனதேயத்திற்குக் கொண்டு போனான்.

சீனச்சக்கரவர்த்தி அவர்களைக்கண்டதும் "உங்களில் விவேகியொருவனை எமக்கடிமைத்தனம் பூண்ட அரசனாக நியோகித்துக் கொள்ளுதல் உங்களுக்குடன்பாடாகில நீங்கள்மீண்டிலங்கைக்குப போகுதல் கூடும்" என்றான. அதற்கவர்கள் இசைந்து அங்கு நின்று புறப்பட்டு இலங்கை வந்தடைந்து, உடனே அதாவது 1410-ல் தம்முளொருவனாகிய 6-ம பராக்கிரமபாகுவை அரசனாக நியோகிக்க, அவன் ஜயவர்த்தன புரியைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டு அங்கிருந்து காலந்தோறும் சீனருக்கு திறை செலுத்தி 30 வருடமும் அஃதின்றி 22 வருடமுமாக 52 வருடமரசு செய்தான். அதற்கிடையில் அவன் தமிழருடைய செருக்கையெல்லாமடக்கி இலங்கையை முனபோல ஏகசக்காதிபத்தியமாக்கினான். அன்றியும அரசிறைவருமானம் போதாதெனக் கண்டு புதியவரிகளையு மேற்படுத்தினான்.

## 3-ம் ஜயபாகுவும் 6-ம் புவனேகபாகுவும் (கி. பி. 1468-1480)

## Jaya Bahu III and Bhuvaneba Bahu VI.

அவன் பௌத்திரன் 3-ம ஜயபாகு அரசனாகி இரண்டொரு வருடம் அரசியற்றிவர, அவன் இனத்தவனாகிய 6-ம் புவனே

வர்கு படையெடுத்து அவனைப் போரில் வென்று பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு ஏழுவருட மாண்டான்.

### 7-ம் பராக்கிரமபாகு 8-ம் பராக்கிரமபாகு (கி. பி. 1480-1509)
### Parakrama Bahu VII and VIII.

அவனுக்குப்பின் அவன் சுவீகார புத்திரனாகிய 7-ம் பராக்கிரமபாகு அரசனாகி 14 வருட மாண்டான். இப்பராக்கிரமபாகுவுக்குப் பின்பட்டம்பெற நெடுநாளாகக் காத்திருந்தவனும் முன்னைப் புவனேகபாகுவுக்குத் தம்பியுமாகிய வொருவன் பராக்கிரமபாகு இறந்தவுடன் அவனுடைய சுவீகார புத்திரன் பட்டம் பெறக்கொண்ட நோக்கத்தை யுணர்ந்து அப்புத்திரனையும் அவன் பத்தினிகளையும் கொன்று வீரபராக்கிரமபாகு எட்டாம் பராக்கிரமபாகுவென்னும்பட்டப்பெயர்தாங்கி அரசனாகி துலைகாலொப்ப 20 வருடமாண்டு 1509-ல் இறந்தான்.

### 9-ம் பராக்கிரமபாகு (கி. பி. 1509-1528)
### Parakrama Vahu IX.

அப்பால் அவன் குமாரர் தருமபராக்கிரமபாகுவும் (ஒன்பதாம் பராக்கிரமபாகு) 7-ம் விஜயபாகுவும்சிம்மாசனபதியானார்கள். இவர்கள் காலத்திற்றான் முதன்முதல் பறங்கிக்காரர் இலங்கைக்கு வந்தார்கள்.

---

## XV. யாழ்ப்பாணம்—Jaffna.

இலங்கையின் வடபாகத்திலுள்ள தீபகற்பம் 2500 வருடங்களுக்கு முன் நாகாகளுடைய பிரதானமான வாசஸ்தானமாயிருந்தது. அதுகாரணம் பற்றி அது நாகதீவு என்னும் பெயர் பெற்றது. சிங்கள சரித்திரத்தில் இத்தீபகற்பம் நாகதீவு என்றும் மணிமேகலை என்னும் தமிழ்ப்புதத காவியத்தில் மணிபல்லவம் என்றும் கூறப்படுகின்றது. விஜயன் இலங்கைக்குவர முன்னும் அதன் பின்னும் நாகர் இலங்கையின் வடபாகத்தில அரசர்களாகவும் சிறிதுகாலம் சிற்றரசர்களாகவும் அரசு புரிந்தனர். நாகர்களில் பெரும்பாலார் சிங்கள சாகியத்தாருடன் சேர்ந்துசிங்களவராயினர். சிறு பாலார் தமிழராகினார்கள்.



நாகர்கள் கல்வியினாலும் சீர்திருத்தத்தினாலும் மிகவுஞ்சிறந்தவர்களாக ஒருகாலத்தில் இருந்தார்கள். முடிநாகர் முதலிய புலவர்களும் நாகர்களுக்குள் இருந்தார்கள். அவர்களுடைய தலைநகரில்கோட்டை கோபுரங்கள் இருந்தமையினாலும்மணியிழைத்த ஆசனம் அவர்களுடைய அரண்மனையிலிருந்தமையினாலும் அவர்கள் சீர்திருத்த முடையவர்கள் எனபது எளிதில் விளங்குகின்றது ஆயினும் அவர்களுடைய சரித்திரத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.

கிறிஸ்துவுக்குப்பின் இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகளில் அரசியற்றிய மகாநாகன்குலநாகன்குடநாகன் ஸ்ரீநாகன் முதலிய அரசர்கள் நாகஅரசர்களே. இவர்கள் இலங்கையின் வடபாகத்திலே சிற்றாசர்களாய் அரசியற்றிப் பின்னர் இலங்கை முழுவதையும் கைக்கொண்டனர்.

விஜயன் இலங்கைக்கு வந்தபொழுது இலங்கையின் வடபாகத்துக்குத் தலைநகராயிருந்த கதிரைமலைக்கு அவன் போனதாக வைபவமாலை கூறுகின்றது. ஆகையால் நாகஅரசர்களோ அல்லது வேற்றரசர்களோ அங்கிருந்து அரசு புரிந்தனர். நாகர்கள் புத்த சமயத்தவர்களாயிருந்தமையினாலும் அவர்களே பின்பு சிங்களவர்களாயினமையினாலும் யாழ்ப்பாண நாட்டில் அனேக பௌத்த ஆலயங்கள் ஒருகாலத்தில் மலிந்து கிடந்தன. கந்தரோடை ஓர் விசேஷித்த புத்த ஸ்தலமாய் விளங்கிற்றென்பது அங்கு காணப்படும் பலதூபிகளின் அடித்தளங்களாலும் அவற்றுட் கண்டெடுக்கப்பட்ட புத்த சிலைகள் ஆதியவற்றாலும் பெறப்படும் என்பர்; கந்தரோடையே பண்டைக்காலத்தில் தலைநகராயிருந்த கதிரைமலையாகலாம்.

யாழ்ப்பாண நாடெங்கும் மலிந்து கிடக்கும் பெயர்கள் சிங்களப் பெயர்களோ அன்றி நாகர்களால் இடப்பட்ட பெயர்களோ என்று துணிய முடியாமல் இருக்கின்றது. ஏனெனில் சிங்கள பாஷை நாக இயக்கர் உடைய பாஷையும் விஜயனுடைய பாஷையும் புத்த சமயம் பரம்பியபோது வந்த பாஷையும் கலந்த ஓர்

புதிய பாஷையாம். யாழ்ப்பாணம் நாகருடைய வாசஸ்தானமா
யிருந்தமையால் இடப்பெயர்களும் நாகர்களால் இடப்பட்ட
பெயர்கள் என்றே துணிய வேண்டும்.

அதன்பின்னர் இந்தியாவினின்று விஜயராசனைப் பின்
தொடர்ந்து வந்திட்ட கங்கை வமிசக்கிளை யொன்று யாழ்ப்பா
ணத்தில் சிங்கபுரம் அன்றேற் சிங்கை நகரிலே நாட்டப்பட்டிருந்
தது. இனி சிங்கள அரசர்கள் காலிங்க அரசகுமாரிகளை மணந்
தார் என மகாவமிச நூலில் வருவது. யாழ்ப்பாணத்துச் சிங்க
புரத்துக் கங்கைகுல அரச குடும்பத்துக் குமாரிகளைச் சுட்டுவதே
அதுமட்டா, யாழ்ப்பாணக் கங்கைகுல ராசகுடும்பத்தினின்றே
மகாபராக்கிரமபாகு என்னும் சிங்கள மன்னன் உதித்தான். ஏனெ
னில் அவன் கட்டுக்கரைக் குளத்துச் சாசன மொன்றில் "ஸ்ரீமத்
சிங்ஹபுரேஜாத் ஸ்ரீபராக்கிரமபாகு" என வரைந்துள்ளான்.
ஸ்ரீ நிசங்கமல்லன் முதலிய வேற்றரசர்களும் இந்தக் காலிங்க
வமிசத்தையே சேர்ந்தவர்கள் ஆயினும் இலங்கையின் வடபாகத்
தில் அரசியற்றிய காலிங்க வமிசத்தைப் பற்றி ஒன்றும் தெரிய
வில்லை. யாழ்ப்பாண வைபவமாலையிற் கூறப்பட்ட உக்கிரமசிங்கன்
எட்டாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண நாட்டில் அரசியற்றினான்
போலவும்.

## விஜய ஆரிய சக்கரவர்த்தி (கி. பி. 1242)

## சேகராச சேகரன் I Segarajasegaran I

விஜய ஆரியச் சக்கரவர்த்திவட இலங்கையில் பதின்மூன்றாம்
நூற்றாண்டில் தனிச் செங்கோலோச்சத் தொடங்கினான். ஆரியச்
சக்கரவர்த்திகளும் கங்கை வமிசத்தவர்களே யென்பது நன்றா
யறியப்பட்ட தொன்று. யாழ்ப்பாண வைபவத்தில் விஜய ஆரியச்
சக்கரவர்த்தியைக் கூளங்கை ஆரியச் சக்கரவர்த்தி யென்றுங்
கூறப்பட்டு இருக்கின்றது. காலிங்கச் சக்கரவர்த்தியென கைச்
சரவைகளிலிருப்பது கூளங்கையென வருவது மிகச் சுலபமே
யாகும்.

ஆரியச்சக்கரவர்த்திகள் இராமேச்சரத்துடன் சம்பந்தப்பட்
டவர்களா யிருந்தார்கள். இராமேச்சரம் இவர்களுடைய ஆணைக்



குட்பட்டதாய் அத்தலத்துச் சிவாலயத்தில் இவ்வரசர்கள் பத்தி
பூண்டோராய் "சேது" என்னும் மங்களமொழியோடு தஞ்சாத
னங்களை ஆரம்பிப்போராய் "சேது" எனும் வாசகத்தையே தம்
காசின் மேலுள்ள முத்திரைக்கு வழங்குவோராய் இருந்தார்கள்.

## குலசேகர சிங்கையாரியன் (பரராசசேகரன் I)

## Gulasegara Singa Aryan II.

விஜய ஆரியசக்கரவர்த்திநெடுங்காலமரசு செய்திறக்க அவன்
மகன் குலசேகர சிங்கையாரியன் அரசுகைக்கொண்டான். அவன்
தனது நாட்டில் குளங்கள் வாய்க்கால்களைத் திருத்தி அநேக
காடுகளையும் விளையுட்களாக்கி அரசுக்கும்குடிகளுக்கும் வருவாய்
அதிகரிக்குமாறு செய்து குடிகளையுஞ் செவ்வே பாதுகாத்து
வந்தான்.

## குலோத்துங்க சிங்கையாரியன் சேகராசசேகரன் II

## Culatunga Singa Aryau II.

அவனுக்குப் பின் அவன்மகன் குலோத்துங்கசிங்கையாரியன்
அரசனானான். அவனும் அவன் தந்தையைப்போலவே நிலங்களைத்
திருத்தியும் குடிகளை நல்வழியிற் செலுத்தியும்அரசு செய்து அதி
விருத்தாப்பிய தசையிலிறந்தான்.

## விக்கிரமசிங்கையாரியன் (பரராசசேகரன் II)

## Vikrama Singa Aryan II.

அவனுக்குப்பின் விக்கிரமசிங்கையாரியன் சக்கரவர்த்தியா
னான். அவன் காலத்திலே வியாபாரத்தின் பொருட்டு யாழ்ப்பா
ணத்திற் குடிகொண்டிருந்த சிங்களருக்கும் தமிழருக்கும் சமய
பேதம் பற்றி ஒரு கலகமூளச் சிங்களவர் தமிழர் இருவரைக்
கொன்று பலருக்குச்சரீரவூறுஞ்செய்தார்கள். அக்கலகத்துக்குக்
காரணனாயிருந்த புஞ்சி வண்டா வென்பவனையும் அவன் குழாத்
தினர் அறுபத்தேழு பேரையும் கொலைசெய்வித்து மற்றவர்களைச்
சிறையிலிட் டொறுத்தான். அதனால் சிங்களர் அரசன்மீது
வெறுப்புடையராயிருந்தும் ஒருவாறடங்கி யொழுகினர்.

### வரோதைய சிங்கையாரியன் (சேகராசசேகரன் III)

### Varothya Singa Aryan III.

அவனுக்குப்பின் அவன் மகன் வரோதைய சிங்கையாரியன் சக்கரவர்த்தியானான். அவன்காலத்திலே சிங்களர்வியாபாரத்தின் பொருட்டுத் தொகையாக வந்து குடிகொள்வாராயினர். அது கண்டு அரசன் தனது பிரசைகளுள்ளே சமயதூஷணஞ் செய்து கலகம் விளைப்போர் யாவரேயாயினும்கொடிய தண்டம் பெறுவர் என விதிவகுத்துப் பிரசித்தஞ் செய்து யாவரையுந் தத்தம் நெறி கடவாமல் ஒழுகுமாறு செய்து நெடுங்கால மரசியற்றினான்.

### மார்த்தாண்ட சிங்கையாரியன் (பராசசேகரன் III)

### Mattanda Singa Aryan III.

அவனுக்குப் பின் அவன்மகன் மார்த்தாண்டசிங்கையாரியன் அரசனானான். அவன் அரசு செவ்வே நடந்து வரும்போது வன்னியர் பொறாமையாற் கலகங்கள் செய்யத் தலைப்பட்டனர். அதுகண்டு அரசன் அவர்களை யொறுத்தடக்கி நெடுங்காலம் நல்லரசு புரிந்தான்.

### குணபூஷண சிங்கையாரியன் சேகராசசேகரன் IV.

### Gunapooshana Aryan IV.

மார்த்தாண்ட சிங்கையாரியனுக்குப்பின் அவன் மகன் குணபூஷண சிங்கையாரியன் அரசு கைக்கொண்டான். அவன் தனது தந்தையிலும் சிறந்தவனாகிக் குடிகள் குறை சிறிதுமின்றி வாழுமாறு பயிர்த்தொழில் கைத்தொழில் கல்வி மூன்றையும் விருத்தி பண்ணினான்.

### விரோதய சிங்கையாரியன் பராசசேகரன் IV

### Virotha Singa Aryan.

இவன் நெடுங்காலம்அரசாண்டிறக்க அவன்மகன் வீரோதய சிங்கையாரியன் அரசனானான். அவன் காலத்தில் வன்னியர் சிங்களரைத் துணையாகக் கொண்டு கலகங்கள் விளைப்பாராயினர். வீரோதையன் வன்மையுள்ள ஒருசிறு படையோடு சென்று அவர் நாட்டையுங் கொள்ளையிட்டு அவரையுஞ் சரண்புகுவித்தான்.



அவ்வளவில் வன்னியர்செருக்கொழிந்தாராயினும் தோற்றோடிய சிங்கள அதிகாரிகள் காலந்தோறுங் கலகஞ் செய்து கொண்டு வந்தனர். அக்காலத்திலே சோழன் இலங்கைமேற்படையெடுத்து வந்து வீரோதய சிங்கையாரியனைத் துணைக் கொண்டு இலங்கையரசனோடு கொடிய யுத்தஞ் செய்து அவனைத் தோல்வி யடைவித்து திறையாகப் பெருநிதியும் புத்தகமண்டலமும் பன்னீராயிரம் குடிகளும் பெற்றுக் கொண்டேகினான்.

### செயவீரசிங்கையாரியன் சேகராசசேகரன் V.

### Jayaveera Singa Aryan.

அவன் மூத்தகுமாரன் செயவீரசிங்கையாரியன் சிறுவயதிலே முடிசூடி அரசனாய் வந்தும் மிகு விவேகியாய்ச் சத்துரு பயமின்றி அரசாட்சியை நடத்திக் குடிகளை இரட்சித்து வெகு கீர்த்திமானானான்.

அக்காலம் இலங்கை முத்துச் சிலாபத்தைக் குறித்து இலங்கையரசர் பகைத்துநெருங்கினதினால், இவன் அவனுடன்நெருங்கி யுத்தஞ் செய்து வெற்றிகொண்டு இலங்கைமுழுதும் ஒரேகுடைக் கீழ் அரசாண்டான். சிங்கள அரசரும் சிலகாலம் திறையிறுத்து வந்தார்கள். இவன் நெடுங்காலம் அரசாண்டு தன்மகன் குணவீர சிங்கையாரியனிடத்தில் இராச்சியப்பொறுப்பையேற்றிப் பரலோக வாழ்வடைந்தான்.

### குணவீரசிங்கையாரியன் பராசசேகரன் V

### Gunaveera Singa Aryan.

இலங்கையரசர் கொடுத்த திறையைக் கொடாததினால் குணவீரசிங்கையாரியன் சிலபகுதியில் தமிழ்க் குடிகளையிருத்தித் தன்னரசாட்சி யாக்கினான். மதுரையை அரசாண்ட நாயக்கருக்குச் சில பேருதவி செய்தான். தன்பிதாவைப் போலே சிறந்த அரசாட்சி செய்து வயோதிகனாகித் தன்மகன் கனகசூரிய சிங்கையாரியனுக்கு இராச்சியத்தைக் கொடுத்துச் சொர்க்கமடைந்தான்.

### கனகசூரிய சிங்கையாரியன் சேகராசசேகரன் VI

### Kanagasooriya Singa Aryan.

இவ்வரசன் சிங்களவருக்கு இட்டங்காட்டி வந்ததினால் அவர்கள் மேலாட்டங் கொண்டு வன்னியர்களின் உதவி பெற்றுக்

கலகஞ் செய்த பொழுது கனகசூரிய சிங்கையாரியன் இரவிலே தன் மனைவி மக்களைக் கொண்டு வடதேசத்துக் கோடிப் போய் விட்டான்.

### செண்பகப் பெருமாள் (கி. பி. 1450—1467)
### Senpoha Perumal.

செண்பகப் பெருமாள் என்னும் பிரபலம் பெற்ற சிங்களக் குதிரைவீரன் ஆரியச் சக்கரவர்த்தியைத் துரத்தி விட்டு நல்லூரைத் தன் அரணுக்கிச் சிறிதுகாலம் அரசு புரிந்தான்.

இதன் பின்னர் போலும், நல்லூர்யாழ்ப்பாணத்துக்குத் தலைநகராயிற்று. நாகதீவுக்கு யாழ்ப்பாணம் என்னும் பெயரும் சூட்டப்பட்டது. பின்னர் யாழ்ப்பாணம் என்னும் பெயர் பிரபல்லியமாய் வர யாழில்வல்ல ஒருபாணனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட நகர மெனவும், வீணுகானபுர மெனவும், காந்தருவ நகர மெனவும் பலவாருக விளங்கப் பெற்றது.

### கனகசூரிய சிங்கையாரியன் (கி. பி. 1467)
### Kanagasooryia Aryan.

கனகசூரிய சிங்கையாரியன் மீட்டும் வடகரையினின்றும் வந்து போராடி யாழ்ப்பாணத்துக்கு அரசனுனுன்.

### பரராசசேகரன் (கி. பி. 1467-1510)
### Pararajasegaran.

அவனுக்குப் பின் ஆறும் பரராசசேகரன் 1467-ல் அரசனுகி 1510-ம் வருடம் வரையில் ஆண்டு வந்தான்.

| காலம் கி. மு. | இலங்கை | இந்தியா | மேல்நாடு | மற்றத் தேசங்கள் |
|---|---|---|---|---|
| கி. மு. 12,000 முன் | வேடர் காட்டில் வசித்தனர். | மனிதர் குடியேறத் தொடங்கியகாலம். சீர்திருத்தத்தின் ஆரம்பகாலம். மனிதர் கல்லாயுதங்களை உபயோகித்தனர். சிறு கிராமங்கள் தோன்றின. மனிதர் குடிசைகளைக் கட்டத் தொடங்கினர். | | இந்தியா மேல்நாட்டைப் போலவே சீனுவுசீர்திருத்த மடைந்தது. |
| கி. மு. 12,000 | கல்லாயுதங்களை உபயோகித்தனர். | ஷை | மெசப்பற்றேமியாவில் பட்டணங்களும் நகரங்களும் தோன்றின. | அமெரிகா, ஆபிரிக்கா அஸ்திரேலியாவில் சீர்திருத்தமற்றகாட்டு மனிதர் வசித்தனர். |
| கி. மு. 11,000 | ஷை | ஷை | ஷை | ஷை |
| கி. மு. 10,000 | ஷை | ஷை | ஷை | ஷை |
| கி. மு. 9,000 | ஷை | ஷை | ஷை | ஷை |
| கி. மு. 8,000 | ஷை | ஷை | ஷை | ஷை |
| கி. மு. 7,000 | ஷை | ஷை | ஷை | ஷை |
| கி. மு. 6,000 | வேடர்வசித்தனர். | திராவிடர் வந்தனர் | எகிப்த் சீர்திருத்தமடைந்தது நகரங்களும்கிராமங்களும்தோன்றின. | சீனுவும் சீர்திருத்த மடைந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| கி. மு. 5000 | இராட்சதர் அல்லது இயக்கர் வசித்தனர். | ஷை | எகிப்தியருடைய சீர்திருத்தம் உன்னத நிலைமை அடைந்தது. மெசோபற்ருமியாவில் சுமேரியர் சீர்திருத்த மடைந்தனர். செம்பு கண்டு பிடிக்கப்பட்டது. எகிப்தியர், நாள், கிழமை, மாதம் வருஷத்தை வகுத்தனர். | சீனருடைய சீர்திருத்தமும் மேல் நிலைக்கு வந்தது. |
| கி. மு. 4000 | ஷை | ஷை | சுமேரியரும், எகிப்தியரும் உன்னத நிலையை அடைந்தனர். | ஷை |
| கி. மு. 3000 | ஷை | ஆரியர் இந்தியாவுக்கு வந்து வடபாகத்தில்குடியேறினர். சிறு ராச்சியங்கள தோன்றின. | சுமேரியர் தோல்வியடைந்தும் தங்கள் இராச்சியத்தைக் கைப்பற்றினர். ஆரியர் ஐரோப்பாவுக் குப் போயினர். | சீனாவில் அனேக சிறு இராச்சியங்கள் தோன்றின. |
| கி. மு. 2000 | இராமர் இராவணனுடைய காலம். | ஆரியர்முன்னேற்றம் அடைந்தனர். வேதங்கள் தோன்றியகாலம் | இரும்பு கண்டு பிடிக்கப்பட்டது. அசீரியர் சுமேரியரைவென்றனர். அசீரியராச்சியம்தோன்றி முன்னேற்ற மடைந்தது. எகிப்திய ராச்சியம் குன்றியது. | |
| கி. மு. 1000 | புத்தர் இலங்கைக்கு வந்தனர். விஜயன் இலங்கைக்கு வந்து அரசனானான். தேவநம்பியதீசன்,மகிந்தன் ஏலேலன், துஷ்டகை | மகா அலெக்சாந்தர் இந்தியாவின் ஒரு பாகத்தைச் சயித்தனர். (326) சந்திரகுப்தர், புத்தர், அசோகருடைய காலம். | அசீரியர் எகிப்தை 607-ல்சயித்தனர். பார்சிய சக்கிராதிபத்தியமும், கிரேக்கையும் மகா அலெக்சாந்தருடைய காலம் உரோமராச்சியத்தின் வளர்ச்சி. | சீனாவில் கொன்பியூசியஸ் என்னும்மகான் தோன்றினர். திசின் சீனரின் முதலாவது சக்காராதிபதியானன். |

# பரீட்சை வினா.

## 1. நான்முகம்.

1. பூமியின் உற்பத்தியைப் பற்றிக் கூறு.
2. பூர்வீக மனிதனின் நிலைமையைப் பற்றி எழுதுக.
3. பனிக்கட்டிக் காலம், கார்காலம், உலோக காலத்தையும் பற்றிக் கூறுக.

## 2. உலகசரித்திரம்—பண்டைக் காலம்.

1. கொன்பியூசியைப் பற்றி எழுதுக.
2. ஒரு படங்கீறி அதில் சீனா, மெசொபற்ருமியா, எகிப்து முதலிய தேசங்களைக்குறி; பிரதானமான பட்டணங்களையும் அடையாளம் பண்ணு.
3. சுமேரியருடைய நாகரீகத்தைப் பற்றிக் கூறு.
4. எகிப்தின் அரும் பொருள்களைப் பற்றி விபரி.
5. ஆரியர் எங்கே எவ்வாறு சீவித்தனர்.

## 3. இலங்கையின் பூர்வ சரித்திரம்.

1. இராம இராவணனுடைய கதையைப் பற்றி எழுதுக.
2. புத்தருடைய சரித்திரத்தைக் கூறு.
3. விஜயன் எவ்வாறு இலங்கைக்கு வந்து அரசனானன்?

## 4. மேல்நாட்டுப் பூர்வ சரித்திரம்.

1. அசீரியர் பாசிகளைப் பற்றி எழுதுக.
2. சைரஸின் சரித்திரத்தைக் கூறு.
3. பார்சிக சக்கராதிபத்தியம்எவ்வாறுமேல்நிலையை அடைந்தது
4. சோக்கிறற்றிஸ் என்னும் ஞானியைப்பற்றிக் கூறு.
5. ஒரு படங்கீறி அதில் கிறீஸ், பார்சியா, மசிடோனியா, உரோம் முதலிய விடங்களையும் அவைகளிலுள்ள பிரதான பட்டணங்களையும் குறி.
6. மகா அலெக்சாந்தருடைய சரித்திரத்தைப்பற்றி எழுதுக.
7. உரோம் என்னும் பெயர் அந்நகருக்கு எதனால் உண்டாயிற்று?

8. உரோம் இராச்சியத்தைப் பற்றிக் கூறு.
9. பியூனிக் யுத்தத்தை விபரி.
10. கனிபலுடைய சரித்திரத்தைக் கூறு.
11. யூலியஸ் சீசரைப் பற்றி எழுதுக.
12. யேசுக்கிறிஸ்துவின் சரித்திரத்தைக் கூறு.

## 5. இந்தியாவின் பூர்வ சரித்திரம்.

1. பூர்வீக இந்தியாப்படம் கீறி அதில் பிரதானமான தேசங்களையும் பட்டணங்களையும் அடையாளம் பண்ணு
2. பாரத யுத்தத்தை விபரி.
3. சந்திரகுப்தருடைய அரசியல் முறையைப் பற்றிக் கூறு.
4. அசோகருடைய குணுதிசயங்களைப் பற்றியும் உபதேசங்களைப் பற்றியும் விபரித்துக் கூறு.
5. தென்னிந்தியாவிலுள்ள இராச்சியங்களைப் பற்றிக் கூறு.

## 6. இலங்கைச் சரித்திரம் விஜய வம்மிசம்.

1. பந்துவாசன் என்ன காரணத்தால் இலங்கைக்கு அரசனுனன்? அவனுடைய அரசியலைப் பற்றிக் கூறு
2. பந்துகபாயன் எவ்விதமாக அரசனுனன்? அவனுடைய அரசியலைப் பற்றிக் கூறு.
3. மகாமேகத் தோட்டத்தைப் பற்றிக் கூறு.
4. இலங்கைக்குப் புத்தசமயம் எப்பொழுதுவந்தது எவ்வாறுக வந்தது என்பதைக் கூறு.
5. தேவநம்பிய தீசனின் அரசியலைப் பற்றிக் கூறு.
6. சேனன் கூத்திகன் எவ்விதமாக அரசாருர்கள்? இவர்களுடைய அரசியலைப் பற்றிக் கூறு.

## 7. இலங்கைச் சரித்திரம் தமிழரின் முதலாம் படையெழுச்சி.

1. ஏலேலன் எவ்விதமாக அரசனுனன்? இவனுடைய அரசியலைப் பற்றிக் கூறுக.
2. துஷ்டகைமுனு எவ்விதமாக அரசனுனன்?
3. ஏலேலனுக்கும் கைமுனுவுக்கும் இடையில் நடந்த போரை விபரி.
4. கைமுனுவினுடைய அரசியலைப் பற்றிக் கூறுக



## 8. மேல்நாட்டுச் சரித்திரம்—மத்தியகாலம்.

1. கன்ஸ் சாதியார் எவ்விதமானவர்கள்?
2. ஐஸ்தீனியனைப் பற்றி எழுதுக.
3. முகம்மது நபியின் சரித்திரத்தைக் கூறு.
4. அரேபியர் பிராங்ஸ் என்பவர்களைப் பற்றி எழுதுக.
5. சார்ளிமேனின் சரித்திரத்தை விபரி.

## 9. இலங்கைச் சரித்திரம்—மத்தியகாலம்.

1. சயந்தீசனைப் பற்றிக் கூறு.
2. வாலகம்பாகு காலத்தில் வந்த தமிழ்ப்படை எழுச்சியைப் பற்றிக் கூறு.
3. வாலகம்பாகுவினுடைய அரசியலைப் பற்றிக் கூறு.
4. இலங்கையில அரசு புரிந்த முதல் அரசியைப்பற்றி எழுதுக.
5. சுப்புராசன் எவ்விதமாக அரசனுனன்?
6. வாகாப்புவைப்பற்றி எழுதுக.
7. வங்கநாசிகன் காலத்தில் வந்த தமிழ்ப்படை யெழுச்சியைப் பற்றி எழுதுக,
8. புத்ததாசனுடைய அரசியலைப் பற்றிக் கூறுக.
9. மகாநாகனுடைய காலத்தில் வந்த புத்தகோஷனைப் பற்றி எழுதுக.
10. மகாவம்சம் என்னும் நூலைப்பற்றி எழுதுக.
11. முகலானன் எவ்விதமாக அரசனுனன்?
12. சிங்கள அரசர்கள் எதற்காகத் தங்கள் இராசதானியை அநுராதபுரத்திலிருந்து மாற்றினுர்கள்?
13. 7-ம் அக்கிரபோதியினுடைய அரசியலைப் பற்றிக் கூறுக.
14. தபுலு காலத்தில் நடந்த திருத்தங்களைப் பற்றிக் கூறுக,
15. பாண்டியனுடைய படையெழுச்சியைப் பற்றி எழுதுக.
16. காசியப்பனுடைய அரசியலைப் பற்றிக் கூறுக.
17. சோழநாட்டுப் படையெழுச்சியைப் பற்றி எழுதுக.
18. விஜயபாகுவைப் பற்றி எழுதுக,

### 10. இலங்கைச் சரித்திரம்—மத்தியகாலம்.

1. இலங்கையின் செல்வாக்குக் குறைந்ததற்கு நியாயம் யாது?
2. பாகியன் எவ்வாறு எதற்காக இலங்கைக்கு வந்தான்?
3. சோனகர் எவ்வாறு எப்பொழுது வந்தார்கள்?

### 11. இந்தியாவும் சீனாவும்—மத்தியகாலம்.

1. கஜனிமுகம்மது கோரிமுகம்மதுவைப் பற்றி எழுதுக.
2. விஜயநகர இராச்சியத்தைப் பற்றிக் கூறுக.
3. சிங்கீஸ்கானினுடைய இராச்சியம் இவனுக்குப்பின் குன்றியதற்கு நியாயம் யாது?

### 12. மேலைத் தேசங்கள்.

1. ஆங்கிலேயரைப்பற்றி எழுதுக.
2. சிலுவைவீரர் எதற்காக யுத்தஞ் செய்தனர்.
3. போத்துக்கேயர் ஒல்லாந்தரைப் பற்றி எழுதுக.

### 13. சிங்கள அரசர்களின் முன்னேற்றம்.

1. மகா பராக்கிரமபாகுவைப் பற்றி எழுதுக.
2. கீர்த்தி நிசங்கமல்லனைப் பற்றியும் இவனுடைய அரசியலைப் பற்றியும் கூறுக.

### 14. தமிழர் படையும் சிங்கள அரசர்களும்.

1. தமிழருடைய படையெழுச்சியைப்பற்றி எழுதுக.
2. பண்டித பராக்கிரமபாகுவின் அரசியலைப்பற்றிக் கூறுக.
3. சீனப்படையெழுச்சியைப் பற்றிக் கூறுக.

### 15. யாழ்ப்பாணம்.

1. யாழ்ப்பாண நாட்டின் பூர்வ சரித்திரத்தைக் கூறு.
2. ஆரியசக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறு.
3. ஐந்தாம் செகராசசேகரனுடைய அரசியலைப்பற்றிக் கூறு.